24 மனையாரின் குலதெய்வ வழிபாடு



டாக்டர். துரை அங்குசாமி

24 மணையாரின்
குலதெய்வ வழிபாடு

டாக்டர். துரை அங்குசாமி
எம்.ஏ., பி.எல்.எஸ்., பி.எட்., பி எச்.டி.,

விஜயகோகுலம் வெளியீடு
உடுமலைப்பேட்டை

Bibliography

Title	: **Clan Deity Worship of 24 Manai Telugu Chettiars**
Author	: Dr. *Durei Angusamy*
Publisher ©	: *Vijaya Gokulam Publications,* A2, Anna Kudieruppu, Udumalpet - 642 126. ☎ 04252 - 231900
Edition	: First Edition, March 2003
Library No.	: 294.213 (UDC)
No. of Pages	: 248
Type Used	: 10 points
Size	: Demy 1/8
Paper Used	: 70 Gsm. Andhra S/S Maplitho
Copies	: 1000 Nos.
Typeset	: Sibi, Udumalpet. Sathya Printers, Udumalpet.
Wrapper Design	: Prof.. Gnanavelu
Printed At	: Ashok Computer Centre, 3, Near T.M.B., Sivakasi. Ph. : 04562 - 227383
Price	: Rs. **100**

புத்தகம் கிடைக்குமிடம் : விஜயா பதிப்பகம்,
20, ராஜ வீதி.
கோவை 1.
☎ 2394614

பொருளடக்கம்

அணிந்துரை 4
முன்னுரை 10
படையல் 14
சுருக்கக் குறியீட்டு விளக்கம் 15
ஆய்வாளர்களுடன் நூலாசிரியர்—படம் 16
இயல் 1
24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் வரலாறு 17
இயல் 2
குலமும் மண உறவுகளும் 37
இயல் 3
குலதெய்வங்களும் குலதெய்வங்கள்
பற்றிய கதைகளும் 63
நிழற்படங்கள் 140
இயல் 4
குலதெய்வத் திருவிழாக்களும்
சடங்குகளும் 143
நிழற்படங்கள் 196
இயல் 5
பெரிய கும்பிடு விழா 201
தொகுப்புரை 223
பம்பைப் பாடல்கள் 240
பல்லடம் செப்பேடு 245

அணிந்துரை



சொல்லின் செல்வர் **சுகி. சிவம்**
அவர்கள்

அணிந்துரை

சொல்லின் செல்வர்.
சுகி.சிவம் பி.ஏ., பி.எல்.

15, பிரித்வியு அவின்யு
இரண்டாவது தெரு,
அபிராமபுரம்,
சென்னை-18
08.02.2003

சாதனை இலக்கியம்

நேர்த்தி, அடர்த்தி, செறிவு, ஆழம் என்று சில சொற்கள் தமிழில் உள்ளன. இவை அனைத்தையும் உள்ளடக்கி ஒரு புத்தகம் உருவானால் எப்படி இருக்கும் என்று உணர விரும்பினால் பேராசிரியர் துரை அங்குசாமி அவர்கள் புத்தகத்தைப் படிக்கலாம்.

தன்னடக்கம் மிக்க அமைதியான பேச்சாளராக எனக்கு அறிமுகம் ஆனவர் அவர். ஆனால் அவர் ஒரு சொற்பொழிவுக்கு எவ்வளவு அக்கறை காட்டுவார், தயாரிப்பில் ஈடுபடுவார் என்பதைப் பின்னரே நான் உணர்ந்தேன். நாட்டுக்கல் பாளையம் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் குடமுழுக்கின் போது நேர்முக வர்ணனையை இருவரும் இணைந்து வழங்கினோம். நடுகல் நாட்டுக்கல் ஆன செய்திமுதல் தொல்லியல் துறை அகழ்வாராய்ச்சி செய்தபோது ஆங்கு கிடைத்த முதுமக்கள் தாழி வரை அடுக்கடுக்காக எடுத்துரைத்து நேர்முக வர்ணனையை ஒரு ஆராய்ச்சிச் சொற்பொழிவாக்கி ஆச்சிரியப் பட வைத்தார்.

அன்று முனைவர் ஆய்வேட்டைப் புத்தகமாக வெளியிடும் எண்ணத்தைச் சொல்லி அதற்கு ஒரு முன்னுரை எழுதும்படியும் கேட்டார். அருமையான பணி என்று ஏற்றுக் கொண்டேன்.

காஞ்சிபுரம் பட்டு நெசவு மாதிரியும், காஷ்மீரத்துக் கம்பளிச் சால்வை மாதிரியும் வண்ணமும் வனப்பும் மிக்க அழுத்தமும்

MAR 2

அடர்த்தியும் மிக்க எழுத்தோவியத்தைப் படிக்கப் படிக்க ஆனந்தம் அடைந்தேன். புதிய புதிய தகவல்கள், நிறைய விளக்கங்கள், தேடித்தேடிச் சேகரித்த உண்மைகள், ஆய்வுக் கட்டுரை என்றாலும் கல்கியின் பொன்னியின் செல்வன் படிப்பது போல் சுவையாக இருக்கிறதே ஒழிய சுமையாக இல்லை.

குல என்ற வேர்ச்சொல்லில் இருந்து குலம் என்ற சொல் தோன்றி இருக்கிறது. 'குலை' என்பதும் அப்படியே என்று குலம் பற்றி விளக்குகிறார். வெறும் ஜாதிபற்றிய நூலாக இல்லாது. இன, மொழி, பண்பாட்டு, சமூக வரலாற்று நூலாக ஆய்வேடு வெளிப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்க சிறப்பு.

புத்தகங்களை மட்டுமே சார்ந்து ஆய்வு செய்யாது பல பகுதிகளுக்கும் பயணம் செய்து பலரையும் நேர்கண்டு சேகரித்த செய்திகளை அப்படியே பதிவு செய்யாது, தரம் பிரித்து ஆராய்ந்து முடிவு சொல்லி உண்மைத் தேடலில் தமக்குள்ள அக்கறையை நூலின் ஒவ்வொருபக்கத்திலும் பதிவு செய்கிறார் ஆசிரியர்.

இருபத்திநாலு மனைத் தெலுங்குச்செட்டியார்கள் குலதெய்வங்கள் பெரும்பாலும் பெண்தெய்வமாகவே இருப்பது ஏன் என்பதைத் துல்லியமாகப் புரிய வைக்கிறார். வேளாண் சமூகம் தாய்மையை, நிலமாக, அபிவிருத்திக்களமாகக் கொண்டு வழிபடும். "பெண் தெய்வ வழிபாடு தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் அது தோன்றிய காலத்தில் தாய்வழிமுறை நிலவியதே" என்று திரு கைலாசபதி அவர்களை மேற்கோள்காட்டி உணர்த்துகிறார். மேலும் 24 மனையார் குடும்பக் கோவில் விழாக்களில் தாய் வழி உறவுக்கே தனி மரியாதை என்பதை வேறோர் இடத்தில் விளக்கி, பெண்தெய்வ வழிபாடு, தாய் வழி முறைக் குடும்ப அமைப்பின் விளைவு என்று நிறுவுகிறார். ஆயின் பிற்காலத்தில் சமூக மாற்றம் காரணமாகத் தந்தை வழிமுறை குடும்ப

அமைப்பாக மாறி விட்டது என்பதையும் உணர்த்துகிறார்.

குல தெய்வங்கள் உருவாகும் காரணங்கள் ஒன்று அகாலமரணம், இரண்டு ஏதேனும் அற்புதநிகழ்வு என்று கண்டிருப்பது பாராட்டுக்குரியது. இவ்வுண்மையை விளக்கும்போது தீப்பாய்ந்த பெண்கள், நரபலியான பெண்கள் பற்றிய தகவல்கள் மெய்சிலிர்க்க வைக்கும் செய்திகள்.

பெண் தெய்வங்கள் காளையை வாகனமாக உடைய அதிசயம் இக்குலத்தாரின் தனிச்சிறப்பு. இதன் காரணத்தை மிக நுட்பமாக ஆசிரியர் கண்டறிகிறார். வணிக நிமித்தம் பொதி மாடுகளை உபயோகிக்கும் இச் சமூகம் மாடுகளை மதித்து தெய்வங்களின் வாகனமாக்கியது நன்றி உணர்வு என்கிறார். பலே, நந்தி என்ற சிவ வாகனம் நன்றியால் அம்மையின் வாகனமாகியது பெருமை தானே!

பெண்தெய்வவழிபாட்டில் கன்னிமையின் மேன்மை, தூய்மை, தாய்மை பெருமை பெறுகிறது.கன்னிமை அசாத்திய ஆற்றல் மிக்கது. பல மதங்களாலும் கொண்டாடப்படுகிறது. சக்திகரகம் எடுக்கும் போதும், பொதுப் பொங்கலுக்குரிய அரிசியை நெல்லிலிருந்து எடுக்க போதும், ஜோதிப்பானையில் எண்ணெய் விடும்போது, கன்னிப் பெண்ணுக்கு முதன்மை கொடுத்துக் கன்னிமையை இச்சமூகம் தெய்வத்தன்மையாகக் கொண்டாடு வதை நிறுவுகிறார் ஆசிரியர்.

"அழியாத கன்னிகை" என்று அம்பிகையை அபிராமி அந்தாதி கொண்டாடுகிறது. கன்னிமயைச் சமூகம் தெய்வமாகக் கொண்டாடுகிறது.

பெண் தெய்வங்களை குல தெய்வமாக வழிபடும் சமூகத்தில் பெருமாள் குல தெய்வமான இனிய விபத்தையும் தயக்கம் இன்றி பதிவு செய்கிறார். அஷ்டமங்கலத் தேவ பிரசன்னம் மூலம் குலதெய்வம் மீண்டும் உணரப்பட்ட செய்தியும் சுவையானது. குல தெய்வத்தையே தத்தாகப்

பிறருக்கு வழங்கியதை விளக்கும் செய்திகள் சுவை மிக்கவை.

குலதெய்வத்தை எந்த அளவு இச் சமூகம் கொண்டாடுகிறது என்பதற்குச் சான்று, திருமணப் பட்டு எடுக்கும் போது முதல்பட்டு குலதெய்வத்திற்கு எடுக்கும் பழக்கம். அருமையான பக்தி இக்குலத்தார் சொத்து.

பல கோவில்களில், பிரதான தேவதையோடு, துணையாக வேறு பெண் தெய்வத்தை வைத்திருப்பதைக் கண்டு நான்யோசித்தது உண்டு. துணைத் தெய்வங்கள் ஏற்பட்ட விதம் பற்றிய ஆசிரியர் விளக்கங்கள் நம் குழப்பத்தை நிச்சயம் நீக்கிவிடும்.

குலதெய்வக் கோவில்கள் எவ்வாறு பல இடங்களுக்குப் பரவியது என்பதை விளக்கும் ஆசிரியர் பக்தி மட்டும் காரணம் அல்ல; யாருக்கு முதன் மரியாதை என்கிற பிணக்கும் தான் காரணம் என்று துணிவுடன் பதிவுசெய்கிறார். பாராட்டுகள் பழைய கோவிலில் இருந்து பிடிமண் எடுத்து வந்த புதுக் கோவில் கட்டும் வழக்கம் பரவியதை விளக்குகிறார்.

காணிக்கையாக முடி கொடுக்கும் பழக்கத்தை நாத்திகர்கள் கேலி செய்வது உண்டு. ஆனால் தலையையே தருகிறார்கள் என்ற தகவல் அருமை. காதுகுத்துதல்— எமனுக்கே காதுகுத்துதல் – என்று காரணம் காணுகிறார்.

இச்சமூக குலதெய்வவழிபாட்டில் பம்பையும், பம்பை வாசிப்பவர்களும் மிகமுக்கியம். அது பற்றித் திரட்டப்பட்ட தகவல்கள் நாத இன்பம் மிக்கவை. சமய விளக்கங்களைத் தாண்டி சமூக விளக்கங்கள் நூலில் பொலிவது மகிழ்ச்சி தருகிற செய்தி.

வணிகர்கள் என்பதாலேயே வாழ்க்கை களி மிகுந்தது என்னாதபடி மதுதவிர்த்தல் சமூக நெறிஎன்று புரிய வைத்து வாணிபர் மதுவால் பொருள் இழப்பும், வாடிக்கையாளர் வெறுப்பும் அடையக் கூடும் என்றுகாரணம் கண்டு

விளக்குகிறார். பதிப்பித்துப் பரப்ப வேண்டியநற்செய்தி.

பண்டைத் திராவிட இனமான இச்சமூகத்தில் பிராமணத்தாக்கம், சமஸ்கிருத முக்கியத்துவம், ஏற்பட்டது குறித்த நூலாசிரியர் பார்வை ஒப்புக்கொள்ள வேண்டிய ஒன்று. சமயச் சடங்குகள், சமூகச் சடங்குகள், கோவில்கள் பற்றிய ஆய்வு, பெண் தெய்வங்கள் பற்றிய புராணச்செவிவழிச் செய்திகள், திருமண உறவுகளில் வரன் முறைகள், இப்படிப் பலப்பல செய்திகளை விளக்கும் இந்நூல் ஓர் அரிய பொக்கிஷம்.

படை வைத்து, மன்னர்க்குப் பல உதவி புரிந்து, பொன்னும் மணியும் கொழித்து, பக்தி நெறியோடு வாழ்ந்த – வாழும் வணிகர்களாகிய இருபத்திநான்கு மனைத்தெலுங்குச் செட்டியார் களின் குலதெய்வங்கள் பற்றிய இந்த ஆய்வுநூல் மிகக்கடும் உழைப்பால் உருவாகிய ஒப்பற்ற நூல்.

உடுமலைப் பேராசிரியர் துரை அங்குசாமி அவர்கள் இச்சமூகத் தாராலும் தமிழ் மக்களாலும் இந்த நூலுக்காகவே கொண்டாடப்பட வேண்டிய பெருந்தகை. ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு எழுத்திலும் அவரது கடும் உழைப்பு காணப்படுவதால் அவர்கள் குல தெய்வம் போலவே சக்தி ஒளிவீசுகிறது. இப்படி ஒவ்வொரு குலத்தவரும் ஆய்வு செய்தல் அவசியம் இதுபோன்ற பலநூல்கள் படைத்துத் தமிழுக்கும் சமூகத்திற்கும் பேராசிரியர் பெருந் தொண்டாற்ற அன்னை பராசக்தி அவருள் ஒளி உமிழ என் பிரார்த்தனைகள். இந்நூல் நிச்சயம் ஒரு சாதனை இலக்கியம், 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் ஒவ்வொருவர் இல்லத் திலும் கட்டாயம் இருக்க வேண்டிய பொக்கிஷம் இந்தப் புத்தகம்.

இங்ஙனம்

முன்னுரை

இந்நூல் பாரதியார் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற ஆய்வேட்டின் திருத்தப்பட்ட படியாகும். ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட ஆழமான சில கருத்துக்கள் அதன் செறிவு குறையாமல் எளிமைப் படுத்தப்பட்டு நூல் வடிவம் பெற்றுள்ள ஆய்வேடு இது.

"பழனி முருகனின் அருளாற்றல்" எனும் தலைப்பில் ஆய்வு செய்த சிகாகோ, நார்த் ஈஸ்டன் இல்லிநாய் பல்கலைக்கழக ஆய்வாளர் டாக்டர்.மேனுவல் மொராநோ அவர்களுக்கு மொழி பெயர்ப்பு உதவி செய்தபோது, "குலதெய்வ வழிபாடு அதுவும் ஒரு இனம் சார்ந்தது– ஆய்வுக்குரிய நல்ல களம்" என்ற ஆலோசனையை வழங்கினார்.

அவருடன் இணைந்து பழனித் திருவிழாக்கள் பற்றி ஆய்வு செய்த டாக்டர்.வெ.சுப்பிரமணியன் அவர்கள் "குல தெய்வ வழிபாட்டு ஆய்வுக்கு 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் இனத்தைத் தேர்ந்தெடுப்பது பொருத்தமுடையது" என்று தன் கருத்தைத் தெரிவித்தார்.

சின்ன வயது முதலே தொலைவில் உள்ள எங்களது குலதெய்வக் கோயிலுக்கு நடந்தும், மாட்டு வண்டியிலும் என்னை என் தந்தையார் அழைத்துச் சென்ற நினைவுகள் நிழலாட அனைத்து வாழ்வியல் நிலைகளிலும் குலதெய்வ வழிபாடு கலந்து நிற்பதை அனுபவப் பூர்வமாக உணரும் வாய்ப்பு எனக்கிருந்தது.

எனவே இவ்விரு ஆய்வாளர்களின் வழி காட்டுதலும் குலதெய்வ வழிபாட்டில் தோய்ந்த எனது குடும்பச் சூழலும் இத்தலைப்பை ஆய்வுக் களமாகத் தேர்ந்தெடுக்க உந்தியது.

தமிழ்நாட்டில் உள்ள 24 மனையாரின் அனைத்துக் குலதெய்வக் கோயில்களையும் ஆய்வு செய்தால் ஆய்வுக்களம் மிகவும் விரிவடையும் என்பதால் கோவை, ஈரோடு, திண்டுக்கல், கரூர் மாவட்டங்களை மட்டுமே ஆய்வு எல்லையாக வரையறுக்கப்பட்டது.

இத்தலைப்பைக் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து ஆய்வு செய்தபோது ஏற்பட்ட நிர்வாக சிக்கல் களுக்கு களம் இறங்கி, குரல் கொடுத்து ஆய்வைத் தொடர ஆவன செய்த இன்றைய பாரதியார் பல்கலைக்கழகப் பதிவாளர்,டாக்டர். சி.சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி!.

ஆய்வை மேற்கொண்ட நாள்முதல் என்னை ஊக்கப் படுத்தி உற்சாகமூட்டிய ஈர நெஞ்சும் ஈகைக்குணமும் நிறைந்த பெருந்தகை வள்ளல் கரூர் திரு.கே.சி.பழனிசாமி அவர்களுக்கு நன்றி!

இந்த ஆய்வைச்சரியான பாதையில் நடத்தி ஆய்வேடு செவ்வனவே உருவாவதற்கு வழிகாட்டிய நெறியாளர்கள் டாக்டர். கா.அரங்கசாமி, டாக்டர்.சு.கமால் முஸ்தபா ஆகியயோருக்கும் நன்றி!

வரலாற்று ஆதாரங்களையும் ஆழம்செறிந்த கருத் தோவியங்களையும் வழங்கி ஆய்வுக்குப் பெரிதும் துணை புரிந்த கோவை தொல் பொருள் ஆய்வுத்துறை உதவி

இயக்குநர் டாக்டர். ஆர்.பூங்குன்றன் அவர்களுக்கும் நன்றி!

தமிழின் ஆழ, அகலத்தைக் கற்றறிந்து புனல் பிரவாகம் போன்ற சொற்பெருக்கால் புகழின் சிகரத்தைத் தொட்டுவிட்டபெருந்தகை சொல்லின் செல்வர் சுகிசிவம் அவர்கள் வழங்கிய செம்மாந்த அணிந்துரைக்கு நன்றி!

இந்த ஆய்வு நூல் உருவாவதற்குச் செய்திகளைத் தந்து உதவி செய்த மூத்தவர்கள் பலர் இன்று நம்மோடு இல்லை. இருப்பினும் அவர்கள் தந்த தகவல்கள் என்றும் நிலைபெற்றிருக்க இந்நூல் உதவும். தகவலாளிகள் அனைவருக்கும் நன்றி!

இந்த ஆய்வு பத்தாண்டு காலம் நடைபெற்றது எனினும் 24 மனை இனத்தின் பன்பாட்டு வரலாறுபற்றிய முழுமையான நூலெனப் பெருமை கொள்ளவில்லை. இருப்பினும் இவ்வினம் பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்கு வழிகோலும் முன்னோடி ஆய்வாக இது அமையும் என்பதும் இதன் வேர்ப்பிடிப்பில் பல நூல்கள் மலர்ந்து மணம் பரப்பும் என்பதுமே என் நம்பிக்கை ஆகும்.

இந்நூல் வெளிவருவதற்கு வற்புறுத்தி உற்சாகமளித்த ஆர்வலர்கள் அனைவருக்கும் அன்பான நன்றி!

இங்ஙனம்,



படையல்

வறுமையிலும் செம்மை
வாழ்விலென்றும் நேர்மை-எனும்
விழுமிய வழியிலிருந்து சிறிதும்
வழுவாமல் வாழ்ந்த பெருந்தகை
வான் மழையாய் பாசத்தைப் பொழிந்த
என் தந்தையார்

தி. துரைசாமி செட்டியார்

அவர்களுக்கு

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

24 மனை	–	24 மனைத் தெலுங்குச்செட்டியார்கள்
அடி	–	அடி எண்
ப	–	பக்கம்
பக்	–	பக்கங்கள்
ப.ஆ.	–	பதிப்பு ஆசிரியர்
பா	–	பாடல் எண்
கழக வெளியீடு	–	திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
தொ.பொ.ஆ.கொ	–	தொல்பொருள் ஆய்வுத்துறை கோவை – 9 (கொங்குநாட்டுக் கல்வெட்டுத் தொகுதி தட்டச்சு)
நூ.பா.	–	நூற்பா எண்
மு.கு.நூ	–	முன் குறிப்பிட்ட நூல்
மேலது	–	மேலே குறிப்பிட்ட நூல்
A.R.E.	–	Annual Report of Indian Epigra phy
Ibid	–	Ibidem
Op.cit	–	Operecitate
P	–	Page
PP	–	Pages
Vol	–	Volume
S.I.I.	–	South Indian Inscriptions

அங்காள பரமேஸ்வரி எனும் தலைப்பில் ஆய்வு செய்த ஜெர்மன் ஹெல்டன் பர்க் பல்கலைக்கழக ஆய்வாளர் டாக்டர்.எவ்லின் மேயர் உடன் நூலாசிரியர்



சிக்காகோ நார்த் ஈஸ்டன் பல்கலைக்கழக ஆய்வாளர் டாக்டர் மேனுவல் மொரானோ டாக்டர் சுப்பிரமணியம் ஆகியோருடன் நூலாசிரியர்



இயல்-1

24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் வரலாறு

24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் வரலாறு

இந்தியா முழுவதும் பரவிக்கிடக்கின்ற மக்கள் தொகுதி ஆயிரக்கணக்கான சாதிப்பிரிவுகளின் அடிப்படையில் இயங்கி வருகின்றது. இன்று இந்திய நாட்டுச் சாதிகளைப் பற்றிப் பொதுவாகவும், தனித்தனி சாதி பற்றியும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஒரு குறிப்பிட்ட சாதியைப் பற்றி ஆய்வு செய்யும் போது இந்தியாவின் பொதுவான சாதிய வரலாறு பற்றிய அடிப்படைகளைத் தெரிந்து கொண்டாலொழியத் தனித்தனிச் சாதியின் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ள இயலாது. அந்த வகையில் சாதிகள் தோற்றம் பெற்ற தன்மை குறித்து ஆய்வது தேவையான ஒன்று.

சாதிகளின் தோற்றம்

இந்தியாவில் சாதிகளின் தோற்றம் பரவல், ஆகியவை பற்றி ஒரு நூற்றாண்டு காலமாக ஆய்வு நடைபெற்று வருகின்றது. கி.மு. 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய நிருக்த்தத்தில் ஜாதி (சாதி) என்ற சொல் பயின்று வருகின்றது. முதன் முதலில் சாதி என்ற சொல் இந்நூலில் பயன்படுத்தப்பட்டது. புத்தர் தோன்றிய குடியை, சாக்கிய ஜாதி என்று அப்போது குறிப்பிட்டனர். சாக்கிய கணம் என்ற பழங்குடி அமைப்பே ஜாதி என்று பெயர் பெற்றது எனலாம். பிராமண சமூக அமைப்பிற்கு வெளியிலிருந்த பழங்குடிகளைக் கணம் என்று குறிப்பிட்டனர். அதே கணம் பிராமணிய அமைப்பிற்குள் கொண்டுவரப்பெற்ற போது சாதி என்ற பெயர் பெற்றது[1].

கங்கைச் சமவெளியில் கணங்கள் (பழங்குடிகள்) நிறைந்திருந்தன. அவற்றில்சில கணங்கள் வேளிர் அரசியலுக்கு மாறின. மேலும் சில கணங்கள் வேளிர் (Chief) நிலையிலிருந்து வேந்து (King) நிலைக்கு மாறின[2]. அப்போது தெற்கு கங்கைவெளிப் பிரதேசத்தில் மகதம், கோசலம் ஆகிய நாடுகள் வேந்தர் ஆட்சியிலிருந்தன. பழங்குடிகளையும், அவர்கள் வாழ்ந்த வளமான பகுதிகளையும், மகதம், கோசலம் ஆகியவற்றின் வேந்தர்கள் தங்கள் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வர முயன்றனர். அவ்வாறு பழங்குடிகள் பேரரசின் ஆட்சிக்கும் கீழ் கொண்டுவரப்பட்ட போது கணம் என்ற பெயர் ஜாதி என்ற பெயராக மாற்றம் பெற்றது. சான்றுக்கு லிச்சவி கணம், லிச்சவி ஜாதியாகவும் வஜ்ஜிய கணம், வஜ்ஜிய ஜாதியாகவும் மாறியதைக் குறிப்பிடலாம்.

---

1. SUVIRU JUISWAL : Caste - PP 12,13 & 43
2. ROMILA THAPAR - from Lineages to States P 114

பழங்குடி இணைப்பு, படை வலிமையாலும் நிகழ்ந்தது பண்பாட்டுக் கலப்பாலும் நிகழ்ந்தது. இரண்டு முயற்சியிலும் பிராமணர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். சாதிகள் கால அடைவில் பல்கிப் பெருகின. இந்தியாவில் ஒவ்வொரு பகுதியிலும் அரசு விரிவடையும் போது புதுப்புதுச்சாதிகள் தோன்றியவண்ணம் இருந்த தன்மையை இந்திய வரலாறு முழுவதும் காணலாம். தென் இந்தியாவிலும், அத்தகைய வளர்ச்சி சோழர் காலம் முதல் விரிவடைந்து வந்தது. தென்னிந்தியச் சமூக வளர்ச்சியில் வருணாசிரமம் பெரும்பங்கு வகிக்கவில்லையானாலும், அது மேல் வகுப்பினர் அன்றாடம் உச்சரிக்கும் மந்திரமாக அமைந்து விட்டது. ஆனால் நடைமுறை வேறாக இருந்தது. இங்கு, சாதி அமைப்பே சமூக வளர்ச்சியின் வடிவமாக நிலைபெற்றது. இங்கு நான்கு வருணங்கள் இருப்பதாகச் செப்பேடுகளும், புராணங்களும் சுட்டி நின்றாலும் நடைமுறையில் அவை செயல்படவில்லை.

இந்தப் பின்னணியில் 24 மனைத் தெலுங்குச் செட்டியார் சாதியின் தோற்றத்தைப் பற்றியும், அவர்கள் சார்ந்து நின்ற தொழிலான வணிகத்தைப் பற்றியும் அவர்கள் தமிழ்நாட்டிற்குக் குடிபெயர்ந்து வந்த வரலாறு பற்றியும் ஆய்வு செய்தல் இன்றியமையாதது.

வரலாற்றில் தென் இந்திய வணிகம்

24 மனைத் தெலுங்குச் செட்டியார்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கி.பி. 15-16 - ஆம் நூற்றாண்டுகளிலிருந்து கிடைக்கின்றன. இவ்வினத்தவர் தமிழகத்திற்கு வடபுறத்திலுள்ள ஆந்திர மாநிலத்திலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள். இவர்களது பின்னாளைய வரலாற்றைத் தெரிந்து கொள்ளுவதற்குச் சங்ககாலம் முதல் தமிழ்நாட்டிற்கும் வடுகநாட்டிற்கும் இடையில் நிலை பெற்றிருந்த வணிகத் தொடர்பு பற்றி ஆய்வு செய்வது தேவையான ஒன்று. மேலும் வணிகர்களான இவர்களது தமிழகக் குடிபெயர்ச்சியின் முழு நோக்கமும் வணிகமாகவே இருந்த காரணத்தால், பண்டைய நாள் தொட்டு நிலவி வந்த வணிகவளம், வணிகச்சூழல் குறித்து இங்கு ஆராய்வது இன்றியமையாததாகிறது. தென்னிந்தியாவிலும், வெளியிலும் நிலைபெற்றிருந்த வணிகத் தொடர்பு பற்றிப் பல வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன.[3] தமிழகத்திற்கு வடக்கிலிருந்த பகுதியை வடுகதேயம் என்பர்[4]. தமிழர்களும் வடுகதேயத்திற்குச் சென்று வணிகம் செய்து பொருளீட்டினர்.

---

3. நாயகம் பொ. பண்டைத் தமிழர் வணிகம், முனைவர் பட்ட ஆய்வேடு பாரதியார் பல்கலைக்கழகம் 1993 ப. 32

4. அகநானூறு பாடல் 62 :13-18

வடுக தேயத்திலிருந்து வந்தவர்களும் தமிழகத்தில் வணிகம் செய்து பொருளீட்டினர். அவர்கள் தமிழகத்தின் வடபகுதியில், காஞ்சி, தகடூர், மாமல்லை, வசவசமுத்திரம், பாண்டிச்சேரி, செங்கமேடு முதலான நகரங்களில் தங்கி வணிகம் செய்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன[5]. புகார் வரை அவர்கள் பரவியிருந்தனர் என்பதைப் புகாரில் கிடைத்துள்ள அகழ்வுச் சான்றுகள் சுட்டுகின்றன[6]. தகடூரைப் பற்றிய ஓர் அகப்பாடல் விரவு மொழித்தகடூர் என்றும் கூறும்[7]. இங்கு விரவு மொழி என்பது தகடூர் நாட்டை அடுத்த வடுக தேயத்து மக்கள் பேசிய கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளையும் அவற்றின் கிளை மொழிகளையும் குறிக்கும். அதனால் சங்ககாலம் தொட்டுத் தெலுங்கு முதலிய மொழிகளைப் பேசிய மக்கள் வணிகத்தின் பொருட்டுத் தமிழகத்திற்கு வந்து சென்றமை புலப்படுகிறது. புகாரைப் பற்றி பட்டினப்பாலையில்

'மொழிபல பெருகிய பழிதீர் தேயத்துப் புலம்பெயர்மாக்கள்' [8]

என வரும் பகுதி பல மொழிகளைப் பேசும் வணிகர்கள் புகாரில் தங்கியிருந்தனர் என்பதையே வலியுறுத்துகின்றது. தெலுங்கு மொழி பேசும் மக்கள் புகாரில் இருந்தார்கள் என்பதற்குச் சான்றாகத் தெலுங்கு நாட்டு புத்த பாதங்கள் (பால் நாடு கல்) அகழ்வில் கிடைத்துள்ளன[9]. இவை கி.பி4ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. அண்மையில் புகார்க்கல் பகுதியில், நின்ற நிலையிலான புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்டது. இது கி.மு. முதல் நூற்றாண்டினது என்று கருத்தப்படுகிறது[10]. இதுவும் பால்நாடு கல்லால் செய்யப்பெற்றது. பால்நாடுகல் ஆந்திரப் பகுதியில் மட்டும் கிடைக்கின்ற கல். மேலே கூறப்பட்ட புத்த சமயச்சின்னங்கள் அக்கல்லால் செய்யப்பட்டிருப்பதால் வடுக நாட்டு வணிகர்கள் தங்கள் வழிபாட்டிற்காகக் கொண்டு வந்த பொருட்கள் இவை என்பது உறுதியாகிறது. இக்கலைச்சின்னங்கள் ஆந்திரக் கலைமரபில் செய்யப் பட்டவை. இச்சான்றுகள் தெலுங்கு வணிகர்கள் சங்ககாலம் தொடங்கித் தமிழகத்திற்கு வந்து சென்ற வண்ணமிருந்தனர் என்பதை உறுதிப் படுத்துகின்றன.

வடுக நேயத்தில் வாழ்ந்த மக்களை வடுகர் என்று அழைப்பர்[11]. வடக்கு திசையில் வாழ்பவர்கள் என்பதால் வடுகர் என்ற பெயரால் அழைக்கப் பெற்றனர்.

5. இராஜவேலு, சு. குருமூர்த்தி, ஜி. தமிழ் நாட்டுத் தொல்லியல் ஆய்வுகள் பக் 121-128, 96-97, 160-164, 149-150, 101-106, 134-135
6. Indian Archaeology : A Review 1964-65 பக் 24-25
7. அகநானூறு பாடல் 212 : 14
8. பட்டினப்பாலை பாடல் 216
9. இராஜவேலு, சு.குருமூர்த்தி, ஜி. மு.நூ ப 81
10. தினமலர் நாள் 16.12.1992
11. அகநானூறு பாடல் 69

வேங்கமலைக்கு வடக்கிலும், பாணர் (தருமபுரி வடபகுதி) நாட்டிற்கு வடக்கிலும், கட்டி நாட்டிற்கு வடக்கிலும் இருந்த பகுதி வடுகதேயம் எனப் பெற்றது[12]. வடுகர்கள் மௌரியர்களுடன் படைநடத்தி வந்தனர் என்ற செய்தி மாமூலனார் பாடல்களில் பயின்று வருகின்றது[13]. பண்டைய நாட்களிலேயே வடுக தேயத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் வணிகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்புகள் இருந்தமைக்கான கல்வெட்டுச் சான்றுகள், அகழ்வுச் சான்றுகள் ஆகியவை கிடைத்துள்ளன[14]. கனேறி, நெல்லூர் முதலான இடங்களில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ் வணிகர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன[15]. அதனால் சங்ககாலம் முதல் தமிழகத்திற்கும் கருநாடகம் மற்றும் ஆந்திரப் பகுதிகளுக்குமிடையில் வணிகப் போக்குவரத்து இருந்துவந்தமை புலப்படுகிறது.

பல்லவர் காலத்தில் எல்லைப்புறத் தமிழகத்தில் மட்டும் பரவியிருந்த தெலுங்கர்கள் சோழர் காலத்தில் தமிழகத்தின் மையப் பகுதியிலும் பரவத்தொடங்கினர்[16]. சோழர்களில், முதலாம் குலோத்துங்கன் காலம்முதல் வணிகத்தின் பொருட்டுக் கருநாடக, தெலுங்குப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் எண்ணிக்கையில் மிகுதியாகினர்.

வளஞ்சியர்

24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் பலிஜா இனத்தின் ஒரு பிரிவினர். பலிஜாக்கள் வளஞ்சியர் என்று தமிழில் அழைக்கப்பெற்றனர். இடைக்காலத் தென்னிந்தியாவில் வணிகம் மறுமலர்ச்சி பெற்றது. அதன் விளைவாகப் பல்வேறு வணிகக்குழுவினர் உருவாகினர். அவர்களில் நானாதேசிகர், ஐந்நூற்றுவர், நாட்டுச் செட்டிகள், அஞ்சுவண்ணத்தார், கவரை, வளஞ்சியர் முதலான பிரிவினர் குறிப்பிடத்தக்கவராவர். வளஞ்சியர் பற்றி கி.பி 9ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் முதன் முதலில் குறிப்புகள் கிடைக்கின்றன[17].

இப்பிரிவினர் கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய பகுதிகளில் வணிகத்தின் பொருட்டு வாழ்ந்துள்ளனர். இடைக்காலக் கல்வெட்டுகளில் இவர்கள் விற்ற பொருட்களைப் பற்றி குறிப்புள் உள்ளன. அவர்கள் பின்பற்றிய சமயம், வழிபட்ட தெய்வங்கள் ஆகியவை பற்றியும் கல்வெட்டுக்கள் சுட்டியுள்ளன[18]. இப்பிரிவிலிருந்து பின்நாளில் உருவானவர்கள் பனிஞ்சர்,

12. குறுந்தொகை, பாடல் -11 வரி 6-7
13. அகநானூறு, பாடல் 281
14. இராஜவேலு, சு. குருமூர்த்தி, ஜி. மு.நூ. ப 281
15. சீனிவேங்கடசாமி, பிராமிக்கல்வெட்டுக்கல் ப.12
16. புவனேஸ்வரி, க.அ. கொங்குச்சோழர் ப. 196
17. நாகசாமி, இரா. தர்மபுரிக் கல்வெட்டுகள், (முற்பகுதி) ப.99
18. Indira Balla - Mercantie Gults in South Indian Journal of Tamil Studies, Vol IV

தாசபளிஞ்சர், பலிஜா ஆகிய பிரிவினர்கள் ஆவர். வளஞ்சியர் என்று தமிழில் கூறப்படுவது, கன்னடம், தெலுங்கு மொழிகளில் பளிஞ்சர், பலிஜா என்று மாறியிருக்கின்றது. (தமிழில் வ-கரத்தோடு தொடங்கும் சொற்கள் தெலுங்கிலும், கன்னடத்திலும் மாறும் மரபு உண்டு)[19]. வளஞ்சியர்கள் இடைக்காலத் தமிழகத்தில் இருந்து 64 தாவளங்களிலும் 32 வேளா புரங்களிலும் நிறைந்திருந்தனர்[20]. வளஞ்சியர்கள் பிற வணிகர்களைப் போன்று படையும் வைத்திருந்தனர். அதற்கு வளஞ்சியப் பெருநீர் அவியார் என்று பெயர். வளஞ்சியர்கள் தென்னிந்தியாவில் பலபகுதிகட்குச் சென்று வந்தபடியால் ஆங்காங்கு ஆட்சிபுரிந்த சிற்றரசர்கட்குப் படைஉதவி செய்து வணிகம் செய்வதற்குச் சலுகைகளைப் பெற்று இருந்தனர் என அறிய முடிகின்றது.

வணிக வீரர்கள்

பிரான்மலைக் கல்வெட்டும், சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டும் "அறுபத்தி நான்கு கடிகைத் தாவளமும் தாவளத்திலிருந்து தன்மை வளர்க்கும் செட்டியும் செட்டி வீர புத்திரர்களும் " என்று கூறும்[21]. கடிகைத் தாவளம் என்பது கடிகாஸ்தானம் என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு[22]. கடிகை என்பது பாதுகாப்பு, அரண், படை, தங்குமிடம் என்பது பொருள்[23]. கடிகைத் தாவளம் என்பதற்குப் படை நிற்கும் பாதுகாப்பிடம் என்றும் பொருள் கொள்ளலாம். தாவளத்தில் செட்டி வீரபுத்திரர்கள் இருந்தார்கள் என்பதும் படைவீரர் இருந்த தன்மையையும் உறுதிப்படுத்துகிறது. அறுபத்து நான்கு முனையும் முனை வீரரும் என்று அக்கல்வெட்டு கூறும்[24]. இங்கு முனை என்பதும் படைஞரைக் குறிக்கும். முனை வீரர் என்ற குறிப்பும் இதனை வலியுறுத்தும், எரியும் எறிவீரர் என்று ஒரு படை பிரிவினர் கூறப்பெறுகின்றனர்[25]. அவர்கள் பெருவழி வீரர்கள் (Highway Soldiers) என்று கூறப் பெறுகின்றனர்.

தமிழகத்தில் பல எறிவீரர் பட்டணங்கள் இருந்தன. கொங்கு நாட்டில் மட்டும் ஐந்துக்கும் மேற்பட்ட எறிவீரர் பட்டணங்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன[26]. எறி வீரர்கள் வணிகர்களுக்காக வழிகளில் நிறுத்தப்பெற்ற வீரர்கள் என்பதில் ஐயமில்லை. நாட்டுச் செட்டித்தளம், பெருநிரவியார், வீரக் கொடியார் போன்றவர்களும் வணிக வீரர்களாகக் குறிக்கப் பெறுகின்றனர். விஜய நகரப்

19. Dravidian Etymological Dictionary
20. பெரிய பாளையம் கல்வெட்டுகள், தொ.ஆ.ப.கோ. ப. 442
21. மேலது. South Indian Inscriptions - Vol VIII No 442
22. சுப்பிரமணிய ஐயர் K.V. Largest Provincial Organization in Ancient India P.22
23. Tamil Lexicon Vol II
24. பெரிய பாளையம் கல்வெட்டுகள், தொ.ஆ.ப.கோ.ப.
25. South Indian Inscriptions - Vol III Part I Glossary
26. மாலதி. K.O. Trade and Uranization in Mediueval Kongu M.Phil/ Desertation. 1989 Bharathiar University P. 61

பேரரசு உருவான பின் இப்பெருவழிகளில் வணிகர்களும், வீரர்களும் பயணம் செய்தனர். அவர்கள் தங்கியிருந்த இடங்கள் பேட்டை, பாளையம் என்று அழைக்கப்பெற்றது[27]. பேட்டையில் வணிகர்களும், பாளையத்தில் வீரர்களும் தங்கியிருந்தனர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் தொடங்கிய வணிக மறுமலர்ச்சி, பல மொழிபேசும் வணிகர்கள் தமிழகத்திற்கு வந்து தங்கியிருக்க வாய்ப்பளித்தது. மேலும் சோழர் காலம் முதல் தெலுங்கு வணிகர் குடிப்பெயர்ச்சி மிகுதியாயிற்று. தெலுங்கு வணிகர்களில் வளஞ்சியர்களே மிகுதியாகக் குடி பெயர்ந்தனர். சோழர் காலத்தையடுத்த பிற்காலப் பாண்டியர் காலத்திலும் தெலுங்கர் குடிப் பெயர்ச்சி மிகுதியாயிற்று. பிரான்மலைக் கல்வெட்டிலும் பெரியபாளையம் கல்வெட்டிலும் தெலுங்கு வணிகர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன[28]. பாண்டியர்களுக்குப் பின் வந்த விஜயநகரர் காலத்தில் தெலுங்கர் குடியேற்றம் மிகுதியாயிற்று. அரசியல் பின்னணியும் இதற்குக் காரணமாக இருந்தது. விஜயநகரத்துப்படை, நாயக்கர் படை ஆகிய படைகள் கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தின.

குடிப்பெயர்ச்சி

14ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்கள் தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வந்த போது படைகட்கு உதவி செய்வதற்காகப் பல்வேறு தொழிலில் ஈடுபட்டிருந்த பலபிரிவு மக்களையும் உடன் அழைத்து வந்தனர். துணி வெளுப்பதற்கும், சவரம் செய்வதற்கும், படைக்கு வேண்டிய பல்வேறு அத்தியாவசியப் பொருட்கள், உணவு, உடை முதலானவற்றைத் தருவித்து வணிகம் செய்யும் வணிகர்களையும் அழைத்து வந்தனர். படைமுகாம்களைப் பற்றி விவரித்த வரலாற்றறிஞர் இராபர்ட்சீவல் "அம்முகாம்களில் முறையான தெருக்கள் இருந்தன. ஒவ்வொரு படைத் தளபதிகள் பிரிவிலும் அங்காடிகள் இருந்தன. அதில் இறைச்சி, அரிசி, தானியம், பருப்பு முதலானவை ஏராளமாகக் கிடைத்தன. இவற்றை வணிகத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் விற்பனை செய்தனர். அடுத்தபடியாகப் பொன், வெள்ளி முதலான அணிகலன்களைச் செய்யும் கலைத் தொழில் வல்லுநர்களும் (Artisans) வைரம் முதலிய விலை மதிப்பற்ற பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்களும் அத்தெருக்களில் இருந்தனர்"[29] எனக் குறிப்பிடுகின்றார்.

இங்ஙனம் படை முகாம்கள் வளம் நிறைந்த நகர்களின் தெருக்களைப் போலக் காட்சி அளித்துள்ளன. படைகளின் உதவிக்காக அழைத்து வரப்பட்ட

---

27. Tamil Laxicon Vol - IV P 2638, 2889.
28. S.I.I. Vol - VIII No 442, பெரியபாளையம் கல்வெட்டுகள், தொ.ஆ.ப.கோ
29. Seweel Robert, A Forgotten Empire, P 332

பல்வேறு தொழிற் பிரிவினரில் வணிகர்களும் முக்கியமானவர்களாக இருந்துள்ளனர். வரலாற்றியல் ஆய்வாளர் பேராசிரியர். ந. சுப்பிரமணியம்.

"படைகட்குத் தேவையான பொருட்களை வழங்குவது மட்டுமின்றிப் போரின் வெற்றிக்குப் பிறகு கைப்பற்றப்பட்ட இடங்களிலிருந்து எடுத்து வரப்படும் செல்வங்களை வாங்கி விற்கும் வியாபாரத்தாலும் வணிகர்கள் முக்கியத்துவம் பெற்றனர். படைகளின் வெற்றிக்குப் பின்னர் மேலும் முன்னேறிச் செல்கையில் கைப்பற்றிய இடங்களில் தம் மக்களைக் குடியேற்றி விட்டு, நம்பகமானவர்களிடம் அப்பகுதிகளை ஒப்படைத்து விட்டுச் செல்வது மரபு. அந்த மரபின் படி படையுடன் வந்த வணிகர்கள் தம் உறவினர்களுடன் அப்பகுதிகளில் குடியேறினர்"[30] என்கிறார்.

இங்ஙனம் விஜயநகரப் படைகளுடன் வந்த வணிகக் குழுக்களில் 24 மனைத் தெலுங்குச் செட்டியார் குழுவும் ஒன்று. இவர்கள் வணிகர்களாக மட்டும் இன்றி படை வைத்திருந்த வணிக வீரர்களாகவும் இருந்தனர். விஜயநகரப்படை முகாம்களில் வணிகம் செய்ததோடு, போர்க்காலங்களில் தங்கள் படைகளைக் கொடுத்து உதவி, விஜயநகர படைத்தளபதிகளுக்கு நெருக்கமாக இருந்துள்ளனர். படைகள் முன்னேறிச் சென்ற போது இவர்களின் ஆளுகைக்குச் சில பகுதிகள் கிடைத்துள்ளன என்று கருத இடம் உண்டு. தேசாதிபதிகள் எனும் பட்டப் பெயரால் இவர்கள் அழைக்கப்பெற்றனர் எனத் தர்ஸ்டன் கூறுவதிலிருந்தும்,[31]

இவர்களின் குலப்பெயர்கள் மும்முடியர், மக்கடையர், கோலயர், இராஜபைரவர் எனக் குறிப்பிடுவதிலிருந்தும் சில பகுதிகளின் ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர் எனக்கருத இடம் அளிக்கின்றது. இங்ஙனம் விஜயநகரப்படை நடந்த பகுதிகளில் 24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் குடியேற்றம் நிகழ்ந்துள்ளது.

வணிகர்களான இவர்களுக்குப் படை இருந்திருக்குமா எனும் வினாவிற்கு, அன்றைய சூழலில் நிலவிய இடங்கை வலங்கை பற்றிய ஆய்வு செய்வது பொருத்தமுடையது.

இடங்கை

இடங்கைப் பிரிவினருக்கு நீண்ட வரலாறு உண்டு. வணிகச் சாத்துடன் வயவர் சென்றனர் என்று சங்க இலக்கியம் கூறும். வயவர் என்பதற்குப் பழந்

30. பேராசிரியர். சுப்பிரமணியம் நா. உடுமலைப்பேட்டை வயது 80 - நேர்காணல்

31. தர்ஸ்ட்டன், எட்கர். தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி - 2 பக் 582 - 584 *(தர்ஸ்ட்டன், எட்கர் தென்னிந்தியாவில் உள்ள அனைத்து சாதிகளைப் பற்றிய 1909 ஆம் ஆண்டு ஆராய்ச்சி செய்து புத்தகம் வெளியிட்ட ஆங்கில அறிஞர்.)*

தமிழில் வீரர் என்று பொருள். இந்த சான்று பண்டை நாளில் வணிகர்கள் படையை வைத்திருந்தனர் என்பதை வலியுறுத்துகிறது. கி.பி 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலாங்குறிச்சிக் கல்வெட்டு அத்திகோசத்தார் என்ற வணிக வீரர் பற்றிக் குறிப்பிடுகிறது. ஈரோடு மாவட்டம் நல்லூருக்கருகில் உள்ள இரவிகோதைக் கல்வெட்டு அத்திகோசம், வீரகோசம் ஆகிய வணிகப்படைப்பிரிவுகள் பற்றி விளக்குகிறது. இது போன்றதொரு கல்வெட்டு ஆனைமலையிலும் கிடைத்துள்ளது. கி.பி 8-9ஆம் நூற்றாண்டிலிருந்த வணிகப் படைப்பிரிவுகள் பற்றி இக்கல்வெட்டு பேசுகிறது.

கி.பி 12-13 ஆம் நூற்றாண்டுகளில் இடங்கைப்படைப் பிரிவினர் சமயத்திலும் சமூக வாழ்க்கையிலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றனர். காரணம் சோழர் காலத்தினிறுதியில் வணிகம் செல்வம் கொழிக்கும் தொழிலாக மாறியதே ஆகும். கிடைத்துள்ள பிரான்மலை, திருக்கோயிலூர், ஆலங்குடி ஆகிய ஊர்களில் கல்வெட்டுகள் வணிகர் படைப்பிரிவுகள் பற்றிக் கூறுகின்றன.[32]

பலிஜாக்கள் படைவீரர்களாகவும், தளபதிகளாகவும் இருந்துள்ளனர் எனும் தர்ஸ்டனின் கூற்றும் இதை உறுதிப்படுத்துகிறது. 24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்தவர் இன்றைக்கு முழுக்க முழுக்க வணிகத்தையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களுடைய குலதெய்வ வழிபாட்டு வரலாற்றில் வணிகப் பின்புலமே தெளிவாகப் புலப்படுகிறது. ஆனால் இச்சாதியின் செட்டுமைகள் மற்றும் தலைவர்களை நேர்காணல் கண்டபோது தங்களின் முன்னோர்கள் படைவீரர்களாக இருந்தனர் என்றே தெரிவித்தனர்[33]. எனவே இவர்கள் வணிகர்களா? படைவீரர்களா? என்ற வினா எழுகிறது. இந்த வினாவுக்கு விடை காண அன்றைய சமூகச் சூழலின் வரலாறு துணைபுரிகிறது. 'வலங்கைப் பிரிவு, இடங்கைப்பிரிவு என இருபெரும் பிரிவுகள் இருந்ததும் ஒவ்வொரு பிரிவிலும் 98 சாதிகள் இருந்ததும் வரலாற்று உண்மைகள்.

எம். சீனிவாச ஐயங்கார் இப்பிரிவுகளைப்பற்றிக் குறிப்பிடும்போது 'வலங்கைப்பிரிவு தமிழர்களிடையே தோன்றியது என்றும் இடங்கைப்பிரிவு தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்தவர்களிடையே தோன்றியது' என்றும் கூறுகிறார்[34]. அதற்குத் தெலுங்கு மற்றும் கன்னடக் கல்வெட்டுகளைச் சான்று காட்டுவார்.

---

32. South Indian Inscriptions - Vol VIII No 442
33. கோவிந்த ராஜு செட்டியார் M.K. பொள்ளாச்சி வயது 62
34. Srinivasa Iyengar - Tamil Studies P 36
35. Kandasamy S.P. The History of the Kongu Vellalar (Ph.D. Thesis, University of Madras) 1985 P.36

அம்மொழிகளில் பயின்றுவரும் கல்வெட்டுகள் வலங்கைப் பிரிவினரை 'நாடு' என்றும் இடங்கைப் பிரிவினரை 'தேசி' என்றும் கூறுகின்றன.[35]

தமிழ்க் கல்வெட்டாய்வில் புகழ்பெற்ற டி.என். சுப்பிரமணியம் வலங்கைப்பிரிவினர் வேளாளரும் அவர்களைச் சார்ந்த சாதியரும் ஆவர். இடங்கைப் பிரினர் வணிகரும் அவர்களைச் சார்ந்த சாதியரும் ஆவர் என்று கூறுகிறார்[36].

தொல்லியல் ஆய்வாளர் பூங்குன்றன் "கொங்குநாடு முழுவதும் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் இடங்கை பற்றி மட்டுமே குறிப்புகள் கிடைக்கின்றன. உடுமலைக்கருகில் உள்ள ருத்ராபாளையம் கல்வெட்டும், விஜயமங்கலம் பெருமாள் கோவில் கல்வெட்டும் கொங்கு நாட்டில் வணிகம் தழைத்ததையும், அதனடிப்படையில் இடங்கைப் பிரிவினர் செல்வாக்குப் பெற்றதையும் உறுதிப்படுத்துகின்றன" என்கிறார்[37].

24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் வந்த வழித் தடங்கள்

தமிழகத்திற்கும், தக்காணத்திற்கும் இடையில் பண்டை நாள் முதல் மக்கள் பயணம் செய்வதற்கும், வணிகர்கள் சென்று வருவதற்கும் பாதுகாப்பான பெருவழிகள் இருந்தன. அரசுகள் மாறினாலும், நாட்டுப்பிரிவுகள் மாறினாலும் இந்தப் பெருவழிகளுடைய நிலையில் மாற்றம் இல்லை.

காலந்தோறும் ஆட்சி செய்த அரசர்கள் பெருவழிகளைப் பாதுகாத்து, அப்பெருவழிகளில் சென்று வரும் மக்களுக்கும், பெருவணிகர்கட்கும் பாதுகாப்பாயிருந்தனர். அவ்வாறு நிலைபெற்றிருந்த பெருவழிகளில் தட்சிணபதம் (இன்றைய தேசியப் பெருவழி எண் ஏழு)[38] காஞ்சி பருகச்சப் பெருவழி ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும்.[39] இவ்வழிகளில் காலந்தோறும் வணிகர்கள் பயணம் செய்து வந்துள்ளனர். அவ்வாறு பயணம் செய்த வணிகர்களில் 24 மனைத் தெலுங்குச் செட்டியார்களும் அடங்குவர் எனக் கருத இடம் உண்டு.

விஜயநகரப் படைகள் தமிழகத்திற்குள் நுழைந்த வழியை ஆய்ந்தால் பெங்களூர், தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரப்பகுதிகளின் வழியாக அப்படை நடந்திருக்க வேண்டும். இப்பெருவழியில் கரூர் முக்கிய நகரமாக இருந்தது. சேரர்களின் தலைநகராகத் திகழ்ந்த கரூர் விஜயநகரப்படை நடந்த இடமாகும்.

---

36. South Indian Temple Inscriptions - Volume III Point II P.P. 62-63
37. பூங்குன்றன் சு. "கொங்கு நாட்டுச்சாதிகள் ஓர் வரலாற்றுப் பார்வை" சாதி மதங்களை பாரோம் பக் 102,103
38. Himansh Praba Ray, Monasty and Guilde pp. 29-30
39. Modi chandra, Trade & Trade Roots in Ancient India PP 103-104.

24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்தவர் தர்மபுரி மாவட்டத்திலும், கரூரைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தொடக்க காலத்தில் இருந்துள்ளனர். இவர்களது குலதெய்வக் கோயில்களில் பெரும்பாலானவை கரூரைச் சுற்றியுள்ளன என்ற செய்தி இக்கூற்றுக்கு ஆதாரமாகிறது.

இவர்களது தாய்மொழி தெலுங்கு என்பதாலும், தரவுகளைத் திரட்டியதில் இனப் பிரமுகர்கள், செட்டுமைகள், கோயில் பூசாரிகள் அனைவரும் தாங்கள் ஆந்திரத்திலிருந்து புலம் பெயர்ந்து வந்தவர்கள் என்று கூறியதிலிருந்தும் இவர்களின் தாயகம் ஆந்திரம் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

புராணக் கதை

24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் பற்றிய ஒரு புராண வரலாறு தொண்டை மண்டலத்தில் அவர்கள் சிறப்புற்ற செய்தியினைக் குறிக்கிறது. புராண வரலாறு பின்வருமாறு[40]. அந்தகாசுரன் என்பவன் தேவர்களுக்கும், இருடிகளுக்கும் தொல்லைகொடுத்து வந்தான். அந்தகாசுரனை அழிக்கும்படி தேவர்கள் சிவனிடம் வேண்டினார்கள். தேவர்களைப் பாதுகாக்கும்படி பிரம்மனுக்குச் சிவன் ஆணையிட்டார். பிரம்மன் யாகம் செய்தார்.

அதில் தேவர்களும் முனிவர்களும் கலந்து கொண்டனர். இந்தயாகத்தில் பெரும் வீரன் ஒருவன் தோன்றினான். அவன் பெயர் பிரிதேஸ்வரன். பிரம்மா அவனுக்குப் பொன்வாளை அளித்தார். தேவர்களும், முனிவர்களும் அவன் நீண்ட நாள் வாழ வாழ்த்தினர். அந்தகாசுரனுடன் அவன் ஏழு நாட்கள் இரவும் பகலும் போரிட்டான்.

போரில் பல தந்திரங்களைக் கையாண்டாலும் இறுதியில் அந்தகாசுரன் தோற்கடிக்கப்பெற்றான். பிரிதேஸ்வரன் அசுரனின் மாய மலையை அழித்தான். அசுரர்கள் மறைந்திருந்த கோட்டைகள், குகைகள் ஆகியவற்றை அழித்தான். தேவர்களும், முனிவர்களும் பிரிதேஸ்வரன் வெற்றியைப் பாராட்டினர். அவர்கள் சிவனிடம் சென்று நன்றி கூறினர். பிரிதேஸ்வரன் மணம் செய்ய அனுமதி அளிக்குமாறு சிவனிடம் வேண்டினர். அனுமதிக்குப்பின் பிந்து என்பவளை (இவள் காந்தர்வர் மன்னன் சுர்தபிந்து என்பவன் மகள்) பிரிதேஸ்வரனுக்கு மணம் செய்து வைத்தனர். மணமக்களை ஆசிர்வதித்த சிவன் அவர்களை வாரணாசிக்குச் சென்று வாழுமாறு பணித்தார். அவன் மனைவியுடன் வாரணாசியில் வாழ்ந்தான். அந்நகர ஆட்சிப் பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப் பெற்றது. மக்கள் அவன் ஆட்சியில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அவனுக்கு நான்கு மக்கள் 1. வேதங்கள். 2. சுனோபன் 3. மணிக்கீரன். 4. சுனஜேஜன்,

40. 24 மனைத்தெலுங்கு செட்டியார்கள் 9-வது மாநாடு பழனி சிறப்பு மலர் 1987 பக் 4-7

ஆகியோர் பிறந்தனர். தந்தை அவர்களுக்கு கந்தர்வப் பெண்களையே மணம் முடித்தான். பின் பிரிதேஸ்வரன் தவமியற்றி மனைவியுடன் புத்தேழ் உலகம் புகுந்தான்.

முதல் மகன் இரண்டு ஆண் குழந்தைகளையும், இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்றான். இரண்டாமவன் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றான். மூன்றாமவன் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றான். நான்காமவன் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றான். இங்ஙனம் தோன்றிய எட்டு ஆண்களும் கந்தர்வப் பெண்களையே மணம் முடித்தனர். இந்த மணத்திற்குப் பின் இவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை. அதனால் எண்மரில் முதலாமவனான வைதங்க தேவராயன் வாரணாசியில் உள்ள கலவ முனிவரிடம் குழந்தைப்பேற்றுக்காக வரம் வேண்டினான். அம்முனிவரின் ஆலோசனைப்படி காஞ்சிபுரம் சென்று காமாட்சியம்மனை வழிபட்டான். அதனால் எட்டுச் சகோதரர்களும் குழந்தைப்பேறு பெற்றனர். மொத்தம் இருபத்து நான்கு குழந்தைகள். இந்த 24 குழந்தைகளும் பிரிதேஸ்வரன் வழியினர். அவர்களுள் பதினாறு ஆண்களும் எட்டுப் பெண்களுமாக இந்த இருபத்து நான்கு பேரின் வழிவந்தோர் 24 மனைத் தெலுங்குச் செட்டியார் என்று அழைக்கப் பெற்றனர். 24 நான்கு மனைத் தெலுங்குச் செட்டியார்களில் மக்கள் தங்கள் தகராறுகளைத் தீர்த்து வைக்கத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களே செட்டுமைகள், இவர்களில் பலர் கிராமங்களிலும், சிலர் நகரங்களிலும் வாழ்ந்தனர். இருபத்து நான்கு குழந்தைகள் வளர்ந்து ஆளானபின் அவர்கள் காஞ்சியை ஆண்டனர். அந்த நகரை இருபத்து நான்கு கூறுகளாகப் பிரித்து ஆண்டனர். இந்தக் கூறுகள் இருபத்து நான்கு கோட்டங்கள் என்று பெயரிடப் பெற்றன. அவையாவன. 1. புழல்கோட்டம், 2. புலியூர்க்கோட்டம், 3. ஈக்காடு கோட்டம், 4. மணவூர்க்கோட்டம், 5. செங்காட்டுக் கோட்டம், 6. பைபிதர்கோட்டம், 7. எயிற்கோட்டம், 8. தாமர்க்கோட்டம், 9. ஊத்துக்காட்டுக் கோட்டம், 10. களத்தூர்க்கோட்டம், 11. செம்பூர்க்கோட்டம், 12. ஆமூர்க்கோட்டம், 13. சந்தூர்க்கோட்டம், 14. வெண்குன்றக் கோட்டம், 15. பல்குன்றுக் கோட்டம், 16. இளங்குன்றக் கோட்டம், 17. கடிகைக் கோட்டம், 18. காளியூர்க் கோட்டம், 19. சந்திரிகைக் கோட்டம், 20. கேருகரைக் கோட்டம், 21. படுவூர்க்கோட்டம், 22. குன்றப்பதி கோட்டம், 23. வேங்கடகோட்டம், 24. வேலூர்க் கோட்டம் ஆகியவை.

வைதங்கதேவராயனுக்கு தம்பிமார்கள் ஏழுபேர், ஆக அரசர்கள், எண்மரான அவர்களுக்குப் பதினாறு ஆண்கள் பிறந்தனர். இப்பதினாறு ஆண் வழியினர் 16 மனையர் எனப்பட்டனர். இந்த மனைகளில் ஒவ்வொருமனையும் ஒரு குலம் என்று அழைக்கப்பெற்றது. பதினாறு ஆண்களில் முதல் மகன் பிரயோத்தராஜன் என்று அழைக்கப் பெற்றான். அவன்தான் 24 மனைத்

தெலுங்குச் செட்டியார்களில் முதலாமவன். 24 மனைகளில் ஏற்கனவே குறிக்கப் பெற்ற 16 மனைபோக மீதமுள்ள 8 மனைகள் பெண்மனைகள். பதினாறு குலங்களும் (மனை) சகோதிரக் குலங்களாகும். எட்டுக் குலங்களும் இதுபோன்ற சகோதரக் குழுக்களாகும். பதினாறு கோத்திரத்தினர் தங்களுக்குள் பெண் எடுப்பது, கொடுப்பது ஆகியவற்றை வைத்துக் கொள்ள இயலாது. அவர்கள் பெண் வழிக் குலங்களான மீதி எட்டுக் குலங்களில் பெண் எடுக்கலாம் கொடுக்கலாம். இது தந்தை வழி எனப்படும். இது அத்தை மகளை[41] மணக்கும் உரிமைப் பெண்முறை (*Cross Cousin*) ஆகும்.

தொன்மம் (*Origin Myths*)

மேலே குறிப்பிடப் பெற்ற புராணக்கதை இரண்டு வகையான நிலையைச் சுட்டுகின்றன. 1. தோற்ற மரபு 2. உரிமைப் பெண் மணஉறவு. உலகம் முழுவதும் குடி ஆட்சியிலிருந்து வேள் ஆட்சிக்கு மாறும்போது வேள் ஆட்சியைப் புனிதம் என்று கருத வைப்பதற்கும், நிலை நிறுத்துவற்கும் தொன்மங்கள் (*Origin Myths*) படைத்துக் கொள்ளப் பெற்றன. தலைவன் ஆட்சியை நியாயப்படுத்துவதற்கும், பிற குடிகளின் அங்கீகாரம் பெறுவதற்கும் மரபுத் தோற்றக்கதைகள் (தொன்மம்) படைத்துக் கொள்ளப் பெற்றது[42]. மேலும் வேள் (தலைவன்) கடவுட்தொடர்பு உடையவன் என்பதைக் காட்டவும் இக்கதைகள் உருவாக்கப்பெற்றன. தொன்மை என்பது தொல்காப்பியத்தில் ஓர் இலக்கிய வகையாகப் பேசப்படுகின்றது.

குடிமரபுத் தோற்றம் பற்றிய கதைகளைப் படைத்துக் கொள்வதற்கும் வேறு பல முக்கியக் காரணங்களும் இருந்தன. 'நற்குடிப்பிறப்பு' தலைவனுக்குப் (மன்னனுக்கு) படைத்துக் கொள்ளப் பெற்றது. அவனுடைய குடி முன்னோர்கள் வீறார்ந்தவர்கள், வாய்மையின்பால் பற்று கொண்டவர்கள், தியாகசீலர்கள், கடவுட்தன்மை உடையவர்கள் என்ற கதை கட்டப்பெற்றது[43]. அரியணைக்குரிய ஆற்றல் உடையவர்கள் என்ற கதை கட்டப்பெற்றது. அரியணைக்குரிய குலம் வேளிர் குலம் என்பதை வலியுறுத்தவே புராணங்கள் படைத்துக் கொள்ளப் பெற்றன. மேலும் 'பாண்கடன்'[44] ஆற்றும் பெருமை, வழிமுறை (வம்சாவழி) ஆகியவை புராணங்களில் பயின்று வரக் காணலாம்.[45] இந்தியப் புராணங்களில் வரும் 'வம்சானு சரிதம்' (அரசர்கள் வரலாற்றை வரிசைப்படுத்தி உரைப்பது)[46].

---

41. 24 மனைத்தெலுங்கு செட்டியார்கள் 9-வது மாநாடு பழனி சிறப்பு மலர் 1987 பக் 4-7
42. Burton Stein, Peasent State and society in Medieval South India PP. 214 - 215
43. Romila Thapar, Ancient Indian Social Histroy, Some Interpratation, P. 320
44. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூற்பா : 20
45. Romila Thapar, Op. Cit. pp 320 - 321
46. Ibid PP. 320

புகழ்மிக்க குடிமரபுத் தோற்றம் பற்றிய கதைகள், வேதக் கதைகள் (நாரசம்சிகள்) தானஸ்துதிகள், ஆக்கியானங்கள் போன்றவற்றில் பொதிந்து கிடக்கின்றன.[47]

இடங்கைச் சாதி பற்றிய தொன்மம்

பண்டைக் காலத்திலும், இடைக்காலத்திலும் சாதிகள் தோன்றிச் சிறப்படைந்தபோது தோற்ற மரபுக் கதைகள் படைத்துக்கொள்ளப் பெற்றன. இடங்கைச்சாதியார் பற்றிய தொன்மம் பின்வருமாறு லால்குடி கல்வெட்டில் கூறப்படுகிறது.[48]

"நம் குலமுதலோன் விஸ்வகர்மாவின் குருவும், நம்முடைய குலகுருவும் ஆகிய காஸ்யபரின் யாகத்தை அசுரர்கள் அழிக்க முற்பட்ட அந்த யாககுண்டத்திலிருந்து நாம் (இடங்கைபிரிவு) தோற்றுவிக் கப்பட்டோம். யாகம் வெற்றிகரமாக முடிந்தபின் யாகம் செய்த பிராமணர்கள், வாழ்விடங்களான சதுர்வேதி மங்கலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் இரதத்தில் பயணம் செய்தனர். அவ்வாறு அவர்கள் பயணம் செய்யும் போது அம்முனிவர்களின் மிதியடி, கமண்டலம் ஆகியவற்றைத் தாங்கிச் செல்பவர்களாக இரதத்தின் பின்புறத்தில் நாம் அமர்த்தப் பெற்றோம். அம்முனிவர்கள் பிரம்ம தேயங்களில் குடியேறியபோது நாம் அங்கு குடியமர்ந்தோம். அவ்வாறு அம்முனிவர்கள் பாதுகாவலர்களாகச் சென்றபோது இரதத்தின் இடப்பக்கத்தில் அமர்ந்து சென்றமையால் இடங்கைப்பிரிவினர் என்று பெயர் பெற்றோம். நம்முடைய குலம் தோன்றிய வரலாற்றினையும் மறந்து விட்டோம். தற்போது நமது பிரிவில் 98 சாதிகள் உள்ளன. அவற்றைச் சார்ந்தவர்கள் ஒற்றுமையாக நிற்க வேண்டும். நம்மில் ஒரு பிரிவினர்க்குத் துன்பம் வந்தால் இடங்கைச் சாதியினர் அனைவருக்கும் வந்ததாகக் கருத வேண்டும்".

பண்டைக் காலத்திலும், இடைக்காலத்திலும் குலமரபு தோன்றி சிறப்பு அடைந்தபோது தோற்றமரபுக் கதைகள் படைத்துக் கொள்ளப்பெற்றதைப் போலவே 15 ஆம் நூற்றாண்டிற்குப் பின் புதிதாக உருவாகிய சாதிகள் சமூக மேன்மை பெறத் தோற்ற மரபுக் கதைகளைப் (Orogin myth) படைத்துக் கொண்டனர். இந்தப் புது சாதிகள் பழங்குடியிலிருந்து பிராமணியச் சமூக அமைப்பிற்குள் கொண்டுவரப் பெற்றிருக்க வேண்டும். அல்லது செய்யும் தொழிலால் மேன்மையுற்ற போது தோற்ற மரபுக்களை அந்தந்த சாதியினர் படைத்துக் கொண்டனர். கி.பி 1900 -ஆம் ஆண்டில் எழுதி வெளியிடப்பெற்ற வேளாளர் புராணம் 20 -ஆம் நூற்றாண்டில் படைத்துக்கொள்ளப் பெற்ற தோற்ற

47. Romila Thapar. From Linage to state P. 130
48. Annual Report of Indian Epigraphy - Year 1913 para 39

மரபுக்கதை எனலாம். இந்திய சமூகத்தில் குறிப்பாகத் தென்னிந்தியச் சமூகத்தில் சமூக மேன்மை பெற வேண்டி தோற்றமரபுக் கதைகளைப் படைக்கும் மரபு நிலைபெற்றிருந்தது. கி.பி. 12-ம் நூற்றாண்டில் உருவான இடங்கைச்சாதியினர் தங்கள் தோற்றம் பற்றிய புராணக் கதைகளைப் படைத்துக் கொள்வதின் மூலம் தங்கள் சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முயன்றனர் என்பதை இம்மரபிற்குச் சான்றாகக் கூறலாம். கி.பி 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இத்தகைய புராணக்கதைகள் மிகுதியாகிவிட்டன. பாளையப்பட்டு வம்சாவழி[49] போன்ற கதைகளும் இந்த மரபில் உருவானவையே என்பதில் ஐயமில்லை. அத்தகைய கதைகளில்[50] கூறப்பெறும் வரலாறுகள் கற்பனையாகப் படைத்துக் கொள்ளப்பெற்றவை.

போர்க்களக்கதை

இப்புராணக் கதைகளில் வரும் கூறுகளைக் கொண்ட மற்றொரு நாட்டுப்புறக் கதை 24 மனைத்தெலுங்குச் செட்டியார்கள் இனத்தில் வழங்கி வருகின்றது. போர்க்களம் பற்றிப் பேசும் இக்கதையினைப் பெரும்பாலான தகவலாளிகள் தெரிவித்தனர். இச்செய்தியை உறுதிப்படுத்த ஒரு செய்தியை அனைத்து தகவலாளிகளும் கூறினர். இச்சாதி ஆண்கள் அனைவருமே போருக்குச் சென்றபோது, வீட்டுப் பெண்களிடம் "நாங்கள் இந்த நாயையும் போருக்கு அழைத்துச் செல்கிறோம். நாங்கள் ஜெயித்தால் திரும்பிவருவோம். நாய் மட்டும் திரும்பி வந்தால் நாங்கள் அனைவருமே போரில் தோற்று இறந்து விட்டோம் என்பது அர்த்தம். நீங்கள் தீக்குளித்து விடுங்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். போரில் இவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். ஆனால் அந்த நாய் எறும்புக்குழி இருக்குமிடத்தில் கட்டப்பட்டதால் கட்டை அறுத்துக் கொண்டு ஓடி வந்து விட்டது. நாய் மட்டும் தனியாக வருவதைப் பார்த்த இவர்களின் மனைவியர் தீக்குளித்து இறந்து விட்டனர். வெற்றி வாகை சூடித் திரும்பிவந்த இவர்கள், மனைவிமார்கள் மடிந்துவிட்டதைப் பார்த்து அழுதனர். பின்னர் வேறு இனப்பெண்களை மணந்து கொண்டனர். இக்கதையை 1895ல் வெளியிட்ட " தேசாதிபதிகள் "[51] என்ற புத்தகத்திலும், பகாடலு நரசிம்ம நாயுடு எழுதிய பலிஜவாரு புராணம் (1905) நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது[52]. அவர் மேலும் கூறுகையில்

---

49. Nickolas B Dricks. Ethno History of a South Indian Little King Journal of Asian Studies Vo. XII No.4.
50. நாகசாமி. இரா. பாளைப்பட்டுகளின் வம்சாவழி, தொகுதிகள் I,II,III
51. திருமூர்த்திக்கவிராயர், தேசாதிபதிகள் ப. 16
52. பகடாலு நரசிம்மலு நாயுடு, பலிஜவாரு புராணம் ப. 21.

ஆந்திரத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த அனைவருமே பலிஜாக்கள் என முதலில் அழைக்கப்பட்டனர். பின்பு அவர்களிடமிருந்து தோன்றிய பல பிரிவுகளில் 24 மனைத் தெலுங்கு செட்டியார் இனமும் ஒன்று என்று குறிப்பிடுகின்றார். இதே கருத்தை தர்ஸட்டனும் தெரிவிக்கின்றார்.

போர்க்களக் கதையின் பின்புலத்தை ஆய்வு செய்யும் போது மூன்று கருத்துகள் உறுதிப்படுகின்றன.

1. இவ்வினத்தவர் ஆந்திரத்தில் இருந்து தமிழகத்திற்குக் குடிபெயர்ந்தவர்கள்.

2. ஆந்திரத்திலிருந்து தமிழகத்திற்குக் குடிபெயர்ந்த போது அவர்களில் ஒரு பிரிவினர் தங்கள் மனைவியரை ஏதோ ஒரு காரணத்திற்காகப் பிரிய வேண்டிய சூழல் நேர்ந்துள்ளது. அந்தக் காரணம் கொள்ளை நோயாகக் கூட இருக்கலாம் அல்லது வேறு சமூகச் சூழலாக இருக்கலாம். இது மேலும் ஆய்வதற்குரியது.

3. தமிழகத்திற்கு வந்த பின்னர் தமிழ்ப் பெண்களை மணந்து கொண்டுள்ளனர். இவ்வினத்துப் பெண்களின் தாலி அமைப்பு கொங்கு நாட்டுப் பெண்களின் தாலியைப் போன்றுள்ளது என்பதும், ஆந்திரத் தாலி அமைப்பு இல்லை என்பதும் இங்கு கருதத்தக்கது.

குடிப்பெயர்கள்

சாது செட்டி, தெலுங்குச் செட்டி, ஜனப்பச் செட்டி, தெலுங்குபட்டி செட்டி என்ற பல்வேறு பெயர்களும் 24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்திற்கு உண்டு.

சாதுச் செட்டி

சாதுச் செட்டி என்ற பெயர் இதில் குறிப்பிடத்தக்கது. சாது என்பது சாத்து என்பதின் திரிபாகக் கொண்டதால் சாத்து செட்டி என்று கொள்ள வாய்ப்பு உண்டு. சாத்து என்பது சங்ககாலத்தில் நிலவழியில் செல்லும் வணிகக் கூட்டத்தைக் குறிக்கும். இந்தச் சாத்துக்கள் தமிழகம் முழுவதும் பெருவழிகளில் வணிகப் பயணம் செய்த குழுக்களாகும். சாத்து வணிகர்கள் கழுதைமேல் பண்டங்களை ஏற்றிச் செல்வர். அதனால் பெரும்பாணாற்றுப்படையில்

"அனர்ச்செவி கழுதைசாத்தொடு வழங்கும் உல்குடைப்பெருவழி"[53]

என்று கூறுவதைப் பார்க்கலாம்.

---

53. பெரும்பாணாற்றுப் படை பா. 80

உப்பு வணிகர்கள் கூட்டத்தை உமண்சாத்து என்று கூறுவர்[54]

சங்ககாலம் தொட்டு இடைக்காலம் வரை கல்வெட்டுகளில் சாத்து வணிகர் பற்றி குறிக்கப் பெறுகின்றது. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டில் ஏறுசாத்து[55], இறங்குசாத்து என்று குறிக்கப்பபெறுகின்றது. இச்சொல் விஜயநகரர் காலம் வரை தொடர்ந்து நிலைபெற்றிருந்தது எனலாம். சாத்திற்குத்தலைவன் சாத்தன் எனப்பெற்றான்[56]. மாசாத்துவான் என்ற பெயர் மாசாத்தின் தலைவன் என்ற பொருளில் ஆளப்பெற்றது[57]. கோவலனின் தந்தை மாசாத்துவான் என்று கூறப்பெறுவதும், சாத்தின் தலைவன் என்ற பொருளில் ஆகும். பெருங்கதையில் வைரச்சாத்து என்ற பெயரில் ஒரு சாத்து கூறப்பெறுகின்றது[58]. இது வைர வணிகர்கள் சாத்து என்ற பொருளில் பயின்று வந்தது. சாத்தின் நீண்ட வரலாறு தரைவழி வணிகத்தின் நீண்ட வரலாற்றினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. எனவே வணிகத்தைக் குறிக்கும் சாத்து என்ற சொல்லிலிருந்து 'சாது' என்ற சொல் வழக்கு வந்திருக்க வேண்டும் என்று கருதலாம். சாது என்ற சொல்லுடன் செட்டி எனும் விகுதி சேர்ந்து 'சாதுச்செட்டி' எனும் பெயர் வந்திருக்கலாம் எனக் கருத இடம் உண்டு.

சணப்பர்

24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் தொழில் கோணிப்பை நெய்தல், விற்றல் அகியவை. கோணிப்பைக்கு மூலப்பொருள் சணல். இது இன்றைய வங்காளத்தில் ஹூப்ளி பகுதியில் விளைவிக்கப்பெறுகிறது. சணல் விளைச்சல் வங்காளத்தில் மொகலாயர் வருகைக்கு முன் காலத்திலிருந்து பயிர் செய்யப்படுகின்றது என்பர்[59]. வளஞ்சியர்களில் சணல் நாரினைக் கொண்டு நெய்யும் தொழிலில் ஈடுபட்டோர் சனப்பர் என்று கூறப்பெற்றனர். கால அடைவில் சணல் நெய்யும் தொழிலில் ஈடுபட்டோர் சனப்பர் எனப்பெயர் பெற்றனர் போலும். கி.பி 10 ஆம் நூற்றாண்டிலிருந்து மொகலாயர் காலம் வரை இவர்கள் வணிகப் படை வீரர்களாக விளங்கியவர்கள். இடைக்கால வணிகப் பாடிகளில் வளஞ்சிய வணிகர்களின் படை வீரர்களாக இவர்கள் விளங்கியவர்கள். காலத்தின் தேவை கருதிப் படைத்தொழிலிருந்து கோணிப்பை நெய்யும் தொழிலுக்கு மாறியிருக்க வேண்டும். படைவீரர்கள் நெசவுத் தொழிலுக்கு மாறிய தன்மைக்குக் கைக்கோளரைச் சான்றாகக் காட்டலாம்[60].

---

54. அகநானூறு பா. 119
55. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுகள். தொ. ஆ.பா.கோ
56. தேநேயன். ஞா. தமிழர் வரலாறு ப. 49
57. மேலது
58. பெருங்கதை காண்டம் - 1 காதை 36 அடி 223
59. Dharma Kumar - THe Cambridge Economic History of India - Vol II. P 283
60. Tamil Lexicon Vol II P. 1100

சோழர்காலம், பாண்டியர் காலம், விஜயநகரர் காலத் தொடக்கம் ஆகிய காலங்களில் படைவீரர்களாக விளங்கிய கைக்கோளரே நெசவுத் தொழிலுக்கு மாறினர். அவர்களை நாட்டு வழக்கில்

'கைக்கோள முதலி' என்று அழைப்பர். இந்தப் பின்னணியில் வைத்துப்பார்க்கும் போது 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் தொடக்கத்தில் வணிக வீரர்களாக உருவாகிப் பின்நாளில் கோணி நெய்யும் தொழிலில் ஈடுபட்டுத் தங்கள் தொழிலை மாற்றியிருக்க வேண்டும்.

மெட்ராஸ் சென்ஸஸ் ரிப்போர்ட் 1901-ல் டபிள்யூ கானமிஸ் என்பார், ஜனப்ப செட்டி என்ற பெயர் வருவதற்கான காரணத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார். சணல் பயிரிலிருந்து சணல் பைகள் (சாக்குப் பைகள்) தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் சனப்பர் என்ற பெயர் வந்தது என்று கூறுகிறார்கள். தர்ஸ்ட்டனுடைய 'தென் இந்திய சாதிகளும், குடிகளும்' என்ற புத்தகத்தில் போரில் வெல்வதற்காக செய்யப்பட்ட வேள்வியிலிருந்து பெறப்பட்ட சாம்பலிலிருந்து உருவான விதையை விதைத்ததில் விளைந்தது சணல் பயிர், அதிலிருந்து உருவானது சணல்பைகள். அப்பைகளைத் தயாரிப்பவர்கள் சனப்பர்கள் என்று திரட்டப்பட்ட தரவுகளை எடுத்துரைத்துள்ளார். சணல் பயிரின் விளைச்சலும், சணல் பைகள் தயாரிப்பதுமே இவர்களின் முதன்மைத் தொழில் என்பது தர்ஸ்ட்டன் கூற்றினால் பெறப்படுகிறது[61].

பலிஜா சாதியின் ஒரு பிரிவினரான 24மனைத் தெலுங்குச் செட்டியார்கள் பின்னாளில் தனிச் சாதியினராகப் பரிமளித்தனர் என்ற மெட்ராஸ் சென்ஸஸ் ரிப்போர்ட் 1901-ல் டபிள்யூ-ஞானசிலிஸ் கூறியுள்ள கூற்றைத் தர்ஸ்ட்டன் உறுதிப்படுத்துகிறார்.

24 எனும் எண்ணின் சிறப்பு

24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் பெயர் பற்றி ஆய்வு செய்யும்போது இருபத்து நான்கு என்ற எண்ணின் வரையறை இங்கு ஆராயப்படுகிறது.

இருபத்து நான்கு என்ற எண் பண்டைய நாளிலிருந்தே புனித எண்ணாகக் கருதப்பெற்றிருக்க வேண்டும். மண்டலச் சதகங்கள் உருவானபோது சில மண்டலங்களில் இருபத்து நான்கு நிலப்பிரிவுகள் குறிக்கப்பெறுகின்றன. தொண்டை மண்டலத்தில் இருபத்து நான்கு கோட்டங்களும்[62], கொங்கு மண்டலத்தில் இருபத்து நான்கு நாடுகளும்[63] இருந்தமை பற்றி அந்தந்த மண்டலச் சதகங்கள் சுட்டுகின்றன. உண்மையில் தொண்டை மண்டலத்தில்

61. தாஸ்டன் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி 2 பக் 581 - 584

62. Mahalingam T.V. Kancheepuram in early South Indian Histroy PP. 3 - 4.

63. கொங்கு மண்டலச் சதகம் ப. 5

இருபத்தேழு கோட்டங்கள், கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றன. கொங்கு மண்டலத்தில் முப்பத்து இரண்டு நாடுகள் குறிக்கப்பெறுகின்றன. சதக இலக்கிய காலத்தில் இருபத்து நான்கு என்ற எண் சிறப்பு பெறுகின்றது.

சமணர் காலத்தில் இருபத்து நான்கு தீர்த்தங்கரர் பற்றிய குறிப்பு குறிப்பிடத்தக்கது. சமண சமயத்தில் மட்டுமின்றி உலகில் தழைத்த அனைத்துச் சமயங்களிலும் இருபத்து நான்கு சமய ஞானியர் குறிக்கப்பெறுகின்றனர்.

கொங்கு நாட்டுக் குலாலர், வேட்டுவர், நாவிதர், வண்ணார் போன்ற சாதியார்களிடையில் 24 நாட்டுப்பிரிவுகள் உள்ளன.[64]

இருபத்து நான்கு மனை என்ற குலப்பிரிவுகள் தொண்டை மண்டலத்து இருபத்து நான்கு கோட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உருவானது என்பதற்கு இச்சாதியின் தோற்ற மரபுக் கதைகளே சிறந்த சான்றுகள். அக்கதைகளின்படி, இச்சாதியினரின் முன்னோர்கள் காஞ்சிக்கு வந்தபின், காஞ்சியை 24 கோட்டங்களாகப் பிரித்து ஆட்சி செய்தனர் என்று கூறப்பெறுகின்றது.

மனை - சிறந்த சொல்லாக்கம்

இச்சாதியினர் பெயரில் பயின்று வரும் 'மனை' என்ற சொல் குறிப்பிடத்தக்கது. மனை என்பது பழந்திராவிடச் சொல். இச்சொல் மன் என்ற வேர்ச்சொல்லிலிருந்து உருவானது. இல், குடி, குலம், கூட்டம், வீடு ஆகிய சொற்கள் திராவிட மொழியிலிருக்க மனை என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தது குறிப்பிடத்தக்கது[65]. மனையின் வேர்ச்சொல்லான 'மன்' என்பதிலிருந்து மன்னன், மன்று, மன்றம் ஆகிய சொற்கள் தோன்றின[66]. மன் என்ற சொல்லுக்கு நிலைபேறு, பல்கிப் பெருகுவது என்ற இரு பொருள்களும் உண்டு. இவ்விரு பொருளையும் மனத்திலிருத்தி மனை என்ற சொல்லைக் குலம் என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

24 குலங்கள் - 24 மனைகள்

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதால் தெலுங்குச் செட்டியார்கள் என அழைக்கப்பட்டனர். கொங்கு வேளாளர் சாதியில் குலத்தை கூட்டம் என்ற சொல்லால் அழைப்பது போல இச்சாதியில் குலங்களை வீடு அல்லது மனை என்ற பெயரால் அழைக்கின்றனர். இச்சாதியில் 24 குலங்கள் இருப்பதால் 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் என்று அழைக்கப்பட்டனர்.

64. Kandasamy S.P. Op. Cit. P. 23

65. Tamil Lexicon Vol I, II, V- 3137 - 3138

66. Sivarajapillai K.N. - The Chronology of Early Tamils, Appendix

செட்டி எனும் சொல்லாட்சி

வணிகத்தில் சிறந்தோர்க்கு எட்டி என்ற பட்டம் பழைய மன்னர்களால் வழங்கப்பட்டது. எட்டிப்பூவும், எட்டி மோதிரமும் அவர்கட்குப் பரிசாக வழங்கப்பட்டன[67]. 'எட்டி' என்ற சொல்லே காலப்போக்கில் செட்டி என மாறிவிட்டது. செட்டு எனில் ஆதாயம் என்ற ஒரு பொருள் உண்டு[68]. ஆதாயம் தேடுவதில் வல்லவர்கள் என்ற பொருளில் ' செட்டி' என்று அழைக்கப்பட்டது.

செட்டு என்ற சொல்லுக்குச் 'சிக்கனம்' என்ற ஒரு பொருள் உண்டு. சிக்கனமாக வாழ்வதில் தேர்ந்தவர்கள் என்று 'செட்டி' என்ற சொல்லுக்கு பொருள் கொள்வதும் உண்டு.

"வைசிகன் பெருமே வாணிக வாழ்க்கை" என்று தொல்காப்பியமும்[69]

" வீட்டினில் செட்டாக வாழ்ந்திடுவார் - ஏதும்

வீணின்றி மிகக் கணக்கிடுவார்"

என்று தனவணிகர் கும்மிப்பாட்டும் செட்டிகள் சிக்கனமுடையவர்கள் என்ற பொருளை உறுதிப்படுத்துகிறது.

'செட்டுமை' என்ற சொல்லுகு 'முதன்மை', 'ஆளுமை' என்ற பொருள்களும்உண்டு 'செட்டி' என்றால் முதன்மையானவர்கள் ஆளுமை நிறைந்தவர்கள் என்ற பொருள் கொள்வதும் உண்டு. செட்டி என்பதுடன் ஆர் விகுதி சேர்ந்து செட்டியார் என்று வழங்கப்படுகின்றது.

இருபத்து நான்கு குலங்களையுடைய செட்டுமைப்பண்பு வாய்ந்த சிக்கனவாசிகளான வணிகர்கள் என்பதே 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் எனும் பெயரின் உட்பொருளாகிறது.

---

67. மணிமேகலை ஆதிரை பிச்சை இட்ட காதை

68. கந்தசாமிக் கவிராயர், உடுமலைப்பேட்டை வயது 79 நேர்காணல்

69. தொல்காப்பியம், மரபியல் நூ.பா. 78

இயல்-2

குலமும் மணஉறவுகளும்

2. குலமும் மண உறவுகளும்

குடும்பம்

குடும்பம் என்பது சமூகத்தின் ஓர் அடிப்படை அலகு. மனித உறவுகளை முறைமைப்படுத்தும் சீரிய அமைப்பு குடும்பம். ஒன்றுக்கு மேற்பட்ட இரத்த உறவுடையோர், மண உறவுடையோர் மற்றும் தத்து எடுக்கப்பட்டோர் ஒரே இடத்தில் கூடி வாழ்வது குடும்பம் எனப்படும். "குடும்பம் என்ற சொல்லுக்கு உறவு, ஒரு குடியில் உள்ளோர், மனைவி, வீடு, சம்சாரம், உறவினர், குலம், குடி, இனத்தோர், ஒரு குடிசையில் உள்ளோர்" எனப் பொருள் தருகிறது அகராதி[1]. குடும்பம் என்பது அனைத்துச் சமுதாயங்களிலும் காணப்படும் ஒரு நிறுவனமாகும் (Institution). எனவே குடும்பம் என்பதை உலகம் முழுவதும் பரந்துபட்டு இருக்கின்ற பண்பட்ட ஒரு சமுதாய அலகு எனக் கருதலாம்.

சங்க இலக்கியங்களில் 'குடும்பம்' என்ற சொல் கையாளப்படவில்லை. 'குடி' என்ற சொல்லே 'குடும்பம்' என்ற பொருளை உடையதாகப் பயன்படுத்தப்பட்டது. முதன்முதலில் 'குடும்பம்' என்ற சொல்லைத் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்[2]. குடும்பம் என்பது மக்களின் உளவியல், உயிரியல், வாழ்வியல், சார்ந்த அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும் அமைப்பு ஆகும். குடும்பமானது அன்பு செலுத்துமிடமாகவும், பொருளாதாரப் பணியிடமாகவும், பொழுதுபோக்கிடமாகவும், சமயச் செயல்களாற்று மிடமாகவும், கல்வியளிக் கும் இடமாகவும் பணியாற்றுகிறது. குடும்பத்தின் பணி, குடும்ப உறுப்பினர்கள் என்ற அளவில் நில்லாமல் அமைதியும், ஒழுங்கும் கொண்ட ஒரு சிறந்த சமுதாயம் அமைவதற்கும் பெரிதும் துணை புரிகிறது.

குடும்பம் பற்றிய அறிஞர்கள் கருத்து

மானிடவியல் ஆய்வாளர் லேவி "குடும்பம் தனி மனிதனுக்காகவும், சமுதாயத்திற்காகவும் பெரும் பங்கு ஆற்றுகிறது. இது பாலியல், இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி ஆகிய நான்கு முதன்மையான பணிகளைச் செய்கிறது". எனக் கூறுவதைக் காணுகிறோம்[3].

---

1. கழகத்தமிழ் அகராதி ப.349
2. திருக்குறள் பா.1029

   இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்

   குற்றம் மறைப்பா னுடம்பு
3. பக்தவசலபாரதி. கீ. பண்பாட்டு மானிடவியல் ப.340

குடும்பத்தின் செயல்பாடுகள் குறித்துப் பெரும்பாலும் ஒத்த கருத்தையே மானிடவியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். முர்டாக் என்பார் குடும்பத்தை வரையறுக்கும் போது இன்றியமையாத நான்கு கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்[4]. அவை வருமாறு.

1. உடல் உறவு அனுமதிக்கப்பட்டுள்ளது.
2. பிள்ளைப்பேறு சட்டப்பூர்வமாக நடைபெறுகிறது.
3. பிள்ளைகளைப் பராமரிப்பதிலும், வளர்ப்பதிலும் சமுதாயத்திற்குக் கடமைப்பட்டிருக்கின்றது.
4. பொருளாதார அலகாகச் செயல்படுகிறது.

குடும்பத்தின் இரு பிரிவுகள்

1. மண வழிக்குடும்பம் (Conjugal Family)

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணைந்து மண மக்களாக மண வாழ்வு கொள்ளும் நிலையிலே தான் குடும்பத்தின் தோற்றம் தொடங்குகிறது. இத்தகைய நிலையில் அமையும் குடும்பம், மண வழிக் குடும்பம் எனப்படும்.

2. வளர்குடும்பம் (Nuclear family)

மண மக்கள் வாழ்வில் இவர்கட்குப் பிறக்கும் குழந்தைகளும் பங்கு பெறுகின்றனர். மண வழிக்குடும்பத்தின் இத்தகைய விரிவு பெற்ற - நிலை வளர்குடும்பமாகும்.

24 மனை இனத்தில் குடும்ப அமைப்பு

குடும்பத்தின் செயற்பாடுகள் பெரும்பாலும் அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது என்பதே ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. நாடு, மொழி, இனம், வெட்ப, தட்ப நிலைகள் ஆகிய எந்தக் காரணிகளாலும் வேற்றுமையை ஏற்படுத்த இயலாத, உலகளாவிய, ஒத்த செயல்பாடுகளை உடைய, குடும்பம் எனும் அடிப்படையலகு 24 மனைத்தெலுங்குச் செட்டியார்கள் இனத்திலும் அதே நிலையையுடைய நிறுவனமாகத் திகழ்கிறது.

குடும்பத்தில் உள்ளோர் தங்களுக்குள் தங்கள் தாய்மொழியான தெலுங்கில் பேசிக்கொள்கின்றனர். குடும்ப உறுப்பினர்களிடையே இணை இசைவான (பரஸ்பரமான) அன்பு இடம் பெறுகின்றது. ஒருவருடைய நலத்தில் பிற உறுப்பினர்கள் பெரிதும் அக்கறைகாட்டுகிறார்கள். வாழ்வின் வளத்தையும், தாழ்வின் இன்னலையும் குடும்பத்தின் அனைவருமே, இணைந்து சமமாக அனுபவிக்கின்றனர். குடும்பம் பற்றி முர்டாக் குறிப்பிட்ட நான்கு கருத்துகளும் - முழுமையாக 24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் இனத்தில் உள்ள குடும்ப அமைப்பில் இடம் பெறுகின்றன.

---

4. இராபார்ட் சத்ய சோசப், த.சமகாலத் தமிழர்களின் உறவு முறை அமைப்பும், உறவு முறைச் சொற்களும் ப.135

தொடக்க காலத்தில் மணவழிக் குடும்பமே இந்த இனத்தில் தோன்றியிருக்கக் கூடும். வளர்ச்சி பெற்றுப் பல குடும்பங்களாகப் பெருகி வளர்குடும்பமாக விரிந்து நிற்கும் குடும்ப அமைப்பு, இந்த இனத்திற்கும் பொதுவானதே. "உறவு முறை குருதித் தொடர்பால் ஏற்படுகிறது. இதுவே ஒற்றுமைக்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது. உறவு முறைக்கு அடிப்படையாக அமைவது குடும்பம்[5]".

குடும்ப அமைப்பு முறை என்பது ஒரு கட்டுப்பாடுடைய வாழ்க்கை முறையாகும். சிறிய குடும்பம், பல குடும்பங்களாகிப் பின்னர்க் குலம், இனம் எனப் பல்கிப் பெருகுகின்றன.

சமுதாயத்திலிருக்கும் அனைவருக்குமே ஒரு மனிதன் உறவினனாக இருக்க முடியாது. அவனுக்கென்று சில உறவினர்கள் இருப்பார்கள். இதில் நெருங்கிய உறவினர்களாகச் சிலரும் தூரத்து உறவினர்களாகப் பலரும் இருப்பர். இங்ஙனம் உறவின் நெருக்கம் பல்வேறு நிலைகளையுடையதாக இருக்கும்.

இந்த உறவுப் பிணைப்புக்கள் அந்தந்தச் சமுதாய மரபுகளுக்கு ஏற்ப அமைகின்றன. இம் மரபு முறைகளை 4 பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றைப் பின் வருமாறு காணலாம்.

1. ஒரு வழி மரபு (Uni Lineal Descent)

பெரும்பாலான உலகச் சமுதாயங்களில் நிலவும் முறை ஒரு வழி மரபு முறையாகும். தம் குடி வழியைத் தந்தை, பாட்டன், முப்பாட்டன் என ஆண் வழியில் தொடர்பு படுத்திக் கூறும் மரபு முறையைத் தந்தை வழி மரபு முறை (Partial Descent) என்பர். இதை ஆண்வழி மரபு முறை (Agnatic Descent) என்ற பெயரிலும் அழைப்பர். குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு ஆண்களிடம் அமைவதால் இங்ஙனம் அழைக்கப்படுகின்றது. தந்தை வழியில் மரபைத் தொடர்புபடுத்தாமல் தாய்வழியில் தொடர்புபடுத்திக் கூறப்படுவது தாய்வழி மரபாகும். (Matrilineal Descent) இதனை மகளிர்வழி மரபு (Uternie Descent) என்றும் கூறுவர். இம்முறையில் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு பெண்களிடம் இருக்கும்.

தந்தை வழி மரபு, தாய் வழி மரபு ஆகிய இரு மரபினரும் தங்களின் குழுக்கள் ஒரு பொதுவான மூதாதையரிடமிருந்து வந்ததாகக் கூறுவர். ஒரு பொது மூதாதையின் வழித்தோன்றலாக உள்ள ஒரு வழி மரபுக் குழுவை இரு வகையாகப் பிரிப்பர். பெயர் தெரியக் கூடிய உண்மை மூதாதையர் (Real Ancestor) எனவும் பெயர் சூட்ட இயலாத நிலையில் தோராயமாக கூறக்கூடிய தொன்ம மூதாதையர் (Mythical Ancestors) (இவர்கள் விலங்கு, தாவரம்,

5. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 1 ப. 696

பிற அஃறிணைப் பொருள்களிலிருந்து தோன்றியதாகக் கருதப்படும்) எனவும் பகுத்துரைப்பர்.

2. இருவழி மரபு

தங்கள் குடிவழியைத் தந்தை வழி மூலமாகவும், தாய் வழி மூலமாகவும் சமமாக இணைத்துக் கூறுபவர்கள் இருவழிமரபைச் சார்ந்தவர்கள் ஆவர்.

24மனை இனத்தில் குடும்ப அமைப்பு

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு மூதாதையிடமிருந்து தோன்றி, தந்தை வழி மரபாக வந்தவர்கள். ஆண்வழி மரபினைப் பின்பற்றும் இந்த இனத்தில் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஆண்கள் ஏற்கின்றனர். முப்பாட்டன், பாட்டன், தந்தை, மகன் என்ற கால்வழி இந்த இனத்தில் மிகத் தெளிவாக உள்ளது. சொத்துரிமையும் ஆண் வாரிசுகளுக்கு அளிக்கப்படுகிறது. இறப்புச் சடங்கு உரிமைகளும் ஆண் வாரிசுகளுக்கு உரியன.

பூசாரி, பெரியதனம், கோயில் செட்டுமை, மணியக்காரர் முதலான பதவிகள் பெருமை கருதி அல்லது பிழைப்புக் கருதி ஒருவர் வகிக்கிறார் என்றால் அவருக்குப் பிறகு அவரது ஆண் வாரிசுகளுக்கு அப்பதவி உரிமையாகின்றது.

பரமசிவன் பாளையத்தில் உள்ள நல்லம்மாள் கோயிலின் செட்டுமை சுப்பிரமணியன் செட்டியார், தாம் ஐந்தாவது தலைமுறையாக அக்கோயிலின் செட்டுமையாக இருப்பதாகவும், தமக்கு முந்தைய 4 தலைமுறையாக வம்சாவழி விவரம் இன்னதெனவும் ஆய்வாளரிடம் கூறினார்.

வம்சாவழி வருமாறு

ஆவலப்பம்பட்டி உப்புக் கிணற்று வீட்டு
பெருமாள் செட்டியார்

↓

மகன் குப்பஞ் செட்டியார்

↓

மகன் சீரங்கஞ் செட்டியார்

↓

மகன் குப்பஞ்செட்டியார்

↓

மகன் ரெங்கசாமி செட்டியார்

↓

மகன் சுப்பிரமணியன் செட்டியார்

---

6. சொக்கனூர் சுப்பிரமணியன் செட்டியார், ஆர். பொள்ளாச்சி. வயது 60. நேர்காணல்

மரிக்கந்தை அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலில் கார்த்திகை விளக்கீட்டு நாளன்று விளக்கு சட்டியை (ஜோதிப் பானை) எடுத்துச் சென்று தீபகம்பத்தில் வைக்கும் சடங்கினைக் கந்தசாமி செட்டியார் மகன் இராமசாமி செட்டியார் வழிவழியாகச் செய்து வருகிறார். தமது உடல் நலமின்மை காரணமாகக் கார்த்திகை நாளன்று விளக்குச் சட்டியை ஏந்திச் செல்லும் சடங்கைத் தாம் செய்திட இயலாது என்று கூறி, இச்சடங்கை தன் மகள் வழியினர் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இதற்குக் காரணம் அவருடைய மகனுக்குத் திருமணம் ஆகாததால் இந்தச் சடங்கைச் செய்யும் உரிமை வழங்கப்படவில்லை என்பதாகும். ஆனால் கோயிற் குழு, மகள் வழியினருக்கு இந்த உரிமையைத்தர இயலாது என்றும் திருமணமாகி வந்த பிறகு அவருடைய மகனே இச்சடங்கைச் செய்யலாம் என்றும் அறிவித்தது. இந்நிகழ்ச்சி ஆய்வாளரின் களப்பணியின் போது பதிவு செய்யப்பட்டது. கோயில் விழாக்களில் கூட ஆண் வாரிசுகட்கே உரிமை உண்டு என்பது இதனால் புலனாகிறது.

குடும்ப விழாக்களில் நடைபெறும் சடங்குகளைக் குடும்பத் தலைவருக்குப் பின்னால் அவரது ஆண் வாரிசுகள் மட்டுமே செய்தல் இயலும். பொதுவாக இச் சடங்குகளைச் செய்வது தங்களுடைய பிறப்புரிமை என்று கருதுகின்றனர்.

குழு அமைப்பு

உறவுகளை நெறிப்படுத்தி, நெருக்கத்தை ஏற்படுத்தி மனித சமுதாயத்தை மேம்பாடுறச் செய்யும் மாந்தர், குழுக்களாகப்பல்கிப் பெருகி, விழுமிய நிலையில் காணப்படுகின்றனர். இந்த மனிதக் குழுக்கள் மனித சமுதாயத்தின் உட்சமூக அமைப்பைப் பொறுத்தும் அதன் கல்வி. அரசியல், பொருளாதார நிலைமைகளைப் பொறுத்தும் சமூகப்படிநிலையில் வேறுபடுகின்றன எனலாம்.

அனைத்துச் சமுதாயத்திலும் மக்கள் குழுக்களை

1. உறவுக் குழுக்கள் (Kin Group) என்றும்
2. உறவிலிக் குழுக்கள் (Non-Kin Group)

என்றும் இருவகையாகப் பிரித்தறிவர்.

திருமணம், மரபு முதலியவற்றின் வழி நின்று அமையப்பெறுவது உறவுக் குழுக்கள் (Decent) ஆகும். எல்லாச் சமுதாயத்திலும் மக்கள் பலவகைப்பட்ட உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளனர். இப்பிணைப்பின் அமைப்பே உறவுமுறை எனப்படும். உறவுமுறைகளைக் கீழ்க்கண்டவாறு மூவகையாகப் பகுக்கலாம்.

மாந்தரின் உறவு முறைகள்

குருதி உறவு (Consaguineal Relationship)	மண உறவு (Affinal Relationship	புனை உறவு (Fictive Relationship)
தந்தை, பாட்டன், தாய், உடன் பிறந்தோர், பேரன், பேத்தி, கணவன், மனைவி	மாமனார் மாமியார் மைத்துனன் மைத்துனி	தத்துக்குழந்தைகள்

1. குருதி உறவு

மனிதன் தனித்து வாழ்வதில்லை. அவன் மற்றவர்களைச் சார்ந்தும், சேர்ந்தும் வாழ்கின்றான். இவ்வாறு சேர்ந்து வாழ்வதற்குரிய காரணங்கள் பல உள்ளன. அவற்றில் சில உயிரியல் அடிப்படையில் பிறப்பின் வாயிலாக அமைவன. அப்படி, பிறப்பின் வாயிலாக அமையும் உறவுகள் இரத்தத் தொடர்புடைய பிணைப்புக்களாக அமைகின்றன. இவ்வகைப் பிணைப்புக்களைக் குருதி உறவு (Consaguineal Relationship) என்பர்.

2. மண உறவு

ஒரு வீட்டில் பிறந்த பெண் வேறொரு வீட்டில் பிறந்த ஆணோடு இல்லறம் ஏற்று வாழும் வாழ்க்கை, திருமண வாழ்வு அல்லது குடும்ப வாழ்க்கை எனப்படுகிறது. திருமணத்தின் மூலம் இந்த இருவரும் இணைக்கப்படுகின்றனர். இதனால் ஆணுக்கு மனைவி வழி உறவினரோடும், பெண்ணுக்குக் கணவன் வழியினரோடும் புதிய பிணைப்பு ஏற்படுகின்றது. இதை த. இராபர்ட் சத்ய சோசப் "திருமணமானது தன் பங்காளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு அனுபவமற்ற பெண்ணை அவளுடைய கணவனின் உறவினர்களின் கட்டுப்பாட்டிற்குள் ஒரு மனைவியாகவும், தாயாகவும் மாற்றுகின்றது. திருமணத்தின் மூலம் ஒரு பெண் ஒரு குடும்பத்திலிருந்து இன்னொரு குடும்பத்திற்குச் செல்லும் போது அவளுடைய மண உறவினர்களுக்குப் புதிய உறவு முறைப் பிரிவினரையும் எடுத்துச் செல்கிறாள்" என்று கூறுகிறார்[7].

இங்ஙனம் திருமண நிகழ்வால் ஏற்படும் உறவுக்கு மண உறவு (Affrinity) என்று பெயர்.

3. புனை உறவு

புனை உறவு என்பது குருதித் தொடர்பு இல்லாமலும் திருமணத்தின் வாயிலாக அமையாமலும் புதிதாக உருவாகும் உறவாகும். திருமணமான இருவர். வேறு மணமக்கள் பெற்றெடுத்த குழந்தையைத் தம் குழந்தையாக, தம் வாரிசாகத் தத்தெடுத்துக் கொள்வதாகும்.

---

7. இராபர்ட் சத்ய சோசப், த.சமகாலத் தமிழர்களின் உறவு முறை அமைப்பும், உறவு முறைச் சொற்களும் ப.90

குல அமைப்புக்கு குருதி உறவே அடிப்படை

முதலாவது உறவு முறையான குருதி உறவு முறை 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் இனத்தில் ஆழமாக வேரோடியிருக்கிறது. ஆணி வேராக உள்ள குடும்ப அமைப்பு முறைக்கு, குருதி உறவு அடிப்படைக் காரணமாக உள்ளது. குடும்ப அமைப்பில் உள்ள 'தந்தை'வழி மரபு' எனப்படும் ஓர் இறுகிச் செறிந்த மரபு, 'குலம்' என்னும் அமைப்பு உருவாக அடிப்படைக்காரணமாக உள்ளது. குல அமைப்பு முறை, குருதி உறவு முறையின் வழிப்பிறந்தது எனக் கருதுதல் பொருத்தமுடையது.

குலம்

'குலம்' என்றால் 'குழு ' அல்லது 'கூட்டம்' அல்லது 'குடிப்பிரிவினர்' எனப் பொருள்படும். குலம் என்ற சொல்லுக்கு வேர்ச்சொல் 'குல்' என்பதாகும். 'குல்' என்பதற்குப் பொருள்

குல் - குல - குலவுதல், கூடுதல் - கூடி மகிழ்தல் - கூட்டுறவாகுதல் ஆகும். இதைப் 'பாரிடங் குலவிச் செல்ல' என்று கந்த புராணம் குறிப்பிடுகிறது[8].

'குல' என்னும் சொல்லொடு ஐகாரம் சேரக், ' குலை' என்னும் சொல், கொத்து எனும் பொருள் குறித்தது. இங்ஙனமே 'குல்' எனும் சொல் அம் விகுதி பெற்றுக'குலம்' என்ற சொல் தொகுதி என்ற பொருளில் உருவாகியுள்ளது. 'வீரர் குலைகளகற்றிட' எனவரும் அரிச்சந்திர புராணக் குறிப்பும்[9] இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

குலையில் கனிகள் கொத்துக் கொத்தாகத் தொங்குவதைப் போல ஓர் உறவு சார்ந்த மக்கள் ஓரிடத்தில் குலையாய்க் குவிந்து வாழுதலைக் 'குலம்' என்று அழைத்தனர் எனலாம். இதற்கு அரணாகத் தேவநேயப்பாவாணர்[10] அவர்களின் கருத்தும் அமைகிறது.

ஒரு பொது மூதாதையின் மரபு வழியில் தோன்றியதன் மூலம் ஏற்படும் உறவுக் குழுவே 'குலமாகும்', என்பது பிரிட்டானியாக் கலைக்களஞ்சியத்தின் கருத்தாகும்[11].

முன்னோர் ஒருவரின் மரபு வழியில் வந்த அமைப்பே குலமாகிறது. எனவே ஓர் ஆண்வழி மரபினைக் கொண்டதே குலமாகும் என்பார் துளசி இராமசாமி[12].

---

8. கந்தபுராணம் காண்டப் படலம் தாரக பா.18
9. அரிச்சந்திர புராணம் - வேட்ட பா.84
10. தேவநேயன், ஞா.வேர்ச்சொல் கட்டுரைகள் ப.132
11. The World book Encyclopaedia Vol.P. - 498
12. துளசி இராமசாமி - நெல்லை நாட்டுப்புறத்தெய்வங்கள் ப.73

இந்திய மொழிகளில் குலம் எனும் சொல்லுக்குச் சரியான பல சொற்கள் வழக்கில் உள்ளன. 'வம்சா', 'குலா'. 'தேவகா', 'பாலி', 'வீடு', 'குடும்ப', 'இன்டிப்பேரு'எனப் பல சொற்களால் குலம் சுட்டப்படுகிறது என மானுடவியல் ஆய்வாளர் ஃபிரான்சிஸ் என்பார் விளக்கம் தருகிறார்[13].

'குலம்' என்ற சொல்லாட்சி சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கில் இருந்து வந்துள்ளது. ''குலத்தாங்கு சாதிகளாலினும்'' எனக் குலமுறை பற்றி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் கூறுகின்றது[14]. இதே கருத்தை''மாளிகைக் குலந்துக்கைந்து'' என்று தணிகைப் புராணமும்[15] கூறுகின்றது. எண்ணிற்பல குலங்கள் நிலவின என்பதனைப் '' பூமனையாய் வாழ்கின்ற புட்குலங்காள்'' என்று நளவெண்பா[16] எடுத்தியம்புகிறது.

'வீடு' என்ற பெயரிலும் குலம் அழைக்கப்படுகிறது. 'வீடு' என்பதற்குத் தெலுங்கில் இணைச் சொல்லான 'இல்லு' என்ற சொல்லும் குலம் என்பதைத்தான் குறிக்கின்றது. குலத்தை மனை என்றும் குறிப்பிடுவர்[17].

குலத்தின் தோற்றம் (Orgin of clan)

மணவழிக் குடும்பத்தில் தொடங்கி, குடும்பங்கள் பல்கிப் பெருகி வளர்குடும்பமாக (Nuclear family) விரிவு பெற்றுத் 'தந்தை வழி மரபில்', மகன், பேரன் கொள்ளுப்பேரன் என்ற ஒரு நேர்கோட்டில் அவரவர் மரபுரிமையை இனங்காண உருவானது குலமாகும். இதை மானிடவியல் ஆய்வாளர் மாலின்ஸ்கி, '' தாய் தந்தை அவர்களுக்குப் பிறந்த மக்கள் ஆகியோரைக் கொண்ட குழுவானது, காட்டுமிராண்டிகள், பழங்குடிகள் நாகரிகமடைந்தோர் என்ற பாகுபாடின்றி அனைத்துச் சமுதாயங்களிலும் காணப்படுகின்ற ஓர் அமைப்பாக உள்ளது. எல்லா இடங்களிலும் இக்குழுவானது சமுதாய முறையையும் பண்பாட்டையும் உருவமைப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது'' எனவே,குடும்பம் படி மலர்ச்சிக் காலத்தில் குல அமைப்பாக உருவாகியது என்கிறார்[18]. குடும்பத்தின் வகைகள் பற்றியும் அவை குலமாக உருவாக்கம் பெறுவது பற்றியும் மானிடவியல் அறிஞர்கள் பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர்.

---

13. மேலது ப.73
14. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - திருவாய் பா.373 - 3
15. தணிகைப் புராணம் - சீ.வ பா.373-3
16. நளவெண்பா பா.37 -4
17. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட பத்மராமண்ணா சேக்கந்தராபாத் வயது 40, நேர்காணல்
18. Encyclopaedia Brittanica Vol 10 "Kinship" P - 477

தனிக்குடும்பம்

↓

விரிந்த குடும்பம்

நேர்வழி விரிந்த குடும்பம் (Lineal Extended Family)	கிளை வழிவிரிந்த குடும்பம் (Laternally Extended Family)
↓	↓
தந்தைவழி விரிந்த குடும்பம் (Patri Lineal Extended Family)	தாய் வழி விரிந்த குடும்பம் (Martri Lineal Extended Family)
↓	
மகன்	
↓	
பேரன்	
↓	
கொள்ளுப் பேரன்	

குடும்பம் என்பது ஒரு சமூக அடிப்படை அலகு என்று உலகளாவிய பொதுமைக் கூறு 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்திலும் பொருந்தி வருவதைக் காண முடிகிறது.

தலைக்கட்டு

குடும்பத்தின் ஆண் வழி மரபுரிமையர்கள், திருமணத்திற்குப் பிறகு 'தலைக்கட்டு' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றனர். திருமணத்திற்குப் பிறகு ஆண் வாரிசுகள் அவர்தம் மனைவியரோடு சேர்ந்துவாழும் நிலையினை ஒரு தலைக்கட்டு என்று கணக்கிடப்படுகின்றது. குடும்பத்திலிருந்து கிளைத்து வந்து ஆண் வம்சாவழி பல்கிப் பெருகியது.

கொள்ளுப்பாட்டன்

↓

பாட்டன்

↓

தந்தை

↓

மகன்

↓

பேரன்

காலப் போக்கில் தலைக்கட்டுகள் வளர்ந்தன. பல தலைக்கட்டுகள் உள்ள உறவுக் குழுவினர் ஒன்றாக வாழ்ந்தனர். இந்த உறவுக் குழுவிற்குக் குலம் என்ற பெயர் ஏற்பட்டது. ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் பங்காளிகள் எனப்பட்டனர்.

குலங்களின் உருவாக்கம் பற்றிக் கூறவந்த கைலாசபதி "ஒவ்வொரு மனிதனும் பிறப்பு, வாழ்விடம், தொழில் முதலியவற்றால் ஏதோ ஒன்றின் காரணமாகவே சமுதாயத்தின் ஒரு குழுவைச் சேர்ந்தவராவார். கூட்டுறவு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தன இந்தக் குழுக்கள்" என்பார்[19].

குலத்தை வீடு மற்றும் மனை என்ற சொல்லால் சுட்டப்படுவதை 24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் குலப் பெயரோடு பொருத்திப் பார்த்தால் ஓர் உண்மை தென்படும். இந்த இனத்திலுடைய பெயரைக் குலங்களின் எண்ணிக்கையோடு 'மனை' என்ற சொல்லையும் சேர்த்து வைத்திருப் பதிலிருந்து இவ்வினத்தவர் தமது குலத்திற்கு எத்தகைய சிறந்த இடத்தை வழங்கியிருக்கின்றனர் என்பது புலனாகிறது.

இருபத்தி நான்கு குலங்கள்

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் மொத்தம் 24 குலங்கள் உள்ளன. குலத்தை 'மனை' என்றும் 'வீடு' என்றும் அவர்கள் பேசும் தெலுங்கில் 'இல்லு' என்றும் அழைக்கின்றனர். இந்த இனத்தில் குல அமைப்பு மிகவும் முதன்மை பெறுகிறது என்பதற்குக் குலங்களின் மறு பெயரான 'மனை' என்ற பெயரும் மொத்தக் குலங்களான 24 என்பதும் இனத்தின் பெயரில் இடம் பெறுவதே போதிய சான்றாகும்.

24 குலங்களின் பெயர்கள் வருமாறு

1. மக்கடையர்
2. மாராட்டியர்
3. ரெட்டையவர்
4. தவலையர்
5. கொரகையர்
6. பில்லிவங்குரவர்
7. சொப்பியர்
8. பசுபதி கோட்டயவர்
9. மும்முடியர்
10. கணித்தியவர்
11. தில்லைபயவர்
12. பலிவிதியர்
13. சென்னியவர்
14. கந்தவங்கலவர்
15. மாதளையவர்
16. ராஜபைரவர்
17. வம்மயவர்
18. கப்பவர்
19. தரிசியவர்
20. வாஜ்யவர்

19. கைலாசபதி - பண்டைத்தமிழர் வாழ்வும். வழிபாடும் ப.202

21. கெந்தியவர் 23. சுரகையவர்
22. நலிவிதியர் 24. கோலயர்

24 குலங்கள் குறித்த சான்றாதாரம் குலங்களின் பெயர்களுடன் பல்லடம் செப்பேட்டில் (1719) குறிப்பிடப்பட்டுள்ளது[20]. இச்செப்பேடு பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது

குலக்குறி

குலக்குறி என்ற குறியீடு குலங்களுக்கு இருப்பது மரபில் உண்டு. ஒரு தாவரத்தின் பெயரையோ, விலங்கின் பெயரையோ கொண்டு குலங்கள் அமைகின்றன. எப்பெயரிட்டு அழைக்கின்றனரோ அத் தாவரம் அல்லது விலங்கு, அக் குலத்தின் புனிதத் பொருளாகக் கருத்தப்படும். குலக்குறியாகக் கருதப்படும் பொருளை, புனிதமாகக் கருதி அதற்கு எவ்விதத் தீங்கும் இழைக்காமல் போற்றிப் பாதுகாப்பர். அவ்விலங்கு அல்லது தாவரத்திலிருந்து தாங்கள் தோன்றியவர்கள் என்று எண்ணுகிற காரணத்தாலேயே அதனைக் குலக் குறியாகக் கொண்டனர் என்று மானிடவியலார் கருதுகின்றனர். குலக்குறி என்ற பொருளில் பேசப்படும் Totem என்ற ஆங்கிலச்சொல் அல்கான்கின் பழங்குடியினர் வழங்கும் ototeman என்ற வேர்ச்சொல்லிலிருந்து வந்ததாகும். Oto- என்ற வேர்ச்சொல்லுக்கு ரத்த உறவுடையவர்கள் என்பது பொருள்.

இத்தகைய குலக்குறி அமைப்பு 24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்தில் இருந்தது என்பதைத் தென்னிந்தியா முழுவதும் ஊர் ஊராகச் சென்று அனைத்து சாதிகளைப் பற்றியும் தகவல்களையும் திரட்டி ஆய்வு செய்த தர்ஸ்ட்டன், தன்னுடைய 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' எனும் புத்தகத்தில்

"தெலுங்கு பகுதியைச் சேர்ந்த ஜனப்பர்களும் தங்களிடையே 24 கோத்திரங்கள் மட்டும் உள்ளதாகக் கூறுகின்றனர். இவற்றுள் சில, குலமரபுச் சின்னங்களின் பண்புகளைக் கொண்டவை. கப்பல தவளைக் கோத்தரத்தைச் சார்ந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் ஏழு முறை மீனுக்குப் பதிலாக நிறையத் தவளைகளைப் பிடிக்க நேர்ந்தமையால் தவளைக் கோத்திரம் எனப் பெயர் பெற்றனர். அதன் பின் இக்கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் தொண்டைப் பழத்தையோ (Cephalandra Indica) இலைகளையோ பயன்படுத்துவதில்லை. இதேபோல் முக்கண்ட குலத்தவர்கள் பாகல் (Momordica Charantra) பயன்படுத்துவதில்லை. வம்ம கோத்திரத்தவர்கள் பாம்பாடை என்னும் மீன் வகையைப் பயன்படுத்துவதில்லை. இக்கோத்திரத்தினர் தங்கள் முன்னோர்களில் சிலர் திருமணப் பானையில் நீர் எடுத்துச் சென்றபோது இந்த மீன் இனங்கள்

20. இராசு.செ. பல்லடம் செப் பேடு கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள் ப.273

அப்பானையில் தண்ணீரோடு நிறையப் புகுந்து கொண்டதே காரணம் என்பர். இதே காரணத்திற்காகக் கோல கோத்திரத்தினர் கோலசி வகை மீன்களை உண்பதில்லை" என்று குறிப்பிடுகின்றார்[21].

தர்ஸ்டன் குறிப்பிட்டுள்ள குலங்களின் பெயர்கள் இன்றைய வழக்கில் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படுகின்றன.

1. தவளைக் கோத்திரம் - தவலையர்
2. தொண்டைக் கோத்திரம் - சென்னயவர்
3. முக்கண்ட கோத்திரம் - மக்கடையர்
4. வம்ம கோத்திரம் - வம்மயவர்
5. கோல கோத்திரம் - கோலயர்

இது குறித்து ஆய்வாளர், தர்ஸ்ட்டன் குறிப்பிட்ட குலங்களைச் சேர்ந்த மிகப் பலருடன் நேரடிப் பேட்டி கண்டு விரிவான ஆய்வை மேற்கொண்டார். தர்ஸ்ட்டன் குறிப்பிட்டபடி 'கப்ப' குலத்தவர்கள் தவளையைக் குலச் சின்னமாகக் கருதவில்லை என்றும் கப்பவர் குலத்தலைவர்களின் ஒருவரான சதாசிவம் செட்டியார் நேர்காணலின் போது குறிப்பிட்டார்[22].

இதேபோல் மீன் பற்றிய எவ்வித புனித முக்கியத்துவம் இல்லை என்று வம்மயவர் குலத்தலைவர் முத்துவீரன் செட்டியாரும்[23] தவலயர் குலச்செட்டுமை சுப்பிரமணியமும் தெரிவித்தனர்[24]. கோலயர் குலத்தினர் வெளியிட்ட கும்பாபிசேக மலரிலும் (1995) மீன் பற்றி எவ்விதச் செய்தியும் இடம்பெறவில்லை.

இதுவரை கிடைத்துள்ள செப்பேடுகளிலும் குலக்குறி பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை. 'குலக்குறி' குறித்து மானிடவியலார் கூறும் இலக்கணங்கள்[25]

1. குலக்குறி பொதுவாகத் தாவரம், விலங்கு அல்லது இயற்கைப் பொருளாக இருக்கும்.
2. அது புனிதப் பொருளாகக் கருதப்படும்.
3. அந்தப்பொருள் பயன்பாட்டிலிருந்து விலக்கி வைக்கப்படும்.
4. அந்தப் பொருளை உண்ணவோ, கொல்லவோ, துன்புறுத்தவோ மாட்டார்கள்.

எடுத்துக்காட்டாகக் கொங்குவேளாளர் இனத்தில் 'ஈச்சன் கூட்டம்' என்ற பெயரில் ஒரு குலம் உண்டு. அக்குலத்தவர்களுக்கு 'ஈச்சமரம் ' குலக்குறியாக உள்ளது.

21. தர்ஸ்ட்டன், எட்கர், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் ப.528
22. சதாசிவம் செட்டியார். உடுமலைப்பேட்டை, வயது 74, நேர்காணல்
23. முத்துவீரன் செட்டியார், பொள்ளாச்சி, வயது74, நேர்காணல்
24. சுப்பரமணியம் செட்டியார், பொள்ளாச்சி, வயது 69, நேர்காணல்
25. Kandaswamy, S.P.The History of the Kongu Vellass. Ph.D Thesis. University of Madras 1985 PP.152-153.

அவர்கள் ஈச்ச மரத்தைப் புனிதப் பொருளாகக் கருதுவர். ஈச்சம்பழத்தை உண்ண மாட்டார்கள். ஈச்சன் இலையில் உருவான விளக்குமாற்றை வீடு கூட்டுவதற்குப் பயன்படுத்த மாட்டார்கள். ஈச்சன் பாயில் படுக்கமாட்டார்கள். ஈச்சன் நாரால் செய்யப்பட்ட எல்லாப் பொருட்களும் பயன்பாட்டிலிருந்து விலக்கிவைக்கப்பட்டுப் புனிதப் பொருளாகக் கருதப்படுகிறது.

குலக்குறி குறித்த இந்த இலக்கணங்கள் பொருந்தி வரும்படியான பொருட்கள் ஏதாவது 24 மனைத்தெலுங்குச்செட்டியார் இனத்தில் உண்டா என்று ஆய்வாளர் விரிவான ஆய்வை மேற்கொண்டார். அதன் விளைவாக இந்த இனத்தில் தாவரம், விலங்கு இயற்கைப் பொருட்கள் ஆகியவற்றைப் புனிதப் பொருட்களாகக் கருதப்படும் வழக்கம் காணப்படவில்லை, என்பதைச் சான்றாதாரங்களின் மூலம் அறிய முடிந்தது. எனவே 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் குலக்குறி (Totem) தொடர்பான நம்பிக்கைகள் உண்டு எனத் தர்ஸ்ட்டன் கூறுவதற்குச் சான்றாதாரங்கள் ஏதும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். குலக்குறி அமைப்பு முன்பு இருந்து பின்னர் காலப்போக்கில் அழிந்துவிட்டனவா என்பதை எதிர்கால ஆய்வாளர்கள் ஆய்வு செய்யலாம்.

மண உறவு

உறவுக் குழுவில் இரண்டாவதாகக் கூறப்படும் திருமணம் மிகவும் தொன்மையானது. இந்திய மானிடவியல் அறிஞர்களான மசூம்தாரும் (D.N. Majumdar) மதனும் (T.N. Madan) 'திருமணம், பண்பாடு உருவான காலத்திலேயே ஏற்பட்டு விட்டது. அது இந்த அடிப்படையில்தான் தொடங்கி வளர்ச்சி அடைந்தது என்று அறுதியிட்டுச் சொல்லமுடியாது. எனவே அதன் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை ஆராய முயல்வது தேவையற்றது' என்று கூறுகின்றனர். வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வடிவங்களில் திருமணம் தோன்றியது. அது மனித வரலாற்றில் ஒரு வடிவில் தொடங்கி வேறுவேறு வடிவங்களில் படிமலர்ச்சி அடையவில்லை என்பது இவர்களுடைய கருத்தாகும்[26].

திருமணம் ஆதிகாலத்திலிருந்தே சமுதாயத்தில் நிலவி வருகிறது. ஆயினும் பழங்காலத்தில் அஃது எவ்வகையில் இருந்தது என்று தெரியவில்லை. இலெவிசு என்றி மார்கன் (Lewis Hendry Margan) என்ற மானிடவியல் அறிஞர் பழங்காலத்தில் சமூகத்தில் திருமணம் என்று எந்த ஏற்பாடும் நிலவவில்லை, மக்கள் கட்டுப்பாடற்ற புணர்ச்சி நிலையை (Promiscuity) மேற்கொண்டு வாழ்ந்தார்கள். அதன் பிறகு திருமணம் ஒரு படிவளர்ச்சி முறையில் தோன்றி நிலை பெற்றது என்பது இவர் கருத்தாகும். மேலும் அவர் "முதலில் உடன் பிறந்தோர், தங்களுக்குள் பாலின உறவு வைத்துக் கொண்டு கூட்டாக

---

26. Majumdar D.N.and Mada T.N.1961 Social Anthopology P.14

குடும்ப வாழ்க்கை நடத்தும் நிலை (Consanguine family) தொடங்கியது. சில காலம் கழித்து இம் முறையில் மாற்றம் ஏற்பட்டது. உடன்பிறந்தோர் மணமுடிப்பது மறைந்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் குருதியுறவு இல்லாத வேறு வேறு குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களைக் கூட்டாக மணந்து வாழும் குழு மணவாழ்க்கை ஏற்பட்டது" என்கிறார். வெசுடெர்மார்க் (Westermarck) என்னும் அறிஞர், மார்கனின் இக்கருத்துகளுக்கு முற்றிலும் மாறாகப் பழங்காலத்திலேயே மனிதன் ஒரு நிலைப்பாடான திருமண வாழ்க்கை முறையை மேற்கொண்டு வாழ்ந்து வந்தான் என்று கூறுகிறார்.

555663

தகாப் புணர்ச்சி (Incest)

சமுதாயம் தடைசெய்துள்ள உறவுகளுக்கிடையே பாலுறவோ, மணஉறவோ நிகழ்ந்தால் 'அது 'தகாப் புணர்ச்சி' (incest) எனப்படும். 'தகாப் புணர்ச்சி உறவுகள் நீக்கம்' குறித்து ஒவ்வொரு பண்பாடும் தனித்தனியே வரையறைகள் ஏற்படுத்தியுள்ளன. அவ்வரையறைக்குள் உள்ள உறவுகள் தகாப்புணர்ச்சி விலக்குக்கு (Incest taboo) உரியன. அவ்வுறவுகளுக்குள் பாலுறவு நிகழ்வது தடைசெய்யப்பட்டுள்ளது' என்பார் பக்தவத்சலபாரதி[27].

பாலுறவு கொள்ளுவதைக் குடும்பத்தை விட்டு வெளியே உள்ளோரிடம் வைத்துக் கொள்ளும் வகையில், ஒழுங்கு முறையை ஏற்படுத்தி, அதன் மூலம் சமுதாயத்தின் அலகாகச் செயல்படும் குடும்பம் எனும் நிறுவனம், கட்டுக்கோப்பாகச் செயல்பட ஏற்பட்ட, ஓர் உலகம் தழுவிய முறையே 'தகாப்புணர்ச்சி விலக்கு' என்கிறார் மானிடவியலார் மாலினோஸ்கி[28] வேற்றுக் குடும்பங்களுடன் மணஉறவு ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் ஒத்துழைப்புடன் செயல்பட்டால்தான் வாழ முடியும் என்ற ஆதிமனிதனின் சிந்தனையில் உருப்பெற்றதுதான் தகாப்புணர்ச்சி விலக்கு' என்பார் டைலர்[29].

மணமுறைகள் 1. அகமணம் 2. புறமணம் என இரு வகைப்படுகின்றன. தகாப் புணர்ச்சி விலக்கின் காரணமாக அமைந்தவை இவையாம்.

அகமணம் (Endogomy)

ஒருவர் தாம் சார்ந்துள்ள குழுவுக்குள்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று சமூகக்கட்டுப்பாட்டின்படி நிகழ்வது அகமணம் எனப்படும். இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடவேண்டுமானால் சாதி என்பது ஓர் 'அகமணக் குழுவாகும்'. ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள், அவர்தம் சாதிக்குள்

---

27. பக்தவசலபாரதி. சீ. பண்பாட்டு மானிடவியல் ப.368

28. Encyclopaedia of Social Sciences "Culture" Vol.4 P.630

29. Ibid

மட்டும்தான் திருமணம் செய்து கொள்கின்றனர். வேற்றுச் சாதியினரோடு பெரும்பாலும் திருமணம் செய்து கொள்வதில்லை. இந்நிலையில் அமையும் திருமணமே அகமணம் ஆகும்" என்பார் மானிடவியல் ஆய்வாளர் பக்தவச்சலபாரதி[30].

புறமணம் (Exogamy)

புறமணம் என்பது அகமண முறைக்கு நேர்மாறானது. அதாவது ஒருவர் அவர் சார்ந்துள்ள குழுவுக்குள் திருமணம் செய்யாமல் வேற்றுக் குழுவினருடன் மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் முறையைப் புறமணம் குறிக்கிறது. சாதி என்பது ஓர் அகமணக் குழுவாக இருந்தாலும், ஒரு சாதியை சேர்ந்தவர் அந்த சாதிக்குள் உள்ள எந்த ஒருவரையும் திருமணம் செய்து கொள்ள முடியாது.

ஏனெனில் ஒரு சாதி அமைப்புக்குள் உள்ளோர், அவர்தம் கால்வழியை (Lineage) அல்லது குடிவழியைக் (Descent) கணக்கிட்டு, இவர் இவர் இரத்த உறவுகளுடையவர்கள் என்றும், மற்றவர்கள் இரத்த உறவு அற்றவர்கள் என்றும் பாகுபடுத்திக் காண்கின்றனர். இரத்த உறவுடையோர் அனைவரும் ஒரே மூதாதையர் வழி வந்த ஒரு குலத்தைச் சார்ந்தவர் என்பதால் இவர்களுக்குள் மண உறவு கொள்வதில்லை. எனவே ஒரு குழுவினர், அவர் சார்ந்துள்ள குலத்தில் மணந்து கொள்ளாமல், தம் சமூகக் குழுவிடமிருந்து அல்லது குலத்திலிருந்து வேறுபட்ட குலத்தினரை மணந்து கொள்ளும் முறை புறமணம் எனப்படும்.

தகாப்புணர்ச்சி தவிர்க்கப்படுவதற்கு இம்முறை வழிவகுக்கிறது. ஒவ்வொரு சமுதாயத்திலும் மணஉறவு தொடர்பான விதிகள் மற்றும் மரபுகள் உள்ளன. இவற்றின் அடிப்படையில்தான் மண உறவுகள் நிகழ்தல் இயலும்.

அங்ஙனம் செய்தால் தான் அந்த மணங்கட்குச் சமூக ஏற்பு கிடைக்கும். இதை இராபர்ட் சத்யசோசப் "திராவிட உறவு முறையானது பல தனித்தன் மைகளை உடையதாகக் காணப்படுகிறது. அவற்றில் உறவினர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவினரோடு திருமணத் தொடர்பைத் தடை செய்வதும் மிக முக்கியமான கூறாகும்"[31] என்பார்.

24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்தில் மணஉறவு நெறிமுறை

24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்தில் திருமண உறவுகள் குறித்துப் பலநெறிமுறைகள் உள்ளன. இத்தகைய நெறி முறைகளின் வழி நின்று நிகழ்த்தப்பெறும் மணங்கள் தான் சமூக இசைவினைப் பெறுகின்றன. 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் நிகழும் திருமணங்கள்

30. பக்தவசலபாரதி. சீ. பண்பாட்டு மானிடவியல் ப.377

31. இராபார்ட் சத்ய சோசப், த.சமகாலத் தமிழர்களின் உறவு முறை அமைப்பும், உறவு முறைச் சொற்களும் ப.46

அனைத்தும் புறமண வகையைச் சார்ந்தவையாகும். புறமண நிகழ்விற்குப் பெரிதும் துணைபுரியும் அமைப்பாகக் குலம் செயல்படுகிறது. 'குலம்' என்ற அலகுதான் பிற இனங்களின் திருமணங்களை நிச்சயிக்கும் காரணியாக அமைவது போல 24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்திலும் குலமே திருமணங்களை உறுதிப்படுத்தும் காரணியாக உள்ளது.

தடைசெய்யப்பட்ட மண உறவு

களஆய்வில் திரட்டப்பட்ட தகவல்களில் இருந்து ஒரே குலத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளவே இல்லை என்பதை அறிய முடிந்தது. இத்தகைய மணம் தகாப்புணர்ச்சியாகக் கருதித் தவிர்க்கப்பட்டது.

ஒரே குலத்திற்குள் திருமணம் செய்து கொள்வது பழிச்செயல் என்றும் சொந்தச் சகோதரர்களுக்கிடையே நடக்கும் திருமணம் போன்றது என்றும் கருதுகின்ற மரபுத்தடை நிலவுவதும் அறிய முடிந்தது. எனவே 'குலம்' எனும் அமைப்பு, தகாப்புணர்ச்சி விலக்காகச் (incest taboo) செயல்படுவது புலனாகிறது. தமது கால்வழி (Lineage) எது என்பதைத் தமது வம்சா வழியிலிருந்து அறுதியிட்டு அந்த வழியில் வந்தவர்களுடன் மணஉறவு கொள்ளுதல் கூடாது எனும் புறமணக் கொள்கை முழுமையாகப் பின்பற்றப்படுகிறது. "இரத்தவழியுடையோர் அனைவரும் ஒரு மூதாதையர் வழிவருவதால் இவர்களுக்குள் மணஉறவு கொள்ளுவது இல்லை. இரத்த வழித்தொடர்புடைய குழுவே குலம், கோத்திரம், பரம்பரை, வம்சம் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன" என்கிறார் மானிடவியல் அறிஞர் பக்தவத்சலபாரதி[32].

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில், தங்களது குலத்திற்கு வேறான பிறகுலத்தவர்களுடன் தான் மணஉறவு கொள்ள வேண்டும் எனும் புறமணக் கொள்கை உறுதியுடன் பின்பற்றப்படுகிறது.

பிற குலத்தவர் அனைவருடனும் மணஉறவு கொள்கின்றனரா? அதில் ஏதாவது நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா ? என்பதை ஆராய்ந்ததில் பல நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றமை புலனாயிற்று. அவை மானிடவியல் நெறி சார்ந்தவையாக உள்ளன. மானிடவியலார் குல அணிப் பகுப்பை இருவகையாகப் பிரிப்பர்[33].

1. ஓரணிக்குலத்தொகுப்பு (Phratry) 2. ஈரணிக்குலத்தொகுப்பு (Moiety)

ஓரணிக்குலத்தொகுப்பு (Phratry)

ஓரணிக்குலத்தொகுப்பு என்பது ஒரு வழி மரபின் (Unilienal Desent) அடிப்படையில் அமைந்தது.

---

32. பக்தவசலபாரதி. கீ. பண்பாட்டு மானிடவியல் ப.381

33. Melvile Jacobs. General Anthropology - P. 174

சகோதரக் குலங்கள் அனைத்தையும் ஓரணியில் இணைக்கும் முறை இதுவாம். ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் பங்காளிகள் என அழைக்கப் படுவதைப் போல், சகோதரக்குலங்களைச் சார்ந்தவர்களை இணைப்பங்காளிகள் என அழைப்பர். இந்த அணியில் இடம் பெறும் குலத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் சகோதர உறவுடையவர்கள். இவர்கள் தங்களுக்கிடையே மணஉறவு கொள்வதில்லை. வேறுகுல அணிக்கு இந்த அணியில் உள்ள குலங்கள் புறமணக் குழுவாகச் செயல்படுவனவாம்.

ஈரணிக்குலத்தொகுப்பு (Moiety)

ஓர் இனத்தில் அல்லது சாதியில் உள்ள அனைத்துச் குலங்களையும் இரு கூறுகளாகப் பிரிப்பர். இங்ஙனம் பிரிக்கப்பெற்றவற்றுள் இரண்டு தனித்தனி குல அணித் தொகுப்பு இடம் பெறுவதால் இதனை ஈரணிக்குலத்தொகுப்பு (Moiety) என்பர். அஃதாவது இரண்டு ஓரணித் தொகுப்புகள் (Phrateries) ஒரு இனத்தில் இடம்பெறுவதுதான் இந்த அமைப்பாகும். திருமண உறவுகள் இங்ஙனம் பிரிக்கப்பெற்ற இரண்டு அணிகட்கும் இடையேதான் நிகழ்தல் வேண்டும். ஒரே அணிக்குள் உள்ள குலங்களுக்கிடையே மணஉறவு இல்லை. இதுவே ஈரணிப் பகுப்பின் அமைப்பாகும்.

மேற்குறிப்பிட்ட முறையில் 24 குலங்களை உடைய இந்த இனம் இரண்டு அணிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அப்பகுப்பில்

8 குலங்கள் ஓர் அணியிலும் 16 குலங்கள் வேறு அணியிலும் இடம் பெறுகின்றன.

<u>8 குலங்கள் பட்டியல்</u>

1. மக்கடையர்
2. மாராட்டியர்
3. ரெட்டையவர்
4. தவலையர்
5. கொரகையர்
6. பில்லிவங்குரவர்
7. சொப்பியர்
8. பசுபதி கோட்டயவர்

<u>16 குலங்களின் பட்டியல்</u>

1. மும்முடியர்
2. கணித்தியர்
3. தில்லையவர்
4. பலிவிதியர்
5. சென்னியவர்
6. கந்தவங்கலவர்
7. மாதளையவர்
8. ராஜபைரவர்
9. வம்மயவர்
10. கப்பவர்
11. தரிசியர்
12. வாஜ்யவர்
13. கெந்தியவர்
14. நலிவிதியர்
15. சுரகையவர்
16. கோலயர்

முதற்பிரிவான 8 குலங்களுக்குள்ளும் திருமணம் நிகழ்வதில்லை. அதேபோல் இரண்டாம் பிரிவில் உள்ள 16 குலங்களுக்குள்ளும் திருமணம் நிகழ்வதில்லை.

முதற் பிரிவில் (அ) உள்ள குலத்தினர் இரண்டாம் பிரிவில் (ஆ) இடம் பெற்றுள்ள குலத்தினரைத்தான் மணம்புரிவர். அஃதாவது முதல் அணியில் உள்ள ஒருவர் இரண்டாம் அணியில் உள்ள 16 குலங்களில் ஏதாவது ஒரு குலத்துடன் தான் மணஉறவு கொள்ளுவர்.

அதேபோல் இரண்டாம் அணியில் உள்ள ஒருவர் முதல் அணியில் உள்ள 8 குலங்களில் ஏதாவது ஒரு குலத்துடன் தான் மண உறவு கொள்ளுவர்.

மானிடவியலார் குறிப்பிடும் ஈரணிப் பகுப்புமுறை இந்த இனத்தில் பொருந்தி வருவதைக் காண முடிகிறது. திருமணங்களை நெறிப்படுத்துவதில் 'குலம்' ஒரு கருவியாக நின்று ஆற்றும் பணிகளைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் எடுத்தியம்பி உள்ளனர். அதில் மார்கன் என்ற மானிடவியல் அறிஞரின் கருத்து ஈண்டு குறிப்பிடத்தக்கது.

மார்கன் பயன்படுத்திய 'கணம்' என்னும் சொல் 'குலம்' அல்லது 'கூட்டம்' என்ற பொருளில் தான் கையாளப்படும் என்று கிருஷ்ணசாமி கூறுகிறார்[34].

"கணத்திற்குள் (குலத்திற்குள்) எந்த அங்கத்தினனும் மணம் புரியக்கூடாது. இதுதான் கணத்தின் அடிப்படை விதி. இதை ஒன்றுபடுத்தி வைத்திருக்கும் பந்தம். நேரடி இரத்த உறவு முறையின் விசேஷத்தால் தான் அதற்குள் இருக்கிற தனி நபர்கள் உண்மையிலேயே கணம் ஆகிறார்கள்"[35]. எங்கெல்ஸ் குலத்திற்குள் மணஉறவுகள் கூடாது என்பதை உறுதிப்படுத்திய பின்னர், ரோமாபுரியில் நிலவிய குல அமைப்பை விவரிக்கும் போது "கணத்திற்குள்ளே மணம் புரியக்கூடாது என்பது நிர்ப்பந்தம். ரோமாபுரியில் இது எழுதிய சட்டமாக என்றைக்கும் இருந்ததில்லை. இருந்தாலும் அந்த பழக்கம் இருந்தது. நம் காலத்துக்கு எட்டியிருக்கிற எண்ணற்ற ரோமானியத் தம்பதிகளின் பெயர்களில் ஒன்றையாவது கணவனுக்கும் மனைவிக்கும் ஒரே கணப்பெயர் இருக்கவில்லை."**ஒரு பெண் தனது கணத்தைச் சேர்ந்த அங்கத்தினனை மணம் புரிய அனுமதிக்கப்படவில்லை**"[36] என்று கூறுகிறார். ஒரே குலத்தைச் சேர்ந்த ஒரு ஆணும் பெண்ணும் மணம் புரிந்துகொள்ள எந்தச் சமுதாயமும் அனுமதிக்கவில்லை என்பது அறிஞர் ஏங்கல்ஸ் கூற்றின் மூலம் புலப்படுகிறது. இங்ஙனம் உறவுகளை நெறிப்படுத்தும் கருவியாகக் குல அமைப்புப் பயன்படுகிறது. 16 குல அணியில் உள்ள அனைத்துக் குல மக்களும் தங்களுக்குள் சகோதரர்கள் .

---

34. கிருஷ்ணசாமி, க. கூட்டமும் திருமணமும் 1983 ப.4

35. ஏங்கல்ஸ் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் ப.136

36. மேலது ப.188

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலங்களுக்கிடையே நிலவி வரும் மண உறவு முறைகள்

குலங்கள்

அ		ஆ
1. மக்கடையர்		1. மும்முடியர்
		2. கணித்தியர்
2. மாரட்டியர்		3. தில்லையவர்
		4. பலிவிதியர்
3. ரெட்டையவர்		5. சென்னியவர்
		6. கந்தவங்கலவர்
4. தவலையர்		7. மாதளையவர்
		8. ராஜபைரவர்
	← திருமண உறவு →	9. வம்மயவர்
5. கொரகையர்		10. கப்பவர்
		11. தரிசியர்
6. பில்லிவங்குரவர்		12. வாஜ்யவர்
		13. கெந்தியவர்
7. சொப்பியர்		14. நலிவிதியர்
		15. சுரகையவர்
8. பசுபதி கோட்டயவர்		16. கோலயர்

(அ, ஆ குழுக்களுக்குள்: திருமண உறவு ✗)

என்றே அழைத்துக் கொள்ளுகின்றனர். அதே போல் 8 குல அணியில் உள்ள குலமக்களும் தங்களுக்குள் சகோதரர்கள் என்றே உறவு முறை கொண்டாடுகின்றனர்.

16குலத்தவர்கள் 8 குலத்தவர்களை மச்சான், மாமன் என்னும் உறவுமுறைச் சொற்களால் அழைத்துக் கொள்கின்றனர். இந்த இரண்டு அணிகட்கிடையே கேலி உறவுமுறையும் நிகழ்கிறது.

"பங்காளிகள் என்ற சொல் மிக ஆழ்ந்த பொருள் உள்ள உறவுமுறைச் சொல்லாகும். ஒரே கூட்டமாக குலமாக இருந்தால் அவர்கள் பங்காளிகள் என்று அழைக்கப்படுகின்றனர். மாமன், மச்சான் என்ற சொற்கள், மைத்துனன் உறவு முறையைக் குறிக்கும். மைந்து - வலிமை ஒருவர் திருமண உறவால் வலிமை சேர்க்கிறவர். அதாவது தன்னுடைய சோதரக் கூட்டத்தைத் தவிர மற்ற கூட்டத்தாரை மைத்துனர் என்ற உறவு முறையில் குறிப்பிடுகின்றனர்" என்று பங்காளிகள் குறித்து க. கிருஜ்ணசாமி குறிப்பிடுகின்றார்[37].

"ஒரு மொழியில் காணப்படும் ஏனைய சொற்களை விட உறவுமுறைச் சொற்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. திருமண முறை, குடும்ப அமைப்பின் தன்மை மற்றும் குடிவழிப்பட்டியலை ஆராய்ந்து முடிவு செய்தல் ஆகியவை உறவு முறைச் சொற்களின் ஆழமான பொருளை அறிந்து கொள்வதற்கு உதவியாகக் காணப்படுகிறது" எனும் இராபர்ட் சத்திய சோசப்[38] கூற்றிக்கேற்ப 'பங்காளி', 'மைத்துனர்' ஆகிய சொற்கள் ஆழமான பொருளுடையவை என்பது புலனாகிறது.

'பங்காளி' 'மைத்துனர்' எனும் உறவமைப்பு 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் மிகத் தெளிவாக உள்ளது. ஒருவர் என்ன குலத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்தவுடன், அவர் யாருக்குச் சகோதர முறையுடையவர், யாருக்கு மைத்துனர் முறையுடையவர் என்று தெளிவாக அறுதியிட்டுக் கூறுதல் இயலும்.

எடுத்துக்காட்டாக, மக்கடையர் அதே அணியில் உள்ள சொப்பியர் அல்லது மராட்டியருக்குச் சகோதர உறவுடையவர் அதே நேரத்தில் இரண்டாம் அணியில் உள்ள மும்முடியர் அல்லது ஏனைய 15 குலத்தைச் சார்ந்தவர்கள் யாராயினும் மக்கடையருக்கு மைத்துன உறவு முறையினர். எனவே, இந்த அமைப்பு முறை தண்டவாள அமைப்பு முறை என வர்ணிக்கப்படுகிறது.

---

37. கிருஷ்ணசாமி, க. கூட்டமும் திருமணமும் ப.43

38. இராபர்ட் சத்ய சோசப், த.சமகாலத் தமிழர்களின் உறவு முறை அமைப்பும், உறவு முறைச் சொற்களும் ப.41

உறவுகள் இங்ஙனம் முறைப்படுத்தப்படுவதால் மண உறவுகள் நெறிப்படுத்தப்படுகின்றன. இதற்குச் செவ்விய குல அமைப்புத் தான் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. 'பாத்திரம் அறிந்து பிச்சை போடு, கோத்திரம் அறிந்து பெண் கொடு' என்னும் முதுமொழி நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

"தமிழர்களின் தனிச்சிறப்பு என்னவெனில் உறவினர்கள் அனைவரையும் மணவழி உறவினர் (cross relations), பங்காளி உறவினர் (Parallel relatives) என இரு கூறுகளாகப் பகுப்பதாகும். இந்த இருமை நிலை உறவு மிகச் சில பண்பாடுகளில் மட்டுமே காணப்படுகிறது" என்பார் பக்தவத்சலபாரதி[39], இருமை நிலை உறவால் சிறப்புறும் மிகச் சில பண்பாடுகளில் 24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனமும் ஒன்றாகும்.

இத்தகைய அமைப்பு முறை தொடக்கக் காலத்திலிருந்தே இந்த இனத்தில் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பிறழ்ச்சி உறவு

அண்மைக்காலத்தில் மிகச் சிறிய அளவில், நெறிப்படுத்தப்பட்ட இத்தகைய குல அமைப்பு மணமுறையில் பிறழச்சிகள் நிகழ்ந்துள்ளன. ஒரே அணியில் உள்ள சகோதரக் குலங்களுக்கிடையே மணஉறவுகள் நிகழ்ந்துள்ளன என்பதும், அது மிகச்சிறிய அளவில், அதாவது இரு விழுக்காடு அளவில் மட்டுமே நிகழ்ந்துள்ளது என்பதும் கள ஆய்வில் பெறப்பட்ட தகவல்களிலிருந்து அறிய முடிகிறது.



'அ' அணியில் உள்ள மக்கடையர் குலத்தைச் சேர்ந்த ஒருவர் 'ஆ' அணியில் உள்ள மும்முடியர் குலத்திற்குப் பெண் கொடுக்கிறார். 'இ' அணியில் உள்ள சொப்பியர் குலத்திற்கு இளைய பெண்ணைக் கொடுக்கிறார். 'இ' அணியில் உள்ள சொப்பியர் 'ஆ' அணியில் உள்ள மும்மடியர் உடன் மண உறவு கொண்டுள்ளார். இதனால் மக்கடையர் மும்முடையருக்கும் உறவு முறை ஆகிறார், சொப்பியருக்கும் உறவு முறை ஆகிறார், எனவே தண்டவாள அமைப்பு மாறி முக்கோண அமைப்பு ஏற்படுகிறது.

39. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல் ப.458

இத்தகைய மாற்றத்தால் சீரான உறவு முறையில் குழப்பங்கள் தோன்றுகின்றன. தன் குலத்தைத்தவிர ஏனைய 23 குலங்களில் எதில் வேண்டுமானாலும் மண உறவு கொள்ளலாம், என்று வாதிடும் புதுமைவாதிகளின் கருத்து இது. இவர்கள் கூட மாற்று அணியில் தங்களுக்கேற்ற மணமகன் அல்லது மணமகள் கிடைக்காத நிலையில் மட்டுமே அணிக்குள்ளே மண உறவு கொள்ளுகின்றனர். தற்போது 2 விழுக்காடு அளவு மட்டும் அணிக்குள்ளே நிகழும் இத்தகைய முக்கோண அமைப்புத் திருமண உறவுகள் இடம்பெற்றுள்ளன. இனி எதிர்காலத்தில் அதிகமாகும் வாய்ப்பு உண்டு என்று தகவலாளிகள் கருத்தறிவிக்கின்றனர்.

பிறழ்ச்சி உறவைக் கண்டித்து கவிஞர் வெ.நடராசன் எழுதிய கவிதை [40A] இங்கு நினைவுகூரத்தக்கது.

"எட்டும் பதினாறும் வீடிருக்க
ஏனடி குலத்திலே கோளாறு
பெட்டிப் பணமே துணிச்சலடி
பெருமை இல்லையெனக் கும்மியடி!

குலமது மாறினால் போதுமென்று
கொடுப்பினை கொள்வினை நடக்குதடி
விலையற்றுப் போனது குலமரபு
வித்தியாசமானது நல்லுறவு!"

குலராசி

நூற்றுக்கணக்கான குடும்பத்தலைவர்களை நேர்காணல் கண்டும், இந்த ஆய்வுக்காக அமைக்கப்பட்ட வினா நிரலில் உங்கட்கு ராசியுள்ள குலம் எது? ராசியற்ற குலம் எது என்ற ஒரு தனி வினா அமைந்து அதன் வாயிலாகப் பெற்ற சர்வே அடிப்படையிலும், குலராசி என்பது பற்றி கீழே விளக்கப்படுகிறது. ஆனால் இந்த ஆய்வில் பெற்ற தகவல்களை முழுமையாக வெளியிட இயலவில்லை. அக்குறிப்பிட்ட குலத்தவர்களின் மண உறவு வாழ்வு அமைவதில் இந்த ஆய்வு முடிவுகள் தடையாக அமையும் என்பதால் பெயரைக் குறிப்பிடாமல் ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

'ராசியுள்ள குலம்' 'ராசியில்லாத குலம்' எனும் நம்பிக்கை தமிழகம் முழுவதும் பல்வேறு நிலைகளில் எல்லா இனத்தவரிடமும் நீக்கமறக் குடிகொண்டுள்ளது.

---

40. கவிஞர் வெ.நடராசன் காவிலிபாளையம் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி அம்மன் ஆலய திருக்குட முழுக்கு சிறப்பு மலர் 1993 ப.33

ராசி எனில் மங்களகரமானது, வெற்றிகரமானது எனும் பொருள்படும். இந்த நம்பிக்கை 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இன மண உறவுகளில் சிறப்பிடம் பெறுகின்றது. குறிப்பிட்ட சில குலங்களைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்ட சில, குலங்களில் மண உறவு கொள்ளுவது நலம் பயப்பது - ராசியானது எனவும், குறிப்பிட்ட சில குலங்களில் மண உறவு கொள்வது ராசியற்றது எனவும் கருதுகின்றனர். ராசியில்லாதது எனக் கருதப்படும் ஒரு குறிப்பிட்ட குலத்தவருடன் மண உறவு கொள்ளுவதைத் தவிர்க்கின்றனர்.

'சொப்பியர்' என்ற குலத்தவர் 'கோலயர்' என்ற குலத்தவருடன் செய்து கொண்ட மண உறவுகள் பெரும்பாலும் ராசியில்லாதவை என நேர்காணலின் போது தெரிவித்தனர். அதே போல 'மாரட்டியர்' என்ற குலத்தவர்கள் 'கோலயவருடன்' செய்துகொண்ட மண உறவுகள் ராசியில்லாதன எனத் தகவலாளிகள் தெரிவித்தனர். ஆனால் இதே குலத்தவருடன் செய்து கொள்ளும் உறவு மிகவும் ராசியானது என்று 'கொரகையவர்' குலத்தினர் தெரிவித்தனர்.

ஆகவே எந்த ஒரு குலத்தையும் ராசியில்லாதது என ஒதுக்க இயலாது. ஒரு குலத்தவருக்கு ராசியில்லாதது எனக் கூறப்படும் குலம் வேறொரு குலத்தவருக்கு ராசியாக அமைவதைக் காணமுடிகிறது. எந்தக் குலத்திற்கு எந்த குலம் மிகவும் ராசியானது என்பதை கீழ்கண்டப் பட்டியல் விளக்குகிறது.

மக்கடையர்	-	மும்முடியர்
கொரைகையர்	-	கோலயவர்
சொப்பியர்	-	பலவிதியர்
மாரட்டியர்	-	சுரகையர்

இந்த இனத்தைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட குலத்தில் விந்தையான ராசிச் சிக்கல் உள்ளது. இக் குலத்தில் பிறந்த பெண்கள் புகுந்த வீடு சிறப்பதில்லை என்ற ஒரு நம்பிக்கை நிவுகின்றது. பல தகவலாளிகள் கூறிய இந்தக் கூற்றை அந்தக் குலத்தின் தலைவர் அவர்கள் ஒப்புக் கொண்டார்[41]. இதற்கு இந்தக்குலத்தின் குலதெய்வத்தின் சாபம்தான் காரணம் என்று கூறுகிறார்கள்.

"குலதெய்வ வழிபாட்டை முறையாகச் செய்ததின் காரணமாக எங்கள் ஆக்ரோஷ தெய்வமாக இருந்த எங்கள் குலதெய்வமான சாந்த சொரூபிணியாக மாறி அருள்புரிந்து எங்கள் குலத்தையும் தற்போது ராசியுள்ள குலமாக்கிவிட்டாள் என்றும்" அவர் கூறினார்.

41. சமுகத்தலைவர் பெயர் வெளியிடுவதற்கில்லை

இதேபோல் வேறொரு குலப் பெண்கள் புகுந்த வீடுகள் வளமாக இல்லை என்பதற்காக அந்தக் குலத்தின் குல தெய்வக்கோயிலில் 1982-ம் ஆண்டு ஒரு பரிகார வழிபாடு நடத்தப்பட்டது என்று அந்தக் குலத்தின் தலைவர் நேர்காணலின் போது தெரிவித்தார்[42].

ஒரு குறிப்பிட்ட வீட்டுக்குப் பெண் கொடுத்தால், அந்தப் பெண் வளமான வாழ்வைப் பெறுவாள். அந்த குலத்தவர்கட்கு வீட்டுக்குப் பெண் கொடுப்பது ராசியானது என்று கூறுகிறார்கள். ஆனால் அக்குலத்திலிருந்து பெண் எடுத்தால் அது ராசியாக இல்லை என்றும் கூறுகிறார்கள். அந்தக் குலத்தில் பிறந்த பெண் தகவலாளி ஒருவர். "எங்கள் வீட்டிற்கு மருமகள்களாக வருபவர்கள் மகாராணிகளைப்போல் வாழ்கிறார்கள், ஆனால் ஏனோ எங்கள் வீட்டுப் பெண்களுக்குப் புகுந்த வீட்டில் வளமான வாழ்வு அமைவதில்லை" என்று நேர்காணலின் போது தன் ஆற்றாமையை வெளிப்படுத்தினார்[43].

குலராசியில் மூவிதக் கருத்துக்கள் வழங்கி வருகின்றன

1. ஒரு குறிப்பிட்ட குலத்துடன் மண உறவே கூடாது என்று சொல்லுகின்ற ராசி ஒரு வகை.

2. ஒரு குறிப்பிட்ட குலத்துக்குப் பெண் கொடுப்பது ராசி. அக்குலத்திலிருந்து பெண் எடுப்பது ராசியில்லை என்று கூறுவது மற்றொரு வகை.

3. ஒரு குறிப்பிட்ட குலத்திலிருந்து பெண் எடுப்பது ராசி,. பெண் கொடுப்பது ராசியில்லை என்று கூறுவது மூன்றாவது வகை.

இந்த இனத்தைச் சேர்ந்த சமூகத்தலைவர் ஒருவரிடம் 'ராசியான குலம்பார்த்துத்தான் மண உறவு கொள்வீர்களா என்று ஆய்வாளர் கேட்ட போது ராசியான குலத்திற்கு முன்னுரிமை அளிப்போம், ராசியற்ற குலத்தைத் தவிர்ப்போம், ஏனைய குலங்களுடன் மண உறவு கொள்வோம்'[44] என்று பதில் அளித்தார்.

எனவே இந்த இனத்தில் மண உறவுகளை உருவாக்குவதில் 'குலம்' பெரும் பங்கு வகிக்கிறது. பொதுவாகவே உறவுகளே குலங்களின் அடிப்படையில்தான் செயல்படுகின்றன. முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் சந்தித்துக் கொள்ளும் போது நீங்கள் எந்த வீடு எட்டா அல்லது பதினாறா எனக்கேட்டு அதற்குத் தக்க உறவுச் சொற்களால் அழைக்கிறார்கள். எனவே உறவு முறைகளை நிர்ணயிப்பது குலம் எனத் தெரியலாம்.

---

42. ஒரு குலதெய்வ கோயிலின் தவைர் பெயர் வெளியிடுவதற்கில்லை

43. பெண் தகவலாளி பெயர் வெளியிடுவதற்கில்லை

44. ஒரு சமுகத்தலைவர் பெயர் வெளியிடுவதற்கில்லை

கோத்திரம்

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் 24 குலங்கள் மட்டும் இருப்பதாகக் கல்வெட்டுச் செய்திகள் மற்றும் தகவலாளிகளின் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. ஆனால் 64 கோத்தரங்கள் இந்த இனத்தில் இருப்பதாகவும், ஒவ்வொரு குலத்திற்கும் பல கோத்திரங்கள் இருப்பதாகவும் ஒரு சிலர் கூறுகின்றனர். எந்த எந்தக் குலத்திற்கு என்ன என்ன கோத்திரங்கள் என்று 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தார் மாநாட்டு மலரில் (1987) வெளியிட்டுள்ளனர். இந்த 'கோத்திரப்பட்டியல்' பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. கோத்திரம் எனும் அமைப்பு பின்னாளில் இவ்வினத்திற்குள் நுழைந்த இடைச்செருகல் என்பதும், தொடக்க காலத்தில் இது இல்லை என்பதும் பிராமண மேல்நிலையாக்கத்தின் (Sanskritization) தாக்கம் என்பதும் எனது இந்த ஆராய்ச்சியின் முடிவாகும்.

புனை உறவு

உறவுக் குழுவில் மூன்றாவதாக இடம்பெற்றுள்ள உறவு புனை உறவு என்று கூறப்படுகின்றது. குருதித் தொடர்பு இல்லாமலும் திருமணத்தின் வாயிலாக இல்லாமலும் உருவாகும் புதிய உறவமைப்பு 24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்தில் இல்லை.

மணஉறவில் குலம் ஆற்றும் மகத்தான பணி

குருதி உறவும் மண உறவுமே இவ்வினத்தின் உறவுகட்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இவ்வினத்தில் குருதி உறவுடையோர் மண உறவு கொள்ளுவதில்லை என்பதில் உறுதியாக இருப்பதோடு, மண உறவுகட்கெனப் பல நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன ஆய்வாளர் மேற்கொண்ட ஆய்வில் குருதி உறவுடையோர் செய்து கொண்ட மணம் ஒன்றே ஒன்று மட்டும் நிகழ்ந்துள்ளதை அறிய முடிந்தது. ஒரு பெண் தனது தந்தையின் அண்ணன் (பெரியப்பா) உடைய மனைவி (பெரியம்மா) வின் தங்கை மகனை மணந்து கொண்டாள். அவன் அப்பெண்ணுக்கு ஒன்றுவிட்ட சகோதர உறவுடையவன். எனவே இத் திருமணத்தை இந்த இனத்தவர் ஏற்றுக்கொள்ளவில்லை. பெண் வீட்டாரும் மணமகன் வீட்டாரும் இவர்களைத் தள்ளிவைத்துவிட்டார்கள். இதைத் தவிர இந்த இனத்தில் வேறெங்கும் குருதி உறவுடைய திருமணங்கள் நிகழவில்லை என்பதைத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த இனத்தவர் புறமணக் கொள்கையைப் பின்பற்றுகின்றவர். மண உறவுக்கென்றே பல நெறிமுறைகளை நிறுவியுள்ளனர். யார் யாரிடம் மணஉறவு கொள்ளலாம், யார்யாரிடம் மண உறவு கூடாது என்பதை அறுதியிட இந்த இனத்திற்கு உதவிடும் அலகாகக் 'குலம்' எனும் அமைப்பு விளங்குகிறது எனில் மிகையாகாது.

இயல்-3



குலதெய்வங்களும் குலதெய்வங்கள் பற்றிய கதைகளும்

3. குலதெய்வங்களும் குலதெய்வங்கள் பற்றிய கதைகளும்

ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தான். இயற்கைச் சக்திகளையும்-அவற்றின் பேராற்றல்களையும் உய்த்து உணர்ந்தான்.

இயற்கையின் சீற்றங்களால் பாதிக்கப்பட்டபோது தனக்கு மேற்பட்ட ஒரு சக்தி இருப்பதாக உறுதிப்படுத்திக்கொண்டான். இயற்கையின் வியத்தகு ஆற்றல்களான புயல், மழை, காற்று, வறட்சி முதலானவற்றால் அவன் பாதிக்கப்பட்டபோது அவற்றிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள அச்சக்தியின் அருள் தேவை என்று நம்பினான். அச்சக்தியின் அருள் பெற இயற்கையை வழிபட விழைந்தான். இயற்கையால் நன்மை கிட்டியபோதும் அதைப்போற்றி வழிபட, விழா எடுத்து நன்றி செலுத்தினான். இந்த இயற்கை வழிபாடே உலகின் தொன்மையான வழிபாடாகக் கருதப்படுகிறது.

மனித ஆற்றலுக்குக் கட்டுப்படாத இயற்கைச் செயல்களே வழிபாட்டிற்குக் காரணமாக அமைகின்றன எனலாம். எனவே, அச்ச உணர்வின் காரணமாகத்தான் வழிபாடு தோன்றியது எனக் கருதுவது தவறாகாது. இதைச் சிக்மெண்ட்பிராய்ட் என்ற உளவியல் அறிஞர் 'இயற்கையிடமும், மரணத்திற்குப் பின்வரும் நிலைமையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்று கருதப்படுகிறது" எனக் கூறியிருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

குலதெய்வ வழிபாடு - முன்னோர் வழிபாடு

இயற்கை வழிபாட்டுடன், இறந்து போன தம் முன்னோர்களையும் தாய், தந்தையரையும் மக்கள் வழிபடத் தொடங்கினர். இத்தகைய வழிபாட்டின் அடியொற்றி வந்ததுதான் மக்களின் குலதெய்வ வழிபாடு எனக் கருதலாம்.

குலதெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாட்டின் ஒரு பிரிவு ஆகும். 'வீட்டுத் தெய்வங்கள் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டவை. இத்தெய்வங்களின் வளர்ச்சியே காலப்போக்கில் குலதெய்வமாக மாறுகின்றது. குலதெய்வத்திலும் முன்னோர் வழிபாட்டின் எச்சத்தை உணரலாம்' என்கிறார் பாலசுப்பிரமணியன்[2]

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமோடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே' என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கு[3]

1. கலைக்களஞ்சியம் தொகுதி 8 ப. 418
2. பாலசுப்ரமணியம் நாட்டுப்புற வாழ்வியல் பக் 48, 49
3. தொல்காப்பியம் நூ.பா 1367

விளக்கம் கூறவந்த வ.சுப.மாணிக்கம் 'ஈண்டு சுட்டப்பெறும் வழிபடுதெய்வம் குலதெய்வம் ஆதல் வேண்டும்', என்று கருத்துரைப்பார்[4].

ஒரு குடும்பத்தில் பிறந்து வாழ்ந்து ஏதாவதொரு சிறப்பு அல்லது தனித்தன்மை பெற்று மரணமடைந்தவர்கள், குறிப்பாகப் பெண்கள் அக்குடும்பத்தின் நினைவில் வாழ்பவர்களாகக் கருதி வணங்கப்பட்டனர். இத்தகு வழிபாட்டினை ஏற்ற குடும்பம் வளர்குடும்பமாக (Nuclear family) நின்று, பல்கிப் பெருகிக் குழுவாக உருவாகி நிலைபெறுகின்றது. இத்தகு குழுவிற்குக் 'குலம்' என்றும் அவர்கள் வழிபட்ட தெய்வத்திற்குக் '**குலதெய்வம்**' என்றும் கூறுகின்ற மரபு ஏற்பட்டது எனலாம்.

இங்ஙனம் ஒரு குல முன்னோரை அவரது சந்ததியினர் வழிபடுகின்ற 'மூதாதையர் வழிபாடு', குலதெய்வ வழிபாடாக வளர்ச்சியுற்றது. 'பழங்காலச் சமூகங்களில் சமயம் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. ஒரு தெய்வத்தை வணங்குகிற யாவரும் ஒன்றாக ஒரே சமூகமாக வாழ்ந்தார்கள். மூதாதையர் வழிபாடு அன்றைய சமுதாயத்தில் தலைமையான இடத்தைப் பெற்றிருந்தது. மூதர்தையர் வழிபாடு ஓர் இனத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்தியது. மேலும் உறவு முறையின் நிலைக்களனாகவும் இருந்தது'[5].

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் குலதெய்வ வழிபாடு

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வங்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக ஓர் இனக்குழுவில் பிறந்து அக்குழுவுடன் வாழ்ந்து, வளர்ந்து மரணத்திற்குப்பின்னர் வழிபடு நிலைக்கு உயரும் தெய்வம். இத்தெய்வம் இனக்குழுவாகிய ஒரு குலத்திற்கே தெய்வமாக - குலதெய்வமாக வழிபடப்படுகின்றது.

இரண்டாவதாக இயற்கை இறந்த நிலையில் - அற்புத நிகழ்வுகளால் குல தெய்வமானவர்கள். இங்ஙனம் இரு நிலைகளில் குலதெய்வ வழிபாடு இடம் பெறுகின்றது.

1. அகாலமரணமடைந்தவர்கள்

ஒரு குடும்பத்தில், அல்லது குருதி உறவுடையோர் எனப்படும் பங்காளிகள் குடும்பங்களில் உள்ள ஒருவர், குறிப்பாகப் பெண் அகால மரணமடைந்தால், அங்ஙனம் மரணமடைகின்றவரது குடும்பங்கள் அவரைத் தெய்வமாக வழிபடுகின்றன. அகாலமரணம் என்பது இயற்கையாக நிகழும் மரணமாக இல்லாமல், இயற்கையற்ற முறையில் நிகழும் மரணமாகும்.

---

4. விஸ்வநாதன், அ. சமுதாயச் சிந்தனைகள் ப 109

5. வாழ்வியற்களஞ்சியம் தொகுதி 1 ப. 696

இயற்கையாக மரணம் நிகழும் காலத்திற்கு முன்னாலேயே அகாலமரணமடைகின்றவர்களின் ஆவி, இயற்கை மரண காலம் முடியும் வரை அந்த இடத்தைவிட்டுப் போகாது என்றும், அமைதி அடையாது என்றும், அதற்கென விதிக்கப்பட்ட நாள்வரை அலைந்து கொண்டுதான் இருக்கும் என்றும், அந்த ஆவி பிறரைத் துன்புறுத்தாமல் இருப்பதற்காக அகால மரணமுற்றவரை வழிபடுவர் என்றும் நம்பப்படுகின்றது.

இந்த ஆவி வழிபாடே குலதெய்வ வழிபாடாகிறது. தே. ஞானசேகரன் 'இயற்கைக்கு மாறுபட்ட முறையில் கொலை, தற்கொலை, விபத்து போன்றவற்றால் இறந்தவர்களது ஆவி அதற்கென்று விதிக்கப்பட்ட காலம் வரையில் உலகில் உலவும் என்று இன்றளவும் மக்கள் நம்புகின்றனர்'[6] என்பார்

துளசிராமசாமி, 'திராவிடச் சமயம் ஆவியுலகக் கோட்பாடு பற்றியது, ஆவியை வணங்குகின்றவர்கள் தம் முன்னோர் இறந்த பின் உலவும் ஆவியை வழிபட்டு வருகிறவர்கள் திராவிடர்கள் என்பது தெளிவாகிறது'[7] என்பார்.

ஆவி வழிபாட்டை மானிடவியலார், 'ஆவியுலகக் கோட்பாடு' (ANIMISM) என்று அழைக்கின்றனர். ஆங்கில மானிடவியல் அறிஞர் எட்வர்ட்பர்னட் டைலர் 1817ல் வெளியிட்ட ' தொன்மைப் பண்பாடு ' எனும் நூலின் இரண்டாவது தொகுதியில் ' ஆவியுலகக் கோட்பாடு ' பற்றி முதன் முதலில் விளக்கியுள்ளார். 'இயற்கையின் சீற்றங்கள், கனவில் வரும் நிகழ்வுகளின் எதிரொலி, சொந்த நிழல் நீரில் தெரிவது போன்ற அனைத்துச் செயல்கட்கும் விடைகாணவியலாத அவர்கள், அவற்றுக்குப் பின் உள்ள ஆவிதான் காரணம் என நம்பினர் ' என்பதே டைலரின் கோட்பாடாகும்[8].

உடலில் உறைந்துள்ள உயிர் இறப்பு நேரின், உடலை விட்டுப் பல காத தூரம் செல்லும் எனும் நம்பிக்கையை மணிமேகலைக் காப்பியம்,

"உற்றதை உணரும் உடலுயிர்வாழ்வுழி
மற்றைய உடம்பை மன்னுயிர் நீங்கிடல்"

"உடம்பீண்டொழிய உயிர் பலகாவதம்
கடந்து சேன் சேறல் கனவிலும் காண்குவை".[9]

என்று இயம்புவதினின்று அறிய முடிகின்றது.

---

6. ஞானசேகரன் தே. மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள் பக் 35-36

7. துளசி இராமசாமி நெல்லை நாட்டுப்புற தெய்வங்கள் பக் 135

8. Tylor E.B. Primitive Culture P.I.

9. மணிமேகலை ஆதிரை பிச்சையிட்டகாதை பா 96-97, 102-103

ஆவியைப்பற்றி விளக்கும் பக்தவத்சலபாரதி "வாழ்வுக்கும் இறப்பிற்கும் ஆவிகளேகாரணம் என்று கருதினர். மனிதன் இறக்கும் போது கண்ணுக்குப் புலப்படாத சக்தி (ஆவி) வெளிப்படுவதாலேயே அவன் இறக்கிறான் என்றும் அச்சக்தி உடலினுள் இருக்கும் வரை உயிருள்ளவனாகவே இருக்கிறான் எனவும் கருதினர்"[10] என்பார்.

சிறந்த மனிதனின் இறப்புக்குப் பின் அவனது ஆவி தெய்வ நிலையை அடைகின்றது.' அப்போது அவனுடைய ஆவி அதீதச் சக்தியைப் பெறுகிறது என்ற அச்சம், அத்தகைய சக்திக்கு வல்லமையுண்டு என்ற எண்ணம், அத்தகைய ஆவி வாழ வைக்கும் என்ற நம்பிக்கை இவையனைத்தின் செயற்பாடே மனிதனின் ஆவி வழிபாட்டுக்கு வித்திட்டது. இம்முறை காலப்போக்கில் முன்னோர் வழிபாட்டுக்கு வித்திட்டது'[11]

நடுகல்

ஆவியை ஓரிடத்தில் நிறுத்தும் சக்தி மனிதனுக்கு ஏற்பட்டபின் அதை நிரந்தரமாகக் கல்லில் கொண்டு வந்து நிறுத்த முடியும் என்று நம்பினான். அதனால் மரம், கல் முதலியவற்றில் ஆவியைக் கொண்டு வந்து நிறுத்தினர். 'இந்த நிலை வந்த பின்பு நடுகல் வணக்கம் தோன்றியது. இறந்தவனது ஆவியை அக்கல்லில் தங்க வைத்த பின்பு அக்கல்லுக்கு வழிபாடு செய்தனர்[12].

அகால மரணமடைந்தவர்களின் ஆவிகள் துன்பம் தராதிருக்கவும், அவைகளை அமைதிப்படுத்தவும் வழிபாடுகள் நடத்தப்பட்டன. இங்ஙனம் மரணமடைந்தவர்களை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல்லை நட்டு வணங்கினர். இக்கல்லே நாளடைவில் வழிபடு தெய்வமாகியது. குடும்பத்தின் தெய்வமாக வழிபடப்பட்டுப் பின்னர்க் குடும்பங்கள் விரிந்து, வளர் குடும்பங்களாக (Nuclear family) பல்கிப் பெருகிப் பங்காளிகள் அனைவரும் வணங்கும் குலதெய்வமாக உயர்வாக்கம் பெற்றது.

'இறந்தவர்களின் ஆவியே திராவிடத் தெய்வங்களின் தோற்றமாக இருந்தது' என்பர் எல்மோர்[13]. இறந்தவர்களை அடக்கம் செய்த இடத்தில் கல்லை நட்டுச் செய்யப்பட்ட நடுகல் வழிபாடானது சரித்திரகாலத்திலும் இருந்தது என்பதைத் தமிழிலக்கியத் தொடர்களும் அடிகளும் புலப்படுத்துகின்றன.

10. பக்தவத்சலபாரதி, கி. பண்பாட்டு மானிடவியல் ப. 506

11. அருள்தாசு, அ. தமிழர் தம் வழிபாட்டில் இருநிலைக்கோட்பாடு 'தேடல்' ப. 28

12. வானமாமலை, நா. நடுகற்களும், நம்பிக்கைகளும் ப. 46

13. Elmore. W.T. Dravidian Gods in Modern Hinduism P 180

"நிலைபெறு நடுகல் ஆகிய கண்ணும் "[14]
"நடுகற் பீலி சூட்டி நாரரி"[15]
"டணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
திணிநட் டனரோ கல்லுங் ....."[16]
"பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல் "[17]

முதலான பழந்தமிழ் பாடற் குறிப்புக்கள் கல்லை நட்டு வழிபட்டனர் என்கிற செய்தியையும் 'புடைநடு கல்லின் நாட்பலி ஊட்டி' என்ற வரி நடுகல்லுக்குப் பலியிடப்பட்ட செய்தியையும் புலப்படுத்துகிறது. இதனைத் தொல்காப்பியம்,

'காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தென
இரு மூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட எழு மூன்று துறைத்தே' [19]

இத்தொல்காப்பிய நூற்பாவுக்கு விளக்கம் தந்த கைலாசபதி.
காட்சி - இறந்த வீரர்கட்கு நடுதற்கேற்ற கல்லைத் தேர்ந்தெடுத்தல்
கால்கோள் - நடுதல் - (நல்ல நிமித்தம் பார்த்து)
நீர்ப்படை - எடுத்து வந்த கல்லினை நீரில் கழுவுதல்
நடுதல் - வீரனது பீடு - கல்லில் பொறிப்பது மடைகொடுப்பது
வாழ்த்துதல் - வழிபடுதல்

என்று விளக்கமளித்துள்ளார்[20]. மேலும் கூறுகையில் கால்கோள், நீர்ப்படை முதலியன வீரர்க்கும் மட்டுமின்றிப் பிற்காலத்தில் பிறர்க்கும் ஏற்புடையதாயிற்று. தொல்காப்பியரது இந்த வருணனையானது பழங்குடி மக்களிடத்தில் இன்றும் கண்ணாரக் காணப்படும் நடுகல் வழிபாட்டு முறையை ஒத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்' என்பார்[21].

நடுகல் ஏன்? எங்கு?

வழிபாட்டிற்குக் கல்லைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தைக் கூறவந்த துளசிராமசாமி 'ஆவிகளுக்குத் தொடர்பு இல்லாத, வடிவமில்லாத படிமங்களையும் கற்களையும் ஏன் வழிபடவேண்டும் என்பதற்கு இன மரபுச் சின்னமுறை விடையளிக்கிறது. அதாவது முதன் முதலில் ஆவி தோன்றிய இடத்தைக் குறிப்பிட, பலிகொடுத்து ரத்தம் சிந்திய இடத்திலேயே தெய்வம்

14.புறநானூறு பகுதி 2 பா 223.3
15. மேலது பா. 232.3
16. மேலது பா 264.3.4
17. நானூறு பா. 67.1
18. புறநானூறு பா 329 - 2
19. தொல்காப்பியம் புறத்தினை பொருளதிகாரம் நூபா. ப 5 9-22
20. கைலாசபதி பண்டைத்தமிழ் வாழ்வும் வழிபாடும் ப 45
21. மேலது ப 49

அல்லது ஆவி குடிகொண்ட இடமாக்குவர். இந்த இடம் மக்கள் இடமாக மாறும். அப்போது அவ்விடத்தைக் குறிப்பிடக் கல்நடுவார்கள். நாளடைவில் அக்கல் தெய்வமானது என்பார்[22].

இக்கூற்று 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தின் குலதெய்வ வழிபாட்டிற்கும் பொருந்தி வருவதைக் காணலாம். இந்த இனத்தில் குலதெய்வமாக வழிபடப்படுபவர்கள், உயிர்நீத்த இடத்திலேயே நடுகல் நாட்டப்பட்டு அக்கல்லையே தங்களின் குலதெய்வமாக வழிபட்ட செய்திகளை இவர்களது குலதெய்வக் கதைகளின் மூலம் அறிய முடிகிறது. '

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் நடுகல் வணக்கம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அவர்களது நம்பிக்கையின் அடிப்படையில் இந்தச் சடங்கு நடைபெறுகிறது. மலை, பாறை, மரம், செடி, கொடி ஆகியவற்றில் தங்கள் குலத்தவர் ஆவி தங்கயிருப்பதாகக் கருதினர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அங்கு கல்வழிபாடு தோன்றியது என்பார் சிங்காரவேலு[23].

யாருக்கு நடுகல்

'போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு மட்டுமின்றி வடக்கிருந்து உயிர் துறந்தவர்க்கும் உடன்கட்டை ஏறிய உத்தம மாதர்களுக்கும், கோயில் கட்டியவருக்கும், கால்வாய் வெட்டியவருக்கும், நரபலியாக வெட்டுண்டவருக்கும், நற்காரியத்தின் பொருட்டுத் தற்கொலை செய்து கொண்டவர்க்கும், நிரை கவர்தல் - நிரை மீட்டல் ஆகிய போர்களில் ஈடுபட்டு இறந்த வீரர்களுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டன. செயற்கரிய செயல் செய்த விலங்குகட்கும் நடுகல் எடுக்கப்பட்டது. கோலிவன் என்ற நாய்க்கு நடுகல் எடுக்கப்பட்ட செய்தி எடுத்தனூர் கல்வெட்டின் வாயிலாக அறியலாம்.

நடுகற்களைக் குலதெய்வமாகவும், சிறுதெய்வமாகவும் கருதி மக்கள் வழிபடுகின்றனர். நடுகல் தெய்வங்களையன்றிப் பிறதெய்வங்களை வழிபட மாட்டோம் என்று மறக்குடி மகளிர் கூறியதாகப் புறநானூறு கூறுகிறது. (335-9-12) பழந்தமிழரின் வீரவழிபாட்டு அடிப்படையில் நடுகல் தெய்வங்கள் தோன்றின' [24]. இந்நடுகல் வழிபாடே பிற்காலத்தில் சிறு தெய்வ வழிபாடு தோன்றக் காரணமாக அமைந்தது போலும். நடுகல் வைத்து வழிபடப்பட்ட நிலையில் காலப்போக்கில் மாற்றம் தோன்றியது. நடுகல்லுக்கு மாற்றாக சிலைகள் அமைக்கப்பட்டு சிலைவழிபாடு உருவாகியது.

இங்ஙனம் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் அகால

---

22. துளசி ராமசாமி நெல்லை நாட்டுப்புற தெய்வங்கள் ப 138

23. Singaravelu A. Social Life of Tamils : The Classified Period P.33

24. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 11 ப. 190

மரணமடைந்தவர்கள் குலதெய்வங்களாக வழிபடப்படுகின்ற செய்திக்கு மிகுந்த ஆதாரங்கள் உண்டு.

2. அற்புத நிகழ்வுகளால் குலதெய்வமானவர்கள்

இயற்கையிலிருந்து மாறுபட்ட ஏதோ ஓர் உயர் ஆற்றலால் சில அற்புதங்கள் நிகழ்வதுண்டு. சாதாரண மனித வாழ்வில் அத்தகைய அற்புதங்கள் நிகழ்வதில்லை. இந்த அற்புதங்கள் இறையாற்றலால் நிகழ்ந்தவையென நம்பப்படுகின்றன. காந்தி, "இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாத நிலையிலும் மனித மனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் காணக் கற்பித்துக் கொள்ளுகிறது. அவை நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன" என்பார். மேலும், "துவக்க நாட்களில் காரணம் புரியாதபொழுது இறை நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன" என்றும் அவர் கூறுகிறார்[25].

இயற்கைக்கு மாறுபட்டு, அசாதாரண சூழ்நிலையில் தோன்றும் அற்புத நிகழ்வுக்குக் காரணமாய் இருந்தவர்கள் தெய்வமாக வழிபடப்பட்டனர். இத்தகைய அற்புத நிகழ்வுகள் பல 24 மனை தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக் கதைகளில் இடம்பெற்றுள்ளன.

பேழை வழிபாடு

அகால மரணமடைந்து குலதெய்வமானவர்களுக்கு நடுகல் வைத்து வழிபாடு செய்யப்பட்டது போல அற்புத நிகழ்வுகளால் உண்டான குலதெய்வம் பேழையில் வைத்து வணங்கப்பட்டது. வழிபடு பொருட்கள் பேழைக்குள் வைக்கப்பட்டிருக்கும். விழா நாட்களிலும் மற்ற வழிபாட்டு நாட்களிலும் பேழையிலுள்ள வழிபடு பொருட்கள் வெளியே எடுக்கப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு வழிபாடு நடத்தப்படுகின்றது. பேழை ஊருக்கு அருகில் உள்ள ஆற்றங்கரை அல்லது கிணற்றுக்கு சுத்தப்படுத்துவதற்காக எடுத்துச் செல்லுவதையும், சுத்தப்படுத்திய பின்னர் வழிபாட்டு இடத்திற்குப் பேழையை எடுத்துவருவதையும் ஒரு சடங்காகவே இவ்வினத்தவர் செய்கின்றனர். வழிபாட்டு இடத்தில் பச்சைப் பந்தல் (பசுமையான தென்னை ஓலையால் வேயப்படும் பந்தல்) போட்டு அதன் கீழ்ப் பேழையை வைத்து வழிபடுவர். பேழை வழிபாடு 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தின் குலதெய்வவழிபாட்டில் இன்றியமையாத வழிபாடாகக் கருதப்படுகின்றது. காலப்போக்கில் நிலையான ஒரு கோயிலைக் கட்டி அதில் தெய்வச் சிலை அமைத்து அதை வணங்கும் மரபு உண்டாயிற்று . பேழை வழிபாடிலிருந்து சிலை வழிபாட்டிற்கு மாற்றம் நிகழ்ந்ததற்கு எடுத்துக்காட்டாகத் தெலுங்குப்பட்டிப் பாலாயம்மன் - பாப்பாயம்மன் தெய்வத்திற்குப் புதிய கோயில்

25. காந்தி, க. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப. 103

கட்டப் 'பூமிப்பூசை' நடத்தப்பட்டதைக் கூறலாம். இச்சடங்கினை நேரில் பார்த்து ஆய்வாளரால் கள ஆய்வின்போது எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட மூன்று நிழற்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

1. தெலுங்கு பட்டிப் பாலாயம்மன் பாப்பாயம்மன் தெய்வத்திற்கு நடத்தப்பட்ட பேழை வழிபாடு.

2. கோயில் கட்டுவதற்கு நடத்தப்பட்ட 'பூமிப் பூசைச்' சடங்கு.

3. சிலை வழிபாடு செய்யப்படும் புதிய கோயில் அமைப்பு.

குலங்களும் குலதெய்வங்களும்

24 மனைத்தெலுங்குச்செட்டியார் இனத்தில் 24 குலங்கள் உள்ளன. ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு குலதெய்வம் உண்டு. குலதெய்வமில்லாமல் குலம் இல்லை. குலதெய்வத்தைக் கொண்டுதான் குலம் சுட்டப்படுகிறது.

ஒரு குலத்திற்கு வெவ்வேறு இடங்களில் உள்ள குல தெய்வங்கள்

ஒரு குலத்திற்கு பல இடங்களில் குலதெய்வம் உண்டு. ஒரு குலத்தவர் பல பிரிவுகளாகி ஒவ்வொரு பிரிவினரும் தனித்தனியாய்த் தங்கள் குலதெய்வத்தை வழிபடுகின்றனர்.

உதாரணமாக

சொப்பியர் என்ற குலத்திற்குக் கீழ்க்கண்ட குலதெய்வங்கள் உண்டு.

1. அங்காளபரமேஸ்வரி - மரிக்கந்தை
2. அங்காளபரமேஸ்வரி - வரவணை
3. அங்காளபரமேஸ்வரி - கள்ளிவலசு
4. அங்காளபரமேஸ்வரி - நெகமம்

சொப்பியர் என்ற ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது குலதெய்வங்களை தனித்தனியாக வழிபடுகின்றனர்.

தங்களை மரிக்கந்தை சொப்பியர் என்றும், வரவணைச் சொப்பியர் என்றும், கள்ளிவலசுச் சொப்பியர் என்றும், நெகமம் சொப்பியர் என்றும், தங்களது குலதெய்வம் குடிகொண்டுள்ள ஊரைத் தங்களைச் சுட்டும் முன்னொட்டுப் பெயராகக் கொள்கின்றனர். ஒரு குலதெய்வத்தை வழிபடுகின்றவர்கள் அனைவரும் பங்காளிகள் என அழைக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, மரிக்கந்தை ஊரில் உள்ள அங்காளபரமேஸ்வரியை வணங்குகின்றவர்கள் அனைவரும் உடன்பிறந்தோரான அண்ணன் தம்பி உறவு முறையாகிய பங்காளிகள் ஆகின்றனர். பிற ஊர்களில் உள்ள குலதெய்வங்களை வழிபடுகின்ற

சொப்பியர்கள் நேர்பங்காளிகள் என்று அழைக்கப்படுவார்கள். அனைத்துச் சொப்பியர் குலத்தவரும் ஒரணிப் பகுப்பிற்குள் (Phratry) இடம் பெறுகின்றனர்.

24 குலங்களின் பெயரும் அக்குலத்தவர்களுக்குரிய குலதெய்வங்களும் கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

8 வீடு

மக்கடையர்

கள்ளழகர்	அழகர் கோயில் மதுரை
சீனிவாசப்பெருமாள்	மூக்குத்தெரிச்சான்பாளையம் (ஈரோடு)
வரதராஜபெருமாள்	அழகாபுரி வேடசந்தூர் (திண்டுக்கல்)
வெங்கடேசபெருமாள்	வேடசந்தூர் (திண்டுக்கல்)
வெங்கடேச பெருமாள்	பருமரத்துப்பட்டி
கேசவப்பெருமாள்	வாளவாடி (உடுமலைப்பேட்டை)
பெருமாள்	கெருடன்கோட்டை (ஒட்டன்சத்திரம்)
பெருமாள்	நீலாங்காளிவலசு (ஒட்டன்சத்திரம்)
பாப்பாத்தியம்மன்	சித்தோடு (கோபி)
அங்காளபரமேஸ்வரி	கொமரலிங்கம் (உடுமலைப்பேட்டை)
அங்காளபரமேஸ்வரி	கொந்தளம் கொடுமுடி (ஈரோடு)
மத்ருகோட்டையம்மன்	நாகபட்டினம்
அங்காளபரமேஸ்வரி	ஏரிப்பட்டி (பொள்ளாச்சி)
வீரமாத்தியம்மன்	திருமஞ்செட்டியூர்
வீரமாத்தியம்மன்	புளியம்பட்டி வேடசந்தூர் (திண்டுக்கல்)

வீரமாத்தியம்மன்	மேட்டுப்பாளையம் (முசிறி)
பாலமாயிஅம்மன் நாகம்மாள்	தேவர்மடை வடமதுரை (திண்டுக்கல்)
பாலாயி அம்மன் பாப்பாயிஅம்மயன்	தெலுங்குபட்டி (திண்டுக்கல்)
சின்னம்மா, வேங்கம்மா	தும்மலப்பட்டி
கருப்பணசாமி	அம்மாபட்டி (பழனி)
பெருமாள்	கொடிங்கியம் (உடுமலை)
திருப்பதி	மேட்டுப்பாளையம் (முசிறி)
அம்மாபட்டி அம்மன்	கோதைமங்கலம் (பழனி)
பெருமாள்	கோலார்பட்டி (பொள்ளாச்சி)
பெருமாள்	ரமணமுதலிபுதூர் (பொள்ளாச்சி)
ரங்கநாதர்	சீரங்கம்
பட்டத்தரிசியார்	அம்மாபேட்டை (தஞ்சாவூர்)

மாரட்டியர்

அங்காளம்மன்	தெலுங்குபட்டி (திண்டுக்கல்)
காமாட்சியம்மன்	ராசாபட்டி, ராசக்காபட்டி (கரூர்)

ரெட்டையவர், லக்கயவர்

அங்காள பரமேஸ்வரி	வலையபட்டி (திண்டுக்கல்)
அங்காள பரமேஸ்வரி	உறையூர் (திருச்சி)
அங்காள பரமேஸ்வரி	மேட்டுமருதூர்
அங்காள பரமேஸ்வரி	முள்ளிப்பாடி
அங்காள பரமேஸ்வரி	தெலுங்கபட்டி (திண்டுக்கல்)
பாப்பாத்தியம்மாள்	திருச்சி

தலையவர்

பெருமாள்	பரமசிவன்பாளையம் (சோமனூர்)

அழகர்	மதுரை
அங்காள ஈஸ்வரி	வலையபட்டி (திண்டுக்கல்)
அங்காள ஈஸ்வரி	உறையூர் (திருச்சி)
அங்காள ஈஸ்வரி	வேடசந்தூர் (திண்டுக்கல்)
பட்டாளம்மன்	அய்யம்பாளையம் (திண்டுக்கல்)
பட்டாளம்மன்	கொழுமம் (உடுமலைப்பேட்டை)
வீரமாத்தியம்மன்	எரிசனம்பட்டி (உடுமலைப்பேட்டை)
ராஜகத்தியம்மாள்	சின்னதாராபுரம் மூலனூர் (ஈரோடு)
கருப்பணசாமி	தேவதானம்பட்டி
வீரமாத்தியம்மன்	எரிசனம்பட்டி (உடுமலைப்பேட்டை)

கொரகையர்

அக்கம்மார் ஈஸ்வரி (கஸ்தூரியார்)	கணக்கன்பட்டி (பழனி
அங்காள ஈஸ்வரி (கண்டியார்)	நாட்டுக்கல்பாளையம் (பொள்ளாச்சி)
வண்டிகாளியம்மன் (கண்டியர்)	திண்டுக்கல்
மூலனூர் கொரகையர்	செல்லப்பம்பாளையம் புதூர் (உடுமலைப்பேட்டை)
வெங்கடேசபெருமாள்	கே.வாடிபட்டி

பில்லிவங்குரவர்

மூ வீரமாத்தியம்மன்	கரையூர் (தாராபுரம்)
பாலாயி, பாப்பாயி, பட்டாயம்மன்	நாச்சிபட்டி (பாளையம்)
கருப்பண்ணசாமி	அழகர் கோவில் (மதுரை)

சொப்பியர்

கன்னிமார்சுவாமி	மடப்புறம்
அங்காளம்மன்	நெகமம்
அங்காள பரமேஸ்வரி	வரவணை (கரூர்)
அங்காள ஈஸ்வரி	மல்லாங்கிணறு
பொம்மியம்மாள்	மீசலூர் (விருதுநகர்)
வீரஅழகம்மன்	சல்லிசெட்டிபட்டி
வீரமாத்தியம்மன்	குள்ளவீரன்பட்டி
பெத்தாக்கம்மன்	நிலக்கோட்டை (திண்டுக்கல்)
அங்காள பரமேஸ்வரி	கள்ளிவலசு (தாராபுரம்)
அங்காள பரமேஸ்வரி	மரிக்கந்தை உடுமலை, கோவை மாவட்டம்
ரங்கநாதர்	காரமடை (கோவை மாவட்டம்)
சப்த கன்னியர்	சுள்ளெரும்பு (திண்டுக்கல்)

பசுபதி கோட்டையவர்

சிரங்கம்மா	சின்னாளபட்டி
சின்னம்மாள், நாகம்மாள்	பொம்மனம்பட்டி
கன்னிமார்சாமி	மடப்புரம்
அங்காளம்மன்	(நெகமம்)
அங்காளம்மன்	வரவணை (கரூர்)
அங்காளபரமேஸ்வரி	நெகமம் (பொள்ளாச்சி)

16 வீடு

மும்முடியர்

மகாலட்சுமி	மகாதானபுரம் குளித்தலை (கரூர் மாவட்டம்)
வீரமாத்தியம்மன்	ஏரிப்பட்டி (பொள்ளாச்சி)

வீரபத்திரசாமி வீரமாத்தியம்மன்	ஓமலூர் (சேலம்)
வீரமாத்தியம்மன்	நரசிங்காபுரம்
பெருமாள்	நவக்காணி (ஒட்டன்சத்திரம்)
பாப்பாயி பைண்டாயி	மேட்டுப்பாளையம் (முசிறி)
வரதராஜபெருமாள்	அந்தியூர் (உடுமலைப்பேட்டை)

கணித்தியவர்

வீரமாத்தியம்மன்	கோடடூர் (பொள்ளாச்சி)

தில்லையவர்

ஸ்ரீ வரதராஜபெருமாள்	தொப்பநாயக்கனூர்
சின்னம்மா, சின்னக்கம்மாள்	கூவடுகபட்டி நத்தம்
வீரமாத்தி, வீரபாகு	புதுக்கோட்டை வேடசந்தூர் (திண்டுக்கல்)

பலிவிதியர்

அங்காள பரமேஸ்வரி	பழையசித்துவார்பட்டி
அங்காள பரமேஸ்வரி (உடுமலைப்பேட்டை)	மரிக்கந்தை
அங்காள பரமேஸ்வரி	வரவணை (கரூர்)

சென்னியவர்

வீரராகவ பெருமாள்	நாரணாபுரம் (திருப்பூர்)
அங்காள பரமேஸ்வரி	பூளவாடி (உடுமலைப்பேட்டை)

கந்தவங்கலவர்

அங்காள பரமேஸ்வரி	வலயபட்டி (திண்டுக்கல்)
அங்காள பரமேஸ்வரி	காவலிப்பாளையம் (கரூர்)
அங்காள பரமேஸ்வரி	நாராயணாபுரம் (திருப்பூர்)
வெங்கிட்டம்மாள்	சிவராசக்கோட்டை

மாதளையவர்

நாகேந்திரபெருமாள்	கொம்மய கவுண்டன்பட்டி
காளியம்மன்	விருதுநகர்
வீரியகாரிபொம்மயசாமி	சிறுநாயக்கன்பட்டி
தாமரையம்மன்	கிருஷ்ணாபுரம்

தரிசியவர்

அங்காளம்மன்	சேந்தமாங்குடி (முசிறி)
அக்னியம்மன், பெருமாள்	குவ்வக்காபட்டி வேடசந்தூர்
பெருமாள்	குரவிக்காரன்பட்டி
வெங்கிடாசலபதி	நரசிங்காபுரம்
திமிராசாமி	மாரண்டஹ்ஸி

வாஜ்யவர்

அங்காளபரமேஸ்வரி	ராமகிரி குஜிலியம்பாறை
அங்காளபரமேஸ்வரி	உறையூர்
அங்காளபரமேஸ்வரி	கொந்தளம்
அங்காளபரமேஸ்வரி	தாராபுரம் (ஈரோடு)
அங்காளபரமேஸ்வரி	சிங்கலிங்காம்பட்டி
பட்டாளம்மன்	கொழுமம் (உடுமலைப்பேட்டை)
பாப்பாத்தியம்மன்	காவேரி செட்டிபட்டி
பட்டத்தரசியம்மன்	அம்மன்பேட்டை
பட்டத்தலைச்சியம்மன்	வேங்கைகுறிச்சி (மணப்பாறை)
ஆச்சியம்மன்	லால்குடி (திருச்சி)
பட்டாளம்மன்	லக்குவணக்கம்பட்டி
வெள்ளகோயில் (ஈரோடு)	
வீரமாத்தியம்மன்	சுப்பிரமணியக்கவுண்டன் வலசு

கெந்தியவர்

பட்டத்தரசியம்மன்	தெலுங்கபட்டி

சுரகையவர்

ரத்தினகரீஸ்வரி, சூரம்பர்காவி	அய்யர் மலை
வீரகுல அம்மன்	அய்யர் மலை
அண்ணாமலை ஈஸ்வரர்	வாலிசெட்டிபட்டி (திண்டுக்கல்)
கன்னிமார்சாமி	கள்ளெரும்பு
கரியகாளியம்மன்	கிழாங்குண்டு (ஈரோடு)

கோவலையர்

சின்னம்மன் பெரியம்மன்	பருத்தியூர் ஏரிப்பட்டி (பொள்ளாச்சி)
குங்குமக்காளிம்மன்	கொடையூர் பள்ளபாளையம் (கரூர்)
குங்குமக்காளியம்மன்	வேடசந்தூர் (திண்டுக்கல்)
அங்காளபர மேஸ்வரி	ஏரிப்பட்டி (பொள்ளாச்சி)
அங்காளபர மேஸ்வரி	காரத்தொழுவு (உடுமலைப்பேட்டை)

ஒரே குலதெய்வத்தை இரு குலத்தினர் வழிபடல்

இரு குலங்களுக்கு ஒரு குலதெய்வக்கோயில் இருப்பது உண்டு. அதாவது ஒரே குலதெய்வக் கோயிலில் இரு குலத்தவர்கள் வழிபடுகின்றனர். எடுத்துக்காட்டாக மரிக்கந்தை அங்காளபரமேஸ்வரி அம்மன் சொப்பியர், பலிவிதியர் ஆகிய இரு குலத்தவர்களுக்கும் குலதெய்வமாகும். இக்கோயிலில் பூசை செய்கின்ற உரிமை சொப்பியர் குலத்தவரைச் சேரும். முதல் மரியாதை பெறும் உரிமை பலிவிதியர் குலத்தவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதே போல் வரவணை அங்காளபரமேஸ்வரி அம்மன் சொப்பியர், பலிவிதியர் ஆகிய இரு குலத்தவருக்கும் குலதெய்வமாகும். இக்கோயிலில் பூசை செய்யும் உரிமை பலிவிதியர் குலத்தவருக்கு வழங்கப்பட்டுள்ளது. முதல் மரியாதை பெறும் உரிமை சொப்பியர் குலத்தவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. வேளாம்பூண்டியிலுள்ள வயல் வீரமாத்தியம்மன் தவலையர் குலத்திற்கும் கப்பவர் குலத்திற்கும் குலதெய்வமாக விளங்கிவருகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட குலங்களுக்கு ஒரே குலதெய்வம் இருப்பதைக் கள ஆய்வின் போது அறிந்து உணர முடிந்தது.

மரிக்கந்தை அங்காள பரமேஸ்வரி கோயில், சொப்பியர் குலத்திற்கு மட்டும் தொடக்க காலத்தில் குலதெய்வமாக இருந்ததாகவும், உறவின் முறையினரான

பலிவிதியர்க்குப் பெண் கொடுத்துக் கோயிலில் வழிபடும் உரிமையும், முதல் மரியாதை உரிமையும் வழங்கியதாகவும் அக்கோயில் தலைவரும் பரம்பரை பூசாரியுமான அருணாசலம் செட்டியார் தெரிவித்தார்[26].

ஒரு குலத்தவர் உறவு காரணமாக அடுத்த குலத்தவர்களையும் தங்கள் குலதெய்வக் கோயிலில் இணைத்துக் கொள்வதால், இரு குலங்களுக்கும் ஒரு குல தெய்வம் இருப்பது புலனாகிறது.

3. ஒரே குலதெய்வத்தை இரண்டு வெவ்வேறு சாதியினர் வழிபடுவது

ஒரு குலதெய்வம் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தவர்களுக்கு மட்டுமல்லாது வேறு இனத்தவர்க்கும் குலதெய்வமாக இருப்பதையும் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக மேட்டுமகாதானபுரத்தில் உள்ள மகாலட்சுமி அம்மன் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் உள்ள மும்முடியர் குலத்தவர்க்கும் குரும்பர் இனத்தவரின் 'ராயர் குலத்தின் ' குலதெய்வமாக உள்ளது. பூளவாடி அங்காளபரமேஸ்வரி அம்மன் இந்த இனத்தில் உள்ள சென்னயவர் குலத்திற்கும், ஆரிய வைசியர் இனத்திலுள்ள ஒரு குலத்தவருக்கும் குலதெய்வமாக இருக்கின்றது. இதற்கான அறநிலையத்துறையின் ஆணை[27] பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. அதே போல் கிழாங்குண்டு கரிய காளியம்மன் கரகயவர் குலத்தவர்க்கும் கொங்கு வேளாளர் இனத்திலிலுள்ள ஒரு குலத்திற்கும் குலதெய்வமாக உள்ளது.

வேறு வேறு இனத்தவர்க்கு ஒரே குலதெய்வம் இருப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. சமுதாயத்தில் உயர் நிலையிலுள்ள ஒரு இனத்தாரின் வழிபாட்டு முறைகளையும் வாழ்க்கையின் நெறிகளையும் பின்பற்றுவதன் மூலம் தங்களுக்கும் உயர்வு கிடைக்குமெனும் மானிடவியலாரின் ஊடுருவல் (Social Mobilization) கோட்பாடுதான் அதற்கு அடிப்படை என்று கருதலாம். மேற்குறிப்பிட்ட சான்றுகளிலிருந்து குலதெய்வம் பற்றி பின்வரும் வரையறைகளைத் தொகுத்து வழங்கலாம்.

1. 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் ஒரே குலத்தவர் பல்வேறு பிரிவினர்களாக, பல்வேறு இடங்களில் குலதெய்வக் கோயிலைக் கட்டி வழிபடுகின்றனர்.

2. ஒரே கோயில் ஒரு குலத்தவர்க்கும் ஒன்றுக்கு மேற்பட்ட குலத்தவர்க்கும் குலதெய்வக் கோயிலாக இருப்பதுண்டு.

3. ஒரே கோயில் வேறுவேறு இனத்தைச் சார்ந்தவர்களின் குலதெய்வக் கோயிலாக இருப்பதுண்டு.

---

26. அருணாச்சலம் செட்டியார், மாக்கினாம்பட்டி, வயது 70, நேர்காணல்

27. The Proceedings of The Deputy Commissioner HR&E Admn R.C. No. 37/88

4. அகால மரணமடைந்தவர்கள் - குறிப்பாகப் பெண்கள் குலதெய்வமாக வழிபடப்படுகின்றனர். சில இடங்களில் அற்புத நிகழ்வுகளால் உயர்சக்தியென உணரப்பட்டு, அந்நிகழ்வுகளுக்குக் காரணமானவர் குலதெய்வமாக வழிபடுவதை அறியமுடிகிறது.

குல தெய்வக் கதைகள்

24 மனையாரின் பெரும்பாலான குலதெய்வக் கோயில் கட்கு நேரில் சென்றது, குலப்பெரியவர்களை நேரில் சந்தித்தும் பலசெய்திகளை ஆய்வாளர் (துரை அங்கமுத்து) திரட்டியதில் சில குலதெய்வக்கதைகள் மட்டும் இந்த நூலில் தரப்பட்டுள்ளது. எல்லா குலதெய்வக்கதைகளையும் வெளியிட்டால் அதறகென தனி நூலே தேவைப்படும். நூலின் பக்க எண்ணிக்கை மிகவும் விரிவடையும் என்பதால் உதாரணத்திற்காக சில குலதெய்வக்கதைகளை மட்டும் இங்கு வெளிப்படுகின்றன.

வீரசின்னம்மாள் பற்றிய கதையும் வழிபாடும்

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வங்கள் அனைத்தும் பெண் தெய்வங்களே ஆகும். ஒரு குடும்பத்தில் பிறந்த பெண் அகால மரணமடைந்தால் அவள் அக்குடும்பத் தெய்வமாக வழிபடப்பட்டுப் பின்பு அக்குடும்பம் பல்கிப் பெருகிக் குலமாக வளர்ந்த போது அக்குலத்தினுடைய தெய்வமாகவும் அவள் உயர்த்தப்பட்டு வழிபடப்படுகிறாள். இத்தகைய வரலாறுகள் மிகுதியாக உள்ளன. அவற்றுள் ஒன்று வீரசின்னம்மாள் கதையாகும்.

இது அகால மரணமடைந்த பெண்ணின் கதையாகும். 24 குலங்களில் 8 வீட்டுப் பிரிவில் ஒன்றான மக்கடையர்களின் ஒரு பிரிவினர் ஈரோடு மாவட்டம் மூலனூர்அருகில் உள்ள மூக்குத்தெரிச்சான் பாளையம் எனும் கிராமத்தில் வீரசின்னம்மாள் எனும் குலதெய்வத்தை வழிபடுகின்றனர். பெற்றோர் இல்லாத குடும்பத்தில் ஏழு சகோதரர்கட்கு ஒரே தங்கையாகச் சின்னம்மாள் இருந்து வந்தாள். அவளின் சகோதரர்கள் விவசாயப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். வீட்டில் இருக்கும் ஒரே பெண்ணான சின்னம்மாள் சமையல் செய்து வயற்காட்டிற்கு உணவு கொண்டு செல்லுவது வழக்கம். ஒரு வெள்ளிக்கிழமையன்று இப்படிச் சமையல் செய்து உச்சிவேளையில் உணவ்வ எடுத்துச் செல்லுகிறாள். இரண்டு பக்கங்களிலும் கற்றாளை முட்புதர். ஓர் ஆள் மட்டுமே செல்லக்கூடிய ஒற்றையடிப்பாதை அது. அப்போது பொதிமாடுகள் நாலுகால் பாய்ச்சலில் ஓடி வருகின்றன. சின்னம்மாளுக்கு ஒதுங்குவதற்கு இடமில்லை. மிரண்டோடி வரும் பொதிமாடுகளைப் பார்த்து அஞ்சி அழுகிறாள். அங்கே பூமி பிளவுபட்டிருந்த இடத்தில் தரையின் கீழ்ப் பகுதிக்குச் சென்றுவிடுகிறாள். வழக்கமாக நண்பகல் உணவு கொண்டுவரும் தங்கை வராமையறிந்து சகோதரர்கள் கவலையடைகின்றனர். தமையன்மார்

தங்கையைத் தேடிக்கொண்டே வருகின்றனர். 'சின்னம்மா, சின்னம்மா' என்று உரக்கப் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டே அழுத வண்ணம் வருகின்றனர். பிளவுபட்டுக்கிடந்த பூமிக்குள்ளிருந்து 'அண்ணா, அண்ணா' என்று அழைக்கும் குரலைக் கேட்டு ஓடிவந்த அண்ணன்மார்களுக்கு 'அண்ணா இனிமேல் என்னைக் காப்பாற்ற முடியாது எனக்காக இதுவரை நீங்கள் திருமணம்கூட செய்து கொள்ளாமல் தியாக வாழ்க்கை வாழ்ந்தீர்கள். இனிமேல் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்னை நினைந்து வருந்தாதீர்கள். என்னை வழிபட்டு வாழ்க்கையில் முன்னேறுங்கள். நான் கன்னித் தெய்வமாக இருந்து எப்போதும் உங்களைக் காப்பேன் " என்று தங்கை கூறுகிறாள். ஏழு அண்ணன்மார்களும் தம் அன்புத் தங்கை ஐக்கியமான இடத்தில் கல்லை நட்டு அவளை வழிபட்டு வந்தனர். அந்த இடம்தான் இன்றைய மூக்குத்தெரிச்சான் பாளையம் வீரசின்னம்மாள் கோயிலாக உருவாகி இருக்கின்றது. இக்கோயிலின் இவ்வரலாற்றை கோயிலின் அறங்காவலர் இராமசாமி செட்டியார் விவரித்தார்[28].

வீரசின்னம்மாள் கோயில் ஏழு சகோதரர்களின் குல தெய்வமாயிற்று. ஏழு பேரும் மணம் செய்து கொண்டு வீரசின்னம்மாளின் பேரருளால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தனர். இந்த ஏழு குடும்பங்களும் வளர் குடும்பங்களாகிப் பல தலைக்கட்டுக்களாகி இன்று ஒரு குலமாக வளர்ந்து நிற்கிறது. இந்தக் குலமே மக்கடையர் என பெயர் பெற்ற குலமாகும். இக்குலத்தவர்களை மூக்குத்தெரிச்சான்பாளையம் மக்கடையர் என்று அழைக்கின்றனர். வீரசின்னம்மாள் குலதெய்வமாக இருந்த நிலையில் உயர்நிலையாக்கம் காரணமாகச் சீனிவாசப் பெருமாள் என்ற பெயரில் திருமால் வழிபாடு புகுந்தது. நாளடைவில் இது வைணவக் கோயிலாகப் புத்தாக்கம் பெற்றது. தற்போது இக்கோயிலுக்குச் சீனிவாசப் பெருமாள் - வீரசின்னம்மாள் திருக்கோயில் என்ற பெயர் நிலவுகிறது. பிறவைணவக் கோயில்கள் போலச் சீனிவாசப் பெருமாளுக்குத் தனித் சன்னதி உண்டு. வீரசின்னம்மாளுக்கும் தனிச் சன்னிதி உண்டு.

வீரசின்னம்மாள் அகால மரணமடைந்த பெண். இவள் மரணம் மிக இளமைக்காலத்திலேயே நிகழ்ந்தது. இந்த மரணம் இயற்கையாக நிகழ்ந்தது அல்ல. ஒரு குடும்பத்தால் வழிபடப்பட்டுப் பின்னர் குடும்பங்களின் பெருக்கத்தினால் குலமாக வளர்ச்சிபெற்று அக்குலத்தவரின் குலதெய்வமாக வழிபடப்படுகிறாள். ஆக ஒரு குலத்திற்குரிய அனைத்து இலக்கணங்களும் இதில் பொருந்தி வருகின்றது.

இக்குலதெய்வம் பற்றிய கதை கன்னிப் பெண்ணைத் தெய்வமாக

28. ராமசாமி செட்டியார், உடுமலைப்பேட்டை, வயது 70 நேர்காணல்

வழிபடுவது பற்றிய கதையாகும். இக்கதை கன்னிவழிபாடு பற்றிய தனித்தன்மைகளைக் கொண்டதாகும். காலப்போக்கில் இக்கதை மேல்நிலையாக்கம் பெற்றுத் திருமால் வழிபாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. சிறுநெறிமரபுகள் (Little tradition) காலப் போக்கில் பெருநெறிமரபுடன் (Great tradition) கலந்து மாற்றமடைந்து விடுகின்றது என்பதற்கு வீரசின்னம்மாள் வழிபாடு சான்றாக அமைகிறது.

அண்ணன் - தங்கை பாச உறவை எடுத்துக்காட்டும் கதைகள் கொங்கு நாட்டுப் பகுதிகளில் மிகுதியாக வழங்கிவருகின்றன என்று நாட்டுப்புறவியல் ஆய்வாளர் பலர் குறிப்பிடுகின்றனர். அண்ணன்மார் சுவாமி கதைப்பாடல், அண்ணன்மார் தங்கை மீது காட்டிய பாசத்தைப் புலப்படுத்துகிறது. வீரசின்னம்மாள் கதை, ஏழு சகோதரர்கள் தங்கை மீது காட்டிய பாசத்தை எடுத்துக்காட்டுகிறது. கன்னிப்பெண்ணைக் குலதெய்வமாகக் கருதி வழிபட்டு வரும் போக்கையும் இக்கதை எடுத்துக் காட்டுகிறது. கன்னிவழிபாடும், ஏழு கன்னிமார் வழிபாடும் கொங்கு நாட்டில் செல்வாக்குப் பெற்ற வழிபாடாக இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கதை (story), வழிபாடு (Worship), சடங்கு (Rite) ஆகிய மூன்று கூறுகளும் குலதெய்வக்கதைகளில் இணைந்தமைந்துள்ளன.

பரமசிவன் பாளையம் தவலையவர் குலதெய்வம் நல்லம்மாள் பற்றிய கதையும் வழிபாடும்

தவலையவர் குலத்தவர்களது குலதெய்வம் நல்லம்மாளாகும். 'நல்லம்மாள்' தோற்றம் பற்றித் தவலையவர் குலத்தினரிடையே ஒரு கதை வழங்கி வருகின்றது. அக்கதை வருமாறு.

நல்லம்மாள் கோயில் கோவை மாவட்டம் திருப்பூரிலிருந்து EWSH பன்னிரெண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பரமசிவன் பாளையத்தில் உள்ளது. கோயிலுக்குப் பக்கத்தில் மங்கலம் அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டுக்குப் பக்கத்திலுள்ள கரியாஞ்செட்டிபாளையம் இக்குலத்தவரின் மூதாதையர்களின் ஊர். இங்கு அடிக்கடி வெள்ளம் வந்து அணைக்கட்டு உடைந்துவிடுமாம். பலமுறை கட்டியும் அணையில் மீண்டும் மீண்டும் உடைப்பு ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. வெள்ளச் சேதத்தால் ஊருக்குப் பல இழப்புகள் ஏற்பட்டன. அப்போது இந்தப் பகுதியை ஆட்சி செய்துகொண்டிருந்த 'இருமுடிச்சோழியாண்டான்' என்ற ராஜாவிடம் சிலர் இந்த அணைக்கு ஒரு கன்னிப்பெண்ணைப் பலிகொடுத்தால் உடைப்பு ஏற்படுவது நின்றுவிடும் என்று கூறினர். அப்போது யாரைப் பலிகொடுப்பது என்று தீவிரமாக ஆலோசனை செய்தனர். 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தைச் சேர்ந்த 'நல்லம்மாள்' என்ற கன்னிப்பெண்ணைப் பலிகொடுப்பது

என்று அக்குடும்பத்தவரும் உடன்பட்டு இசைந்து முடிவெடுத்தனர். அதன்படி ஒரு நல்ல நாளில் நல்லம்மாள், அணைக்கட்டுக்குப் பலிகொடுக்கப்பட்டாள். பலிகொடுத்தவுடன் அணையில் ஏற்படும் உடைப்பு நின்று விட்டது. அன்று முதல் மங்கலம் அணைக்குப் பக்கத்தில் நல்லம்மாள் நினைவாக ஒரு கல்லை நட்டு வழிபட்டு வந்தனர். சிலகாலம் கழித்து முஸ்லீம்களின் தொல்லை மிகுதியாகிவிட்டதால் இனித் தொடர்ந்து அங்கு வாழ்வது இயலாது என கருதிக் கோயில் சிலையையும் கையில் எடுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர். இருட்டி விட்டதால் பரமசிவன் பாளையத்தில் சிலையை மறைத்து வைத்துவிட்டுத் தூங்கினர். காலையில் எழுந்ததும் சிலையை அங்கிருந்து பெயர்த்து எடுக்க இயலவில்லை. எனவே பரமசிவன் பாளையத்திலேயே நல்லம்மாள் தெய்வத்தை நிலைநிறுத்திப் பக்தியுடன் வழிபடத் தொடங்கிவிட்டனர். இதுதான் 'எங்கள் குலதெய்வக் கோயிலின் வரலாறு' என அக்கோயிலின் 'செட்டுமை' சுப்பிரமணியம் செட்டியார் கூறினார்[29].

மேலும் இக்கோயிலைப் பற்றி இவர் கூறவந்த போது, "எங்கள் வீட்டுக் கன்னிப்பெண்ணான நல்லம்மாளைப் பலியிட்டதால், எங்களுக்குப் பல தலைமுறைகளாகக் கன்னி தோசம் தொடர்ந்தது. எனவே இக்குறை நீங்கி வளம்பெருக நல்லம்மாளுக்கு முதன்மையும் சிறப்பும் தந்து வழிபட்டு வருகிறோம். இப்பழிமொழி இன்று எங்கள் குல(மக்கலின்) மக்களின் நிலைவழி பாட்டால் மாற்றம் பெற்று வருகிறது" உக்ர தேவதையாக இருந்த எங்கள் குலதெய்வம் எங்குலத்தவரின் சீரிய வழிபாட்டால் சாந்த சொரூபிணியாக மாறி எங்கள் வீட்டுப் பெண்களும் மணமாகிப் போன இடத்தில் வளமான வாழ்வை வாழ்கின்றனர்" என்று சுப்பிரமணியம் செட்டியார் கூறினார்[30].

மங்கலம் அணைக்கட்டு அருகில் இன்றும் அங்குள்ள நடுகல்லுக்கு வழிபாடு நடைபெறுகிறது. இதைப்பற்றி க.வி. வேதநாயகம் "பழங்காலத்தில் கரைய வேட்டுவ சொக்கனேந்தல் நடுகல் உள்ளது. 'வாய்த்த புகழ் மங்கலத்து' என்ற பாடலும் பொறிக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்[31].

கன்னிப்பெண்ணைப் பலியிட்டால் அணை உடைவது நின்று போகும் என்று நாட்டுப்புற நம்பிக்கையை (Folk belief) இக்கதை எடுத்துக்காட்டுகிறது.

கன்னிப் பெண்ணைக் குலதெய்வமாக வழிபட்டு வரும் போக்கினை இக்கதையின் மூலம் அறியமுடிகிறது.

நல்லம்மாள் கதை சிறுநெறிமரபில் (little tradition) தோன்றிய கதையாகும்.

---

29. சுப்பிரமணியம் செட்டியார், இர. பொள்ளாச்சி, வயது 62, நேர்காணல்

30. மேலது

31. வேதநாயகம், க. பெரியார் மாவட்டத்துச் சிறுதெய்வங்கள் ப. 23

நல்லம்மாள் வழிபாடு 'சிறு நெறி மரபு' சார்ந்ததாகும். காலப்போக்கில் நல்லம்மாள் வழிபாடு பெருமாள் வழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டு மேல்நிலையாக்கம் (Sanskritization) *செய்யப்பட்டுள்ளது. இப்போது இக்கோயிலின் பெயர் கரிவரதராஜப் பெருமாள் நல்லம்மாள் கோயில் என்று வழங்கப்பட்டு வருகின்றது. சிறுநெறிமரபு, பெருநெறிமரபுடன் பின்னாளில் இணைக்கப்பட்ட போக்கினையே நல்லம்மாள் வழிபாடு சுட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.*

நரபலி

இத்தகைய நரபலியிடும் பழக்கம் நாடெங்கும் இருந்தது. குறிப்பாகக் கன்னிப்பெண்கள் பலியிடப்பட்டனர். பின்னாளில் இப்பழக்கம் மறைந்து விட்டிருக்கக்கூடும் என்றும்[32], "தெய்வத்திற்கு நன்றி செலுத்துவதற்காகவும் தெய்வச்சினத்தைத் தணிப்பதற்காகவும் பலியிடப்பட்டது. இத்தகைய பலிகளினால் ஆவிகளின் சினம் தணியும் என்று மனிதன் நம்பினான். பலிகளிலெல்லாம் பெரியதானது நரபலிதான்", என்றும் சங்கர் சென்குப்தா குறிப்பிடுகிறார்.

டிராய் நகரை நோக்கி நடந்த ஒரு கடல் பயணத்தின் போது கடல் கொந்தளிப்பிலிருந்து கப்பலைக் காப்பாற்றுவதற்காக 'ஆர்ட்டெமஸ்' எனும் பெயருள்ள கடல் தேவதைக்கு 'அகமம்நான்' என்பவன் தனது மகளான இப்ஜீனா என்ற கன்னிப் பெண்ணை நரபலி கொடுக்க விழைந்ததைக் கிரேக்க வரலாறு எடுத்தியம்புகிறது.[33]"

கன்னிப்பெண் பலி

பலிப்பொருளாகக் கன்னிப்பெண் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான காரணம் ஆய்வுக்குரியது.

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் பெரும்பாலான குலதெய்வங்கள் மணமாகாத கன்னிப்பெண்களே. பெண் தெய்வக் கதைகள் இவர்களின் அகால மரணத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. கன்னித் தெய்வங்களாக வழிபடுவதையும் இந்த கதைகளின் வாயிலாக அறியமுடிகிறது. கன்னி வழிபாடு பற்றிய குறிப்புக்கள் தமிழ் இலக்கிய மரபில் சிலப்பதிகாரத்தில் கிடைக்கின்றன. வேட்டுவவரியில் குமரியைக் கொற்றவை வேடமிட்டுத் தங்கள் குலதெய்வத்திற்குப் பலியிட்டு வழிபடுகின்றனர் என்ற செய்தியை அறிகின்றோம். குமரிமுனையில் உறைந்துள்ள கன்னித் தெய்வத்தின் பேராற்றலைப் பெரிக்லூஸ் என்ற கிரேக்க நிலநூல் அறிஞர் குறிப்பிடுகின்றார்"[34].

---

32. Shankar sen Gupta & Krishnasamy.K Fire Festivals of India P. 44
33.Libid P.43

தமிழ்நாட்டில் திருவெண்காடு என்ற ஊரில் கிடைக்கும் வீரராசேந்திரன் (கி.பி 1063 - 1070) கல்வெட்டு ஒன்றில் கன்னிப் பூசைக்கு அளிக்கப்பட்ட நிவந்தம் பற்றிக் கூறப்பட்டுள்ளதிலிருந்து[35] கன்னி வழிபாட்டின் தொன்மை புலப்படுகிறது.

கன்னிமை வழிபாடு

"கன்னிமை" என்பது போற்றுவதற்குரியதும், வழிபடுவதற்குரியதும் ஆகும் எனும் எண்ணம் தொல் பழங்காலத்திலிருந்து மக்கள் மனதில் ஆழப்பதிந்து விட்ட ஒன்று. தெய்வக்கன்னி அரக்கர்களையும், தீமைகளையும், அநீதிகளையும் அழிக்கும் ஆற்றல் பெற்றவள் என்றும், அவள் உலகம் முழுவதற்கும் பலத்தைக் கொடுக்கின்ற சக்தியை தன்னகத்தே பெற்றிருக்கிறாள் என்றும், மக்கள் நம்புகின்றனர்.

டியூமிசில் என்ற மானிடவியல் அறிஞர் "கன்னியாய் இருப்பது கற்புடமை மட்டுமின்றி - கற்புடமைத் தூய்மையின் அடையாளம் எனவும், உயர்ந்த முழுநிறை வளத்தின் சின்னம் எனவும், கன்னியாக விளங்கும் ஒரு பெண் தனக்கே உரியதாய் இயற்கை தந்திருக்கும் படைப்பாற்றலைத் தன் மனவலிமையினால் திரட்டினாள் என்னும் படியாக, பூரணமாய்த் தேக்கித் தனக்குள் சேமித்து வைத்திருக்கிறாள்"[36] எனவும் கன்னிமையின் பேராற்றலை எடுத்தியம்புகிறார்.

"To be a virign, to remain a virigin, is not simply to be chaste. Chastity is of the order of purity. Viriginity is something higher of the order of planitudes. A Woman who remains a virigin conserves in hereself, an utilized, but not de stroyed. intact, and is if reinforced by her will, the creative power that is hers by nature."

கன்னியைத் தாய்த் தெய்வமாகக் கொள்ளும் நிலையினை பி.எல்.சாமி.

"தாய் தெய்வத்தைத் தாயாகவும், கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்தே மரபாக உள்ளது. அவளை எல்லோரையும் பெற்ற தாயாகக் கருதுவதும், அழியாக் கன்னியாகக் கருதுவதும் சுமேரிய, எகிப்து, ஆசிரியா, இந்தியா ஆகிய நாடுகளில் காணப்படுகிறது". மேலும் "ஆண் உறவின்றிக் கன்னியாகவே எல்லோரையும் தானே பெற்ற தாய் (Virgin mother Goddess) என்றும் கருதப்படுவாள்". 'அகிலாண்டகோடி ஈன்ற அன்னையே, பின்னையையும் கன்னி என மறை பேசும்' என்று தாயுமானவர் கூறியதிலிருந்தும் தாய்த் தெய்வத்தையே கன்னித் தெய்வமாகக் கருதுவது

---

34. Nilakanda Sastri, K.A. History of South India P 59
35. வீரராசேந்திரன் கல்வெட்டு, திருவெண்காடு ஈஸ்வரன் கோயில் கல்வெட்டு அச்சிடப்படாதது. தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை 117.
36. DUMIZEL The Destiny of a King P 22.

தெளிவாகிறது". "உலகமுழுதீன்ற பெருங்கன்னி' என்று திருவாரூர்ப் புராணம் கூறுகிறது[37]. தாய்த் தெய்வத்தை இருவகையாக உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்தே வந்துள்ளது. 1. அவளை எல்லோரையும் பெற்ற தாயாகக் கருதுவது. 2. அவளை என்றும் அழியாத கன்னியாகக் கருதுவது' என்ற உருவகக் கூறுகளை இரா. சீனிவாசன் விளக்குகிறார்[38].

சிலப்பதிகார வேட்டுவ வரியில் தெய்வமேறி (சாலினி அது வரை அந்தக் கூட்டத்தில் நிலைபெற்று இருந்த வாழ்க்கை முறை பண்பாட்டுக் கூறுகள் முதலியவை மாறிவிட்டபடியால் வேட்டுவர் வளம் குறைந்துவிட்டது என்றும் அதை மீட்டெடுக்கக் கொற்றவை வழிபாடு செய்யப்பட்டது. வேட்டுவ மரபில் பிறந்த ஏழு வயதுள்ள சிறுமிக்கு கொற்றவையாக அலங்காரம் செய்து வழிபாடு செய்தனர். இந்திய இலக்கியங்களிலேயே கன்னியை வழிபடுகின்ற காலத்தால் முற்பட்ட சான்று சிலப்பதிகாரத்தில் கிடைக்கிறது. இத்தகைய வழிபாடு நடந்ததற்கான கல்வெட்டுச் சான்றுகள் தென்னிந்தியா முழுவதும் பரவலாக கிடைக்கின்றன. கர்நாடக மாநிலத்திலும் ஆந்திரமாநிலத்திலும் கன்னிபூசை செய்வதற்கான வழிபடு பொருட்களை கொடையாக அளித்துள்ளதற்கான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. நோயுற்றவர்கள், வாழ்வில் வளம் இழந்தவர்கள் திருமணத்தை எதிர்நோக்கியுள்ளவர்கள் ஆகியோர் கன்னிபூசை செய்துள்ளனர் என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. நாகார்ஜுன கொண்டாவில் உள்ள லஜ்ஜ கவுரி என்ற சிற்பம் கன்னி வழிபாட்டின் ஒரு வடிவமாக கூறலாம். தேர் என்ற ஊரில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரை லஜ்ஜ கவுரி சிற்பங்கள் தொடர்ந்து வழிபாட்டில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் கன்னி வழிபாடு பற்றிய செய்தியைக் கூறும் திருவெண்காட்டில் உள்ள வீரராஜேந்திரன் காலத்திய கல்வெட்டு அண்மையில் கிடைத்துள்ளது.

கன்னிமை என்பது பேராற்றல் மிக்க சக்தி என்பதால்தான் கன்னிதெய்வங்கள் குலதெய்வங்களாக உயர்ந்துநிற்கின்றன. 24 மனை இனத்திலும் இது பொருந்தி வருவதை ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

வேளாம்பூண்டி வீரமாத்தி கோயில்கள்

ஈரோடு மாவட்டத்தில் சின்னதாராபுரம் அருகிலுள்ள வேளாண்பூண்டியில் இரண்டு வீரமாத்தி கோயில்கள் உள்ளன. அவை

1. பாறை வீரமாத்தி 2. வயல் வீரமாத்தி என்பன

---

37. சாமி. பி.எல். தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு ப. 41

38. சீனிவாசன். இரா. சக்தி வழிபாடு ப. 37

1. பாறை வீரமாத்தி

சொப்பியர், பலிவிதியர் குலதெய்வமான மரிக்கந்தை அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலினுடைய துணைத் தெய்வமாகப் போற்றப்படுவது பாறை வீரமாத்தியாம்.

2. வயல் வீரமாத்தி

கப்பவர் மற்றும் தவலையவர் குலதெய்வம் வயல் வீரமாத்தி. பசுமையான வயல்கட்டு நடுவே அமைந்து இருப்பதால் இக்கோயிலை வயல் வீரமாத்தி கோயில் என்று கூறுவர். இந்த இரண்டு வீரமாத்திக் கோயில்களுக்கும் இடையே உள்ள தூரம் ஒரு கிலோ மீட்டர்.

வயல் வீரமாத்தி வரலாறு

"இரண்டு பெண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் ஒன்றில் மூத்த பெண்ணைக் கப்பவருக்கும் இளைய பெண்ணைத் தவலையருக்கும் மணமுடித்தனர். இளைய பெண் தன் கணவனிடம் கோபித்துக் கொண்டு அக்கா வீட்டிற்கு வந்துவிட்டாள். இந்த இளைய பெண்ணுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். இப்படி அக்கா வீட்டில் வாழ்ந்து கொண்டு இருக்கும் போது ஒருநாள், இந்த பெண் தன் மகனிடம் தான் தீ வளர்த்து அதில் உயிர் விடப்போவதாகக் கூறினாள். மகன் அதைப் பொருட்படுத்தவில்லை. பின்னர் தன் அக்கா குடும்பத்தினரிடமும் தான் தீ வளர்த்துத் தீயில் முழ்கி இறக்க விரும்புவதைத் தெரிவித்தாள். கணவனுடன் வாழாதிருந்தமையால் அவர்கள் அதற்கு ஒப்புக் கொண்டனர். அதன்படி தீயெரியில் மூழ்கிட நாள் குறிக்கப்பட்டது. தீ வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. தீயில் இறங்கும் முன்னர் தனது அக்காவையும் அக்கா மகன்களையும் அழைத்து 'உங்களுக்கு இனிமேல் எல்லாம் நல்லதே நடக்கும். என்னைப் பூசித்து வாருங்கள். எல்லா வளங்களையும் நான் உங்களுக்கு அளிப்பேன்' என்று ஆசி கூறினாள். அப்போது அந்த பெண்ணின் மகன்கள் ஓடிவந்து 'அம்மா நாங்கள் நீ பெற்ற பிள்ளைகள் எங்களுக்கும் ஆசி கூறு' என்று வேண்டினர். அதன்படி அவர்களுக்கும் ஆசி கூறிவிட்டுத் தீயினுள் இறங்கினாள். எரிந்த பின்னர் அஸ்தியை வெளியே எடுத்து இறுதிச் சடங்குகள் செய்யத் தொடங்கும் போது அந்த அம்மாவின் உடல் முழுவதும் வெந்த பின்பும் அவளது திருமாங்கல்யமும், மாங்கல்யக் கயிறும் தீயினால் எவ்விதப் பாதிப்பும் இன்றி திகழ்ந்ததைக் கண்டனர். பெரும் சக்தி அப்பெண்ணிடம் இருப்பதை அனைவரும் உணர்ந்தனர். அதற்குப் பிறகு அதே இடத்தில் அக்காவின் மக்கள் அந்த அம்மாவுக்கு கோயில் கட்டி வழிபாடு செய்யத் தொடங்கினர். தீ மூழ்கி உயிர் நீத்த இளைய பெண்ணின் ஆண் பிள்ளைகள் எங்களுக்கும் எங்கள் தாயை வழிபட உரிமை வேண்டும் என்று கேட்டனர். உள்ளூர்ப் பஞ்சாயத்தில் முடிவெடுக்க முடியவில்லை. எனவே இது நீதிமன்றத்துக்குப் போனது. நீதிமன்றத்தில் நீண்ட நாட்கள் வழக்கு

நடந்து தீர்ப்புச் சொல்லப்பட்டது. அந்தத் தீர்ப்புச் செப்புப் பட்டயத்தில் பதிவு செய்யப்பட்டது. தற்பொழுது அப்பட்டயம் யாரிடம் உள்ளது எனத் தெரியவில்லை. தீர்ப்பின் விவரப்படி மூத்த அக்காள் மகன்களான கப்பவர் மாதத்தில் பதினேழு நாட்கள் பூசை செய்து கொள்ளலாம். மீதியுள்ள பதிமூன்று நாட்களில் தீப்பாய்ந்தவள் மகன்களான தவலையர்கள் பூசை செய்து கொள்ளலாம். சிறப்பு வழிபாடு செய்யும் காலங்களில் வழிபாட்டு முன்னுரிமை இந்தக் கோயிலை நிர்மாணித்த கப்பவருக்கே உண்டு என்பதே தீர்ப்பின் முடிவாகும். அண்மைக் காலம் வரை இதே முறை பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது கோயில் புதிய வடிவில் கட்டப்பட்டபின் தவலையரும் கப்பவரும் சேர்ந்தே எல்லா வழிபாட்டு முறைகளையும் செய்கின்றோம்" என விவரித்தார் சதா சிவம் செட்டியார்[39].

குடும்பத் தகராறு காரணமாக ஒரு பெண் கணவனைப் பிரிந்திருந்திருத்தல் என்பதும் பிரிந்து வாழும் போது அவளின் பிறந்தகத்தார் ஆதரவு தருவர் என்பதும் நடைமுறையில் இருப்பினும் தீப்பாய்ந்தவள் கணவனின்றிப் பிறரைச் சார்ந்து வாழ்வதை விட இறப்பதே சிறந்தது என எண்ணியதனை அக்காலத்திய சமுதாயம் ஏற்றுக் கொண்டதிலிருந்து அக்காலத்திய சமுதாய நிலை உணரப்படுகின்றது.

தீப்பாய்ந்த பெண்ணின் உடல் முழுவதும் எரிந்த நிலையிலும் தாலிக் கயிறும் தாலியும் எவ்விதப் பாதிப்பும் இன்றி இருந்த அற்புத நிகழ்வு இக்குலத்தெய்வவழிபாட்டிற்குக் காரணமாக இருப்பது புலனாகிறது.

"தீப்பாய்ந்து இறக்கும் நிகழ்ச்சிகள் பல்வேறு காரணங்களுக்காகச் சமுதாயத்தில் தொடர்ந்து நிகழ்ந்து வந்துள்ளன என்பதற்கான சான்றுகள் நமக்கு மிகுதியாக கிடைத்துள்ளன. அப்பெண்கள் அந்த அந்த குலத்தினரால் பத்தினித் தெய்வமாகக் கல் நாட்டி வழிபடப்படுகின்றனர்" என்கிறார் ஆறு ராமநாதன்[40]. வேளாண்பூண்டியிலுள்ள இரு கோயில்களில் உள்ள தெய்வங்களும் வீரமாத்தி என்றே பெயரிட்டு அழைக்கப்பட்டனர். நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாவதும், தீவளர்த்து அதில் இறங்கி மரணமடைவதும் சாமான்யர்களால் செய்ய முடியாத செயல்களாம். எனவே அவை வீரமிக்க செயல்களாகக் கருதப்படுகின்றன. அங்ஙனம் இறந்தவர்களின் வழித்தோன்றல்கள் அவர்களை வழிபட்டுக் கொண்டாடுகின்றனர். "வீரமாத்தி என்பதும் வீரமும், கற்பும் நிறைந்தவளுமான வீரமா பத்தினி என்பதன் மரூஉ ஆகும். இந்த கற்கள் வீரமாத்தி கல் என்று அழைக்கப்படுகின்றன" என்று கூறுகின்றார்[41].

---

39. சதாசிவம் செட்டியார், உடுமலைப்பேட்டை, வயது 71. நேர்காணல்
40. இராமநாதன், ஆறு சிறுதெய்வ ஆய்வுமுறை அறிமுகமும் தீப்பாய்ந்தம்மன் வழிபாட்டு ஆய்வும், நாட்டுப்புற ஆய்வு முறைகள் பக் 283 - 284
41. பாலமுருகன், கொங்குநாட்டுப்புற இலக்கியம் 31

கணவனில்லாத வாழ்வு வாழ்வல்ல என நினைத்துத் துணிந்து தீப்பாய்ந்து இறந்தால் 'வீரமாசதி எனப்பட்டுப் பின்பு மருவி 'வீரமாத்தி' என வாயிற்று எனலாம். வீரமாசதி என்பது காலப்போக்கில் வீரமாதி என வழங்கிப் பின்பு வீரமாத்தி எனவாயிருக்க வேண்டும். (மாருதி-வல்லின ஒற்றுமிகுந்து 'மாத்தி' எனவாயிற்று).

ராசாபட்டி மாரட்டியர் குலதெய்வம்

காமாட்சியம்மன் கோயில் பற்றி கதையும் வழிபாடும்

கரூரிலிருந்து 20 கி.மீ தூரத்திலுள்ள ராசாபட்டி காமாட்சியம்மன் மாரட்டியர் குலத்தின் குலதெய்வமாகும். 300 ஆண்டுகளுக்கு முன்னர் கரூர் தாலுக்கா சீலைநாயக்கன்பட்டியில்' ஐந்து சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். பஞ்சத்தின் காரணமாக அவர்களுள் மூவர் குடும்பத்துடன் பிழைப்புக்காக வேறிடந்தேடிச் சென்றனர். அம்மூவரில் ஒருவருக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. பொதி மாடுகளை ஓட்டிக்கொண்டு அவர்கள் குடகனாறு ஆற்றங்கரையருகில் வரும்போது விடிந்தது. நதியின் மேற்குக் கரையோரம் பொதி மாடுகளை நிறுத்திவிட்டு மூன்று சகோதரர்களும் கைகால் கழுவ ஆற்றுக்குச் சென்றனர். தம்மைத் தூய்மை செய்த பின்பு வந்து பார்க்கும் போது மாட்டின் மேல் அமர்ந்திருந்த பெண் குழந்தையைக் காணவில்லை. சகோதரர்கள் குழந்தையைக் காணாமல் பதறியபடி தேடத் தொடங்கினர். குழந்தையின் பெயரைக் 'காமாட்சி, காமாட்சி ' என்று உரக்கக் கூவிக் கொண்டே அங்கும் இங்கும் தேடி அலைந்தனர். அங்ஙனம் தேடும்போது ஒரு இடத்திலிருந்து 'உம்' என்ற ஒலி கேட்டு அவ்விடத்திற்கு ஓடிப்பார்த்தனர். ஆனால் ஒலி, குறிப்பாக எங்கிருந்து வருகின்றது எனத்தெரியாமல் தவித்தனர். குடகனாற்றங்கரை ஊஞ்ச மரங்களும் சங்கம் புதர்களும் புற்றுக் கண்களும் நிறைந்த வனமாகக் கிடந்தது. அருகில் ஊர் எதுவுமில்லை. அந்நிலையில் சகோதரர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கும்போது பொதிமாடுகளுள் ஒன்று திடீரெனச் சிலிர்த்தெழுந்து ஒரு புற்றுக்கு மேலே இருந்த சங்கம் புதரைக் கொம்பால் குத்திக் கிளறியது. அப்போது அப்பெண்குழந்தை எழுந்து நின்று - "நான் தெய்வமாகி விட்டேன். உங்கள் பின்னால் என்னால் வரமுடியாது. எனக்கு இங்கேயே கோயில் கட்டி வழிபாடு செய்யுங்கள். பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை நமது வம்சத்தார் கூட்டம் குலையாமல் என்னைப் பெரிய கும்பிடாகக் கும்பிட வேண்டும், அப்படி பெரிய கும்பிடு நடக்கும் போது' முக்காலும் காமாட்சி என்று மூன்று முறை கூப்பிட்டுக் குழந்தைகட்குப் பெயர் வைக்க வேண்டும். ஆண் குழந்தையாக இருந்தாலும் பெண் குழந்தையாக இருந்தாலும் இப்படிப் பெயர் வைக்க வேண்டும். பிறகு முடிக் காணிக்கை தர வேண்டும். இன்றிலிருந்து நான் உங்களின் தெய்வமாகி விட்டேன்" என்று கூறி மறைந்து விட்டது. அன்றிலிருந்து மாரட்டியர் குலத்தின் குலதெய்வமாகக் காமாட்சி விளங்குகின்றாள்.

இக்குலதெய்வக் கதை அற்புத நிகழ்வு என்பதும், இது ஒரு கன்னி தெய்வம் என்பதும் குலதெய்வப்பெயர்களை குழந்தைகளுக்கு வைக்கும் மரபு இருந்து வந்துள்ளது என்பதும் புலனாகிறது.

பூளவாடி அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில்

உடுமலைப்பேட்டை நகரிலிருந்து பதினேழு கி.மீ வடக்காகத் திருப்பூர் நெடுஞ்சாலையில் சென்றால் குடிமங்கலம் எனும் ஊரை அடுத்து மூன்று கி.மீ கிழக்கே சென்றால் பூளவாடி என்னும் கிராமத்தை அடையலாம். இவ்வூர் ஈரோடு மாவட்டத்திலிருக்கும் தாராபுரம் தாலூக்காவைச் சார்ந்ததாகும். 24 மனைத்தெலுங்குச் செட்டியார்கள் இனத்தில் உள்ள 1. கந்தவங்கலவர் 2. சுரகையர் 3. தவலையவர் ஆகிய மூன்று குலங்களுக்கும் இங்குள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் குலதெய்வமாகும். அத்துடன் கோமுட்டிச் செட்டியார் இனத்திலுள்ள 'மைத்திரேய' குலத்தவர்கட்கும் இவ்வம்மனே குலதெய்வமாக விளங்குகிறாள்.

பூளவாடியில் நவகோடி நாராயணஞ்செட்டியார் என்று ஒருவர் இருந்தார். சிறப்பு மிக்க செல்வந்தர். ஒருநாள் கடையில் முழு ஈடுபாட்டுடன் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அப்போது வயதான மூதாட்டி ஒருத்தி அவரிடம் வந்து 'என் தலையெல்லாம் காய்ந்து கிடக்கிறது கொஞ்சம் எண்ணை கொடு என்று கேட்க, செட்டியார் அந்த அம்மாவை லட்சியம் செய்யாமல் வியாபாரத்திலேயே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். மீண்டும் அந்த அம்மாள் எண்ணெய் கேட்கச் செட்டியார் "தரமாட்டேன் போ" என்று விரட்டினார். அந்த அம்மாவோ மீண்டும் மீண்டும் எண்ணெய் கேட்கச் செட்டியார் மீண்டும் தரமுடியாதெனக் கோபத்துடன் பதில் சொல்லிக் கொண்டே இருந்தார். அவருடைய பொறுமைக்கும் ஓர்எல்லை வந்தது. கோபப்பட்ட செட்டியார் கையிலிருந்த மரத்தட்டால் அவ்வம்மாவை ஓங்கி அடித்துவிட்டார். 'என்னை ஏன் அடித்தாய்' என்று கேட்டுக் கொண்டே வலிவேதனையுடன் சாம்பலை அள்ளி வீசிவிட்டு அம்மூதாட்டி வெளியேறினாள். அதன் பிறகு, செட்டியாருக்குப் புத்தி சுவாதீனம் இல்லாமல் போய் விட்டது. அவரது குடும்பத்தினர் பல வைத்தியர்களிடமும் அழைத்துச்சென்று வைத்தியம் பார்த்து பெரும் பணம் செலவழித்தும் ஒரு பயனும் ஏற்படவில்லை. ஒருநாள் பெருங் கவலையுடன் செட்டியாரின் வீட்டார்கள் படுத்திருக்கும் போது மதுரைவீரன் கோடங்கிக்காரன் வேடத்தில் வந்து, மூதாட்டி வந்து போன எல்லாக் கதைகளையும் சொல்லி அவளது சாபத்தால்தான் பைத்தியம் பிடித்தது என்பதையும் விளக்கிக் கூறினான். பிறகு அம்மூதாட்டி வனத்தில் இருப்பதாகவும் அங்குச் சென்று அவளிடம் மன்னிப்புக் கேட்டு, இனிமேற்கொண்டு தான தர்மங்கள் விடாது செய்வேன் என்று உறுதி கூறி வழிபட்டால் பயன்கிடைக்கும்' என்றும் கூறினான். அதன்படியே வனத்திற்குச் சென்று அம்மூதாட்டியைப் பார்த்து வணங்கி மன்னிப்புக் கேட்டார்கள். அதற்கு

அவள், 'இனிமேல் இதுபோலத் தவறு செய்யாதே. தான தர்மங்கள் செய். தலைமுறை தலைமுறைக்கு என்னை நினைத்துக் கும்பிடு. உன் குடும்பம் விருத்தியடையும்" என்று நல்வாக்குக் கூறி அனுப்பினாள். செட்டியார் நலம் பெற்றார் வியாபாரம் பெருகி மேலும் வளமடைந்தது.

அக்குடும்பத்தினர் அன்றிலிருந்து அம்மூதாட்டியை அங்காள பரமேஸ்வரியாகக் கொண்டு வணங்கி வருகிறார்கள். யார் யார் இத்தெய்வத்தை வழிபடுகின்றனர் எனக் கூறும் பழைய பாடல்

கந்தவங்கலர் சுரகவார் கீர்த்திசால் தவலவார்
சொந்த மைத்த குலமெனச் சொல்லும் வைஸ்யர் தெய்வமாய்
பந்தமே பெரும் பூவிழைப் பதியில் மேலும் அங்காளியைச்
சிந்தை கொண்டு குலாவிடும் திருவிழாத் தரும் சேமமே.

முதுமையின் தள்ளாமையையும் ஏழ்மையையும் சமுதாயத்தின் சுமையாகக் கருதப்பட்டு அலட்சியப்படுத்தப்படுவதையும், மனிதநேயத்துடன் அவற்றை அணுக வேண்டும் எனும் படிப்பினையும், அத்தகைய அறநோக்கு இல்லாதவர்கள் துன்பத்திற்கு ஆளாவார்கள் எனும் நம்பிக்கையும் தான தர்மம் பல சாபங்களுக்கு பரிகாரம் என்பதும் இக்கதை உணர்த்துகிறது எனக் கருதுதல் பொருந்தும்.

புகழ்பெற்ற திரைக்கவிஞர் உடுமலை நாராயணகவி பிறந்தது இந்த பூளவாடி என்பதும் அவரது குல தெய்வம் இது தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் தனது குல தெய்வத்தைப்பற்றி பல துதிப்பாடல்கள் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொரகையர் குலத்தாரின் வழிபாடு

கொரகையர் குலம் எட்டுக் குலங்களில் ஒன்றாகும். அதில் இரு பிரிவுகள் உண்டு அவை.

1. கஸ்தூரிக் கொரகையர் 2. கண்டிக் கொரகையர் என்பனவாம்.

இவை ஓரணிப் பகுப்பில் (Phratry) வரும் உட்பிரிவுகளாகும்.

இங்ஙனம் ஒரே குலத்திற்குள் பல உட்பிரிவுக் குலங்கள் வருவது பிற இனங்களிலும் இருப்பதைக் காணலாம். இதைச் சகோதரக் குழு என்ற பெயரில் அழைக்கிறார் க. கிருட்டிணசாமி. கொங்கு வேளாளர் இனத்தில் ஆந்தைக் கூட்டம் என்ற பெயரில் ஒரு குலம் உண்டு. அதன் சகோதரக் கூட்டமாக பொருளந்தை கூட்டம், சாத்தந்தைக் கூட்டம், கொற்றந்தைக் கூட்டம், கண்ணந்தைக் கூட்டம் எனப் பல உண்டு என்று விவரிக்கிறார் க. கிருட்டிணசாமி[42]. கொரகையர் குலங்களைச் சேர்ந்த இந்த இரு பிரிவினரும் வேறு வேறு தெய்வங்களை வழிபடுகின்றனர்.

42. கிருட்டிணசாமி க. கூட்டமும் திருமணமும் ப .81

கஸ்தூரிக் கொரகையர் - பழனி வட்டத்தில் கணக்கன்பட்டியிலுள்ள அக்கம்மாள் ஈஸ்வரியையும் வழிபடுகின்றனர்.

கண்டிக் கொரகையர் - பொள்ளாச்சி வட்டத்திலுள்ள நாட்டுக்கல்பாளையம் அங்காள பரமேஸ்வரியையும் வழிபடுகின்றனர். இருகுலத்தினரும் தாங்கள் வேடசந்தூர்ப் பகுதியிலிருந்து வந்ததாகக் கூறினார்கள்.

மேலும் இருகுலத்தினரும் சகோதர உறவுடையவர்கள் என்பதையும் ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் இவர்களின் குலதெய்வக் கதைகள் வேறு வேறாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோல் கோலையர் என்ற குலத்திற்கு மூன்று இடங்களில் வேறு வேறு பெயர்களில் குல தெய்வங்கள் இருப்பதைக் காணுகிறோம். அவை வருமாறு,

1. பெரியம்மன், சின்னம்மன் - பருத்தியூர்

2. குங்குமக்காளியம்மன் - சாளரப்பட்டி

3. பொட்டியம்மன் - வேடசந்தூர்

கோலையர் மூவருக்கும் கஸ்தூரி கொரகையருக்கும் குலதெய்வம் உருவான கதை கீழே விளக்கப்படுகிறது.

திண்டுக்கல் - கரூர் நெடுஞ்சாலையில் திண்டுக்கல்லிலிருந்து பதினைந்து கி.மீ தூரத்தில் பாடியூர் என்ற சிற்றூர் உள்ளது. 'பாடி' என்ற பெயருடைய மூதாட்டி தெய்வச்சிலைகளையும் பொருட்களையும் வைத்து வழிபட்டு வந்தாள். மூப்பின் காரணமாக வழிபாட்டினை நடத்த இயலாத சூழல் ஏற்பட்டது. இப்பொறுப்பை யாரிடமாவது ஒப்படைக்க வேண்டும் என எண்ணித் தக்க வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

அவ்வமயம் கஸ்தூரிக் கொரகையர் குலத்தவர்களும், அவர்களது மாமன் உறவு முறைக்காரர்களான கோலையரும் பொதிமாட்டில் பொருட்களை ஏற்றிக் கொண்டு வணிகத்திற்காகத் திண்டுக்கல் நகரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். வரும் வழியில் பாடியூரில் தங்கி விடியும் வரை ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். அப்போது பாடி மூதாட்டி அவர்களைப் பார்த்து உங்களின் பொதிமாடுகளுக்குத் தேவையான தவிட்டை மொடாக்களில் போட்டு வைத்துள்ளேன். அதை எடுத்துச்சாக்கில் போட்டுக் கொண்டு போய் சமமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். நலமோடு வாழுங்கள் என வாழ்த்தி அவற்றைக் கொடுத்தார். மொடாவிலிருந்த தவிட்டைச் சாக்கில் போடும்போது ஏதோ 'கல கல' என்று ஓசை எழுந்தது. பாட்டி எதையோ ஏமாந்து தந்துவிட்டாள் என்று கருதி, அவசர அவசரமாக மூட்டையைக் கட்டிக் கொண்டு

வேடசந்தூரை நோக்கிப் பயணப் பட்டனர். அய்யம்பாளையம் என்ற ஊருக்கு அருகில் வந்ததும் அந்த ஊரின் ஆற்றங்கரைத் தோப்பின் மரநிழலில் அமர்ந்து கொண்டு தவிட்டு மூட்டையை அவிழ்த்து, 'கல கல' என ஒலி எழுப்பிய பொருள் எது என்று ஆர்வமுடன் பார்த்தனர். அதில் தெய்வச் சிலைகள் இருந்தன. அப்போது அங்கிருந்த ஒருவருக்கு அருள்வந்து, பாடியூரில் கூன் கிழவி உங்களுக்கு நல்ல வாக்குத் தந்து தெய்வங்களையும் கொடுத்துள்ளாள். அதை முறைப்படி பூசித்து வந்தால் உங்கள் வாழ்வில் எல்லா மேன்மைகளும் கிடைக்கும் என்று கூறினார். தெய்வங்களின் சிலைகளில் 'சின்னம்மன்' 'பெரியம்மன்' 'பொட்டியம்மன்' 'குங்குமாயி ' 'குங்குமக் காளியாயி' 'கருப்பணசாமி' என்ற பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. இவற்றையெல்லாம் எடுத்துப் போய் பள்ளபாளையம் என்ற ஊரில் வைத்து வழிபாடு நடத்தினர். சிலகாலம் கழித்து இவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டது. கோலையர் மூவரும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு அவரவருக்குக் கையில் கிடைத்த சிலைகளை எடுத்துக் கொண்டு பிரிந்து போய்த் தனித்தனி வழியில் நடக்கத் தொடங்கினர். ஒருவர் பெரியம்மன், சின்னம்மன் சிலைகளையும், பேழையின் மூடியையும் பருத்தியூருக்கு எடுத்துச்சென்று அங்குவைத்து வழிபாடு நடத்தினர். அவர்கள் 'பருத்தியூர் கோலையர்' எனப்பட்டனர்.

இரண்டாமவர் குங்குமக் காளியம்மன் சிலையையும் மலையாளச்சாமி சிலையையும் எடுத்துக்கொண்டு போய் மூலனூருக்கு அருகில் உள்ள சாளரப்பட்டி எனும் ஊரில் வைத்து வழிபாடு நடத்தினர். இவர்கள் 'மூலனூர்க் கோலையர்' எனப்பட்டனர்.

மூன்றாமவர், பொட்டியம்மன் மற்றும் குங்குமாயி சிலைகளை எடுத்துக்கொண்டு போய் வேடசந்தூரில் வைத்து வழிபட்டனர். இவர்கள் 'வேடசந்தூர் கோலையர் எனப்பட்டனர். [43] மீதியுள்ள 108 சிலைகளை எடுத்துக்கொண்டு வந்து கோலையரின் மாப்பிள்ளைமார் கணக்கன்பட்டியில் ஓர் ஓலைக் குடிசையில் வைத்து வழிபாடு செய்தனர். இவர்கள் கஸ்தூரிக் கொரகையர் எனப்பட்டனர். இவர்கள் வழிபட்ட தெய்வம் அக்கமார் ஈஸ்வரி எனும் சப்தமாதர்களாகும். ஒரு முறை ஓலைக்குடிசையில் தீப்பற்றிக் கொண்டது. அங்கிருந்த அனைத்துப் பொருட்களும் தீக்கிரையாகின. ஆனால் தெய்வச் சிலைகள் வைக்கப்பட்டிருந்த ஐந்து பேழைகள் மட்டும் தீவிபத்தால் எவ்விதப்பாதிப்புமின்றி இருந்த அற்புத நிகழ்வைப் பார்த்து அனைவரும் வியந்தனர். அதற்குப் பிறகுதான் தற்போதுள்ள இடத்தில் கோயில் அக்கம்மாஈஸ்வரிக்கு எடுக்கப்பட்டது என்ற செய்தியை டாக்டர். இராஜேந்திரன் செட்டியார் விளக்கிக் கூறினார்[44].

43.சுப்பிரமணியம், சென்னை, வயது 51, நேர்காணல்

44. டாக்டர். இராஜேந்திரன், இராயப்பேட்டை, சென்னை, வயது 50, நேர்காணல்

இக்கதையில் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் நான்கு குலதெய்வங்கள் உருவான முறை விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வினத்தினர் வணிகத்திற்குப் பொதிமாடுகளைப் பயனப்படுத்தியுள்ளமையையும் பேழைவழிபாடு இருந்து வந்துள்ளமையையும், அறிய முடிகிறது. தீவிபத்து முதலான காரணங்களாலும் பாதுகாப்பின்மை காரணமாகவும் பேழை வழிபாட்டிலிருந்து சிலைவழிபாட்டிற்கு வழிபாடு மாற்றம் பெற்றதையும், சகோதரர்களுக்குப் பிணக்கு ஏற்பட்டதால் ஒரே குலம் மூன்றாகப் பிரிந்து சகோதரக் குலங்களாகக் கிளைத்து இருப்பதையும் அறிய முடிகிறது. 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் உள்ள பல்வேறு குலதெய்வங்களில் சப்தகன்னியரை வழிபடும் ஒரே குலம் கணக்கன்பட்டி கஸ்தூரிக்கொரகையர் குலம் தான் என்பது தெளிவாகின்றது.

நாட்டுக்கல் பாளையம் அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் மீன் வடிவச்சிலை பற்றிய கதையும் வழிபாடும்

பொள்ளாச்சி அருகில் உள்ள நாட்டுக்கல்பாளையம் என்னும் சிற்றூரில் கண்டிக் கொரகையர் குலத்தின் தெய்வமாக அங்காள பரமேஸ்வரி அம்மன் உள்ளது. வேடசந்தூர், குடகனாற்றங்கரையில் உள்ள அழகிய சிற்றூர். திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்தது. "வேடசந்தூரில் வாழ்ந்து வந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நங்கை (அண்ணி)யும் கொழுந்தியும் ஒருநாள் தண்ணீர் எடுக்கக் குடகனாற்றுக்குச் சென்றார்கள். கொழுந்தி ஆற்றில் குடத்தை விட்டுத் தண்ணீர் நிரப்பிய பின்னர் அதை வெளிய எடுக்க முடியவில்லை. எவ்வளவோ முயன்றும் குடம் வெளியே வரவில்லை. அப்போது கொழுந்திக்குச் சாமி வந்து அருளாடினாள். பவுன் கொடுத்து பம்பையை வாங்கி வந்து அந்தப் பம்பையை இசைக்க வேண்டும் என அருள்வாக்குக் கூற. ஊருக்கு வந்து வீட்டிலுள்ள வர்களிடம் இந்த விவரத்தைக் கூறியதும் அருள்வாக்கின்படி பவுன் தந்து பம்பையை வாங்கி வந்து இசைத்தனர். மூன்று நாட்கள் தொடர்ந்து பம்பை வாத்தியம் இசைக்கப்பட்டது. மீன் வடிவில் இருந்த கற்சிலையை வெளியே எடுத்தார்கள். பின்னர் அந்தச் சிலையை வழிபட்டனர். இன்று அந்தச் சிலை விநாயகர் அளவு வளர்ந்துள்ளதாகக் கூறுகின்றனர். அதுதான் இன்றளவும் வழிபடப்படுகின்ற சிலையாகும். வணிகத்திற்காக வேடசந்தூரிலிருந்து மேற்கு நோக்கிச் சென்றபோது பொள்ளாச்சிக்கருகில் வழிபாடு செய்தனர். இக்கோயிலில் உள்ள தெய்வம் அங்காளபரமேஸ்வரி அம்மன் என்றழைக்கப்பட்டு இன்றளவும் வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இச்செய்தியை இக்கோயில் செட்டுமை அங்குச்சாமி செட்டியார் விளக்கினார்[45]. இந்த ஊரின் பெயர் இந்தக் கதையோடு ஒத்து வருகின்றது. நடுகற்பாளையம் என்பதே நாட்டுக்கல் பாளையம் என மருவியது.

45. அங்குச்சாமி செட்டியார், பழனி வயது 63, நேர்காணல்

இதற்குச் சான்றாக பல புதை குழிகள் இவ்வூரில் காணப்படுவதேயாம். கல் நாட்டிய பாளையம் நாட்டுக்கல் பாளையம் எனப்படுகிறது. தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் நாட்டுக்கல்பாளையத்தில் நிறைய முது மக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

'மீன் வடிவில்' கிடைத்த கற்சிலையைக் கண்டிக்கொரகையர் குலத்தினர் தம் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். அகால மரணமடைந்தவர்களை மட்டுமல்லாது அற்புதத்தால் நிகழ்ந்த நிகழ்வுகளை ஒட்டியும் குலதெய்வ வழிபாடு தோன்றியுள்ளது என்பதை இதனால் உறுதிப்படுத்த முடிகின்றது. குலதெய்வ வழிபாட்டுடன் நாட்டுப்புற இசைக்கருவியான 'பம்பை' பெறும் இடத்தை இக்கதை மூலம் அறிய முடிகின்றது. 24 மனைத் தெலுங்குச் செட்டியார் குல தெய்வ வழிபாடுகளில் 'பம்பை' அடித்து வழிபடும் வழக்கத்தை இக்கதையோடு தொடர்பு படுத்திப் பார்க்கலாம்.

மீன் என்பது நீர் வாழ் இனம் என்பதாகும். வேளாண்மையோடு தொடர்பு கொண்டதாக இருப்பதாலும் மீன் வளமையின் சின்னமாகக் கருதப்படுகிறது. பரிபாடலில் தங்கத்தால் செய்யப்பட்ட மீனை ஆற்றில் விட்டதாகக் கூறப்படுவதும் கொல்லிமலை அறப்பள்ளீஸ்வரர் கோயிலுக்கு அருகில் உள்ள ஆற்றில் வெள்ளி மீன்களை ஆற்றில் விட்டதாக கூறப்படும் கல்வெட்டுச் செய்தியும் மீன் என்பதும் வளமை வழிபாட்டின் எச்சம் என உணர வாய்ப்புள்ளது. கருவூரார் எழுதிய திருவிசைப்பாவில் மீன் வரவழைத்தது என்று கூறுவது கூட வளமைவழிபாடே ஆகும். திருமாலின் அவதாரங்களில் ஒன்றான மச்சஅவதாரம் கூட மீன் வளமைக்குத் தொடர்புடைய சின்னமாக கருதலாம் என்று மானிடவியல் அறிஞர் சுவிராஜ் ஜெய்ஸ்வால் கூறுவது.[46] இங்கு சிந்திக்கத்தக்கது.

கோவைக்கு அருகில் உள்ள சுண்டக்காமுத்தூர் அங்காளம்மன் கோயில் குளத்தில் காமச்சிற்பங்களும் மீன் உருவங்கள் பொறிக்கப்பட்ட பல சிற்பங்களும் கி.பி.17ஆம் நூற்றாண்டில் நாயக்கர் காலத்தில் வடிக்கப்பட்டவை. 24 மனையாறும் நாயக்கர்களும் இணைந்து வழிபடும் இந்த கோயில் குளத்தில் உள்ள மீன் உருவச்சிலைகள் வளமையின் சின்னமே என்று அறியலாம்.

எனவே நாட்டுக்கல்பாளையத்தில் உள்ள இக்கோயிலின் கதையில் வரும் மீன் என்பது வளமை வழிபாடு தொடர்புடையது எனவும் கருதலாம்.

நவக்காணி வீரமாத்தியைக் குலதெய்வமாக வணங்கும் மும்முடியர் மற்றும் மக்கடையர்

தாசன் செட்டிவலசு என்று கூறப்படும் சிற்றூர், திண்டுக்கல் மாவட்டத்தில்

46. Suivraj Jaiswal - Orgin and Development of Vaishnivism Circa 300 BC/300AD P-94.

ஒட்டன்சத்திரத்திலிருந்து 10 கி.மீ தூரத்தில் உள்ளது. இவ்வூரை நவக்காணி என்றும் அழைப்பர். இங்குள்ள வீரநாராயணப்பெருமாள் வீரமாத்தி கோயில் மும்முடியர், மக்கடையர் குலத்தவருக்குக் குல தெய்வமாக விளங்கி வருகிறது. பெருமாள் கோயிலும் வீரமாத்தி கோயிலும் 1 கி.மீ தூரத்தில் தனித்தனியாக உள்ளன. பெருமாளின் தங்கை வீரமாத்தி என்று கூறப்படுகின்றது. தீயில் பாய்ந்து இறந்த பெண் வீரமாத்தியாக வழிபடப்படுகிறாள் என்ற செய்தி மட்டும் தான் கிடைத்துள்ளது. அந்தப் பெண் பற்றிய வேறு எந்தச் செய்தியும் கதையும் இப்பகுதியில் கிடைக்கவில்லை. வீரமாத்தி கோயிலுக்குக் கோபுரம் இல்லை. சுற்றுச் சுவர் மட்டும் இருக்கின்றது. கோயில் சுற்றுச் சுவர்க்குள் உள்ள இடம் அனைத்துமே கருவறையாக கருதப்பட்டு, அதற்குள் பெண்கள் செல்ல அனுமதிக்கப்படுவது இல்லை. அவ்விடத்தில் இரண்டு பீடங்கள் உள்ளன. வலது புறம் உள்ள பீடத்திற்குச் சிந்துக் காளை என்று பெயர். முன்பு கோயில் காளையாக இருந்த காளை இறந்து விட்டதால், இந்தப் பீடம் உள்ள இடத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறுகின்றனர்.

பொதுவாக அம்மன் கோயில்களில் இருக்கும் வாகனம் சிங்கமாகத் தான் இருக்கும். ஆனால் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் குலதெய்வமாக உள்ள பெண் தெய்வங்களின் வாகனம் காளைமாடாக உள்ளதைப் பார்க்க முடிகின்றது. இதற்குக் காரணம் அவர்கள் குல தெய்வக் கதைகளில் ஏதாவது ஒரு வகையில் பொதி மாடுகள் இடம் பெறுவதே ஆகும். நவக்காணியிலுள்ள இந்த வீரமாத்தியம்மன் கோயிலில் காளைமாடு ஒன்று அடக்கம் செய்யப்பட்டு வழிபாடு நடத்தப்படுவதையும் அந்த வழிபாட்டிடம் கருவறையாகக் கருதப்பட்டுப் பெண்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பதிலிருந்தும், காளை மாட்டுக்கு இந்த இனத்தில் தரும் மதிப்பு மிக்க முதன்மையிடம் உணரப்படுகிறது.

நவக்காணியில் உள்ள வீரமாத்தியைக் குலதெய்வமாக வழிபட்டு வந்த மும்முடியர் குலத்தைச் சேர்ந்த பங்காளிகளிடையே, 'மேற்குவழியினர்', 'கிழக்குவழியினர்' என்ற இரு பிரிவுகள் உண்டாயின. பொள்ளாச்சி, உடுமலைப் பகுதியில் உள்ள மும்முடியர் குலத்தவர்கள் ஒரு பிரிவிலும், பழனி ஒட்டன் சத்திரம், திண்டுக்கல் பகுதியைச் சேர்ந்தவர்கள் மறுபிரிவிலுமாக இரண்டு பிரிவுகள் தோன்றின. இருவர்க்குமிடையே கருத்து வேற்றுமை வளர்ந்தது. இக்கருத்து வேற்றுமைக்கு 'முதல் மரியாதை' யாருக்கு என்ற பிணக்குக் காரணமாக இருக்கலாம். இதனால் சுவாமியை மேற்குப் பகுதியினர் எடுத்து வந்து விடுகின்றனர். கிழக்குப் பகுதியினர் குதிரையில் துரத்திக் கொண்டு வருகின்றனர். மடத்துக்குளத்தைத் தாண்டி மேற்குப் பகுதியினர் வந்து விடுகின்றனர். திடீரென்று மடத்துக்குளம் ஆற்றில் தண்ணீர் வந்து விடுகிறது.

துரத்திக் கொண்டு வந்த கிழக்குப் பகுதியினர் வெள்ளம் காரணமாகத் திரும்பிப் போய் விடுகின்றனர். மேற்குப் பகுதியினர் உடுமலைப் பேட்டைக்கு அருகில் உள்ள 'ராகல்பாவி' எனுமிடத்தில் உள்ள சங்கம் புதரில் வைத்து இரண்டு வருடங்கள் வழிபட்டனர். மைத்துனர் மக்கடையர் நெறிப்படுத்தியதின் பேரில் அந்தியூரில் வைத்து வழிபட்டனர். இப்போது நவக்காணியிலும் அந்தியூரிலும் தனித்தனிக் கோயில்கள் உண்டு. நவக்காணி மும்முடியர்கள் தனிப் பங்காளிகளாகவும், அந்தியூர் மும்முடியர்கள் தனிப்பங்காளிகளாகவும் செயல் படுகின்றனர். தொடக்க காலத்தில் நவக்காணியில் வீரமாத்தி கோயிலாக இருந்தது. காலப்போக்கில் மேல்நிலையாக்கம் காரணமாக வைணவம் ஆதிக்கம் செலுத்தியது. இப்போது இவ்விரு கோயில்களும் வைணவக் கோயில்களாக விளங்குகின்றன.

நவக்காணியிலிருந்து சுவாமியைத் திருடி வந்து விட்டதால், அது பாவகரமான செயலாகிவிட்டது என்றும், அந்தப் பாவம் இந்தத் தலைமுறையினரை வருத்துகிறது என்றும், அதன் காரணமாக இந்தத் தலைமுறையில் ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது குறை உள்ளது என்றும், சுமார் 100 தலைக்கட்டுக்களில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்ட இயலும் என்றும் உடுமலைப்பேட்டை தனுஷ்கோடி தெரிவித்தார்[47]. "குலதெய்வ வழிபாட்டில் உள்ள குறைகள் எவை என்பதைக் கேரள ஜோதிடர்களைக் கொண்டு அஷ்டமங்கல தேவ பிரசன்னம் பார்த்து அக்குறைகட்கு பரிகார பூஜைகள் செய்து நிவர்த்தி செய்த பின்னர் குறைகள் மறைந்து நிறைவுற்ற குடும்பங்களாக எங்கள் குலம் பரிமளிக்கிறது என்கிறார் ஆசிரியர் சண்முகம் செட்டியார்.[48]

ஒரே குலத்தைச் சார்நதவர்களுக்குள் குலதெய்வ வழிபாடு தொடர்பாக 'மோதல்' ஏற்பட்டதையும், அதன் காரணமாக இரு கோயில்கள் உருவானதையும் இக்கதை எடுத்துக் காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும். நாட்டுப்புறக் குல தெய்வ வழிபாடுகளில் காலப் போக்கில் "மேல்நிலையாக்கம்" இடம் பெற்றதையும் இக்கதையின் மூலம் அறியப்படுகிறது.

மும்முடியரின் மேல் மகாதானபுரம் மகாலட்சுமி அம்மன் கோயில் வரலாறு

மும்முடியர் குலத்தின் முன்னோடி ஒருவர் ஆந்திர நாடான காளஹாஸ்தியிலிருந்து காவிரிக் கரை ஓரமாகப் பொதிமாட்டுவண்டியில் குடும்பத்துடன் வந்து கொண்டிருந்தார். அவர்களுக்கு நீண்ட நாளாகக் குழந்தை இல்லாததால் கோயில்களை நாடிப் பயணம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் ஓட்டிவந்த பசுமாடு மதம் பிடித்ததைப்போலக் கட்டுக்கடங்காமல்

---

47. தனுஷ்கோடி செட்டியார் S.T. உடுமலைப்பேட்டை, வயது 42, நேர்காணல்

48. சண்முகம் செட்டியார் ஆசிரியர் கரட்டுமடம்

அங்கிருந்து ஓர் ஊரை நோக்கி ஓடியது. அந்த ஊரின் பெயர் மேட்டுமகாதானபுரம். அதில் பயணம் செய்த இக்குலத்தின் குலப் பெண்களும் பின்னாலே ஓடினர். ஒரு வேப்ப மரத்தடியில் பசு நின்றது. அதன் மடியிலிருந்து பால் சுரந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட அவர்கள் அச்சமும் வியப்பும் அடைந்தனர். பசு அந்த இடத்தை விட்டு நகரவில்லை. அந்த இடத்தில் ஏதோ ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து அந்த இடத்தைத் தோண்டிப்பார்த்தனர். தோண்டிய இடத்திலிருந்து இரத்தம் பீறிட்டு எழுந்தது. அவர்களை அச்சமும் வியப்பும் ஆட்கொண்டது. எனவே மிகுந்த எச்சரிக்கையோடு தோண்டிப்பார்த்ததில் கற்சிலை ஒன்று கிடைத்தது. அந்தச் சிலையை வைத்துப் பின்னர் வழிபடத்தொடங்கினர். முதலில் தோண்டியபோது அச்சிலையில் கடப்பாறையின் கூர்முனை பட்டதால் இரத்தம் வந்தது. அப்பொழுது ஏற்பட்ட காயத்தின் தழும்பு இன்னமும் இருப்பதாக நம்புகின்றனர். சிலையை எடுத்த அன்று மூதாதையின் மனைவியின் கனவில் தோன்றிய தெய்வம் "வெண் மலர்களைக் கொடுத்து, உனக்கு ஓர் அழகான ஆண்குழந்தை பிறக்கும், எனது வம்சம் மேலும் மேலும் விருத்தியடையும், ஆடி 18-ஆம் தேதியன்று தலையில் தேங்காய் உடைத்து வழிபடுக" எனக் கூறி மறைந்தது. அதன்படி ஆண்குழந்தை அவர்களுக்குப் பிறந்தது. தோண்டி எடுத்த சிலையான மகாலட்சுமிக்கு ஒரு கோயில் அமைத்து வழிபட்டனர். கோயிலின் அருகில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த குரும்பனைப் பூசாரியாக நியமித்து பூசைக்கு ஏற்பாடு செய்தனர். இம்மகாலட்சுமியே மும்முடியர் குலதெய்வமாக வழிபடப்படுகின்றாள். இன்றும் இக்கோயிலுக்குள் பொதிமாட்டின் சிலையும், குலமுன்னோரின் சிலையும் உள்ளன.

இக்கோயிலில் அமைந்துள்ள மண்டபத்தில் 24 தூண்கள் உள்ளன. இது 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக் கோயில் என்பதை குறியீடாக உணர்த்துகிறது என்கிறார் எம். ஆர். நாச்சிமுத்து[49]. பூசாரியாகக் குரும்பர் நியமிக்கப்பட்டதால் குரும்பர்கட்கும் இது குலதெய்வக் கோயிலாகத் திகழ்கிறது. இக்கோவிலில் தலையில் தேங்காய் உடைத்து வழிபடும் புதுமையான வழிபாடு நிகழ்கிறது. இதுபற்றிக் குலதெய்வச் சடங்குகள் இயலில் விளக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் நடந்த அற்புத நிகழ்வொன்று தகவலாளிகள் கூறிய செய்தி இக்கோயில் மலரில்,

"ஆங்கிலேயே அரசு கரூர் - திருச்சி இரயில் பாதை அமைக்கத் திட்டமிட்ட போது இக்கோயில் வழியாகப் பாதை வர இருந்ததால், இதனை இடித்துவிட வேண்டுமென்றது. துரையவர்களிடம் இறைவியின் மகிமை சொல்லப்பட்டது. நாங்கள் தரும் தேங்காய் உடையுமா" என்று நையாண்டி செய்து, ஒரு கல்லினைத் தேங்காய் போலச் செய்து தந்தனர். அன்னை மகாலட்சுமியின் அருளால் அந்தக் கற்தேங்காய் மண்டையில் இரண்டாய்

49. நாச்சிமுத்து, எம்.ஆர். மலையாண்டிபட்டினம், வயது 55, நேர்காணல்

அவர் கண் முன் உடைக்கப்பட்டது. அது கண்டு வியந்து வணங்கி, துரையவர்கள் தற்போதுள்ள பாதையை மாற்றியமைத்தனர். அவர் நினைவாகக் கோபுரத்தில் அவரது உருவச் சிலை இன்றும் இருப்பதைக் காணலாம்"[50]. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்தி உண்மை என்று பல தகவலாளிகள் தெரிவித்தனர்.

இக்கோயில் வைணவக் கோயில் என்றும், திருமாலின் தேவியாகிய மகாலட்சுமி தான் இப்பெண் தெய்வம் என்றும் இக்கோயிலின் முதன்மைப் பொறுப்பு வகிக்கின்ற குணசீலன் மற்றுமுள்ள தகவலாளிகள் தெரிவிக்கின்றனர்.[51]

கீழ்க்கண்ட காரணங்களால் இது வைணக் கோயில் இல்லை எனக் கூறலாம்.

1. தெய்வத்தின் சிலையமைப்பைப் பார்க்கின்ற போது, கிராம தேவதையாகத் தான் காட்சியளிக்கிறது. மகாலட்சுமிக்குரிய தாமரை, யானை முதலானவை அச்சிலையில் இல்லை.

2. தலையில் தேங்காய் உடைத்தல் போன்ற கடுமையான வழிபாட்டு முறை வழக்கமாக நாட்டுப்புறத் தெய்வங்களுக்குத்தான் நிகழ்த்தப்படும்.

3. தலையில் தேங்காய் உடைப்பதற்கு முன்பு ஆடு பலியிடப்படுகிறது. திருமகள்' கோயிலில் இது நிகழ வாய்ப்பில்லை. நாட்டுப்புறத் தெய்வத்திற்குத்தான் பலியிடல் செய்யப்படும்.

4. மகாலட்சுமியின் வாகனமாக நந்தி உள்ளது. அம்மனின் வாகனமாக வழக்கமாக சிங்கம் இருக்கும். மேலும், துர்க்கைக்குரிய சிம்மவாகனம் மகாலட்சுமிக்குப் பொருந்தாது. சைவ சமயத்திற்குரிய நந்தி வைணவச் சமயத் தேவியான மகாலட்சுமிக்குப் பொருந்துமாறில்லை. எனவே இங்கு இடம் பெற்றுள்ள நந்தி வேறு ஒன்றினைக் குறிப்பதாகலாம்.

5. 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக்கதைகளில் 'பொதிமாடு' பல இடங்களில் தொடர்ந்து இடம் பெறுகிறது. இக்கோயிலில் இடம் பெறும் 'நந்தி' வாகனம், கதைகளில் இடம்பெற்றுள்ள பொதிமாட்டின் குறியீடு என்று குறிப்பிடலாம். அனைத்துக் கதைகளிலும் பொதிமாடு ஒரு கதைப் பொருட்கூறாகத் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

6. தீர்த்தம் முத்திரிக்கும் சடங்கின் போதும், சுவாமி திருவீதி உலாவின் போதும் இரண்டு பெரிய வாட்களை ஏந்திய வண்ணம் இருவர் வருகின்றனர்.

---

50. 24 மனைத்தெலுங்குச் செட்டியார் ஆலய மகாதானபுரம், மும்முடியார் கோத்ர குலதெய்வம் அருள்மிகு மகாலட்சுமி கும்பாபிஷேக சிறப்பு மலர் 1978 ப.3

51. குணசீலன் வி.எஸ்.எஸ். பொள்ளாச்சி, வயது 48, நேர்காணல்

வாள் போன்ற இப்பெரிய கத்திகள் பழங்குடி வழிபாட்டில் இடம்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

மகாலட்சுமி என்ற பெயருக்கு அபிதான சிந்தாமணி [49]"

"ஒரு காலத்தில் மகிஷன் கொடுமைகளைத் தேவியர் மும்மூர்த்திகளிடம் கூறத் திருமூர்த்திகளுக்குக் கோபம் உண்டாயிற்று. அக்கோபத்தினால் உண்டான தேஜா ரூபமே மகிஷாசுர மர்த்தினியாகிய மகாலட்சுமி " எனப்பொருள் கூறுகிறது. அமைதி தவழும் தெய்வம் (சாந்தசொரூபினி) மகாலட்சுமியன்றிச் சீற்ற வடிவமான ஒரு தெய்வம் மகாலட்சுமி என்ற பெயரில் இருந்து வந்தள்ளது என்பது இதனால் உறுதிப்படுகிறது.

இதிலிருந்து மேட்டுமகாதானபுரத்திலுள்ள மகாலட்சுமி கோயில் முதலில் நாட்டுப் புறத் தெய்வமாக வழிபடப்பட்டது. பின்னர் 'மேனிலையாக்கத்தின் காரணமாகப் பலிபெறும் காவல் தெய்வத்திற்கு ராஜபைரவர் எனப் பெயரிடப்பட்டது. காளை நந்திவாகனமாகக் கருதப்பட்டுச் சைவக் கோயிலாக மாற்றம் பெற்றிருக்கக்கூடும். வைணவத்தின் தாக்கம் ஏற்பட்டவுடன் திருமாலின் தேவி 'மகாலட்சுமி' எனும் வகையில் மாற்றம் பெற்ற வைணவக் கோயிலாகப் புதுவடிவம் பெற்றிருக்கக்கூடும். இருப்பினும் பலியிடுதல், தலையில் தேங்காய் உடைத்தல் முதலான சடங்குகளால் நாட்டுப்புறத் தெய்வத்திற்குரிய சிறப்புக்கள் அழியாமல் இடம்பெற்றுள்ளன. நாட்டுப்புறத் தெய்வங்கள் இதுபோலப் பல மாற்றங்களைப் பெற்றன என்பதைத் தொல்லியல்துறை ஆய்வாளர் பூங்குன்றன், "கொல்லிமலையில் பழங்குடிகள் வழிபட்ட தெய்வத்தைச் சமணர்கள் வழிபட்ட போது அறப்பள்ளி ஆனதாகவும் பின்பு சைவம் செல்வாக்குப் பெற்றபோது அறப்பள்ளீஸ்வர் ஆனது எனவும், அதுபோல உடுமலைக்கு அருகிலுள்ள திருமூர்த்தி மலைத்தலம் பழங்குடியினரால் வழிபடப்பட்டுப் பின்னர்ச் சமணர்கள் வழிபாடு அங்கு நிலவியபோது சமணர் கோயிலாய் மாற்றம் பெற்றுச் சைவம் செல்வாக்குப் பெற்றபோது பின்னர் அமணலிங்கேஸ்வரர் என ஆயிற்று" எனவும் கூறுகின்றார்[52].

பூங்குன்றன் அவர்களது இக்கருத்து மகாலட்சுமி கோயிலுக்கும் பொருந்துவதைக் காணமுடிகிறது. பசு மடியில் இருந்து தானாகவே பால் சுரந்தது, கல் தேங்காய் உடைபட்டு ஆங்கில ஆட்சியரை வியக்கவைத்தது ஆகிய அற்புத நிகழ்வுகளை நடத்திய நாட்டுப்புற தெய்வமான மகாலட்சுமி மும்முடியர் குல தெய்வம் மேனிலை ஆக்கம் பெற்று மகாலட்சுமி ஆலயமாக மறுவடிவம் பெற்றுள்ளது என்பதே ஆய்வின் முடிவு ஆகும்.

52. பூங்குன்றன் ஆர்.உதவி இயக்குநர் தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை நேர்காணல்

பில்லிவங்குரவர் குலதெய்வம்
பட்டவர், பாலாயி பாப்பாயம்மன் வரலாறு

கரூர்-திண்டுக்கல் நெடுஞ்சாலையில் கரூரிலிருந்து 28 கி.மீ. தூரத்தில் பாளையம் எனும் ஊர் உள்ளது. அங்கிருந்து 8 வது கி.மீ தூரத்தில் உள்ள நாச்சிபட்டி எனும் கிராமத்தில் பில்லிவங்குரவரின் குலதெய்வம் பட்டவர், பாலாயி, பாப்பாயம்மன் கோயில் அமைந்துள்ளது.

பில்லிவங்குரவர் குலத்தைச் சேர்ந் த செட்டியப்ப செட்டி என்ற ஒரு வீரர் இருந்தார். அவருடைய தொழில் நெடுஞ்சாலையில் பயணம் செய்கின்ற வணிகர்களைப் பாதுகாப்பதுதான். அக்காலத்தில் 24 மனை இனத்தவர்கள் பொதி மாட்டு வண்டிகளில் தங்களது பொருட்களை ஏற்றிக்கொண்டு சந்தைகட்குச்சென்று வணிகம் செய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் நிறைய வழிப்பறித்திருடர்கள் பொதி மாட்டு வண்டிகளை இரவு நேரங்களில் வழிமறித்துக் கொள்ளையடிப்பர். இத்தகைய வழிப்பறிகளில் இருந்து தங்களைக் காப்பதற்காக தங்கள் இனத்தைச்சேர்ந்த வீரர் செட்டியப்ப செட்டியை நாடினர். அவர் மிகப் பெரிய வீரர் என்பதால் பாதுகாப்புக்கு அவர் வண்டிகளுடன் குதிரையில் வருகிறார் என்பது தெரிந்தால் கொள்ளையர்கள் பயந்து ஓடிவிடுவர். பெருவழியைத் திருடர்கள்பயமின்றி மாற்றிய பெருமைமிக்க வீரராக இவர் திகழ்ந்தார். இவரது தீரத்தைப் போற்றிய வணிகர்கள் இவரை மிகுந்த மரியாதைக்குரியவராக போற்றினர். இவர் இருக்கும் வரை கொள்ளையடித்தல் இயலாது. எனவே இவரை கொன்று விடவெண்டும் எனக் கொள்ளையர்கள் திட்டமிட்டனர். அதற்குரிய சரியான தருனத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். ஒருமுறை கரூர் - திண்டுக்கல் நெடுஞ்சாலையில் அரவக்குறிச்சி தாண்டி நாச்சிபட்டி என்ற ஊருக்கு பொதி மாட்டு வண்டிகள் வந்து கொண்டிருந்தன. பாதுகாப்புக்கு செட்டியப்ப செட்டி குதிரையில் கூடவே வந்து கொண்டிருக்கிறார் என்ற தைரியத்தில் வணிகர்கள் நிம்மதியாக தூங்கிக் கொண்டே வண்டிகளில் பயணம் செய்தனர். வண்டிகள் நாச்சிபட்டி அருகில் வந்தவுடன் ஏழெட்டுக் கொள்ளையர்கள் மறைந்திருந்து திடீரெனச் செட்டியப்ப செட்டியைத் தாக்கினர். இவரும் தீரத்துடன் போரிட்டு இறுதியில் உயிர்நீத்தார். இவரால் அன்புடன் வளர்க்கப்பட்ட வளர்ப்புத்தங்கைகள் இச்செய்தியை அறிந்து ஓடிவந்து பார்த்ததும் மாவீரனாகிய அண்ணன் மண்ணில் மடிந்துகிடக்கும் சோகத்தைக் காணப்பொறுக்கமுடியாமல் அதே இடத்தில் இறந்துவிடுகின்றனர். இரு பெண்களும் ஒரே நேரத்தில் இறந்து விட்ட அற்புத நிகழ்வு நடைபெற்றுள்ளது. அவர்கள் இறந்த இடத்தில் கல்லை நட்டு அவரது சந்ததியினர் வழிபட்டனர். இறந்த குதிரை வீரர் செட்டியப்ப செட்டியை பட்டர் எனவும்

அவருடன் இறந்தபெண்களை பாலாயி பாப்பாயி எனவும் பெயரிட்டு எங்கள் குலதெய்வமாக வழிபட்டுவருகிறோம் என்று பில்லிவங்குரவர் குலத்தின் முதன்மையாளர்கள் இராஜம் கிருஷ்ணன் மற்றும் ஏழுமலை ஆகியோர் விவரித்தனர்.

நடுகல் வழிபாடும் அற்புத நிகழ்வும் இணைந்து உருவான ஒரு குலதெய்வம் இது. மேலும் இது குறித்து செய்திகளைத் திரட்ட குல முதன்மையாளர்களை நேர்காணல் கண்டபோது

'இறந்த பெண்கள் பட்டருடைய வளர்ப்புத் தங்கைகளாக கன்னிப்பெண்களா என்ற வினாக்கள் அவர்களிடம் கேட்கப்பட்டன.' 'அது உறுதியாகத்தெரியவில்லை அப்பெண்கள் பட்டருடைய மனவியர் என்றும் சிலர் கூறுகின்றனர், இவையனைத்தும் செவிவழிச்செய்திகள் என்பதால் எதையும் உறுதியாகக் கூற இயலவில்லை' என்று பதிலளித்தனர்.

இக்கோயிலில் குதிரைச் சிலையும் பட்டர்,பாலாயி,பாப்பாயிக்குரிய நடுக்கற்களும் உள்ளன. இக்கதையின் பின்புலத்தை ஆராய்ச்சி செய்தால் சில வரலாற்று உண்மைகள் புலனாகின்றன. சர்க்கார்பெரிய பாளையம் மற்றும் பிரான்மலைக் கல்வெட்டுக்களில் பெருவழியில் செல்லும் வணிகர்களின் பாதுகாப்புக்குக்குதிரைவீரர்கள் செல்லும் மரபு இருந்தது என்பதையும் அவர்கட்கு எறிவீரர்கள் (Highways soldiers) என்ற பெயர் இருந்தது என்பதையும் புலப்படுத்துகின்றன. மேலும் அக்கல்வெட்டுகளில்

'அறுபத்தி நான்கு கடிகைத்தாவளமும் தாவளத்திலிருந்து தன்மை வளர்க்கும் செட்டி வீரபுத்திரர்களும்' எனும் சொற்றொடர்கள் இடம் பெற்றுள்ளன.

கடிகை என்றால் பாதுகாப்பு அரண், படை தங்குமிடம் என்பது பொருளாகும். கடிகைத் தாவளம் என்பது படைநிற்கும் பாதுகாப்பிடம். இந்தத் தாவளத்தில் பெருவழி வணிகர்களும் வணிகர்களைக் காக்கும் வீரர்களும் இருந்துள்ளனர் என்பது புலனாகிறது. இதிலிருந்து பெருவழியில் செல்லும் வணிகர்களைக் கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்ற செட்டி வீரபுத்திரர்கள் எனும் வீரர்கள் இருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

வணிகர்களின் வணிகப்பயணம் , வழிப்பறிக்கொள்ளை , பாதுகாக்கும் எறிவீரர்கள் (Highways soldiers), அவர்கட்குச் செட்டிவீரபுத்திரர் என்று பட்டப்பெயர் - ஆகிய கல்வெட்டுச் செய்திகள் பில்லிவங்குரவரின் குலதெய்வக் கதையில் இணைந்து வருவதால் இக்கதைச்செய்தியில் உள்ள உண்மைப் பின்புலம் உணரப்படுகிறது.

52A. இராஜம் கிருஷ்ணன் கோவை, வயது 66 நேர்காணல்

ஏழுமலை, கோவை, வயது 72, நேர்காணல்

52.B. SII.VIII No.452, பெரியபாளையம் கல்வெட்டுக்கல் தொ.ஆ.ப.கோ.

தரிசியவர் குலதெய்வம் அக்கினியம்மன் வரலாறு

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரிலிருந்து கிழக்குத் திசையில் பத்துக் கி.மீ தூரத்தில் கோட்டை மாநதிக்கரையில் அமைந்துள்ள வெள்ளே கவுண்டனூரில் பதினாறு குலங்களில் ஒன்றான தரிசியவர் குலத்தாரின் குலதெய்வம் 'அக்கினியம்மன்' கோயில் அமைந்துள்ளது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இராமன் செட்டியார் என்பவர் தனது நான்கு தம்பிகளுடன் வெள்ளேகவுண்டன்புதூர் என்ற ஊரில் வாழ்ந்து வந்தார். கம்பளத்து நாய்க்கமார்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டதால், அவர்களது சேர்வை ஆட்டக் குழுவில் இவரும் வேடம்புனைந்து கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயிலில் இந்நிகழ்ச்சியினை நடத்திச் செப்புப்பட்டயம் பரிசாகப் பெற்றார். இந்நிகழ்ச்சி முடிந்து ஊர் திரும்பும் வழியில் ஐந்து வயதுடைய அழகான பெண் குழந்தை ஒன்று வழிதவறி வந்து இவரோடு சேர்ந்து விட்டது. அக்குழந்தையை விசாரித்தபோது, 'தான் ஒரு பொதிமாட்டுக்காரர்பிள்ளை' என்று கூறியது. அவ்வழியில் வந்த அடியார் ஒருவர் "இக்குழந்தையை வளர்த்துவந்தால் உங்கள் குடும்பங்கள் செழிக்கும்" என்று கூறிவிட்டு விரைந்து சென்று விட்டார். குழந்தை வந்த விதம், அடியார் கூறியது ஏழு கன்னிப் பெண்கள் கும்மியடித்து விளையாடிய அதிசயத்தை இராமன் செட்டியார் குடும்பத்தினர் பார்த்தனர். உரிய வயதில் அவளுக்கு மணமுடிக்க மணமகன் பார்க்கத் தொடங்கினர். இதைச் செவியுற்ற அப்பெண், அதிர்ச்சியடைந்து திருமணவாழ்க்கை தனக்கு வேண்டாம் என்றுரைத்தாள். காரணம் கேட்டபோது அவள் "ஆழ்ந்த உறக்கத்தில் நான் ஒரு கனவு கண்டேன். அக்கனவில் என்னிடம் உன் கைரேகை அமைப்பின் படி நீ ஓர் அதிசயப்பிறவி நாற்பத்து எட்டு நாட்கள் விரதமிருந்து பின் தீ வளர்த்து அதில் நீ எரிமூழ்கினால் உன் பெருமை நாடறியும் என என்னிடம் ஒருவர் கூறி மறைந்தார்" எனக் கூறினாள். அதன்படி நாற்பத்து எட்டு நாட்கள் விரதமிருந்தாள். நாற்பத்தெட்டாவது நாளில் சப்தகன்னியர் அவள் முன் தோன்றி எலுமிச்சங்கனி ஒன்றைத் தந்து 'இக்கனியால் தீயின் பயம் உன்னை அணுகாது' எனக் கூறி மறைந்தனர். தரிசியவர் குலத்தினர் இவளின் பிரிவை எண்ணி அழுதனர். அவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறினாள். ஆயினும் அவளை வளர்த்தோர் 'அம்மா! வளர்ப்புப் பிள்ளையான உன்னைத் தீயில் கருக விட்டால் ஊர் எங்களைப் பழிக்குமே' எனக் கூறி அழுதனர். அதைக்கேட்ட அப்பெண் "நான் உங்கள் கண் முன்னே தீயில் இறங்குகிறேன்" என்று கூறி அதன்படி செய்தாள். அப்போது ராமன் செட்டியாரின் மகள் லட்சுமியின் மீது அருள் வந்து "சப்த கன்னியர் தந்த எலும்மிச்சங்கனியும், மலரும் தீயின் நாக்குக்கு இரையாகாமல் அப்படியே இருப்பதைக் காண்பீர்கள். என்னைக் "குலதெய்வமாக ஏற்று வழிபடுங்கள்" எனக் கூறினாள். அதன்படி சாம்பலைக் கிளறிப்பார்த்தபோது கனியும் மலரும் வாடாமல் இருந்தன. அன்று முதல்

'அக்கினியம்மன்' தரிசியவர்களின் குலதெய்வமாக வணங்கப்படுகின்றாள். அற்புத நிகழ்வும் அகால மரணமும் இணைந்த குலதெய்வம் இது.

பொதிமாடுகளில் பொருட்களை ஏற்றிக்கொண்டு மேற்குப் பக்கம் புறப்பட்டனர். அனைவரும் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டதால் வழிபாடு செய்யப்படாமல் அந்த இடத்தில் புற்று வேப்ப மரமும் முட்புதர்களும் முளைத்தன. பிறகு 1916 ஆம் ஆண்டு அந்த இடத்தில் பெரிய கும்பிடு விழா நடத்தினர். 1918-ஆம் ஆண்டு அங்கிருந்து பிடிமண் எடுத்து வந்து வசவநாய்க்கன்பட்டியில் வைத்து வழிபட்டு வந்தனர். 1933-ஆம் ஆண்டு கோயில் கட்டி குடமுழுக்கு நடத்தினர். எனினும் அக்கோயிலில் சுவர் பிளவு பட்டது. கோயில் கதவுகள் தாமாகவே உடைந்து விழுந்தன. இத்துடன் மேலும் வேறு சில அமங்கல நிமித்தங்கள் உண்டாயின. மூலக்கோயில் இருந்த இடத்தைப் பாழ்டைய விட்டுவிட்டுப் பிடிமண் எடுத்து வந்து, வசவநாய்க்கன்பட்டியில் கோயில் கட்டியதால் இத்தகைய இடையூறுகள் ஏற்படுகின்றன என்று நம்பினர். எனவே அந்தக் கோயிலை இடித்துவிட்டுத் தெய்வச்சிலைகளை ஸ்ரீரங்கம் ஆற்றில் விட்டுவிட்டு, வெள்ளைய கவுண்டனூருக்கு வந்து மூலக்கோயில் இருந்த இடத்தைப் பல்லிச் சகுனத்தால் உறுதி செய்து கொண்டு, அந்த இடத்தைச் சுத்தம் செய்து கோயில் கட்டி வழிபாடு செய்து வருகின்றனர்.

"இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாத போதும், மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும், மனித மனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவை, நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன" என்பார் காந்தி[53]. இவர் கூறிய இயற்கையின் புதிரைப் புரிந்துகொள்ள இயலாச் சூழலில் ஏற்பட்ட நம்பிக்கைகளினால்தான் கோயிலை பழைய இடத்திற்கே மாற்றினர் என்பது உணரத்தக்கது.

இக்கோயிலில் தீபம் ஏற்றி வைத்து வலம்வந்து மலரும் எலுமிச்சங்கனியும் படையல் செய்து தெய்வத்தை வணங்கும் முறை இன்றும் இருந்து வருகின்றது.

பெரியகும்பிடின் போது பதினாறு அடி 'அக்கினிக் குண்டம் வளர்த்து அதில் தீமிதி நடைபெறுகின்றது.

இவ்வழிபாடுகள் தெய்வமாகிவிட்ட அக்கினியம்மனுக்குச் செய்யும் வழிபாடுகளாகப் பல்லாண்டுகளாகத் தொடருகின்றன.

அக்கினியம்மன் முழுக்க முழுக்க நாட்டுப்புறத் தெய்வமாகும். வளர்ப்பு மகளாக அன்புடன் ஆசையுடன் வளர்க்கப்பட்ட 'புனை உறவுப்பெண்', ஏதோ

53. காந்தி, க. மு.கு.நூ. பக் 103-104

ஒரு காரணத்திற்காகத் தீப்பாய்ந்து இறந்திருக்கிறாள். மணவாழ்க்கையில் நாட்டமின்மை என்ற காரணம் கூறப்படுகிறது.

"கன்னிமை என்பது ஒரு தவம். அதனை இழப்பதென்பது சேமித்த ஆற்றலை வீணடிப்பதாகும். அதன் எல்லையற்ற வல்லமையை நெறிப்படுத்தினால் மாபெரும் சக்தி உண்டாகும்"[54]. என்று மானிடவியல் ஆய்வாளர் சுல்மனின் கூற்றுப்படி திருமணத்தைத் தவிர்க்கவே தீப்பாய்ந்து பேராற்றல் மிக்க கன்னித் தெய்வமாகத் திகழ்ந்தால் என்று சொல்லலாம்.

நாட்டுப்புற தெய்வமான 'அக்கினியம்மன்' மேல்நிலையாக்கத்தின் காரணமாக வைணவத்தோடு தொடர்பு படுத்தப்பெற்று திருவேங்கிடப்பெருமாள் அக்கினியம்மன் கோயில் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதேபோல் சேத்தியார்கள் இனத்தில் தீப்பாய்ந்த ஒரு பெண் தெய்வத்தின் கதையைக் கள ஆய்வு செய்த ஆறு இராமநாதன் அவர்களது கூற்று[55] இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"சேத்தியார்களால் மட்டுமே வழிபடப்பட்டு வந்த குலதெய்வமான 'தீப்பாஞ்சாலி கோயில் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் அருள்மிகு 'தீப்பாஞ்ச நாச்சியார்' என்றும் அக்கினி பிரவேஷசீத்தாலட்சுமி என்றும் மாற்றம்பெற்று அல்லது மாற்றப்பட்ட நிலையை அறிய முடிகிறது/.

பக்த்வத்சல பாரதி "தமிழகப் பகுதிகளில் சமஸ்கிருதவயமாக்கம் சமயம் என்னும் தளத்திலும் வெகுவாக நிகழ்ந்து வந்துள்ளது. சக்திமிக்க, மகிமைத் தன்மையுடைய சிறுதெய்வங்கள் காலப்போக்கில் பெருந்தெய்வங்களாக மாற்றம் பெறுகின்றன. இவ்வகையான மாற்றங்களுக்கு எண்ணற்ற சான்றுகள் உண்டு.[56]" என்கிறார்.

மேல்நிலையாக்கத்தின் காரணமாகத் திருவேங்கடப் பெருமாள் கோயிலாக மாற்றம் பெற்றாலும் விழா ச் சடங்கு முறைகளிலிருந்து இதனை நாட்டுப்புற தெய்வம் என்பதை உணரலாம்.

பிடிமண் எடுத்து வருதல் பற்றிப் புதிய கருத்தாக்கம் ஒன்று இந்தக் கோயிலிலிருந்து புலப்படுகிறது. மூலக்கோயில் போற்றப்பட்டு வழிபடப்பட்டு வந்தால்தான் அங்கிருந்து எடுத்துவரப்படும் பிடிமண் சக்தியுடையதாக இருக்கும் என்பதும், மூலக்கோயில் போற்றப்படாமல் இருந்தால் தெய்வம் சீற்றமடையும் என்பதும், அத்தெய்வச்சீற்றம் பிடிமண் கோயிலில் எதிரொலிக்கும் என்பதும் இந்தக் கதையின் வாயிலாக உணரப்படுகிறது.

54.Shulman David Dean Tamil Temple Myth P 148

55. இராமநாதன், ஆறு மு.கு.நூ. ப 292

56. பக்தவத்சல பாரதி தமிழர் மானிடவியல் ப. 153

'மூலக்கோயில் மீண்டும் வழிபடப்பட்டபோது வளங்கள் சேர்ந்தன, நலங்கள் குவிந்தன என இவர்கள் சொல்லுவதிலிருந்து மேற்கண்ட கருத்து மேலும் உறுதிப்படுகிறது.

ஆதரவற்ற குழந்தையை எடுத்துத் தன் சொந்த மகள் போல் வளர்த்துவரும் மனிதநேயமும், பெற்ற மகள் இருக்க, வளர்ப்பு மகளைத் தீயில் பாய்ந்துவிட அனுமதித்தால் பழிச்சொல் பெற்றோருக்கு வர வாய்ப்பு உள்ளது என்னும் சமுதாயத்தின் பார்வையும் இக்கதையின் மூலம் உணரப்படுகிறது.

சமுதாயத்தின் கீழ்மட்டத்திலிருக்கும் கம்பளி நாய்க்கருடன் கொண்ட தொடர்பு சமூக நல்லிணக்கத்தையும் நாட்டுப்புறக் கலைகளிடம் அனைத்துச்சாதியினரும் கொண்டுள்ள கலையார்வமும் அதற்களித்துள்ள ஆதரவும் புலப்படுகிறது.

மரிக்கந்தை மற்றும் காவலிபாளையம் அங்காள பரமேஸ்வரி அம்மன் வரலாறு

பேழையைப் பகிர்ந்து கொண்ட மூன்று குலத்தவர்களின் கதை

தொடக்க காலத்தில் சொப்பியர், பலிவிதியர், கந்தவங்கலவர் ஆகிய மூன்று குலத்தவர்களும் அங்காளபரமேஸ்வரியை வழிபட்டு வந்தனர். இம்மூன்று குலத்தவர் கட்கும் அங்காளபரமேஸ்வரியே குலதெய்வம். முந்தைய காலங்களில் வழக்கில் இருந்த பேழையில் தெய்வத்தை வைத்து வழிபடும் பேழை வழிபாடுதான் இவர்களாலும் பின்பற்றப்பட்டது. பேழைக்குள் விநாயகர், அம்மன் சிலை, கபாலம் முதலியன இருக்கும்.

இவர்கள் மூவரும் சேர்ந்து ஓரிடத்தில் பச்சைப் பந்தல் போட்டு கும்பஸ்தாபனம் செய்து வழிபாடு செய்வது வழக்கம். வழிபாடு முடிந்ததும் இந்தப் பேழை சொப்பியர் குலச்செட்டுமையிடம் ஒப்படைக்கப்படும். இவ்வழிபாடு கொங்குநாட்டில் மூலப்பட்டிக்கு அருகில் வசதிப்பட்ட இடத்தில் நடக்கும். ஒரு சமயம் மழை பொய்த்துப்போய்ப் பெரிய பஞ்சம் வந்தது. பஞ்ச காலத்தில் அங்கு வாழ இயலாச் சூழ்நிலையில், பிழைப்புக் கருதி மேற்கு நோக்கி போகலாம் என்று சொப்பியரும் பலிவிதியரும் திட்ட மிட்டனர். விரைந்து செல்லுதற்கான போக்குவரத்துச்சாதனங்கள் இல்லாத காலம் அது. எனவே, சொப்பியர் செட்டுமை வசம் இருந்த பேழையை ஏன் சுமந்து செல்ல வேண்டும். இங்கேயே ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பி வந்தவுடன் பெற்றுக் கொள்ளலாம் எனக் கருதினர். கந்தவங்கலவர் குலத்தின் செட்டுமை, மூலப்பட்டி மணியாரிச் செட்டியாரிடம் "நாங்கள் பஞ்சம் பிழைக்க மேற்குச் சீமைக்குப் போகிறோம். நாங்கள் திரும்பி வரும்வரை பேழை உங்கள் வசம் இருக்கட்டும்" என்று அதை ஒப்படைத்து விட்டுச் சென்றனர். அந்த பேழையை வாங்கி மூலப்பட்டி மணியாரிச்செட்டியார் தம் வீட்டில் உள்ள பரண் (அட்டாலி) மேல் வைத்து விட்டார். சொப்பியரும் பலிவிதியரும் மேற்குச் சீமைக்கு (பொள்ளாச்சி

வட்டம்) வந்தவர்கள் பொருளீட்டுவதில் முழுக்கவனத்தையும் செலுத்தியதால் பேழையை மறந்து விட்டனர்.

அற்புத நிகழ்வு

இச்சூழ்நிலையில் ஒருநாள் மூலப்பட்டி மணியாரிச்செட்டியார் நண்பகல் உணவு அருந்திவிட்டு ஓய்வுறக்கம் கொண்டிருந்தபோது, அங்காளபரமேஸ்வரி, கிளியைப்போல் மழலை பேசும் இளம் சிறுமியாக வடிவெடுத்து வந்து அவரைத் தட்டியெழுப்பி "சொப்பியரும் பலிவிதியரும் வயிற்றுப் பிழைப்புக்குப் போனவர்கள் என்னை மறந்துவிட்டனர். கந்த வங்கலவராகிய நீங்களும் மறந்துவிட்டீர்கள். வழிபாடின்றி அட்டாலியில் (பரணில்) வாட்டத்துடன் இருக்கிறேன். நீயாவது என்னை முறையாகப் பூசை செய்து வந்தால் உனது கந்தவங்கலவர் குலம், ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகி உங்கள் வாழ்க்கையில் வளம்பொங்கும், மகிழ்ச்சியோடு இருப்பீர்கள்". என்று கூறிவிட்டு மறைந்துவிட்டாள். மூலப்பட்டி மணியாரிச்செட்டியார் உறக்கத்தின் மயக்கத்திலிருந்து எழுந்து 'அம்மணி அம்மணி' என்று அழைத்தவாறு வீடு முழுவதும் தேடிப்பார்த்தார். வீட்டிற்குள் யாரும் வந்த தடயமே இல்லை. இந்த அற்புத நிகழ்வைப் பார்த்து அதிசயப்பட்ட அவர், அக்கூற்றுப்படியே அச்சிலைகட்கு உரிய வழிபாட்டினை முறைப்படி செய்து வந்தார்.

பொருளீட்டப்போனவர்கள் திரும்பி வந்தனர்

மேற்குப் பகுதிக்குப் பிழைப்புக்காகப் பொருளீட்டச் சென்றவர்கள், வணிகத்தைத் திறம்படச் செய்து வளமான வாழ்வடைந்து அங்குள்ள கிராமங்களில் குடியேறி விட்டனர். அப்போது சொப்பியரும் பலிவிதியரும் ஒன்று கூடி 'நம் வாழ்வில் இருந்து வறுமை ஒழிந்து விட்டது. வளம் சேர்ந்து வருகிறது. தலைக்கட்டுகளும் பெருகி வருகின்றன. எனவே, நாம் ஒப்படைத்து வந்த பேழையை மூலப்பட்டி மணியாரிச் செட்டியாரிடமிருந்து வாங்கி வந்து, மரிக்கந்தை கிராமத்தில் கோயில் கட்டி வழிபடலாம் என்று பேசி மூலப்பட்டி நோக்கிப் புறப்பட்டனர். மூலப்பட்டிக்குச் சென்று மணியாரிச் செட்டியாரிடம் தாங்கள் அவரிடம் ஒப்படைத்துச் சென்ற பேழையைக் கேட்டனர். மணியாரிச் செட்டியாரும், கந்தவங்கலவர் குலத்தைச் சேர்ந்த பங்காளிகளும் பேழையைக் கொடுக்க மறுத்து விட்டனர். கடுமையான வாக்குவாதம் இரு தரப்பாருக்குமிடையே நடந்தது. இந்தப் பிரச்சனை பொது மனிதர்களின் பஞ்சாயத்திற்கு வந்தது. பொது மனிதர்களாக, பழையகோட்டைப் பட்டக்காரர், சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர், கந்தவங்கலவரைப் பார்த்து 'பேழையை ஏன் தர மறுக்கின்றீர்கள்' என்று கேட்க, அதற்கு அவர்கள். 'அம்பாள் கனவில் வந்து சொன்னபடி பூசை செய்து வருகிறோம். அம்பாளே எங்கள் கனவில் வந்து சொல்லிப் பூசை செய்ததால் இந்தப் பேழையைத் தரமாட்டோம்' என்று பதில் கூறினார். இரு தரப்பு வாதங்களையும் கேட்டுவிட்டு நடுவுநிலைமையோடு

ஒரு தீர்ப்பு வழங்கினர். தீர்ப்புக்குக் கட்டுபடுவதாக மூன்று குலத்தவர்களும் அவர்கள் முன்னிலையில் உறுதி கூறினர்.

தீர்ப்பின் விபரம்

1. பேழைக்குள் உள்ள முன்னோர் வைத்து வழிபட்ட தெய்வச் சிலையைக் கந்தவங்கலவர் வைத்துக்கொள்ள வேண்டும்.

2. பேழைக்குள் இருந்த கபாலம், விநாயகர் சிலை ஆகிய இரண்டையும் சொப்பியர் பலிவிதியர் வைத்துக் கொள்ள வேண்டும்.

3. இரு தரப்பினரும் தங்களுக்கு வசதிப்பட்ட இடத்தில் கோயில் கட்டி வழிபாடு செய்யலாம்.

4. முன்போலவே, கொடுக்கல், வாங்கல் மண உறவுகள் - இவற்றில் ஒற்றுமை இருக்க வேண்டும்.

தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டு, தெய்வச் சிலையை கந்தவங்கலவர் குலத்திற்குக் கொடுத்து விட்டனர். ஆனாலும், தெய்வச் சிலையை கொடுப்பதற்கு இவர்களுக்கு மனம் ஒப்பவில்லை. "அம்மனை நினைத்து, மனமுருகி, அழுது முறையிட்டனர். அப்போது சொப்பியர் குலத்தவர் ஒருவருக்கு 'அருள் வந்து' "ஆடிப் பதினெட்டில் மட்டும் கந்தவங்கலவருடன் இருந்து அவர்களுக்கு ஆண்டுக்குரிய அருள் முழுவதும் வழங்கிவிடுவேன். பிற நாட்களில் மரிக்கந்தையில் இருப்பேன்' என்று கூறியதன் பேரில் சமாதானமடைந்தனர். பின்னர் மரிக்கந்தையில் சொப்பியரும் பலிவிதியரும் சேர்ந்து கோயில் கட்டினர்.

கந்தவங்கலவர் காவிலிபாளையத்தில் கோயில் கட்டினர். இரண்டு இடங்களிலும் உள்ள தெய்வத்தின் பெயர் அங்காளபரமேஸ்வரி. இச்செய்தியை பம்பைக்காரர் ஏ.கே.ராஜு விளக்கிக் கூறினார்.[57]

இக்கதையிலிருந்து கீழ்க்கண்ட உண்மைகள் புலனாகின்றன

1. தொடக்க காலத்தில் சொப்பியர், பலிவிதியர், கந்தவர்கள் ஆகிய மூன்று குலத்தவர்களும் சேர்ந்து பொது வழிபாடு செய்து வந்துள்ளனர். சமுதாய நல்லிணக்கம் இருந்து வந்தமை இதனால் புலப்படுகிறது.

2. பேழை வழிபாடு நிகழ்ந்துள்ளமை உறுதிப்படுகிறது.

3. தெய்வச் சிலையை வழிபாடின்றிக் கிடத்துவது என்பது தெய்வக் குற்றமாகும் என்ற நம்பிக்கை புலனாகிறது.

4. தங்களின் குலதெய்வத்திற்காக நாட்டுப்புற நீதிமன்றங்களாக விளங்கிய பஞ்சாயத்துத் தலைவர்களிடம் முறையிட்டுள்ளனர் என்பதும்,

---

57. ராஜு ஏ.கே., பம்பைக்காரர், மேல்கரைப்பட்டி

மனநிறைவு இல்லா நிலையிலும் பஞ்சாயத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டனர் என்பதும் பெறப்படுகிறது.

5. தங்களின் வாழிடத்திற்கு அருகில் கோயில் கட்டியுள்ளனர் என்பதும், கோயில் வழிபாட்டிற்குப் பேழைக்குள் இருந்த பொருட்களையும் (பஞ்சாயத்தில் கூறியபடி) பயன்படுத்தி வணங்கியுள்ளனர் என்பதும், பேழை வழிபாட்டிலிருந்து கோயில் வழிபாட்டிற்கு மாறியுள்ளனர் என்பதும் இதன் மூலம் உறுதிப்படுகிறது.

6. அற்புத நிகழ்வினை நிகழ்த்தி மூன்று குலத்தவர்க்கும் கன்னித்தெய்வம் அங்காளபரமேஸ்வரி என்ற பெயரில் மரிக்கந்தை, காவிலி பாளையம் ஆகிய இரு கோயில்களில் அருளாட்சி புரிகின்றது என்பது புலனாகிறது.

காவிலி பாளையம் அங்காளபரமேஸ்வரியம்மன் கோயில் கரூர் கே.சி.பி.அவர்களின் குல தெய்வம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிடி மண்

குலதெய்வக் கோயில்கள் இரு வகைகளாக அமைகின்றன.

1. மூலக்கோயில்

2. பிடிமண் கோயில்

இவ்விரு வகைகள் குறித்து இங்கு ஆராயப்படுகின்றது. ஒவ்வொரு குலத்தவரும் வாழ்ந்த பகுதிகளில் குலதெய்வக் கோயில்கள் இருந்தன. விழாக்காலங்களிலும், மற்ற நாட்களிலும் அருகில் இருந்த குலதெய்வக் கோயில்கட்கு அந்தக் குலத்தினர் சென்று வழிபட்டனர். இங்ஙனம் வழிபட்டோர் வணிகத்திற்காகவும், பொருளீட்டுவதற்காகவும் வேறு ஊர்கட்குத் தங்கள் குடும்பங்களோடு இடம் பெயர்ந்தனர். அங்ஙனம் சென்றவர்கள் வழிபாட்டிற்காகத் தாங்கள் குடியிருக்கும் ஊர்களுக்கும் குலதெய்வக் கோவில்கட்கும் இடையே இருந்த நெடுந்தொலைவைக் கடக்க வேண்டியிருந்தது. இருப்பினும் விழா நாட்களில் தவறாது கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலப்போக்கில் குலதெய்வக் கோயில் இருந்த பகுதிக்குச் சென்று வர அவர்கள் சிரமப்பட்டனர். போக்குவரத்து வசதிகள் சிறப்பாக இல்லாத காலமாகையால் பெரும்பாலும் பொதிமாட்டு வண்டிகளிலேயே தங்கள் பயணத்தை மேற்கொண்டனர். பயணத்தூரம் காரணமாக அடிக்கடி குலதெய்வ வழிபாடு செய்திட இயலாமல் வருந்தினர். எனவே, தாங்கள் வாழும் பகுதிகளிலேயே குலதெய்வக் கோயில் இருந்தால் நல்லது என எண்ணித் தாங்கள் வழிபடும் குலதெய்வக் கோயிலிருக்குமிடத்தில் இருந்து, ஒரு கைப்பிடி

மண்ணை வழிபாடு செய்து எடுத்துக் கொண்டு வந்து தாங்கள் வாழும் பகுதிகளில் கோயில் கட்டும்போது கட்டுமானத்தில் அந்த மண்ணைக் கலந்தனர். தங்கள் குலதெய்வக்கோயிலின் மண் புதிய கோயிலைக் குலதெய்வக் கோயிலாகவே கருதி வழிபட்டனர். பழைய கோயிலின் அருகில் வாழ்ந்த குலமக்கள் அந்தக் கோயிலையும் அங்கு உறையும் தெய்வத்தையும் தங்கள் குலதெய்வமாக வழிபட்டனர்.

புதிய கோயிலைக் கட்டியவர்கள் விழாக்காலங்களில் மட்டும் பழைய கோயிலிலிருந்து பிடிமண்ணை எடுத்து வந்து, விழாத் தொடங்குவதற்கு முன்னர் பூசை செய்து இக்கோயில் மண்ணுடன் கலந்திடுவர். எடுத்துக்காட்டாக, கணக்கன்பட்டி அக்கமார் ஈஸ்வரி கோயில் பெரிய கும்பிடு விழாவின் போது, மூலக்கோயிலான அய்யம்பாளையம் அக்கம்மார் ஈஸ்வரி கோயிலிலிருந்து பிடிமண் எடுத்து வந்து விழாவன்று வழிபாட்டில் சேர்க்கின்றனர்.

"பெரும்பாலான நாட்டார் தெய்வங்கள் முதன் முதலில் ஏரிக்கரை, ஆற்றங்கரை , விளைநிலப்பகுதி, பண்படாத புதர்நிலப்பகுதி அல்லது இதனை ஒத்த பிற இடங்களில் கிடைக்கப்பெற்றுப் பின்னர் அங்கிருந்து இப்போது உள்ள இடத்திற்குக் கொண்டு வரப்பட்டுப் பின்னர் அங்குக்கோயில் கட்டப்பட்டதாக இருக்கும். ஆதலின் திருவிழாத் தொடங்கும் போது குறிப்பாகக் காப்புக்கட்டுதலின் போது அப்பூர்வீக இடத்திற்குக் கரகம், மேளம் போன்ற ஏதாவதொரு சடங்கு முறைச் செயலுடன் சென்று அங்கிருந்து தெய்வத்தை அழைத்துவரும் நிகழ்வு நடைபெறுகிறது என்று பிடி மண் கோயில்களைப் பற்றி விளக்குகிறார் பக்தவத்சல பாரதி[58]".

தொடக்க காலத்தில் இருந்து கோயில்கள் 'மூலக்கோயில்' என்றும் பிடிமண் எடுத்து வந்து கட்டப்பட்ட கோயில் 'பிடிமண் கோயில்' என்றும் இரு வகையாக இருந்தன.காலப்போக்கில் தொடர்ந்து வந்த தலைமுறையினருக்கு மூலக்கோயிலிலிருந்து பிடிமண் எடுத்து வந்த செய்தி மெல்ல மெல்ல மறையத் தொடங்கியமை கள ஆய்வில் தெரிய வருகின்றது.

பிடி மண்ணை எடுத்து வரக் காரணம்

மண்ணுக்கு மகத்தான சக்தி இருக்கிறது எனும் நம்பிக்கை இன்றளவும் மக்களிடையே நிலவுகின்றது. எனவேதான் இறைவழிபாட்டின் போது கோயில் முன்புறம் படுத்து வணங்குவர். அப்படி வணங்கும்போது அக்கோயில் மண் வணங்குபவரின் உடையிலும் உடலிலும் படுகிறது. அம்மண்ணைத் தீண்டுவதால் நன்மை கிடைக்கிறது என்று நம்புகின்றனர். அதே போல் வழிபாடு முடிந்த பின்னர் உடனே கோயிலை விட்டுப் புறப்படக்கூடாது என்றும், சிறிது நேரம் கோயிலில் உட்கார்ந்து விட்டுத்தான் போக வேண்டும் என்றும், கூறப்படும்

58. பக்தவத்சல பாரதி தமிழர் மானிடவியல் ப. 201

மரபு இன்றும் பின்பற்றப்படுகிறது. அப்படி உட்காரும் போது கோயில் மண் உட்காருபவரின் மேல் பட வேண்டும் என்பதற்காக இம் மரபு பின்பற்றப்படுகிறது. இதிலிருந்து கோயில் வளாகம் முழுவதும் தெய்வசக்தி இருப்பதாகவும் அதிலிருந்து ஒரு கைப்பிடியளவு மண்ணை எடுத்துக் கொண்டு வந்து புதிதாக அமைக்கவிருக்கும் கோவிலுக்குள் வைத்துக் கட்டும்போது அந்த மூலக்கோயிலின் சக்தி புதிதாகக் கட்டப்படும் கோயிலுக்கும் கிடைக்கிறது எனும் நம்பிக்கையின் அடிப்படையில் பிடிமண் எடுக்கப்படுகிறது எனலாம்.

பிடி மண்ணின் பெரும் சிறப்பைப் பற்றி பாண்டி எனும் ஆய்வாளர் 'பிடிமண் எடுத்தல் சிறுமரபு சார்ந்த தெய்வ வழிபாட்டிலும் பெருந்தெய்வ வழிபாட்டிலும் உள்ளது. நாட்டுப்புறமக்கள் ஓரிடத்திலிருந்து பிரிதொரு இடத்திற்கு இடம் பெயரும் நிலையில் தாங்கள் வழிபடும் தெய்வத்தைக் கொண்டு செல்லப் பிடிமண் எடுத்தல் என்ற நிகழ்வைக் கொண்டுள்ளனர். இதற்கெனப் பூசை மரபுகளும், வழிபாட்டுப் பொருள்களும் உள்ளன. குதிரையெடுப்பு, குடமுழுக்குப் போன்ற தெய்வ ஆற்றலை மீட்டுருவாக்கம் செய்யும் நிலையிலும் இந்நிகழ்வு நிகழ்த்தப்படுகிறது. பெண்களுக்கு நிலத்தைச் சீதனம் கொடுக்கும் பொழுது மூன்று பிடிமண்ணை அள்ளி மடியேந்தச் சொல்லிக் கொடுப்பர். பிடிமண் எடுத்தல் மூலம் நாட்டுப்புற மக்களுக்கும் நிலத்திற்கும் உள்ள பிணைப்பை அறிய முடிகிறது. நிலத்தைத் தெய்வமாகக் கருதும் அவர்களின் மனநிலையும் வெளிப்படுகிறது' எனக் கூறுகின்றார்[59].

வெள்ளேகவுண்டன்புதூரிலிருந்து தரிசியர் குலதெய்வமான அக்கினியம்மன் கோயிலிலிருந்து பிடிமண் எடுத்துக் கொண்டு, வரப்பட்டு வசவநாய்க்கன்பட்டியில் கோயில் கட்டி வழிபட்டனர். மூலக்கோயிலுக்கு யாரும் போகாததால் வழிபாடின்றிச் சிதைவுற்றது. ஆனால் இந்தக் குலமக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியதாலும் தீ நிமித்தங்ள் தோன்றியதாலும் அவர்கள் இதற்கான காரணத்தைச் சிந்தித்தனர். மூலக்கோயிலை வழிபாடின்றிப் பாழடைய விட்டுவிட்டதால் பிடிமண் கோயிலை இடித்துவிட்டு அதிலிருந்து தெய்வச் சிலையை ஆற்றில் விட்டு விட்டு மூலக்கோயிலைப் புதுப்பித்து வழிபட்டனர். அதன் பிறகே துன்பங்கள் மறைந்தன. வளங்கள் சேர்ந்தன. என இக்கோயில் குடமுழுக்கு விழா மலரில் குறிப்பிட்டுள்ளனர்[60].

மூலக்கோயிலில், உள்ள சக்தி, பிடிமண் எடுத்து வந்து கட்டப்பட்ட கோயிலுக்கும் பிடிமண்ணால் வருகிறது எனும் நம்பிக்கை, இக்கோயில் வரலாறு காரணமாக உறுதிப்படுகிறது. ஏனெனில் மூலக்கோயிலின் அருள் அல்லது சாபம் பிடிமண் கோயிலிலும் அப்படியே பிரதிபலிக்கிறது எனும் நம்பிக்கைக்குச் சிறந்த எடுத்தக்காட்டாக அக்கினியம்மன் கோயில் திகழ்கின்றது.

59. பாண்டிமு. பிடிமண் தெய்வம் தன்னனானே பக் 104-105

60. திருவேங்கிடப் பெருமாள் - அக்கினியம்மன் கோயில் கும்பாபிசேக மலர் 1999 ப. 24

மூலக்கோயில் பாழடைந்தபோது வழிபாடின்மையால் ஏற்பட்ட தெய்வக் குற்றம் பிடிமண் கோயிலில் வழிபாடு இருந்த நிலையிலும் கூட குலமக்களைப் பாதித்திருந்தது. இதிலிருந்து பிடிமண் கோயில் என்பது மூலக்கோயிலின் பிரதிபலிப்புத்தான் என்பதும் அறிவியலில் சூரியனின் ஒளியைக் கோள்கள் பெற்றுக் கொள்ளுகின்றன என்பதும் கோள்களுக்கெனத் தனி ஒளியில்லை என்று கூறப்படுவதும் இத்துடன் ஒப்புநோக்கத்தக்கது. எனவேதான், மூலக்கோயில் இல்லாத பிடிமண் கோயிலால் பலனில்லை என்று, மூலக்கோயில் வழிபாட்டிற்கு இக்குலத்தவர் திரும்பிவிட்டனர். இதிலிருந்து சில உண்மைகள் புலப்படுகின்றன.

1. மூலக்கோயிலிலிருந்து பிடிமண் எடுத்துவருவதால் மூலக்கோயிலுக்குரிய அருளாற்றல் பிடிமண் கோயிலுக்குக் கிடைக்கிறது.

2. மூலக்கோயிலில் அருளாற்றல் இல்லையெனில் பிடிமண் கோயிலிலும் அருளாற்றல் இராது.

3. பிடிமண் கோயிலின்றி மூலக்கோயில்கள் மட்டும் அருளாற்றலோடு இருத்தல் இயலும்.

துணைத் தெய்வங்கள்

முதன்மைத் தெய்வத்தைச் சார்ந்த பிற தெய்வங்கள் துணைத் தெய்வங்கள் எனப்படும். இதில் ஆண் துணைத் தெய்வங்களும் உண்டு. பெண் துணைத் தெய்வங்களும் உண்டு, விலங்குகளும் உண்டு. "மக்களைக் காக்க தெய்வங்கள் இருக்கின்றன. அதே போல் தெய்வங்களைக் காக்க, முதன்மைத் தெய்வத்திற்கு மக்களைக் காக்கும் பணியில் உறுதுணையாக இருக்கத் துணை தெய்வங்கள் உதவுகின்றன" என்பார் துளசி ராமசாமி[61].

24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக் கோயில்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துணைத் தெய்வங்கள் உண்டு. துணைத் தெய்வங்கள் உருவானதற்கான நாட்டுப்புறக் கதைகள் நிறைய உண்டு. எடுத்துக்காளட்டாக, வேளாண்பூண்டி பாறை வீரமாத்தி கோயிலில் உள்ள துணைத் தெய்வமான ஒட்டாலம்மன் பற்றிய கதை கீழே விவரிக்கப்படுகிறது. துளசி ராமசாமி கூறிய 'அந்தந்த காலக் கட்டங்களில் மடிந்த நல்லவர்களை ஊர் மக்கள் துணைத் தெய்வங்களாக்கி உள்ளனர் என்பது உண்மைச் செய்தி '[62] எனும் கூற்றுடன் தோழிக்காக உயிர் நீத்த ஒட்டாலம்மன் துணைத் தெய்வமாக விளங்குவது ஒப்பு நோக்கத்தக்கது. மேட்டு மகாதானபுரத்தில் உள்ள மகாலட்சுமி அம்மன் கோயிலில் பொதி மாடு ஒன்று துணைத் தெய்வமாக உள்ளது. 'நாகர் துணைத் தெய்வமாகப் பல கோயில்கள்

61. துளசிராமசாமி நெல்லைநாட்டுப்புறத் தெய்வங்கள் ப 105.

62. மேலது ப. 105

இருக்கிறது. கருப்பணசாமி துணைத் தெய்வம் பெரும் பாலான கோயில்கள் காவல் தெய்வமாக உள்ளது. பலியை ஏற்கும் தெய்வமாகக் கருப்பணசாமி உள்ளது. சில இடங்களில் கருப்பணசாமிக் கென்று தனிச் சன்னிதிகள் உண்டு. கருப்பணசாமியின் முன்னிலையில் தான் பலி நிகழ்கிறது. மேல் நிலையாக்கம் நிகழ்வு பெற்ற குலதெய்வக் கோயில்களில் முருகன், விநாயகர், ஆஞ்சநேயர் முதலியோர் துணைத் தெய்வங்களாக உள்ளனர்.

அரிய செயல்களாற்றியவர்க்கும் தெய்வத்திற்கு ஏதாவது ஒரு வகையில் தொடர்புடையவர்கள் அல்லது துணையாய் இருந்தவர்கள் துணைத் தெய்வமாகக் கருதப்பட்டுள்ளனர் என்பதற்குப் பாறை வீரமாத்தி கதையை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

பாறை வீரமாத்தி துணை தெய்வமான வரலாறு பற்றிய கதையும் வழிபாடும்

அரிய செயல்களாற்றியோர் துணைத் தெய்வங்களாக உயர்ந்தது பற்றி இக்கதை விளக்குகிறது. ஈரோடு மாவட்டம் மூலனூர் வட்டத்தில் உள்ள சின்னதாராபுரம் என்னும் ஊருக்கு அருகில் ஆற்றங்கரையோரம் அமைந்த சிற்றூர் வேளாண்பூண்டி. இச்சிற்றூரில் பலிவிதியர் குலத்தை சேர்ந்த எர்ரையன், சொப்பியர் குலத்தைச் சேர்ந்த கௌசல்யா தேவி என்ற பெண்ணை மணந்து கொண்டான்.

இருவரும் மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்துகின்ற போது ஒரு நாள் தண்ணீர் கொண்டு வர வீட்டுக்கு அருகில் உள்ள அமராவதி ஆற்றுக்கு இந்தப் பெண் போனாள். அந்த ஒற்றை அடிப் பாதையில் வேட்டுவக் கவுண்டர் இனத்தைச் சேர்ந்த கருமாண்டக் கவுண்டர் என்பவர் இவளைக் கற்பழிக்க முயற்சி செய்தான். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இவள் அங்கிருந்த புற்றைச் சுற்றி ஓடினாள். அவனும் துரத்தினான். இனிமேலும் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது இக்கட்டான சூழல் ஏற்பட்டு விட்டது. இனித் தாமதித்தால் கற்புப் பறிபோய்விடும் என்ற நிலையில் தெள்ளிதின் உணர்ந்து, தன் நிலையில் தாழாமையும் தாழ்வு வந்த வழி வாழாமையும் மானம் எனக் கருதிய அந்த வீர மங்கை மேற்கு நோக்கி நின்று தன்னுடைய குல தெய்வமான மரிக்கந்தை அங்காளபரமேஸ்வரியை வணங்கிவிட்டு தனது நாக்கை பிடுங்கிக்கொண்டு புற்றின் மீது விழுந்து உயிர் விடுகின்றாள். கற்பு காக்கப்படுகின்றது.

இருப்பினும் இறந்து விட்ட இந்தப் பெண்ணை ஒரு முத்தமாவது இடவேண்டுமென்று அந்த பிணத்திடம் நெருங்கினான். அப்போது புற்றிலே இருந்த ஒரு பெரிய கருநாகம் அவளைத் தொட விடாது அவனை நோக்கிச் சீறியது, அவனைத் துரத்தியது. இச்செய்தியைக் கேள்விப்பட்ட அனைவரும் அழுது துடித்தனர். அவளது உயிர் தோழியாகிய பொம்மி என்கின்ற ஒட்டர்

இனத்தைச் சேர்ந்த பெண் அழுது துடித்துப் பல நாட்கள் உணவே உண்ணவில்லை. இறந்து போன வீர மங்கையின் சிதைக்கு அவளின் கணவர் தீ மூட்டினார். ஆனால் தீப்பற்றவே இல்லை. பிறகு 'கற்பைக் காப்பாற்றியதற்காக இறந்துபோன உன் நினைவை போற்றும் வகையில் தை மாதம் முதல் நாளன்று உனக்காகப் புற்றில் பொங்கல் வைத்து வழிபடுகிறோம். வீரத்துடன் நீ உயிரை மாய்த்துக்கொண்டதால் இன்று முதல் உன்னை வீரமாத்தி என்று போற்றி வணங்குவோம்' என்று கூறிய பிறகு தான் சிதையில் தீப்பற்றியது.

அவளுடைய அஸ்தியை எடுத்துப் புற்றுக்கு அருகில் இருந்த வட்டப்பாறையின் மீது கல்லறை அமைக்கும் பணி, அவளுடைய தோழியான பொம்மியின் கணவன் திம்மபோயன் செய்து வந்தான். வேலை செய்து கொண்டிருக்கும் கணவனுக்கு உணவினை எடுத்துக் கூடையில் வைத்துத் தலையில் சுமந்து கொண்டு வந்தாள். நிறைமாதக் கர்ப்பிணியான பொம்மி, தன் தோழியின் பிரிவால் ஏற்பட்ட சோகத்தோடு கல்லறைக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்த போது ஒரு எருமை அவள் மீது பாய்ந்தது, கர்ப்பிணியான பொம்மி அதே இடத்தில் உயிர் நீத்தாள். உயிருக்கு உயிராய் நேசித்த இரு தோழிகளின் சவ அடக்கமும் அருகருகே நிகழ்ந்தது. இருவருக்கும் அருகருகே கோயில் எழுப்பப்பட்டது. இருவரும் துணைத் தெய்வம் என்ற நிலைக்கு உயர்ந்தனர். கௌசல்யாதேவியை 'வீரமாத்தி' என்றும் 'செட்டியம்மன்' என்றும் வழிபடுகின்றனர். அவளது தோழியான பொம்மியை 'ஒட்டாலம்மன்' என்று அழைத்து வழிபடுகின்றனர் என்று இக்கதையை பம்பைக்காரர் ஏ.கே. ராஜ் விளக்கினார்[63].

ஒட்டாலம்மன் கர்ப்பிணியாக இருந்துவிட்டதால் இன்றும் அவளை வழிபடுகின்ற போது சுக்கும், வெல்லமும் படையல் செய்கின்றனர். மரிக்கந்தை அங்காளபரமேஸ்வரியை வணங்குகின்ற சொப்பியர், பலிவிதியர் குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆடி 18-ஆம் தேதியன்று வேளாண்பூண்டிக்கு வந்து இந்த இரு தெய்வத்தையும் தங்கள் குலதெய்வத்தின் துணைத் தெய்வமாகக் கருதி வழிபட்டு இவ்விரு தெய்வத்திற்கும் காவல் தெய்வமாய் இருக்கின்ற கருப்பண்ணசாமிக்கு உயிர்ப்பலி கொடுத்து வழிபடுகின்றனர். தற்போது மரிக்கந்தையில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் வீரமாத்தி, ஒட்டாலம்மன், கருப்பண்ணசாமி ஆகிய மூன்று துணைத் தெய்வச்சன்னதிகள் அமைத்து வழிபடுகின்றனர்.

வீரமாத்தி பலிவிதியர் குலத்தவரின் மனைவி என்பதால் சாகும் போது தனது குலதெய்வத்தை வணங்கிவிட்டு உயிர் நீத்தாள் என்பதாலும் இவள் தங்கள் குலத்தை சார்ந்தவள் என்பதாலும்,

63. ராஜ். ஏ.கே. மேல்கரைப்பட்டி, வயது 65, நேர்காணல்

மானத்திற்காக உயிர் நீத்த மாமங்கை என்பதாலும் இவளை துணைத் தெய்வமாக உயர்த்தி மரிக்கந்தை கோவிலில் வைத்து வழிபடுகின்றனர்.

மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி அவர்களின் கீழ்க்கண்ட கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

"தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் கற்பின் சோதனைக்கு ஆட்பட்டு ஆண்களின் கொடூர வக்கிரத்தால் தெய்வமாக்கப்பட்ட நிகழ்வுகள்தான் பல பெண் தெய்வங்களின் வரலாறாகும். ஒரு பெண் அகால மரணத்தின் மூலம் தெய்வமாக்கப்படும்போது அவளின் சக்தியை உணரும் அவளுடைய பிறந்த வீட்டுக் கால்வழியினர் அவளைத் தெய்வமாக ஏற்றுக் கொள்கின்றனர். பிறந்த வீட்டிற்குத் தெய்வமாகும் அதே வேளையில் அவளுடைய புகுந்தவீட்டிக்குக் கால்வழியினரும் அவளைத் தெய்வமாக ஏற்றுக் கொள்கின்றனர். மணமானபின் பெண்கள் கணவரின் கால்வழியோடு இணைய வேண்டும் என்ற தந்தைவழிச் சமூக முறையே இதற்குக் காரணமாக அமைகிறது. ஆண் தெய்வமாகும் போது அவன் அந்தக் கால்வழியினருக்கு மட்டுமே தெய்வமாகிறான். பெண் மட்டுமே இரு கால்வழியினருக்கும் தெய்வமாகிறாள். சில குடிகளில் அவர்கள் ஏற்கனவே வழிபடும் குலதெய்வத்திற்குப் பக்கத்தில் துணைத்தெய்வமாக வைத்து வழிபடுகின்றனர்."[64]

கற்பு உயிரினும் சிறந்தது என்று போற்றப்பட்ட அன்றைய சமூகத்தின் உயர்வு உணரப்படுகின்றது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் ஒரு பெண்ணினுடைய தோழமையின் ஆழம் போற்றப்பட்டு அவளும் துணைத் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பதும் ஒட்டாலம்மன் என்று அவளை வணங்குவதும் அன்றைய சமுதாயத்தின் உயர் பண்பாட்டைப் புலப்படுத்துகின்றது. 24 மனையாரின் குல தெய்வக்கோயில்களில் உள்ள துணைத்தெய்வங்களுக்கு இது போன்ற நிறையக் கதைகள் உண்டு. 'துணைதெய்வங்கள்' எனும் தலைப்பில் எதிர்காலத்தில் ஆய்வாளர்கள் தனி ஆய்வே நடத்தலாம்.

வாகனம்

ஜெர்மன் நாட்டு அறிஞர் மேக்ஸ் முல்லர் இயற்கையின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் தான் வழிபாட்டிற்கும் சமயத்திற்கும் காரணம் என்பார். தொன்மைச் சமயத்தில் இயற்கையினை வழிபடும் போக்கு இருந்தது. இம்முறையில் வழிபாட்டு மரபில் ஆறு, மலை, சூரியன், சந்திரன் போன்றகைளும் தாவரங்களும் விலங்கினங்களும் வழிபடு பொருட்களாக இருந்தன.

64. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல் ப. 221-222

சிந்து வெளி மக்கள் விலங்குகளை வழிபட்டு வந்துள்ள செய்தியை மொகஞ்சாதாரோ,ஹரப்பாவில் கிடைத்துள்ள சில முத்திரைகள் மூலம் அறிய முடிகிறது. சிறு தெய்வ வழிபாட்டு மரபிலும், பெருந்தெய்வ வழிபாட்டு மரபிலும் ஒவ்வொரு தெய்வமும் ஒரு வாகனத்தைக் கொண்டதாக உள்ளது. இந்த வாகனம் வழிபாட்டிற்குரியதாக இருக்கும். உலகிலுள்ள பிற உயிரினங்களையும் துன்புறுத்தாமல் போற்ற வேண்டும் - பாதுகாக்க வேண்டும் எனும் உயர்ந்த ஜீவ காருண்யத்தை உணர்த்துவதாக இந்த வாகன வழிபாடு உள்ளது.

முருகனுக்கு மயில், விநாயகருக்கு மூஞ்சூறு எலி, திருமாலுக்கு கருடன் என்று இருப்பதைப் போல அம்மனுக்கு சிங்க வாகனம் இருக்கும். ஆனால் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வங்களாக உள்ள பெண் தெய்வங்களின் கோயில்களில் காளை வாகனமாக உள்ளது.

காளை வழக்கமாக சிவனின் வாகனமாக இருக்கும். இவர் நந்தி என்ற பெயரில் கைலயங்கிரியின் காவல் தலைவராவார். பிரதோஷ காலத்தில் நந்திக்குத் தனிவழிபாடு உண்டு. நந்தியின் அனுமதி பெற்றுத்தான் சிவதரிசனம் செய்ய வேண்டும் என்பது ஆகம விதி. நந்தி தர்மத்தின் அடையாளமாகும். தர்மமே இறைவனைத் தாங்குவதாக கருத்து. ஏறு வெண்மை நிறமுடையது வெண்மை தூய்மையைக் குறிக்கும். காளையார் கோயிலில் இறைவன் காளையாகவே காட்சியளித்ததாகக் கூறுவர்.

சமண சமயத்திலும் காளை வழிபாட்டு மரபு உள்ளது. ஆதி நாதராகிய விருஜப தேவருடைய பரிவாரத் தெய்வங்களில் கோமுகயட்சர் முதன்மையானவர். சமணர்களில் நந்திகணம் எனும் ஒரு பிரிவே உண்டு. இந்தக் இனத்தைச் சேர்ந்தவர்கள் நந்தி எனும் பெயரைச் சூட்டிக்கொள்வர்[65] (எடு) சூரிய நந்தி பவணந்தி.

இத்தகைய தனிச்சிறப்பு மிக்க காளை வாகனம் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் பெண் குல தெய்வங்களின் வாகனமாக இருப்பது தனித் தன்மையாகும் - ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும். இவ்வினத்தவரது வணிகவாழ்க்கை பொதிமாட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டு நடந்து வந்தது. இவர்களது அன்றைய போக்குவரத்துச் சாதனமும் அதுவே. தங்களுக்காகப் பொதி சுமந்து உழைக்கும் விலங்கினத்தைத் தங்களது குலதெய்வங்களின் வாகனமாக்கி வழிபட்டு நன்றி செலுத்தினர். உழைப்புக்கு வழிபாடு நடத்தினர் என்று கருத இடம் உள்ளது.

---

65. இரா. பாலசுப்பிரமணியன், வழிபாட்டு மரபில் விலங்குகள், நாட்டுப்புறத் தெய்வங்கள் தன்னனானே பக் 134 - 137

குலதெய்வங்கள் அனைத்தும் பெண் தெய்வங்களாக இருப்பதன் பின்னணி

இந்த ஆய்வில் இதுவரை 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குல தெய்வங்கள் பற்றி ஆராயப்பட்டது. இவ்வினத்தவரது குலதெய்வங்கள் அனைத்துமே பெண் தெய்வங்களாக இருப்பதால், அதற்குரிய காரணங்கள் பற்றி மேலும் இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

பெண் தெய்வ வழிபாடு வேளாண்மையிலிருந்து உதித்தது என்பது உலகம் முழுவதும் கிடைக்கின்ற வரலாற்றுச் செய்திகளால் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது[66]. ஆற்றங்கரையில் உருவான நாகரிகங்கள் அனைத்தும் தாய்த் தெய்வத்தையே முதல் தெய்வமாகக் கொண்டுள்ளன. பெர்சியா, ஏஜியன், எலம், மெசப்படோமியா, காஸ்மியா, ஆசியாமைனர் ஆகிய பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட வழிபாட்டு உருவங்கள் பெண் தெய்வங்களே ஆகும்[67]. எகிப்தில் 'இசீஸ்', அனட்டோனோயாவில் 'இயற்கைத்தாய்', 'மெசபடோமியா வில், 'ஆமென்' முதலான பெண் தெய்வங்கள் முதன்மைத் தெய்வங்களாக வழிபடப்பட்டன[68]. ஐரோப்பாக் கண்டத்தில் பல்வேறு பகுதிகளில்கிடைத்த பழங்கற்கால புதிய கற்காலப் பெண் உருவங்கள் அந்நாளைய மனிதர்கள் வழிபட்ட தெய்வங்கள் எனக் கருதப்படுகின்றன.பண்டைக் காலத்தில் பெண்ணே முதன்மையிடம் பெற்றனள் என்பதற்கான அடையாளச் சின்னங்களாக இந்த உருவங்கள் திகழ்கின்றன[69].

மேற்காசியாவிலிருந்து சிந்துச் சமவெளி வரையுள்ள பகுதிகளில் நிலைபெற்றிருந்த சமூகப் பின்னணியை அறியப் பல ஆய்வாளர்கள் ஆராய்ச்சியை மேற்கொண்டனர். அவர்களில் சந்தா, மார்ஷல் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இப்பகுதியில் நிலைபெற்றிருந்த வழிபாட்டு முறைகள் நீண்ட நெடியவரலாறு உடையவை. இவை பல்வேறு நாகரிகங்களில் நிலைபெற்றிருந்த தாய்வழி முறையிலிருந்து எழுச்சி பெற்றிருக்கலாம்'. எனச் சந்தா, மார்ஷல் ஆகிய இவ்விரு அறிஞர்களும் கருதுகின்றார்.

இவர்களைத் தொடர்ந்து தேவி பிராசாத் சட்டோபாத்யாயா என்பவர். பண்டைய தாய்த் தெய்வ வழிபாட்டிற்கும் புராதான வேளாண்மைக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று கருதுகின்றனர்.

"பண்டைய நாகரீகம் தழைத்த பகுதியில் அகழ்ந்தபோது அங்கு நூற்றுக்கணக்கான பெண் உருவங்கள் கிடைத்தன.

---

66. Marshal. John. INDUS CIVILIZATION PP 50-51
67. Debi Prasad Chattobathyaya - Lokayata - p 265
68. Chanda - Indo - Aryan Races PP 148 - 149
69. Encyclopedia of Religion & Ethics Vol I & II P - 115

இந்தப் பெண் உருவங்கள் தோன்றியதற்கு அடிப்படையான ஒரு தொல்லியல் பின்னணி இருக்க வேண்டும். அதுவே புராதன வேளாண்மைச் சமூகத்தில் நிலைபெற்றிருந்த தாய்வழி மரபாகும். காரணம் இந்த நாகரிகங்கள் தழைத்தது வேளாண்மை வளத்தால் ஆகும்".

"மனித வரலாற்றில் வேளாண்மையைக் கண்டுபிடித்தது பெண்ணேயாகும். தொடக்க காலத்தில் வேளாண்மையில் ஈடுபட்ட பெண் நிரந்தரமான வருவாயை உருவாக்கும் சிறப்புப் பெற்றாள். அதனால் உலகத்தில் எங்கெங்கு வேளாண்மை மேன்மையுற்ற தொழிலாக இருந்ததோ அங்கங்கு பெண் முக்கியத்துவம் பெற்றாள்"[70].

தேவிப் பிராசாத் சட்டோபாத்யாயா தன்னுடைய கருத்திற்குச் சான்றாதாரமாக. இந்தியா முழுவதும் பரவிக்கிடக்கின்ற பெண் தெய்வங்களின் நீண்ட பட்டியலைத் தொகுத்துத் தந்துள்ளார். இந்தியா முழுவதும் நிலைபெற்றிருக்கின்ற பெண் தெய்வங்கள் சிந்துச் சமவெளிச் சமயத்திலிருந்து உருவான தாய்த் தெய்வத்தின் அடியொற்றின எனக் கருதப்படுகின்றது.

பெண் தெய்வத் தோற்றம் பற்றிய 'மார்ஷல்' அவர்களுடைய கீழ்க்கண்ட கருத்து இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.

"அன்னை அல்லது பேரன்னை, பிற்காலத்தில் சக்திவழிபாடு தோன்றுவதற்கு மூலகாரணமாகும். அவளுடைய பிரதிநிதிகளே கிராமத்தேவதைகள் அல்லது கிராமச் சிறு பெண்தெய்வங்கள் எனலாம். அவற்றின் பெயர்களும் தலவரலாறுகளும் கணக்கிலடங்கா. எனினும் அவையாவும் ஒரே பொருளைக் குறிக்கின்றன. அந்த மூலசக்தியே வளத்தின் தெய்வம். இந்தப் பெண் தெய்வங்கள் யாவும் ஆரியர்க்கு முற்பட்ட, ஆரியரல்லாத இன மக்களிடையே செல்வாக்குடையவையாக இருந்தன. ஆரியர்க்கு முற்பட்ட பழங்குடி மக்கள் இந்து சமயத்தை ஏற்கவில்லை. அத்தகைய மக்களிடையே தாய்த்தெய்வ வழிபாடு நிலைத்துள்ளது"[71].

மார்ஷல், சிந்துவெளி நாகரிகத்துடன் பெண் தெய்வ வழிபாடு மறைந்துவிடவில்லை என்பதையும் இன்றும் இந்த வழிபாடு இருக்கின்றது என்பதையும் மார்ஷல் சுட்டிக்காட்டியுள்ளார். இந்திய மக்களிடையே பெண் தெய்வ வழிபாடு இன்றும் மேம்பட்டு இருப்பதற்குக் காரணம் வேளாண்மைத் தொழிலேயாகும். இந்தியாவில் எழுபது சதவீதம் மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். எனவேதான் பெண்தெய்வ வழிபாடு இன்றுவரை தனிச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது.

70. Debi Prasad Chattobathyaya - Lokayata P - 266

71. Marshal. John Op. Cit PP 50-51

வேளாண்மை, செல்வாக்குப் பெற்றிருக்கும் காலம் வரை தாய்த் தெய்வ வழிபாடும் செல்வாக்குப் பெற்றிருக்கும் என்பது சட்டோபாத்யாயாவின் கருத்து[72].

இந்தப் பின்னணியில் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் தாய்த்தெய்வ வழிபாட்டை அணுகுகின்றபோது, வேளாண்மையோடு இவ்வினத்தினருக்கு இருக்கும் தொடர்பு உறுதிப்படுகிறது.

1. இவ்வினத்தவரது வரலாற்றை எழுதிய பகாடலுநரசிம்மலுநாயுடு, வணிகத்திற்காக ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த இவ்வினத்தினர், வேளாண்மையைத் தொழிலாகக் கொண்ட தமிழ்ப் பெண்களை மணந்து கொண்டனர் என்று குறிப்பிடுகின்றார். இவர்களைப் பற்றிக் குறிப்பிடும் 'போர்க்களக் கதை'யிலும் (இரண்டாம் இயலில் கதை விளக்கப்பட்டுள்ளது) வேளாண்குடி மகளிரை மணந்து கொண்டனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது[73].

2. இவ்வினத்தினரின் குலதெய்வ வழிபாட்டில் வேளாண்மை தொடர்பான செய்திகள் பல இடம்பெற்றுள்ளன. இக்காலத் தென் இந்தியாவில் வணிகர்கள், வணிகத்தில் இருந்து வேளாண்மைத் தொழிலுக்கு மாறினர். 'சர்கார்பெரியபாளையம்', பிரான்மலை, பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள 'குள்ளிச்செட்டிபாளையம்' முதலிய இடங்களில் கிடைக்கின்ற வணிகர் கல்வெட்டுகளில் 'நாட்டுச் செட்டிகள்' என்ற ஒரு பிரிவு குறிக்கப்பெறுகின்றது[74]. 'வேளாண்மை சபைக்கு' அந்நாளில் 'நாட்டார் சபை' என்ற பெயரும் இருந்தது. இந்த வகையில் 'நாட்டுச் செட்டிகள்' என்போர் வேளாளர்களிலிருந்து உருவான வணிகர்கள் என்று கூறுவது பொருத்தமுடையதாம். இவர்கள் வைத்திருந்த படைக்கு 'நாட்டுச் செட்டித்தளம்' என்ற பெயர் வழங்கிவந்தது. தமிழகத்தில் குறிக்கப்படும் நாட்டுச் செட்டிகளைப் போல, வடுக நாட்டில் 'வளஞ்சியர்' என்போர் வேளாண் சமுதாயத்திலிருந்து உருவான வணிகர்கள் எனலாம். இவர்களும் படைவைத்திருந்தனர் என்பதற்குப் பிரான்மலைக் கல்வெட்டிலிருந்து கிடைக்கின்ற குறிப்புச் சான்றாக அமைகின்றது[75].

இக்கூற்றுக்களிலிருந்து 'வளஞ்சியர்' என்று அழைக்கப்படும் 'பலிஜா' வழிவந்த இவ்வினத்தினரது வேளாண்மைத் தொடர்புகள் புலப்படுகின்றன. எனவே தான் வேளாண்மை சார்ந்த தொழிலை இவர்கள் மேற்கொண்டிருந்தமையால் இவர்களது வழிபாட்டில் பெண் தெய்வங்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன எனலாம்.

---

72. Debi Prasad Chattobathyaya Lokayata P 265

73. பகாடலு நரசிம்மலு நாயுடு, பலிஜவாரு புராணம் பக் 48-51

74. தொல்பொருள் ஆய்வுத்துறை கோவை

75. மேலது

பெருமாள் குலதெய்வங்களாக இருப்பதன் பின்னணி

24 மனை இனத்தின் குலதெய்வங்கள் அனைத்தும் பெண் தெய்வங்களே எனும் கருத்து இந்த ஆராய்ச்சியின் முடிவாக இங்கு நிறுவப்பட்டுள்ளது. பெண்தெய்வங்கள் குலதெய்வங்களாக இருப்பதின் பின்னனியும் இங்கு கருத்துரைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த இனத்தில் சில குலதெய்வங்கள் ஆண் தெய்வங்களாக - வைணவம் சார்ந்தவையாக - பெருமாள் என்ற பெயர் கொண்டவையாக இருக்கின்றன. இது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும். மேல்நிலை ஆக்கத்தின் தாக்கத்தின் காரணமாகத்தான் இந்த வேறுபாடு உள்ளதா? என்பதை இங்கு ஆராயலாம்.

மேல்நிலை ஆக்கம்

மேல்நிலை ஆக்கம் என்ற இந்த சொற்றொடர் இந்த ஆய்வேட்டில் பல இடங்களில் கையாளப்பட்டுள்ளது. அதன் பொருள் என்ன?

புகழ்பெற்ற சமூகவியல் அறிஞர் எம்.என்.சீனிவாஸ் அவர்களின் கருத்தாக்கத்தில் உருவாகியதுதான் மேல்நிலை ஆக்கம். இந்திய அரசின் பல்வேறு சாதிகள் ஆய்வுக் குழுவில் அங்கம் வகுத்தவரான இவர் சமூகபண்பாட்டு மாற்ற நிகழ்வுகளை சமஸ்கிருதவயமாதல் எனும் தலைப்பில் நிகழ்த்திய இந்தஆய்வு சமூக ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு புதிய கருத்தாக்கமாகும். இதை மேல்நிலையாக்கம் உயர்குடியாக்கம் என்ற வேறு கலைச்சொற்களால் அழைப்பதும் உண்டு.

மேல்நிலை ஆக்கம் என்பது என்ன?

கீழ்த்தட்டினுள்ள இந்து சாதியினர் அல்லது பழங்குடியினர் அல்லது பிறகுழுவினர் தங்களது பழக்கவழக்கங்கள், சடங்குகள், கொள்கைகள் மற்றும் வாழ்வியல் முறைகள் முதலியவற்றை மேல்நோக்கி உயர்சாதியினரைப் பின்பற்றுவதாகும்.

Sanskritisation is the Process by which a low Hindu caste, or tribal or other group, Changes its customs, ritual, ideology, and way of life in the direction of a high, and frequently "twice - born" caste"[76]

மேல் நிலை ஆக்கம் பற்றிய விளக்கத்தை பக்தவத்சல பாரதி கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.[77]

"சீனிவாஸ் (1952-30) கருத்துப்படி சாதியும் சாதி அடுக்கும் மிகவும் உறைந்துவிட்ட, மாற்றமடையாத அமைப்புகள் அல்ல. அவை தொடர்ச்சியான நெகிழ்வுத்தன்மைக்கு உட்பட்டே இயங்கி வருகின்றன. இதன் ஒரு பகுதியாகவே கீழ்நிலைச் சாதியினர் தகுதிப் பெயர்வு மூலம் மேல் நோக்கி நகர்ந்து தங்களின் சமூகத் தகுதியை உயர்த்திக் கொள்கின்றனர்.

---

76. Srinivas M.N. Religion and society among coorgs south India - PP 221 - 222.

77. பக்தவத்சல பாரதி - தமிழர் மானிடவியல் ப -148.

இத்தகுதிப் பெயர்வில் பிராமணர்களுக்குக் கீழுள்ள சாதிகள் பிராமணர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றித் தங்களின் சமுதாயத் தகுதியை உயர்த்திக் கொள்ள முயலுகின்றனர்.."

24 மனை இனத்தில் மேல்நிலை ஆக்கம்

சீனிவாஸ் அவர்களின் மேல்நிலை ஆக்கம் கோட்பாட்டை 24 மனை இனத்தின் குலதெய்வ வழிபாட்டில் பொருத்திப்பார்க்கும்போது பெருமாள் குல தெய்வமாகும் வினாவுக்கு விடைகிடைக்கிறது.

உயர்சாதி பிராமணர்கள் பின்பற்றுகின்ற வைணவச் சடங்குகளை குல தெய்வ வழிபாட்டில் நுழைக்கத் தொடங்கிப் பின்னர் அவர்களது தெய்வமான பெருமாளை தங்கள் குலதெய்வ வழிபாட்டில் இணைக்க விழைந்துள்ளனர். பெண்குலதெய்வமும் பெருமாளும் இணையான இடத்தைப் பெற்று, காலப்போக்கில் பெருமாள் குலதெய்வமாகி பெண்தெய்வம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. சில கோயில்களில் பெண்தெய்வங்கள் இரண்டாம் இடத்தையும் இழந்து குலமக்களால் மறக்கப்பட்ட சூழல் வந்துள்ளது. இப்படித்தான் பெருமாள் 24 மனை இனத்தின் சில குலங்களின் குலதெய்வமாகியுள்ளது.

பொள்ளாச்சி வட்டம் அந்தியூரில் உள்ள மும்முடியார் குலதெய்வத்தின் பெயர். வரதராஜபெருமாள். இங்கு பெண்தெய்வம் என்று ஒன்று தனியாக இல்லாமல் முழுக்க முழுக்க வைணவப் பெருமாள் கோயிலாகவே திகழ்ந்தது. கோயிலின் வளர்ச்சி, குலமக்களின் வளம் ஆகியவை சிறக்க, கேரளாவிலிருந்து கோயில் ஜோதிடம் பார்க்கும் பணிக்கர்களை அழைத்து வந்து ஜோதிடம் பார்க்கப்பட்டது. இதற்கு அஷ்டமங்கல தேவ பிரசன்னம் என்றுபெயர்.

இந்தக் கோயிலில் வழிபடும் மும்முடியார் குலத்தவருக்கு ஒரு பெண்தெய்வம் உண்டு. அந்தக் குல தெய்வத்தை மறந்ததின் காரணமாகத்தான் குலத்தவர்கட்கு பிரச்சினைகள் தோன்றுகின்றன. எனக் கூறிய கோயில் ஜோதிடப்படி அந்தியூர் கோயிலில் ஒரு பெண் தெய்வச்சிலை அமைக்கப்பட்டு வழிபடத் தொடங்கினர். கங்கையம்மன் என்று பெயரிட்டு பின்னர் கன்னியம்மன் என பெயர் மாற்றம் செய்து வழிபட்டு வருகின்றனர்.

மூக்குத்தெரிச்சான் பாளையத்தில் உள்ள மக்கடையார் குல தெய்வக் கோயிலுக்கு 1987 - ஆம் ஆண்டு நடந்த கும்பாபிஷேக அழைப்பிதழில் பூமாதேவி நீளாதேவி சமேதக சீனிவாசப்பெருமாள் திருக்கோயில் எனப் பெயர் இருந்தது.

1999 -ல் நடந்த கும்பாபிஷேக மலரில் இப்பெயருடன் வீரசின்னம்மாள் பெயரும், சேர்ந்து இடம் பெற்று உள்ளது.

இது குறித்து இக்கோயிலுள்ள தலைவர் என்.சுப்பிரமணியம் செட்டியார் ஆர். இராமசாமி செட்டியார் ஆகியோரைப் பேட்டி கண்டபோது எங்களின் குலதெய்வம் வீரசின்னம்மாள் தான். அத்தெய்வத்தின் பெயரையும்

கோயிலுக்கு வைப்பதுதான் முறையானது என்பது இப்போதுதான் எங்களுக்கு புரியவந்தது. எனவேதான் இப்போது நடந்த கும்பாபிஷேக விழா அழைப்பிதழில் வீரசின்னம்மாள் பெயரைச் சேர்த்தோம். என்று கூறினர்[78]

வெள்ளே கவுண்டனூரில் உள்ள தரிசியவர்களின் குலதெய்வமான அக்கினியம்மன் ஒரு குலதெய்வத்திற்குரிய இரண்டு வரையறைகளான அகாலமரணம் மற்றும் அற்புத நிகழ்வு - எனும் இரண்டும் இணைந்த ஒரு பெண் குலதெய்வம். ஆனால் அந்தக் கோயிலுக்குத் திருவேங்கிட பெருமாள் கோயில் என்பது பெயராகும். இதே போன்று அமைப்புள்ள ஒரு கோயிலை ஆய்வுசெய்த நாட்டுப்புறஇயல் அறிஞர் ஆறு இராமனாதன் கூறியுள்ளதை இங்கு நோக்கலாம்.

"19-ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் பழைய தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் பூதங்குடியைச் சேர்ந்த சேத்தியார்களால் குல தெய்வமாக வழிபடப்பட்ட தீப்பாய்ந்து இறந்த பெண் தீப்பாஞ்சாயிக்கு" "1970 களில் பெரிய கோயில் கட்டி தீப்பாய்ந்த நாச்சியாராக அக்கினிப் பிரவேச சீதாலட்சுமியாக வைணவ வடிவத்துடன் மேல்நிலை ஆக்கம் தந்துள்ளனர்."[79]

ராஜபைரவர் குலதெய்வக்கோயில் மெட்ராத்தியில் உள்ளது. அங்கிருந்து பிடிமண் எடுத்துவந்து துணைத்தெய்வங்களாக அலமேலுமங்கை, இராமானுஜர் சக்கரவத்தாழ்வார், ஆஞ்சநேயர் போன்ற தெய்வங்கள் இடம் பெற்றுள்ளன. வாகனமாக கருடாழ்வார் உள்ளது. பூசைப்பணிக்கு அய்யங்கார் நியமிக்கப்பட்டுள்ளார். முழுவதுமாக மேல்நிலை ஆக்கம் பெற்றதற்கு இக்கோயில் ஒருசான்றாகும்.

கருடன் கோட்டை மக்கடையர் குலதெய்வம் பெருமாள். "இக்கோயிலுக்குக் குலதெய்வமாக ஒரு பெண்தெய்வம் இருந்தது. இந்தப்பெண்தெய்வத்தை எங்களது மைத்துனர் உறவு முறையினரான இடையபட்டி கோலையருக்கு பெண்கொடுத்து. குலதெய்வத்தையும் கொடுத்துவிட்டோம். இப்போதும் எங்கள் கருடன் கோட்டை சென்று குலதெய்வம் பெருமாளை வணங்கிவிட்டு 10 கி.மீ. தூரத்தில் உள்ள இடைய கோட்டைக்குச் சென்று நாங்கள் சீதனமாகத் தந்த பெண்தெய்வம் அங்காள பரமேஸ்வரியையும் வணங்கிவிட்டுத்தான் வருவோம். என்று இக்கோயிலின் முதன்மையாளர் எம்.எஸ்.திருமலைசாமி செட்டியார் தெரிவித்தார்.[80] பெருமாளைக் குலதெய்வமாக வழிபடும் இவர்களுக்கு ஒரு பெண்தெய்வம் குலதெய்வமாக இருந்த செய்தி உறுதியாகிறது. மேலும், அண்மையில் கோயில்

78. சுப்பிரமணியன் செட்டியார், என், உடுமலைப்பேட்டை வயது 62
இராமசாமி செட்டியார். ஆர் உடுமலைப்பேட்டை வயது 70.

79. இராமநாதன் ஆறு. சிறு தெய்வ ஆய்வு முறை அறிமுகம் தீப்பாய்நதம்மன் வழிபாட்டு ஆய்வு நாட்டுபுற இயல் ஆய்வு முறைகள் ப. 292

80. 72. எம்.எஸ். திருமலைசாமி செட்டியார், உடுமலைப்பேட்டை, வயது 62 நேர்காணல்

ஜோதிடம் (அஷ்டமங்கல தேவ பிரசன்னம்) பார்த்தபோது ஒரு பெண்தெய்வம் குலதெய்வமாக இருந்ததாகவும் அதைக் கொடையாகக் கொடுத்துவிட்டதாகவும் அதற்கு இரண்டாந்தர வழிபாடு செய்வதும் ஒருகுறை. இனிமேல் முதலில் இடையகோட்டைக்குச் சென்று பெண்தெய்வமான அங்காளபரமேஸ்வரியை வணங்கிவிட்டு கருடன்கோட்டைப்பெருமாளை வழிபடுங்கள் என்று கேரளஜோதிடர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குலதெய்வமாகப் பெண்தெய்வம்தான் இருந்தது என்பதற்கும் பெருமாள் பின்னாளில் உள்நுழைந்தது என்பதற்கும் இக்கோயில் சிறந்த சான்றாகிறது. மேலும் இதுவரை பெருமாள் என்ற பெயர் இருந்த இந்த தெய்வத்திற்கு அண்மையில் பூமாதேவி நீளாதேவி சமித வரதராஜப் பெருமாள் எனப் பெயர்மாற்றம் செய்து இக்கோயில் மேல்நிலை ஆக்கம் பெற்றது என்பதை உறுதிசெய்கிறது.

தாராபுரம் வட்டம் கள்ளிவலசில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் 24 மனை இனத்தில் உள்ள சொப்பியர் குலத்தவர்க்குரியது. இக்கோயிலுக்குள் வைணவம் பிராமணர்கள் வழியாக நுழைந்து தன்வயமாக்க முயன்று வெற்றி பெறாமல் போன செய்தியை அக்கோயிலின் அறங்காவலர் அங்கமுத்து செட்டியார் விவரிக்கிறார்.[81]

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தப் பகுதியில் உள்ள அய்யங்கார்கள் இக்கோயிலுக்கு வந்து வழிபடத்தொடங்கினார்கள். காலப்போக்கில் கருவறைக்குள் சென்று பூஜைசெய்யத் தொடங்கினார்கள். போகப்போக அவர்களின் மேலாண்மை ஓங்கத்தொடங்கியது. இது தங்கள் குலதெய்வம் என உரிமை கொண்டாடத் தொடங்கினார். இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாக வழிபடக் கூடிய சொப்பியராகிய நாங்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படக்கூடிய சூழல் மெல்ல உருவாகிவருவதை உணர்ந்த நாங்கள் குலத்தவர்களின் கூட்டத்தைக் கூட்டி அய்யங்கார்களுக்குச் சில கட்டுப்பாடுகளை 1975 இல் விதித்தோம். கருவறைக்குள் போய் பூஜை செய்யக்கூடாது போன்ற கட்டுப்பாடுகளை அறிவித்தோம். நாங்கள் உரிய நேரத்தில் விழித்திராவிட்டால் கோயில் பறிபோயிருக்கும் இப்போது இது சொப்பியருக்கு மட்டுமே உரிய கோயில் ' என்றார்.

நீங்கள் இந்த நடவடிக்கையை எடுக்காமல் இருந்திருந்தால் என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? என்று இக்கோயிலின் முதன்மையாளர் எஸ்.கே.சுப்பிரமணியம் செட்டியார் அவர்களைக் கேட்டபோது பூஜை செய்யும் உரிமை முழுவதையும் அய்யங்கார்கள் தக்கவைத்துக்கொண்டு, எங்கள் பூசாரிகளை கருவறைக்குள்

81. அங்கமுத்து செட்டியார் , பொள்ளாச்சி, வயது 62 நேர்காணல்

நுழைய முடியாதபடி செய்திருப்பார்கள். அய்யங்கார்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய நிலை வந்திருக்கும் என்று பதில் கூறினார்.[82]

வாளவாடி மக்கடையார் குல தெய்வம் பெருமாள். பேழைவழிபாடு முதலில் இருந்து, பேழை காணாமல் போய், குல பெரியவர் கனவில் தோன்றி பேழையின் இருப்பிடம் அறிந்த அதிசய நிகழ்வு இடம் பெற்ற குலதெய்வம் இது. இவர்களின் புரட்டாசி சனிக்கிழமை விழாவில் கன்னிமார் பெண்தெய்வத்திற்குப் பொங்கலிட்டு வழிபட்ட பின்னரே பிற விழாச் சடங்குகளைச் செய்கின்றனர், என்பதிலிருந்து இவர்கட்கு பெண்தெய்வம்தான் குல தெய்வமாக இருந்திருக்கவேண்டும் என்பதைச் சான்றாகக் கொள்ளலாம்.

வைணவம் செல்வாக்குப் பெற்றது எப்படி?

24 மனை இனத்துக்குள் திருமால் வழிபாடு நுழைந்ததற்கான காரணங்கள் மேலும் ஆய்தற்குரியது. இந்த இனம் இடங்கைப் பிரிவில் இருந்த 98 சாதிகளுள் ஒன்று என்பதை இயல் எண் 1 -ல் குறிப்பிட்டுள்ளோம். இடங்கை சாதியார் குழுக்கட்கு திருமால் வழிபாடே சிறந்த வழிபாடாக இருந்தது.

கொங்குநாட்டில் பருத்திப்பள்ளி, விஜய மங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள சித்திரமேழி விண்ணகரம் (வேளாளர் - வணிகர் கூட்டமைப்பு - அதன் பெயரிலேயே கட்டப்பட்ட திருமால் கோயில்) இடங்கைச் சாதியினரால் கட்டப்பட்டது என்றும் அவற்றைப்பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடமே ஒப்படைக்கப்பெற்றது என்பதையும் கல்வெட்டுச் செய்திகள் -மூலம் அறியமுடிகிறது.

மேலும் சிறுதொழில்களையும், வணிகத்தையும் செய்துகொண்டிருந்த மக்கள் பின்பற்றிய சமயம் வைணவம் மட்டுமே என்று வரலாற்றறிஞர் கோசாம்பி கூறுகின்றார்.

இவ்வினத்தவர்கள் விஜயநகரப் படைகளுடன் தமிழகத்திற்கு வந்த வணிக வீரர்கள். விஜய நகரப் படைத்தளபதியின் தமிழகத்தின் பல்வேறு சமயங்கட்குத் கோயில் திருப்பணிக்காக நிவந்தங்கள் தொடுத்திருப்பதாகக் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் இவர்கள் வைணவம் சார்ந்தவர்களாகவே இருந்துள்ளனர்.

ஆய்வின் முடிவாகக் கீழ்க்கண்ட இரு கருத்துக்களை உறுதியாகக் கூறலாம்.

1. 24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்தை வைணவர்கள் என்று கொள்ளுதல் ஏற்புடையதே.
2. இவர்களது குலதெய்வங்கள் அனைத்தும் பெண்தெய்வங்களே ஆகும்.

---

82. எஸ்.கே.சிவாஜி சுப்பிரமணியம் செட்டியார், சொக்கனூர், வயது 77 நேர்காணல்

சில குலங்களுக்கு பெருமாள் குலதெய்வமாக நிலைபெற்றிருப்பது மேல் நிலை ஆக்கத்தால் பின்னாளில் வந்தது.

தாயாதி

தாயாதி முறை என்பது தாய் வழிச் சமூக அமைப்பு என்று பொருள்படும். பெண் தெய்வ வழிபாடு முதன்மை பெற்றுள்ள சமூக அமைப்பில் 'தாயாதிமுறை'என்பது வழக்கில் இருக்கும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. இந்த தாயாதிமுறையைத் தாய்த்தாயம் என்று சொல்லால் அழைப்பதும் உண்டு.

"பெண் தெய்வ வழிபாடு தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் அது தோன்றிய சமூகத்தில் தாய் வழிமுறை நிலவியதே ஆகும் என்பது ஆராய்ச்சியாளர்கள் காட்டும் உண்மையாகும்" என்கிறார் கைலாசபதி[83].

"இந்தியாவில் தாய் உரிமை (Mother Right in India) என்னும் பொருளில் ஆய்வு செய்த யு.ஆர்.எரன்ஃபெல்ஸ் பழம் தமிழகத்தில் தாய் தாய முறை இருந்திருக்கவேண்டும் என்பார். தாய்த்தலைமைப் பண்பானது இந்தியப் பண்பாட்டில் குறிப்பாக திராவிடப் பண்பாட்டில் ஓங்கியிருக்கிறது என ஸ்கிமிட், காப்பர்ஸ் ஆகிய இனவியலர்கள் சுட்டுவதையும் எரன்ஃபெல்ஸ் குறிப்பிடுகிறார். இந்தியாவில் சாதி எனும் நூலை எழுதிய (Caste in India) ஹட்டன் என்பாரும் தாய்த்தாயம் இருந்திருக்கவேண்டும் என்கிறார்.[84]

24 மனைத்தெலுங்குச் செட்டியார் மரபில் திருமணத்திலும் இறப்புச் சடங்குகளில் உருமால் கட்டுச் சீர் செய்யப் பங்காளிகளை அழைக்கும் போது 'தாயாதிகளே வாங்க' என்று அழைக்கினறனர். தாயாதி என்ற சொல் திராவிட மரபில் தாய்வழியைக் குறிப்பதாகும் என்று கருதப்பெறுகிறது.

தாயாதி மரபு சங்ககாலத்திலிருந்து நிலைபெற்றிருந்தது என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. பண்டைய வேந்தர்களும் வேளிர்களும் தமக்கு வந்த அரச உரிமையைக் குறிப்பிடும் போது 'பாலின் வந்த பழவிறல் தாயம்' என்று (புறநானூறு) குறிப்பிடுவர்[85]. இங்கு தாயம் என்பது அரசு உரிமையைக் குறிக்கும். இச்சொல் 'தாய்' என்ற அடிச்சொல்லிலிருந்து உருவானது என்று கருதப்படுகிறது. அந்நாளில் பொருள் வருவாய் தரும் உரிமைகள் அனைத்தும் தாய் வழியினருக்கே சென்றது என்பது புலப்படுகிறது. அதனால்தான் தாயம் என்ற சொல் உருவாகியிருக்கலாம். இச்சொல் அந்நாளைய சமூகத்தில் நிலைபெற்றிருந்த பங்கு பிரிக்கும் நடை முறைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

---

83. கைலாசபதி பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் ப. 2

84. பக்தவத்சல பாரதி தமிழர் மானிடவியல் ப.13

85. புறநானூறு பா. 75

கலித்தொகை 131ஆம் பாடலில் பயின்று வரும் தாயம் என்ற விளையாட்டுப் பற்றிய செய்திகளும் அவ்விளையாட்டிற்கு மூலமுதலாகப் பங்குப் பிரிவினை என்பதனைச் சுட்டும் சொல்லாகத் தாயம் அமைந்திருக்கின்றது.

எனவே 'தாயாதி' முறை 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் வாழ்வியலில் நிலை பெற்றதற்கு இவர்களின் குலதெய்வங்கள் அனைத்தும் பெண் தெய்வங்களாக இருந்ததுதான் காரணம் என்று கருத இடமுண்டு. தாய் வழிச்சமூக அமைப்பு காலப்போக்கில் பிறசமூகங்களைப் போல இந்த இனத்திலும் தந்தை வழிச் சமூக அமைப்பாகப் பின்னாளில் மாற்றம் பெற்று இருக்கக்கூடும்.

மேல்மலையனூர் அங்காளம்மன்

மேல்மலையனூரில் உள்ள 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குல முதல் தெய்வமான அங்காளம்மன் பற்றிய ஒரு புராணக்கதை கூறப்படுகிறது. சிவனுக்கும் பிரமனுக்கும் ஐந்து தலைகள் இருப்பதால், ஒரு நாள் உமாதேவி, பிரமனைச் சிவன் என்று தவறாக நினைத்துக் கொண்டு, பிரமனின் திருவடிகளை மஞ்சள் நீராட்டி வணங்கினார். இதைக் கண்ணுற்ற சிவன், சக்தியைப்பார்த்து 'உலகிற்கே தாயாக விளங்கும் நீ கணவனுக்குச் செய்யும் பணிவிடையை வேறொருவனுக்குச் செய்தல் தகுமோ' எனச் சினத்துடன் வினவினார். சக்தி இதற்குப் பதிலுரைத்தார், "பெருமானே உங்களுக்கும் பிரமனுக்கும் ஐந்து தலைகள் இருப்பதால் பிரமனைத் தாங்கள் என்று தவறாகக் கருதி இத்தவறைச் செய்துவிட்டேன். அப்போது அங்கு வந்த விஷ்ணு இதைக்கேட்டுவிட்டு 'சிவபெருமானே எனக்கே பலமுறை உங்கள் இருவருக்குமிடையே வேறுபாடு தெரியாமல் திணறியிருக்கிறேன். எனவே, என் தங்கை உமாதேவி அறியாமல் செய்த தவறு இது. எனவே பிரமனது உருவத்தில் ஏதாவது வடிவமாற்றம் செய்தால்தான் குழப்பம் தீரும்' என்று கூறினார். அப்போது சிவன் உத்ர தாண்டவமாடினார். திருமால், உமாதேவி மற்றுமுள்ள அனைவரும் இதைப்பார்த்து அஞ்சி கலங்கி நின்றனர். பிரம்மன் சிவனின் வாகனமான காளையின் வயிற்றுக்குள் போய் ஒளிந்து கொண்டார். இருப்பினும் சிவன் இதையறிந்து பிரமனைப் பிடித்து அவரது ஒரு தலையைக் கிள்ளி விட்டார். விஷ்ணு அப்போது பிரம்மனை நான்முகன், சதுர்முகன் என்று பெயரிட்டழைத்தார். கிள்ளியெறியப்பட்ட தலை சிவனையும் பிரம்மனையும் பார்த்து நகைத்தது. சிவனாரை பிரம்மஹத்தி தோசம் பற்றிக் கொண்டது. ஈஸ்வரன் கபால ஈஸ்வரனாகிச் சுடுகாடு தோறும் சென்று உடல் முழுவதும் சாம்பலைப் பூசிக்கொண்டும் சாம்பலைத் தின்று கொண்டும் பித்தனாக அலைந்தார்.

மலையனூர் சக்தி பீடத்தில் வயோதிக மாதாகவும் பூங்காவனத் தாயாகவும் இருந்த அங்காளி பிரம்மஹத்தி தோசத்தால் பித்தனாகிய சிவனின்

நிலை கண்டு வருந்தி அவர் கையிலிருந்த பிரம்மகபாலத்தைத் தொட்டதும் சிவன் கையிலிருந்து விலகி அங்காளியிடம் ஒட்டிக்கொண்டது. அதனால் அங்காளிக்குப் பித்துப்பிடித்து, விரிந்த தலையுடன் அலங்கோலமாக மயானம் எங்கும் அலைந்தாள்.

விஷ்ணுவின் அறிவுரையின்படி திருவண்ணாமலைக்குச் சென்று பிரம்ம தீர்த்தத்தை உண்டாக்கி அதில் தீர்த்தமாடியபின்னர் பிரம்ம கபாலம் அங்காளியை விட்டு நீங்கியது. பிறகு மானிடக்கிழவி உருவம் தாங்கி வழித்துணைக்குப் பாவாடைராயனை அழைத்துக்கொண்டு மலையனூர் வந்து சேர்ந்தார். அங்காளியிடமிருந்து விடுபட்ட பிரம்மகபாலம் மீண்டும் சிவனைப் பிடித்துக்கொண்டது. இதனைப் போக்கச் சிவன் விஷ்ணுவிடம் கேட்க, விஷ்ணு கூறிய வழிகாட்டுதலின்படி, மாசிமாதம் அமாவாசைக்கு முதல்ராத்திரி அன்று சிவன் மலையனூருக்கு வந்து ஆருண்யத்தில் தங்கினார். எனவேதான். அந்தநாளை மகாசிவராத்திரி என்று அழைக்கின்றனர்.

மறுநாள் பூரண அமாவாசை நாளானதால் அன்றைய நாளில் அனைத்து மூலாதாரச் சக்திகளும் ஒன்று திரண்ட - சிற்சக்தி ஆகி, மயானத்தில் இறந்துவிட்ட முன்னோர்களின் ஆவிகட்கு மயானத்தில் சூரையிடும் நாள். அதுவே 'மயானக்கொள்ளை' என அழைக்கப்படுகிறது. ('பிரம்மகபாலம்' என்கிற ஆன்மா அகோரப்பசியால் உணவு இன்றி மயானச் சூரையை எதிர்நோக்கி ஏங்கி நின்றது). முதல் இருகவளச் சோறு பிரம்ம கபாலத்துள் போடப்பட்டது. (மூன்றாவது கவளச் சோறு மயானத்தில் வீசப்பட்டது). மூன்றாவது கவளச்சோறு இறைக்கப்பட்ட போது அதை உண்பதற்காக சிவனைவிட்டு விலகித் தரையில் இறங்கியது பிரம்மகபாலம். அப்போது இறைவி விஷ்ருபம் எடுத்துக் கபாலத்தைக் காலால் மிதித்தாள். கபாலம் அலறியது. அப்போது பிரம்மஹத்தி தோசம் விலகி, பித்தன், பேயன் என்ற நிலையிலிருந்து விடுபட்டு சிதம்பரத்தற்குத் தாண்டி ஓடினார். அந்த மகிழ்ச்சிக் களிப்பால் சிதம்பரத்தில் ஆனந்தத் தாண்டவமாடி நடராசப்பெருமான் ஆனார். இங்ஙனம் தாண்டி ஓடியதால் தாண்டேஸ்வரர் என்று அழைக்கப்பட்டு அங்காளம்மனுக்கு வலப்புறமாக எழுந்தருளியுள்ளார்.

மயானச் சூறையைச் சாப்பிட்டபிறகு பிரம்ம கபாலம் மீண்டும் அகந்தையுடன் விசுவரூபமெடுத்து சிவனைத் தேடியதாகவும், இதனால் எல்லையற்ற சினங்கொண்ட அங்காளி தானும் விசுவரூபம் எடுத்து பிரம்ம கபாலத்தின் மீது வலது காலால் மிதிக்க, இதனால் பிரம்ம கபாலம் விண்ணதிரப்பெருங் கூச்சலிடுகிறது. இரண்டு விசுவ ரூபங்களின் விளைவை மண்ணுலக மக்கள் அறியாதிருக்கும் வகையில் விஷ்ணு பூமியைப் பிளந்து உள்ளே மூடி விடுகின்றார். சற்று நேரத்தில் சக்தி வயோதிக மாதாக அமர்ந்த நிலையில் பூமிக்கு மேலே மண்புற்றாக மளமளவென்று வளர்ந்து நிற்க

அப்புற்றுக்குள் இருந்து சீற்றம் கொண்ட நாகம் சீறிய வடிவத்துடன் நின்றதாகக் கூறுவர். அம்மனின் சீற்றத்தைத் தணிக்கத் தேவர்களும் முனிவர்களும் அம்மனுடைய புற்றைச் சுற்றிவந்ததால் நாகவடிவத்தைச் சுருக்கி புற்றுக்குள் சென்று மறைந்து அனைவரும் வணங்கும் அங்காளம்மனாக அமர்ந்ததாகக் கூறப்படுகிறது.

சிவனைப் பிடித்திருந்த பிரம்மஹத்திதோசம் அங்காளம்மனின் ஆற்றலால் நீங்கியது என்று இப்புராணக்கதை குறிப்பிடுகின்றது. அங்காளம்மன் மயானத்தில் அலைந்ததற்கு பிரம்மஹத்திதோசம் தான் காரணம் என்பதை இக்கதை மூலம் அறிய முடிகிறது. திருவண்ணாமலையில் உள்ள பிரம்மதீர்த்தத்தின் மகிமையை இக்கதை உணர்த்துகிறது. தீர்த்தம் ஆடினால் பாவங்கள் நீங்கும் என்பது பழந்தமிழர்களின் நம்பிக்கையாகும்.

'மகாசிவராத்திரி' என்ற பெயர் ஏற்பட்டதற்கு இக்கதை விளக்கம் தருகிறது. சிவ அடியார்கள் விரதம் இருந்து சிவனை வழிபடுவதற்கு ஏற்ற நாளாக 'மகாசிவராத்திரி' கருதப்பட்டு வருகிறது. சைவர்களுக்கு மகா சிவராத்திரி ' விரதம் இருந்து வழிபடும் மிகப்பெரிய திருநாளாகும். மேல்மலையனூர் தல மகிமையை இக்கதை எடுத்தக்காட்டுகிறது. மேல்மலையனூர் தலத்தை வழிபட்டால் பாவங்களும், இடையூறுகளும், தோசங்களும் மறையும் என்பதை இக்கதை புலப்படுத்துகிறது.

அங்காளம்மனின் அருளாற்றலை இப்புராணக்கதை மூலம் அறிய முடிகின்றது. புற்று வழிபாட்டிற்கும் அங்காளம்மன் வழிபாட்டிற்கும் உள்ள தொடர்பை இக்கதை புலப்படுத்துகிறது.

சிவன், விஷ்ணு அங்காளம்மன் போன்ற தெய்வங்களின் ஆற்றலை அறிந்து கொள்வதற்கு மேற்கூறிய புராணக்கதை பெரிதும் துணைபுரிகிறது.

தீமையை அழித்து நன்மையை அளிக்கும் தெய்வமாக அங்காளம்மன் விளங்கி வருவதை இக்கதை மூலம் அறியமுடிகிறது.

மேல்மலையனூர் அங்காளம்மன் மாசித்திருவிழா நிகழ்வுகள்

மேல்மலையனூர் அங்காளம்மன் மாசித்திருவிழா மகா சிவராத்திரியன்று தொடங்கி 10 நாட்கள் நடைபெறுகின்றன. முதல் நாள் நிகழ்வாக, மகாசிவராத்திரி நாளன்று அங்காளம்மன் கோயில் பூசாரியும் கோயில் முதன்மையாளர்களும் அக்கினிக்குளத்தில் நீராடி சக்திக்கரகம் சோடித்து சுடலைக்கு (சுடுகாட்டிற்கு) வருகின்றனர். சுடலையில் உள்ள எலும்புகளை எடுத்து மாலையாகப் போட்டுக் கொண்டு, எலும்புகளைக் கடித்த வண்ணம் ஆட்டம் ஆடுகிறார் பூசாரி, அப்போது பக்தர்கள் தாங்கள் சமைத்துக் கொண்டு வந்த பொருட்களைச் சுடலையில் ஓரிடத்தில் குவியலாகக் கொட்டி வைக்கின்றனர். பூசை செய்துவிட்டு, சோற்றைக் கவளங்களாக உருட்டிப் பூசாரி கையிலுள்ள பிரம்ம

கபாலத்திற்குள் போடப்படுகிறது. அதை அவர் உண்ணுகிறார். இரண்டு கவளங்கள் போட்டவுடன், மூன்றாவது கவளச்சோறு மண்ணின் மீது சிதறும் படியாக இறைக்கப்படுகின்றது. கீழே சிதறிக்கிடந்த உணவை எடுத்துச் சாப்பிடும்போது பூசாரிக்கு அருள் வந்து ஆவேசமாக ஆடுகின்றார். இருபது முப்பது பக்தர்கள் அடக்கியும், அடங்காதவராகத் திமிறிக் கொண்டு ஆடுகின்றார். சிறிது நேர ஆட்டத்திற்குப் பிறகு ஆவேசம் குறைந்த நிலையில் கோயிலுக்குள் அழைத்துவரப்படுகின்றார். தீர்த்தம் தெளித்து அமைதிப் படுத்தியபின்னர் பூசை நடைபெறுகின்றது. மயானத்தில் சிதறிக் கிடக்கும் உணவுப் பொருட்களை மக்கள் எடுத்தச் சாப்பிடுகின்றனர். மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் மகப்பேறு கிட்டாதவர்களும்,பிற குறைகளை உடையவர்களும், பேய்பிடித்தவர்களும், சிதறிக் கிடக்கும் உணவை உண்பதால் தங்களின் குறைகள் நீங்கும் எனும் நம்பிக்கையோடு எடுத்துண்ணுகின்றனர். இதற்கு 'மயானச் சூறை' அல்லது 'மயானக் கொள்கை' என்று பெயர்.

பிரம்ம கபாலத்தின் ஆணவத்தை அடக்குவதற்காக அங்காளம்மன் விசுவரூபம் எடுத்த விதத்தை விளக்குவதாக இச்சடங்கு அமைகின்றது. தெய்வ ஆவேசத்தைத் தணிப்பதற்கானச் சடங்குகளாக ஏனைய 7 நாட்களும் அம்மனைக் கீழ்க்கண்ட வாகனங்களில் திருஉலா அழைத்துவருகின்றனர்.

இரண்டாம்	நாள்	ஆண்பூதவாகனம்
மூன்றாம்	நாள்	பெண் பூதவாகனம்
நான்காம்	நாள்	சிம்ம வாகனம்
ஐந்தாம்	நாள்	அன்ன வாகனம்
ஆறாம்	நாள்	யானை வாகனம்

ஏழாம் நாள் ஆவேசம் குறைந்து, சினம் தணிந்து, அன்பு வடிவினளாய்த் தன் பேருருவைக் குறைத்து குழந்தை போல் அமர்ந்து திருத்தேரில் திருஉலா வரும் காட்சி இடம் பெறுகிறது.

எட்டாம் நாள் குதிரை வாகனத்தில் திருஉலா

ஒன்பதாம் நாள் நிகழ்ச்சியைச் சத்தாபரணம் என அழைக்கின்றனர். அமைதி தவழும் அம்மன், அணிகள் பூட்டி அலங்கரிக்கப்பட்டு அழகு வடிவினளாகக் காட்சி தரும் இந்நிகழ்வில் மகிழ்ச்சி நிறைந்தவளாகத் தெப்பல் உற்சவத்தில் காட்சியளிக்கின்றாள்.

மேல் மலையனூர் அங்காளம்மன் கோயிலில், பிற கோயில்களில் காணப்பெறாத கீழ்க்கண்ட சிறப்பம்சங்களைக் காண இயலும்.

1. வழக்கமாக அம்மன் சிலை கிழக்குப் பார்த்து இருக்கும். ஆனால் இக்கோயிலில் வடக்குப் பார்த்து அம்மன் சிலை உள்ளது. சிலைக்கு முன்புறம் உயர்ந்து நிற்கும் புற்று உள்ளது.

2. அம்மனை விடச் சிறிய அளவில் சிவன் நந்தி வாகனத்தின் மீது முழு உருவத்துடன் அமர்ந்திருக்கும் கோலம்.

3. விநாயகர் சிலை வழக்கமாக அமர்ந்த கோலத்தில் தான் இருக்கும். இங்கு பித்தனாக உள்ள தந்தையைக் காக்கும் வகையில் விநாயகர் சிலை நிற்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

4. சிவராத்திரிக்கு முதல்நாள் மேல் மலையனூரில் ஏதாவது ஒரு வீட்டில் சாவு நிகழும். சிவராத்திரியன்று சுடுகாட்டில் பிணம் எரியும். ஆய்வாளர் கள ஆய்வின் போது, மகாசிவராத்திரிக்கு முதல் நாள் நடந்த சாவு ஊர்வலத்தை நேரில் பார்த்தார்.

5. மயானச் சாம்பலும், புற்று மண்ணும் தான் இந்தக் கோயிலில் பிரசாதமாக வழங்கப்படுகின்றது.

6. மயானத்தில் இறைக்கப்பட்ட உணவை மக்கள் விரும்பி உண்ணுகின்ற காட்சி

7. பேச்சியம்மன் அங்காளம்மன் கோயிலுக்குப் பின்புறம் படுத்த நிலையில் கோரவடிவினளாகக் காட்சியளிக்கின்ற கோலம்.

அங்காளம்மன் வழிபாட்டில் கொற்றவை வழிபாட்டின் கூறுகள்

தமிழகத்திலும் ஆந்திராவிலும் வழிபடப்படும் அங்காளம்மன் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்ற தெய்வம். அவற்றில் ஒரு பெயர் மாசானத்தம்மன். மாசானம் என்பது மயானம் என்பதன் திரிபாக வந்தது. பண்டை நாளில் மயானம் 'காடு' என்ற சொல்லாலும் வழங்கப்பட்டது. இடுகாட்டிற்கு உரிய தெய்வமாகக் கொற்றவை வழிபாடு நிகழ்ந்தது. அவளுக்குப் பண்டைய இலக்கியங்களில் காடுகளில் (காடு கிழாள்) என்று பெயர். கொற்றவை, காடு கிழாளாக இருப்பதால் அவளுக்குரிய சடங்குகள் விழாக்கள் அனைத்தும் சுடுகாட்டிலேயே நடைபெறும். மணிமேகலையில் உள்ள சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை குறிப்பிடத்தக்கது. அக்காதையில் ஒரு பகுதியில் சக்கரவாளக் கோட்டத்திற்குச் சுடுகாட்டுக் கோட்டம் என்று பெயரிட்டுள்ளனர். இங்கு உறைகின்ற தெய்வம் கொற்றவையேயாகும். பல்வேறு சமயத்தினர் தங்களுடைய உறவினர் இறக்கும் பொழுது பல முறைகளில் ஈமச்சடங்குகள் செய்துள்ளனர். 'சுடுவோர், இடுவோர், தொடுகுழிப்படுப்போர், தாள் வயில் அழிப்போர்'[86] முதலான பல முறைகளில் ஈமச்சடங்குகள் செய்யப்படுகின்றன. கொற்றவை போர்க்களத்தோடு தொடர்புடைய தெய்வமாதலால் அவளுடைய பரிவாரமாகப் பேய்களைக் கொள்வர்.

---

86. மணிமேகலை சக்ரவாளக்கோட்டம் உரைத்தகாதை அடி. 8-1

இப்பேய்களே புண்பட்ட வீரர்களின் இரத்தத்தையும் இறந்தவர்களின் இரத்தத்தையும் குடிக்கும். இந்தப்பேய்களைச் சங்கப் புலவர்கள் பேய்மகளிர் என அழைப்பர்.

இடைக்கால இலக்கியங்களான பரணி இலக்கியங்களில் பயின்று வரும் 'காடுபாடியது' என்ற பிரிவு, கொற்றவை வழிபாடு அந்நாளைய சமுதாயத்தில் பெருஞ்செல்வாக்குப் பெற்று வந்ததை எடுத்துக்காட்டுகின்றது. கொற்றவை வழிபாட்டில் நாட்டார் வழிபாடாக (Folk Tradition) அங்காளம்மன் வழிபாட்டை எடுத்துக் கொள்ளலாம்.

அங்காளம்மன் வழிபாட்டில் நடைபெறும் சுடுகாட்டுச் சடங்கு மயானக் கொள்ளை ஆகியவற்றில் கொற்றவை வழிபாட்டின் கூறுகள் வெளிப்படுகின்றன. இந்த வழிபாட்டில் கபாலம், எலும்புத்துண்டுகள் ஆகியவை முக்கிய அங்கம் வகிக்கின்றன. அதனால் கபாலம் என்பது, தொல்பழங்காலத்தில் சடங்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் என்ற வகையில் இன்றும் அங்காளம்மன் வழிபாட்டில் ஒரு முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. அது மட்டுமின்றி இத்தெய்வம் சுடுகாட்டோடு தொடர்புடைய கொற்றவையே என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

தொல்காப்பியர் கூறும் கொற்றவை நிலை இது போன்ற ஒரு வழிபாட்டின் எச்சமாகும். இந்த வழிபாட்டினுடைய கூறுகளைப் பற்றி உரையாசிரியர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர். அந்தக் குறிப்புகளும் பரணி இலக்கியத்தில் வரும் குறிப்புகளும் இன்று அங்காளம்மன் வழிபாட்டில் இடம் பெற்றுள்ள கூறுகளுடன் ஒப்பிடத்தக்கனவாய் உள்ளன.

அங்காளம்மன் சுடுகாட்டுத் தெய்வமாகக் கருதப்படுவதால், இத்தெய்வ வழிபாடு நீத்தார் வழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. எனவே இவ்வழிபாடு தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் வளம் அளிக்கும் எனும் நாட்டுப்புற நம்பிக்கை வழிபாடு மக்களிடையே வேரூன்றியுள்ளது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்த விழாவில் சிதறிவிடும் கவளச்சோற்றை எடுத்து உண்பது ஆகும்.

மேலும் மலையனூர் அங்காளம்மன் ரணபேச்சி வடிவெடுப்பதாகக் கூறப்படுகிறது. (பம்பைக்காரர்கள் பல இடங்களில் ரணபேச்சி என்ற பெயரை அங்காளம்மனுக்குப் பயன்படுத்துகின்றனர்). பேச்சி என்பது சங்ககாலத்துப் பேய் மகளிர் என்பதன் அடியாகத் தோன்றியது இந்த முடிவு உறுதிப்படுத்தும் போது அங்காளம்மனைச் சங்ககாலப் பேய்மகளிரின் தொடர்ச்சியான வடிவமாகக் கொள்ளலாம். ரணபேச்சி என்று குறிப்பிடுவது அடிபட்டு வாழும் வீரனது இரத்தத்தைக் குடிக்கும் பேய் வடிவில்தான் வழிபடப்பட்டாள் என்று கருத இடமுண்டு. இந்த அடிப்படையில் தற்காலத்தில் நடைபெறும்

அங்காளமமன் வழிபாட்டிற்கும் பண்டைய நாளில் நடைபெற்ற கொற்றவை வழிபாட்டிற்கும் ஒற்றுமை உண்டு எனக் கருத இடமுண்டு என்ற அருள்தாசு என்ற ஆய்வாளரின் கீழ்க்கண்ட கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

"இனக்குழு காலத்தில் காடுறை கடவுளாக இருந்து, பெருங்காட்டுக் கொற்றியாக மாற்றம் பெற்று, நிலவுடைமைச் சமுதாயத்தில் வெற்றிக்கு வழிவகுக்கும் கொற்றவையாக நிலவி வடவரின் பண்பாட்டுக் கலப்பால் வனத்துர்க்கையாக மாற்றம் பெற்றுப் பின் பல்வேறு தந்திரக் கோட்பாடுகளை ஏற்று, முருகனைப் பெற்றவளாகவும், சிவனின் மனைவியாகவும், விஷ்ணுவின் தங்கையாகவும், காளியாகவும், அங்காளியாகவும், அங்காள பரமேஸ்வரியாகவும் பழைய கொற்றவை பல்வேறு வளர்ச்சி பெற்றிருப்பதை அறிய முடிகிறது" என்ற அருள்தாசு அவர்களின் கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது[87].

எனவே பழைய கொற்றவை வழிபாட்டின் பல்வேறு கூறுகள் அங்காளம்மன் வழிபாட்டில் நிலைபெற்றது என்பது புலனாகிறது.

அங்காளம்மன் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குல முதல் தெய்வமான கதை

"ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வணிகம் செய்வதற்காக 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் பொதிமாட்டு வண்டிகளில் வந்தனர். முத்து, பவளம், வைரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், மாணிக்கம், சாதிப்பத்திரி, இஞ்சி, ஏலம் போன்ற மலை மூலிகைகளையும் பொதிச்சாக்குகளில் நிரப்பி வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்தனர். இரவு நேரத்தில் வண்டிகள் மலையனூர் பொன்னேரிக் குளத்தருகில் வந்தவுடன் அவை தானே நின்று விட்டன. வண்டிகளில் வந்த வணிகர்கள் தீப்பந்தத்தை ஏற்றிப் பார்த்தபோது வழியில் வயதான மூதாட்டி ஒருத்தி படுத்திருந்தாள். இந்த வயதிலும் அவள் கழுத்தில் மஞ்சள் கயிறு இருந்தது. பாட்டியின் அருகில் சென்று விசாரித்தபோது, தான் இருப்பது மலையனூரில் என்றும் தன்பெயர் மலை நீலி என்றும் சொல்லி விட்டு ,'ஏப்பா பிள்ளைகளே பொதிகளில் இருப்பது என்ன' என்று கேட்டாள். (அதற்கு மந்திரியப்பன் என்ற செட்டியார் மட்டும் உண்மையைச் சொல்ல மற்ற செட்டி வணிகர்கள் அனைவரும் நவதானியம் என்று பொய்யுரைத்தனர்). இதைச் செவியுற்ற மூதாட்டி 'நான்தலைக்குக் குளித்துப் பல நாட்களாகிவிட்டன. தலையெல்லாம் சிக்காகி அரிக்கிறது. மலை மூலிகைகளில் சிறிது தந்தால் காலையில் நன்றாகக் குளித்துக் கொள்ளுவேன்' என்று அந்த மூதாட்டி வேண்டினாள்.

---

87. அருள்தாசு, ஆ. 'மயானக் கொள்ளையில் போர் மரபுச் செய்திகள்' தேடல் ப. 8

அதற்குச் செட்டி வணிகர்கள் 'பாட்டி பொதி மூட்டைகளில் இருப்பது நவதானியங்கள் என்று மீண்டும் பொய் சொல்லிவிட்டு பாட்டியை ஏமாற்றிய மகிழ்ச்சியோடு புறப்பட்டனர். உளுந்தூர்ப் பேட்டையை அடைந்ததும், வணிகத்திற்காக சந்தையில் பொதிகளைப் பிரித்துப் பார்த்த போது நவரத்தினங்களும், மலை மூலிகைகளும் நவதானியங்களாக மாறியிருந்ததைப் பார்த்து அலறி அடித்துக்கொண்டு அழுது புரண்டனர். அப்போது அங்கிருந்து ஒருவருக்கு அருள் வந்து, வயதான மூதாட்டி யார் தெரியுமா? மலையனூரில் பலாமரத்தடியிலுள்ள ஒற்றைக் கண் புற்றுள்ள பூங்காவனத்தில் உறையும் அங்காளம்மன் அவள். அத்தெய்வத்தை உங்களின் குலமுதல் தெய்வமாக வழிபடுவதாகச் சத்தியம் செய்து கொண்டால் நவதானியங்கள் முன்பிருந்தபடி நவரத்தினங்களாக மாறும், வணிகம் பெருகும் வாழ்க்கை சிறக்கும்' என்று கூறி அறிவுறுத்தப்பட்டனர். அதன்படி இனிமேல் எங்களின் குலமுதல்தெய்வம் மலையனூரில் உள்ள அங்காளம்மன் என்று ஒருவருக்கொருவர் வலக்கைச் சத்தியம் செய்து கொண்ட பின்னர் முன்பிருந்தபடி பொருட்கள் நவரத்தினங்கள் ஆகவும் மலை மூலிகைகளாகவும் மாறின. வணிகர்களின் மனங்கள் மகிழ்ந்தன. அன்றைய நாள் சந்தையில் எதிர்பாராத அளவுக்கு வணிகம் ஆயிற்று. நிறைய இலாபம் கிடைத்தது. மிகுந்த மகிழ்ச்சியுடன் மீதமிருந்த பொருட்களைப் பொதியில் கட்டி வண்டியில் பயணம் செய்தனர்.

மலையனூர் வழியாகச் சென்று நாம் சத்தியம் செய்தபடி அம்மனை வழிபட்டுச் செல்லலாம் என அவ்வணிகக் கூட்டத்திலிருந்த மந்திரியப்பன் சொன்னதைப் பிற வணிகர்கள் ஏற்கவில்லை. 'அந்தக் கிழவி கிடக்கிறாள்' என்று அலட்சியம் செய்துவிட்டு வேறு வழியில் ஊர் திரும்பிக் கொண்டு இருந்தனர். சற்றுத் தூரம் சென்றவுடன் பொதிமாடுகள் கற்களாக மாறிவிட்டன. மலையனூர் வழியாகச் செல்லலாம் என்று கூறிய மந்திரியப்பன் மாடு மட்டும் கல்லாக மாறவில்லை. செட்டி வணிகர்கள் திகைத்துப் போய் அழுது புரளத் தொடங்கினர். 'தாயே உனக்குத் தந்த சத்தியம் தவறியதை மன்னித்துவிடு இனிமேல் எந்நாளும் நீயே எங்கள் குலமுதல்தெய்வம், எங்கிருந்தாலும் ஆண்டுக்கொருமுறை சிவராத்திரியன்று உன்னை வணங்கிவிட்டு உன் அக்கினிக்குளத்தில் தீர்த்தம் எடுத்துச்சென்று எங்கள் குலதெய்வத்திற்கு செலுத்துவோம்' என்று மன்றாடி வேண்டிய பின்னர் மாடுகள் உயிர்த்தெழுந்தன. உடனே அவர்கள் மலையனூர் சென்று அக்கினிக் குளத்தில் நீராடிவிட்டு அங்காளம்மனை வழிபட்டு விட்டு நலமுடன் ஊர் திரும்பினர். அன்றிலிருந்து இன்றுவரை மகாசிவராத்திரியன்று அம்மனை வணங்கி அக்கினிக் குளத்திலிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று வெவ்வேறு ஊர்களில் உறைந்துள்ள தங்களின் குலதெய்வங்கட்கு நன்னீராட்டுச் செய்கின்றனர்.

24 மனைத்தெலுங்குச் செட்டியார்கட்கு மலையனூர் அங்காளம்மன் குலமுதல்தெய்வமான வரலாறு இதுதான் என்று விவரித்தார் ஏ.கே. ஆர். மனோகரன்[88].

பம்பை

பம்பை எனும் இசைக்கருவியும் அதை இசைக்கும் கலைஞரான பம்பைக்காரரும் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வ வழிபாட்டில் ஆற்றும் பங்கு மிகவும் முக்கியத்துவம் உடையது. இது நாட்டுப்புற இசை வழி நிற்பது.

"நாட்டுப்புற இசை, நாட்டுப்புறமக்கள் வாழ்வில் முக்கிய இடம் பெறுகிறது. இருந்தபோதிலும் இது மனிதனை இறைவனோடு இணைப்பதற்கும், உயர்ந்த நிலையில் அவனை உயர்த்துவதற்கும் உதவுவதில்லை என்று கூறுகிறார் சாஸ்திரிய இசையறிஞர் பி.சாம்பமூர்த்தி[89].

ஆனால் இக்கருத்தை மறுக்கிறார் நாட்டுப்புற இயல் அறிஞர் பெ.சுப்பிரமணியன், "நாட்டுப்புற இசை வழிபாடானது தெய்வ வழிபாடு களோடு இணைந்தது, ஏனெனில் நாட்டுப்புற இசை மனிதனை வேறு வழியில் செல்லவெட்டாமல் உடலாலும் உணர்வாலும் இறைவனோடு ஒட்டுவதற்கு உதவுகின்றது. பக்திக்கு அறிவை விட உணர்வே முக்கியமானது என்பது யாவரும் ஒப்புக் கொள்ளும் கருத்தாகும். மேலும் முருக வழிபாட்டில் காவடி என்பது பிரிக்க முடியாத பகுதி. அதுபோலவே காவடி என்பதில் நாட்டுப்புற இசை பிரிக்க முடியாத கூறு. எனவே நாட்டுப்புற இசை, இறைவனோடு இணையத் துணைபுரியாது என்று கூறுவது பொருத்தமன்று. அறிஞர் சாம்பமூர்த்தியின் இக்கூற்று சாஸ்திரிய சங்கீரத்தலும் வடமொழி வழிபாட்டு முறையிலும் அவருக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றதெனலாம்[90].

தெய்வ வழிபாட்டிற்கு நாட்டுப்புற இசை ஏற்றதாக இருக்கக் காரணம் அது பல வழிகளிலும் கொண்டிருக்கின்ற சமூகத் தொடர்பேயாகும். இதைச் சைத்தன்ய தேவா எனும் இசை அறிஞர்.

"நாட்டுப்புற இசையின் மிக முக்கியமான பண்பு அதன் சமூகத் தொடர்பு தான். சாஸ்திரிய இசை அதற்கு மாறாக, சமூகத் தொடர்பு எதுவும் கொள்ளவில்லை. உதாரணமாக ராகம், தாளம் என்று சொல்லப்படுவன, விதைப்பது, அறுப்பது, போர், திருமணம், குழந்தை பிறப்பு இவை போன்ற பிறவற்றோடு எவ்விதத் தொடர்பும் கொள்ளவில்லை.

---

88. ஏ.கே. ஆர்.மனோகரன் நாட்டுக்கல்பாளையம் வயது 35, நேர்காணல்

89. Sambamoorthy. South Indian Music P 225

90. சுப்பிரமணியன், பெ. பழனிமுருகன் கோயில் தைப்பூச, பங்குனி உத்திர விழாக்கள். முனைவர் பட்ட ஆய்வேடு 1986 மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பக் 392-393

குழு அல்லது தனிமனிதச் செயல்பாடுகளில் நாட்டுப்புற இசை மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இதனைச் செயல் பாட்டு இசைவகைகளில் வகைப்படுத்திக் கூறலாம்" என்று குறிப்பிடுகிறார்[91]

நாட்டுப்புற இசை என்பது மக்களின் அன்றாட வாழ்வியல் கூறுகளோடு இரண்டறக் கலந்த ஒன்றாகும் என்பது வெளிப்படை. மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்ற நாட்டுப்புற இசைக் கருவிகளில் 'பம்பை' என்று சொல்லப்படுகின்ற தோற்கருவியும் ஒன்று. இக்கருவி பெரும்பாலும் இறைத் தொடர்புடைய விழாக்களில் இசைக்கப்படுகின்றது.

தெய்வ நிகழ்வுகளோடு தொடர்புடைய இசை என்பதால் பம்பை இசையை மக்கள் போற்றி வளர்க்கின்றனர். "சுவைமிக்க நாட்டுப்புற கலைகளை இன்றும் நாட்டுப்புற மக்கள் உயிரூட்டி வளர்த்து வருவதைக் காணலாம். இக்கலைகளுடன் இறைத் தொடர்பான புனிதத் தன்மை ஒட்டி இருப்பதினால் மக்களால் அவற்றைப் புறக்கணிக்க முடியவில்லை. சமய நம்பிக்கையில் உறுதியுடைய நாட்டுப்புறமக்கள் இவற்றைச் சமயச் சடங்காகக் கருதி வழிபாட்டுடன் ஒட்டுறவாடச் செய்து மகிழ்கின்றனர்" என்கிறார் ஏ.என். பெருமாள்[92].

24 மனை இனத்தின் குல தெய்வ வழிபாட்டில் பம்பை இசை பெரும் பங்காற்றுகிறது. பம்பை இசை இல்லாத குல தெய்வச் சடங்குகள் எதுவும் இவ்வினத்தில் இல்லை.

பம்பை அமைப்பு

பறை என்பது தோலால் போர்த்தப்பட்ட கருவி, "பம்பை என்பது நீள் உருளை வடிவமுள்ள இரு பறைகள், ஒவ்வொன்றும் ஓரடி நீளமுள்ளது. ஒன்றின் மேல் ஒன்றாக இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. மேற்பக்கமுள்ள பறை பித்தளையால் செய்யப்பட்டது. கீழ்பக்கமுள்ள பறை மரத்தால் செய்யப் பட்டது. இரண்டு பறைகளும் ஒவ்வொன்றின் இரண்டு பக்கங்களும் தோலால் போர்த்தப்பட்டது[93].

பம்பை இசைத்தல்

"பம்பையை வாசிப்போர் தம்முடலின் முன் பக்கத்தில் தொங்கவிட்டுக் கொள்ளுகிறார். அவருடைய இடுப்புடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருக்கும். நின்று கொண்டே பம்பையை வாசிப்பார்கள். பறையாகிய பித்தளைப் பறையின் வலப்பக்கத்தை ஒரு வளைந்த குச்சியால் தட்டி வாசிப்பார். கீழ்பக்கமுள்ள மரப்பறையின் இடப்பக்கம் கையால் தட்டி வாசிக்கப்படும்[94].

91. Chaitanya Deva. B. An introduction to Indian Music - P 60
92. பெருமாள், ஏ.என். தமிழக நாட்டுப்புறக்கலைகள் ப. 11
93. ஆளவந்தார், ஆர். தமிழர் தோற்கருவிகள் பக் 81-82
94. மேலது ப. 82

பம்பை பற்றிய இலக்கிய பாடல்கள்

பம்பை இசைக்கருவி பற்றி இலக்கியங்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

"பணை பரந்தார்த்தன்ன பம்பை வெம்பின" -சீவக சிந்தாமணி[95]
"செல்வ வராராயிரஞ் சிலைக்கும் பம்பையும் - சீவக சிந்தாமணி[96]
நெய்தற் புலையன் நெறியிற் சாற்றிய
பைதற் பம்பையிடங்கள் நெருக்கி - பெருங்கதை[97]
'இன்கீட் பம்பையெருஉக் குரல் உறீகஇ'-பெருங்கதை[98]
'வார்பிசி பம்பையும் துடியும்' -கம்பராமாயணம்[99]
'பம்பை தார் முரசம் சங்கம்' -கம்பராமாயணம்[100]
'தபலை திமலைகள், பூரிக, பம்பைக் கரடி தமருகம் வீணைகள்
பொங்க' -திருப்புகழ்[101]
'பம்பைச் சலிகைகள் சங்கப்பறைவறை' - திருப்புகழ்[102]

பம்பைக்காரர்களின் வம்சாவழி

பம்பை என்னும் தோற்கருவியை இசைக்கின்ற கலைஞரைப் பம்பைக் காரர் என்று அழைக்கின்றனர். இவர்கள் பருவதராஜகுல மீனவர் என்றும் முக்காலியர் என்றும் அழைக்கப்டுகின்ற செம்படவர் இனத்தைச் சார்ந்தவர். இவர்கள், நீர்நிலை, குளம், குட்டை முதலிய இடங்களில் மீன்பிடித்து, விற்று அதன் வருவாயிலிருந்து வாழ்க்கையை நடத்துபவர்கள்.

ஒரு நாள் வயது முதிர்ந்த மூதாட்டி ஒருத்தி ஒரு நொண்டி மீனவனை அழைத்து, "எனக்குப் பசியாக இருக்கிறது என் பசியைத் தீர்க்க ஏதாவது தா" என்று கேட்க அதற்கு அந்த மீனவன் எவ்வித தயக்கமும் இன்றி "அம்மா நான் இப்போது தான் மீன்பிடிக்கப் போகிறேன். பிடித்த மீனை விற்றுக் கிடைக்கும் பணத்தில் உனக்கு ஏதாவது வாங்கி வருகிறேன்" என்று கூறிய அன்பான குரலைக் கேட்டு மகிழந்த மூதாட்டி, அந்த மீனவன் கையில் சிறிய கல்லைக் கொடுத்து, "என்னை நினைத்து தண்ணீரில் இந்தக் கல்லைப் போட்டு மீனைப் பிடிப்பாயாக" என்று கூறினாள். அவள் சொன்ன படியே அச்சிறுகல்லை நீரில் போட்டு, தனது கிழிந்த வலையில் மீன் பிடிக்க, ஏராளமான மீன்கள் அந்த வலைக்குள் வந்து வீழ்ந்தன.

---

85. சீவக சிந்தாமணி மண்கமகள் இலம்பகம் அடி. 121-122
86. மேலது - நாமகள் இலம்பகம் அடி. 13
97. பெருங்கதை உஞ்சைக்காண்டம் அடி 1, 36 - 159
98. மேலது மகதகாண்டம் அடி. 3 26 - 39
99. கம்பராமாயணம் அயோத்யாகாண்டம் பா 984 - 2
100. மேலது யுத்தகாண்டம் பா. 2381
101. திருப்புகழ் பா. 616
102. மேலது பா. 590

தனது வாழ்நாளில் பார்த்திராத அளவிற்குக் கிடைத்த அந்த மீன்களை விற்றுப் பொருட்கள் வாங்கிச் சமைத்து எடுத்துக் கொண்டு போன போது, அந்த மூதாட்டி அங்கு இல்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பின்னர், அந்த மூதாட்டியை நினைத்து முட்புதர்கள் நிறைந்த மண் மேட்டின் மேல் உணவுப் பொருட்களை வைத்துவிட்டு வீடு திரும்பினான். இரவு முழுவதும் மூதாட்டியைக் காணாமல் வருந்திய அவன் காலையில் அந்த மண்மேட்டிற்குச் சென்ற போது அந்த உணவுப் பொருட்கள் அங்கு இல்லாமல் இருப்பதைப் பார்த்து மகிழ்ந்தான். மூதாட்டி தான் அவற்றை உண்டிருக்கிறாள் என்று நினைத்து மகிழந்தான். அதே போல் ஒவ்வொரு நாளும் அந்த மண்மேட்டின் மீது உணவு வைப்பதுவும் மறுநாள் அது காணாமல் போவதும் தொடர்ந்து நிகழ்வதாயிற்று. அந்த மண்மேடுதான் இன்றைய புற்றாக வளர்ந்து வழிபடும் மலையனூர் ஆகும். அன்று முதல் அந்த மீனவர் வழித்தோன்றல்கள் மலையனூர் அங்காள பரமேஸ்வரிக்குச் சேவை செய்து வழிபட்டு வருகின்றனர். அவர்கள் அம்மனுக்கு இசைக்கும் கருவிதான் 'பம்பை' எனப்படுகிறது[103].

குலதெய்வச் சடங்குகளில் பம்பைக்காரர்

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வச் சடங்குகள் அனைத்திலும் பம்பை இசையும், பம்பைக்காரர் பங்கும் உண்டு. பம்பைக்காரர் பங்கேற்காத குலதெய்வ விழாக்களே இல்லை என்று உறுதியாகக் கூறலாம். அவர்கள் பங்கேற்கும் சடங்குகள் வருமாறு

1. தீர்த்தக் காவடி எடுக்கும் குழுவில் அங்கம் வகித்து மலையனூரில் பம்பை இசைக்கிறார்.

2. விழாக்காலங்களில் மூலக் கோயில்களில் பிடிமண் எடுக்கச் செல்லும் போது பம்பைக்காரரும் உடன் சென்று பிடிமண் எடுக்கும்போது பம்பை வாசிக்கிறார்.

3. நீராட்டு (அபிசேகம்) தீர்த்தம் முத்திரித்தல், உற்சவரின் வீதிஉலா, சக்தி அழைத்தல், அடசல்பூசை, பலியிடுதல், எரிசோறு போடுதல், பன்றிகுத்துதல் முதலான விழாச்சடங்குகள் அனைத்திலும், மற்றும் பெயர் சூட்டல், முடிக்காணிக்கை செலுத்துதல், காதணிவித்தல் முதலான குலதெய்வக் கோயிலில் நிகழும் குடும்பச் சடங் குகளிலும் பம்பைக்காரர் பம்பை இசைக்கிறார்.

4. விழாக்களின் போது கோயில் நிர்வாகிகள் பெரியதனம் அல்லது ஊர்ப்பிரமுகர்களை முறையாக மரியாதை செய்து அழைத்து வருவார்கள். அந்த அழைப்பு நடக்கும் போது பம்பைக்காரர் பம்பை இசைத்து முன்னே நடந்து வர அவர் பின்னால் அனைவரும் வருவர்.

---

103. அண்ணாமலைப் பூசாரி, து. மலையனூர், வயது 65 நேர்காணல்

5. குறிப்பிட்ட அக்குலதெய்வத்தை வழிபடும் பல்வேறு ஊர்களில் வாழும் குலமக்களின் வீடுகட்குச் சென்று பம்பை இசைத்துக் குலதெய்வ வரலாற்றைப் பாடுகின்றனர். அத்துடன் குடும்பங்கள் செழிக்க வாழ்த்துப் பாடுகின்றனர். குலமக்களின் வாழிடங்கட்குப் பம்பைக்காரர் நேரடியாகச் செல்லுவதால் குலதெய்வக் கோயில் தொடர்பான ஒருங்கிணைப்புப் பணியைச் செய்கிறார்.

6. பெரிய கும்பிடு விழாவில் நடைபெறும் அனைத்துக் குல தெய்வச் சடங்குகளிலும் பம்பைக் காரர் பெரும் பங்கு ஆற்றுகிறார்.

"பம்பைக்காரர் மட்டும் இல்லாவிட்டால் குலமக்களுக்குள் ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமல் போயிருந்திருக்கும். குலதெய்வங்களைப் பற்றிய வரலாறுகள் மறைந்து போயிருக்கும். குலமக்களிடையே பம்பைக்காரர் கொண்டிருக்கும் நேரடித் தொடர்பால், முறையான செய்திப் பரிமாற்றமும், குல மரபுகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன" என்கிறார் சின்னக்குட்டி செட்டியார்[104].

பம்பைக்காரர்க்குரிய உரிமைகளும் வருவாயும்

1. விழா நேரங்களில் தீர்த்தம் முத்திரிக்கும் போது கங்கணம் கட்டிக் கொள்ளுதல் சிலரில் பம்பைக்காரரும் ஒருவர்.

2. பெரிய கும்பிடுவிழாவில் பலியிடப்படும் ஆடுகளின் தலைகளில் மூன்றில் ஒரு பகுதியைப் பெறும் பங்கு பம்பைக்காரருக்கு உண்டு.

3. நீர் நிலைகளில் தீர்த்தம் முத்திரிக்கப்படும்போது சக்தி கரகத்தினுள் குலமக்கள் நாணயங்களைக் காணிக்கைகளாகப் போடுவர். சக்திகலசம் பிரிக்கும்போது வெளியே எடுக்கப்படும் நாணயங்களில் ஒரு பாதி பூசாரிக்கும் மறுபாதி பம்பைக்காரருக்குமாகப் பிரித்துக் கொடுப்பர். எனவே சக்தி கலச நாணங்களில் பாதியைப் பெறும் உரிமை இவருக்கு உண்டு.

4. இவர் ஆற்றும் பணிக்குச் சம்பளமாக எவ்விதத் தொகையும் வழங்கப்படுவதில்லை. எனவே இவரது பணியைச் சேவை எனக் கொள்ளலாம். விழாக்காலங்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் சிறுதொகையை அன்பளிப்பாகக் கொடுப்பர்.

5. குலமக்களின் வீடுகட்கு நேரடியாகச் சென்று பம்பை வாசிக்கும் போது வெற்றிலைபாக்கு வைத்து அதில் அன்பளிப்புத் தொகையை வைத்துக் கொடுப்பர்.

104. சின்னக்குட்டி செட்டியார், பெதப்பம்பட்டி, வயது 62, நேர்காணல்.

6. சமீப காலங்களில் ஒவ்வொரு விழாவின் போதும் கோயில் நிர்வாகத்தால் ஒரு தொகை கொடுக்கப்படுகிறது.

தொழில் முறை

மேற்கூறப்பட்ட செய்திகள் ஒவ்வொரு குலதெய்வக் கோயிலிலும் வம்சாவழியாக வரும் பம்பைக்காரர்களைப் பற்றியது. இத்தகைய வம்சாவழிப் பம்பைக்காரர்கள் பெரும்பாலான கோயில்கட்கு உண்டு. சில கோயில்கட்குப் பம்பைக்காரர்கள் இல்லை. அவர்கள் தங்கள் விழாக்களின் போது ஊதியத்திற்காக வரும் தொழில் முறையில் பம்பைக்காரர்களை அமர்த்திக்கொள்ளுகின்றனர். இத்தகைய பம்பைக்காரர்கள் குறிப்பிட்ட விழாவுக்கு மட்டும் கணிசமான தொகையை வாங்கிக் கொண்டு பம்பையை இசைப்பர். தொழில் முறைப் பம்பைக்காரர்கள் மரபுச் சடங்குகள் பற்றி அக்கறை காட்டுவதில்லை. பரம்பரைப் பம்பைக்காரர்களும் தங்கள் குழந்தைகளை வருவாய் கருதியும், உயர் சமூக நிலை கருதியும் வேறு பணிகட்கு அனுப்பி வைக்கின்றனர். எனவே வம்சாவழியாக வரும் பம்பைக்காரர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதன் காரணமாக மரபுச் சடங்குகள் மெல்ல மறையும் வாய்ப்பும் உள்ளது.

தெலுங்கப் பட்டி பாலாய் பாப்பாய் அம்மன் கோயில்
1. பேழை வழிபாடு 2. கோயில் கட்ட பூமி பூசை 3. கோயில்





வேலாம்பூண்டி பாறை வீரமாத்தியம்மன் கோயிலின்

பழைய தோற்றமும் புதிய தோற்றமும்

பொங்கல் வைத்தலும் முடிகாணிக்கையும்



இயல்-4



குலதெய்வச் சடங்குகளும் விழாக்களும்

இயல் 4

குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகளும் திருவிழாக்களும்

குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகள்

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வ வழிபாடு இருநிலைகளாகப் பகுத்து ஆராய்ப்படுகிறது. அவை 1. குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகள் 2. குலதெய்வத் திருவிழாக்கள் .

வழிபாடு

வழிபாடு என்ற சொல்லுக்கு வணங்குதல், தொழுதல், துதித்தல் என்பது பொருள் இதுவென்று குறிப்பிடவியலாத ஓர் உயர் சக்தியை மனதில் ஒருமைப்படுத்தி, இரு கரங்களையும் கூட்டி வணங்குதல் வழிபாடு எனப்படும். வழிபாடு என்ற சொல்லுக்கு வழியிற் செல்லுகை (Proceedings of the way) பின்பற்றுகை (Following) வணக்கம் (Reverence advocation) பூசனை (Ritual worship) ஆகிய பொருட்களைத் தமிழ்ப்பேரகராதி கூறுகின்றது. கடவுளையோ கடவுள்களையோ, உயிர் உள்ளவற்றையோ, உயிர் அற்றவற்றையோ வழிபடுவதை வழிபாடு எனலாம்.[1]

'வழிபடும் தெய்வம்[2], வழிபடுகிழமை[3], வழிபாடு மறுத்தல்[4] எனும் தொல்காப்பியத் தொடர்கள் வணக்கம் என்ற பொருளிலேயே கையாளப்பட்டுள்ளன. "வழிபாடு என்ற சொல் இன்று தொழுதல் என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகின்றது. காட்டிய வழியில் பின்பற்றி நடத்தலே வழிபடுதல் எனப்படும் என்பார் சொக்கலிங்கம்[5]. ஆ.நடராசன் வழிபாடு என்பதற்கு, "பக்தி என்பது கடவுளின் பால் மனிதனுக்கு இருக்கும் அன்பின் அகத்தோற்றம். பூசை அல்லது வழிபாடு என்பது அதன் புறவெளிப்பாடு" என்பார்[6]. வழிபாடு செய்தலினால் விளையும் பயன் என்னவென்பதைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை "மனிதன் இவ்வுலகத் துன்பத்திலிருந்து விடுதலை பெற்று நல்வாழ்வு வாழ விரும்புகிறான்" அதற்கு உறுதுணையாக ஓர் ஆற்றல் வேண்டுமென்று விழைகின்றான். இறைவன் என்றதோர் ஆற்றலே பிறர் தரமுடியாததைத் தனக்கு அளிக்கும் எனக் கருதி அவ்வாற்றலை வழிபடுகின்றான்" என்பார்[7].

---

1. Tamil Lexican Volume VIP . 3545
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் நூ. பா. 415
3. மேலது நூ.பா 168
4. மேலது நூ.பா 109
5. சொக்கலிங்கம்,. ஆ. ஆலயங்களின் உட்பொருள் விளக்கம் ப. 246
6. நடராசன், அ. இந்து சமயக்கையேடு ப. 65
7. சுந்திரம் பிள்ளை Religion and Philosophy P. 89

வழிபாட்டின் பல்வகைகள்

பல்வேறு வழிபாடுகள் நிகழ்த்தப்பெறுகின்றன. அவை 1. இயற்கை வழிபாடு 2. சிறு தெய்வ வழிபாடு 3. பெருந்தெய்வ வழிபாடு எனலாம்.

1. இயற்கை வழிபாடு

அ. சூரிய வழிபாடு + சந்திர வழிபாடு

ஆ. மழை வழிபாடு

இ. மரபு வழிபாடு

ஈ. நெருப்பு வழிபாடு

உ. மற்றும் பிற இயற்கை வழிபாடுகள்

2. சிறு தெய்வ வழிபாடு

அ. முன்னோர் வழிபாடு

ஆ. ஆவி வழிபாடு

இ. நடுகல் வழிபாடு

3. பெருந்தெய்வ வழிபாடு

இயற்கை வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு எனும் இம்மூவகை வழிபாட்டு முறைகளும் மக்களால் இன்றும் பின்பற்றப்படுகின்றன.

குலதெய்வ வழிபாடு

சிறு தெய்வ வழிபாட்டின் கூறுகளாக இருக்கும் முன்னோர் வழிபாடு, ஆவிவழிபாடு, நடுகல்வழிபாடு ஆகிய மூன்றும் இணைந்ததுதான் குலதெய்வவழிபாடு. இறந்து போன முன்னோர்களின் ஆவிகளைத் திருப்திப் படுத்த நடுகல் வைத்துச் செய்த வழிபாடே குலதெய்வ வழிபாடாகும். எனவே, சிறுதெய்வ வழிபாட்டின் வழிநிற்பதுதான் குலதெய்வ வழிபாடாகும். உயர்நிலையாக்கத்தின் விளைவாகச் சில இடங்களில் இக்குல தெய்வவழிபாடு பெருந்தெய்வ வழிபாடாக மாற்றம் பெற்றதனைக் காணுகிறோம்.

முதன்மைத்தெய்வம் குலதெய்வமே

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் குலதெய்வ வழிபாடு மிக இன்றியமையாத இடம் பெறுகிறது. சிறு தெய்வ வழிபாட்டின் வழிநிற்கும் குலதெய்வக் கோயில் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்து நிற்பதைக் காண இயலுகிறது.

குலதெய்வ வழிபாட்டின் சிறப்புக்களைக் கூறவந்த வைத்தியலிங்கன்

"ஒவ்வொரு குடும்பத்திலும் குடும்பத்தினருக்குத் தக்க வேளைகளில் இடர்களைப் போக்கிப் பாதுகாப்பளிக்கும் கண்கண்ட தெய்வமாகக் குலதெய்வம் போற்றப்படுகிறது. குடும்பத்திற்குக் குலதெய்வத்தின் அருட்கண்ணோட்டம் இல்லாவிடில் நிறைந்த பலனை அனுபவிக்க முடியாது எனச் சமயப் பெரியோர்கள் (சங்கராச்சாரியார் போன்றோர்) கூறுவதை இன்றும் சமுதாயத்தில் காணலாம். குலதெய்வங்கள் பற்றி ஆராய்ந்தால், 'தாம் கும்பிடும் குலதெய்வங்கள் தம் குடும்பத்தினரை இவ்வாறெல்லாம் காத்து வந்துள்ளன' என்று முன்னோர் கடந்தகால நிகழ்ச்சிகளை விவரிப்பார்கள். எனவே தம் குலத்தினர் சங்கடங்களின்றி நலத்துடனும் வளத்துடனும் வாழ்வதற்காகத் தம் மரப்புப்படி பயபக்தியுடன் வழிபாடு நடத்துகின்றனர். இந்தக் கடமையைச் செய்யாமல் விட்டு விட்டால் நன்மைகள் குறையவும் நோய்நொடிகள் முதலிய சங்கடங்கள் அதிகரிக்கும் சோதனைகளை ஒவ்வொருவரும் அனுபவத்தில் காண்கின்றனர்" என்பார்[8].

குலதெய்வமே மேலானது எனும் எண்ணம் இந்த இனத்து மக்களின் இதயங்களில் ஆழமாக வேரோடியுள்ளது. "நாங்கள் குலதெய்வத்திற்கே முதல் முக்கியத்தும் கொடுக்கிறோம். மற்ற சாமிகளுக்கெல்லாம் அடுத்த நிலைதான். அதுமட்டுமல்ல திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்குப் போவதற்கு முன்னரும் குலதெய்வத்தைக் கும்பிட்டுவிட்டுத்தான் போவோம்" என்று கே. வேலுச்சாமி செட்டியார் தெரிவித்தார்[9].

திருப்பதி திருக்கோயில் நிலையத்தினரால் வெளியிடப்பட்டுள்ள திருமலை வழிகாட்டி" எனும் நூலில் 'திருமலைக்கு வரும்போது செய்ய வேண்டியன' எனும் தலைப்பிட்டுக் கூறப்பட்ட பட்டியலில் முதலாவதாகக் 'குலதெய்வத்தை வணங்கி விட்டு வாருங்கள்' எனக் குறிப்பிட்டுள்ளனர்[10].

பிற தெய்வங்களை வழிபடுவதற்கு முன்னால் குலதெய்வத்தை வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. 24 மனைத்தெலுங்குச்செட்டியார் இன மக்களின் ஒவ்வொரு வாழ்வியற் கூறுகளிலும், சடங்குகளிலும், விழாக்களிலும் குலதெய்வ வழிபாடு மிகவும் சிறப்பிடம் பெறுகிறது.

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வ வழிபாட்டை இருபிரிவுகளாக 1. வழிபாட்டுச் சடங்குகள் 2. திருவிழாக்கள் என இரு பிரிவுகளாகப் பகுத்துக் கொள்ளலாம்.

1. வழிபாட்டுச் சடங்குகள்

பிறந்து, மண்ணில் விழுந்த நாள் முதல் மண்ணுக்குள் மறைந்து

---

8. வைத்தியலிங்கன். செ. தமிழ்ப்பண்பாட்டு வரலாறு பக் 837-838
9. வேலுச்சாமி செட்டியார், கொங்கல் நகரம், வயது 66, நேர்காணல்
10. திருமலை வழிகாட்டி திருமலை - திருப்பதி தேவஸ்தானம் ப. 12

மக்கிவிடும் நாள் வரை மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் சடங்குகள் இடம்பெறுகின்றன. மரபுகளின் வழிநிற்றல் என்பது மனிதமனத்தில் வெகு ஆழத்தில் வேரோடிப்போன ஒன்றாகும். இத்தகைய மரபுகளைக் காக்கும் பணியைச் செய்வதே சடங்குகள்தான். "சடங்குகள் மக்களின் பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன. சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இவை தனிமனிதனின் சுயமான ஆக்கமாகவோ, பண்பாட்டினுடைய தனிச்சிறப்புக் கூறாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்களின்றிச் சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுகின்றன" என்பார் ரூத் பெனிடிக்ட்".

"மனித வாழ்க்கை, சடங்குகளால் கட்டுண்டு கிடக்கின்றது. குறிப்பிடத்தக்க எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சடங்குகள் உண்டு. ஒரே சாதி, இனம், குலம், மதம் முதலியவற்றைச் சேர்ந்த மக்கள் ஒரே வகைச் சடங்குகளையே மேற்கொள்ளுவார்கள். உண்மையில் சடங்குகள் இவர்களை ஒருங்கிணைத்துப் பிரியாமலும் பிளவுபடாமலும் காக்கின்றன" என்கிறார் இரா. விசயலட்சுமி[12].

வாலஸ் என்னும் மானிடவியல் அறிஞர் எழுதிய சமயம் மானிடவியல் பார்வை எனும் நூலில் கருத்தியல் சடங்கு பற்றி கீழ்கண்ட வாறு குறிப்பிடுகிறார். இச்சடங்குகள் யாவும் சமூகத்தினைக் கட்டிக்காக்கவும் கட்டுக்கோப்பாக வைத்திருக்கவும் முரண்பாடுகளை களைந்து ஒற்றுமை ஏற்படவும் சமூகம் போற்ற வேண்டிய விழுமியங்களைக் காக்கவும் சமூக உறவுகளைப் பேணவும் தனிமனித விளைவுகளை நிறைவடையச் செய்து அவற்றின் வாயிலாக அத்தனிமனிதனை உகந்த நிலைச் சமூகத்திற்கேற்ற மனிதனாக வளர்த்தெடுக்கவும் பயன்படுகிறது."[13]

சடங்குகளை 1. வாழ்வியற் சடங்குகள் 2. இறப்புச் சடங்குகள் என இரு வகையாகப் பிரித்து வாழ்வியற் சடங்குகளை மேலும் ஆறு வகையாகப் பகுக்கிறார் கனகசுப்ரமணியன்[14] அவை

1. வலிமைச் சடங்குகள் 2. மந்திரச் சடங்குகள் 3. வழிபாட்டுச் சடங்குகள் 4. பிறப்புச் சடங்குகள் 5. பூப்புச் சடங்குகள் 6. திருமணச் சடங்குகள் என்பனவாம். இங்கே குறிப்பிட்ட அனைத்துச் சடங்குகளிலும் குலதெய்வ வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது.

கொண்டாடப்படுகின்ற நிகழ்வுகளின் அடிப்படையில் சடங்குகளை இரு வகையாக வகைப்படுத்தலாம்.

11. ரூத்பெனிடிக்ட், பண்பாட்டுக் கோலங்கள்
12. தமிழ்ப் பண்பாடு - பன்முகப்பார்வைகள் ப. 35
13. விசயலட்சுமி, இரா. தமிழ்ப் பண்பாடு - பன்முகப்பார்வைகள் பக் 125 - 126.
14. கனகசுப்ரமணியன், இரா. மந்திரச் சடங்குகளும் மனித நம்பிக்கைகளும் ப. 23

1. மங்கலச்சடங்குகள் 2. அமங்கலச்சடங்குகள்

ஆக்கம், நன்மை, சிறப்புக் கருதி செய்யப்படும் நன்நிகழ்வுகள் மங்கலச்சடங்குகள் ஆகும். இச்சடங்குகள் மக்களின் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் புலப்படுத்தும். ஆடல், பாடல், இசை முதலிய கொண்டாட்டங்கள் இதன் போது இடம் பெறும். மேலும் மங்கலச்சடங்குகள் புனிதமானவையாகக் (Sacred) கருதப்படும்.

அமங்கலச் சடங்குகள், கொண்டாடப்படுவோரின் துன்பியல் உணர்வுகளை வெளிப்படுத்துவன. இறப்போடு தொடர்புடைய சடங்குகள் அமங்கலச் சடங்குகள் ஆகும். இவை பெரும்பாலும் தீட்டுடன் (Pollution) தொடர்புகொண்டதாக இருக்கும்.

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் குடும்பத்தில் நடக்கின்ற அனைத்து விழாக்களிலும் குலதெய்வம் இடம் மிக இன்றியமையாததும் சிறப்பானதுமாகும். இவ்வினத்தில் நடைபெறும் வழிபாட்டுச் சடங்குகளை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. மங்கல விழாக்களில் நடைபெறும் குலதெய்வச் சடங்குகள்.
2. அமங்கல நிகழ்வுகளில் நடைபெறும் குலதெய்வச் சடங்குகள்.

மங்கல விழாக்களில் நடைபெறும் குலதெய்வச் சடங்குகள்

முதல் சமர்ப்பணம்

24 மனைத்தெலுங்குச் செட்டியார்கள் இனமக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் நிகழும் காதணி விழா, பூப்பு நன்னீராட்டு விழா, திருமணம், புதுமனை புகுவிழா போன்ற விழாக்களின் அழைப்பிதழ்களின் முதல் பிரதியைத் தங்கள் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று குலதெய்வத்தின் பெயர் எழுதிக் குலதெய்வத்தின் முன்னால் சமர்ப்பித்துப் பூசை செய்கின்றனர். அதற்குப் பிறகுதான் அழைப்பிதழ்களை உற்றார், உறவினர்களுக்கு வழங்கி அழைப்பர்.

குழந்தையைக் கோயிலுக்கு எடுத்துவரல்

குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்ததும் அந்தக் குழந்தையை மூன்று அல்லது ஐந்து மாதங்கள் சென்ற பின்பு குலதெய்வக் கோயிலுக்குப் பெற்றோர் எடுத்துவருகின்றனர். குலதெய்வக் கோயிலுக்கு குழந்தையை எடுத்து வரும் போது குழந்தையின் அகவை (வயது) ஒற்றைப்படை மாதங்களில்தான் அமையவேண்டும். அங்ஙனம் அமைவதே சிறப்பு என்ற நம்பிக்கை இவ்வின மக்களிடம் நிலவி வருகின்றது. குழந்தையைத் தெய்வச் சன்னதியின் வாயிலில் படுக்க வைத்துத் தெய்வத்தை வணங்குகின்றனர். 'இக்குழந்தையின் எதிர்காலம் சிறப்பானதாக அமைவதற்கு அருள்வாய் ' எனும் வேண்டுதலுக்காகவும், 'இது என் குலத்துக்குழந்தை இதன் நல்வாழ்விற்கு நீயே பொறுப்பு எனும்

வகையிலும் பக்தர்களின் வேண்டுகோள் அமைகிறது. பிறப்புச் சடங்கில் ஒன்றாக இஃது இடம்பெறுகின்றது.

பெயர் சூட்டும் சடங்கு

மண்ணில் பிறந்த அனைவருக்கும், அவர்களை அடையாளம் காண்பதற்கும், அழைப்பதற்கும் ஒரு பெயர் தேவைப்படுகிறது. 'மனிதனை மனிதன் இனம் காணப் பெயர் அவசியமாகின்றது. பெயர் சூட்டும் சடங்கை 'நாமகரணம்' எனக் குறிப்பிடுகிறது அபிதான சிந்தாமணி[14]. இங்ஙனம் சூட்டப்படுகின்ற பெயர் குலதெய்வத்தின் பெயரால் சூட்டப்படுகின்ற மரபு தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

'எங்குல தெய்வப் பெயர் ஈங்கு இடுகஎன
அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
மணிமே கலைஎன வாழ்த்திய ஞான்று'
(சிலம்பு மதுரைக்காண்டம் 37-39)

என்று தனது குலதெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயரைக் கோவலன் மாதவியின் மகளுக்குச் சூட்டிய நிகழ்வினைச் சிலப்பதிகாரம் கூறுகிறது[15]. "தெய்வங்களின் திருப்பெயர்களை மக்கள் சூடியிருப்பது அவர்களது தெய்வ நம்பிக்கையைக் காட்டுகிறது. தாங்கள் வழிபடும் குலதெய்வங்களின் பெயர்களே பெரும்பாலும் தென் மாவட்டங்களில் மக்களின் பெயர்களாகக் காணப்படுகின்றன என்கிறார் அ. பாஸ்கர பால்பாண்டியன்[16]

இது போன்று குலதெய்வத்தின் பெயரைக் குழந்தைகட்கு வைக்கும் மரபு 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் பெரும்பாலும் உண்டு. தங்கள் ஊர்த்தெய்வத்தின் பெயரையோ, இஷ்ட தெய்வத்தின் பெயரையோ, வேறு பெயர்களையோ குழந்தைகட்கு வைப்பதென்றாலும் அந்நிகழ்வைக் குலதெய்வக்கோயில்களில் தான் நிகழ்த்துகின்றனர். தத்தம் குலதெய்வத்தின் முன்னிலையில் தான் பெரும்பாலும் பெயர் சூட்டல் நடைபெறுகிறது. பெரிய கும்பிடு விழாவின் போது (இயல் எண் 5ல் விளக்கப்பட்டுள்ளது) பெயர் சூட்டல் சடங்கு நிகழ்வது மங்கலமிக்கது எனக் கருதுகின்றனர்.

முடியெடுத்தல்

தலை முடியை மழித்துத் தெய்வத்திற்குக் காணிக்கையாக்குவதை மொட்டையடித்தல் என்று அழைப்பர். குழந்தைகள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் பெற்றோர்கள் அவர்களைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று தலைமுடியை மழித்து முடிக்காணிக்கை செலுத்துவர்.

---

15. சிங்காறவேலு முதலியார் ஆ. அபிதான சிந்தாமணி ப. 963

16. சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை அடி 3 39-41

17. பாஸ்கரபால்பாண்டியன் அ. "மக்கட் பெயர்களில் தெய்வங்கள்"

24 மனைத் தெலுங்குச்செட்டியார் இனத்தில் உள்ளவர்கள் வேண்டுதலுக்காகத்தலையை மொட்டை அடித்து முடிக்காணிக்கை செலுத்துவதும் தங்களுடைய குலதெய்வக் கோயில்களில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. மங்களகரமான நல்ல நாள் பார்த்துத் தங்கள் குடும்பத்தினர், மற்றும் சுற்றத்தவருடன் குலதெய்வக்கோயிலுக்கு வந்து குழந்தைகட்கு முடியெடுப்பர். பொங்கல் வைத்த பின்னர் முடியெடுக்கும் சடங்கை நடத்துவர்.

முடியெடுக்கும் சடங்கின் வரலாறு

நன்றிக் காணிக்கையாகத் தன் தலையையே அரிந்து தெய்வத்திற்கு உயிர்ப்பலி கொடுக்கும் பழக்கம் இருந்ததை வரலாறு நமக்குச் சுட்டுகின்றது. குடியின் வலிமைக்காகவும், துன்பங்களிலிருந்து விடுபடுவதற்காகவும் தன் தலையையே வெட்டிப் பலிகொடுக்கும் சடங்கு நிகழ்ந்ததற்குப் பல்வேறு இலக்கியச் சான்றுகள் உண்டு. எடுத்துக்காட்டாக மணிமேகலைக் காப்பியத்தில் சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதையில் தம் உயிராகிய நேர்த்திக் கடனைச் செலுத்தியவர்களின் தலைகள் உயரமான மரங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை

"உலையா உள்ளமோடுயிர்க்கடன் இறுத்தோர்
தலைதூங்கு நெடுமரம் தாழ்ந்துபுறஞ்சுற்றிப்
பீடிகை ஓங்கிய பெரும்பலி முன்றில்"

எனக் குறிப்பிடுவதிலிருந்தும் உணரப் படுகிறது[18].

"இட்டுத் தலைஎண்ணும் எயினர் அல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியை"

எனக் கொற்றவைக்குப்பலி கொடுத்தனர் என்பதைச் சிலப்பதிகார அடிகளும் குறிப்பிடுகின்றன[19]. "மனித உறுப்புகளிலேயே உயிர்ப்பொருள் மிகுதியாகக் கொண்டதாகத் தலை கருதப்படுவதால், இறந்த மூதாதையர் வழிபாட்டிலும் பயிர்த் தொழிலிலும், மனிதப்பலி தொடர்புடையது போன்று "தலை வேட்டை யாடலும்" சமமான இடத்தைப் பெறுவது இயல்பாகிறது" என்று வாழ்வியற் களஞ்சியம் விளக்குகிறது[20].

இங்ஙனம் தலையை அரிந்து தரும் வழக்கம் பழங்குடி வழிபாட்டோடு, சிவவழிபாடு சேர்ந்த போது சிவன் கோயில்களுக்கு முன்புறம் தலை அரிந்து கொடுக்கும் சடங்கு நடைபெறத் தொடங்குகிறது. கொங்குநாடு முழுவதும் கி.பி 10-ஆம் நூற்றாண்டு முதல் சென்ற நூற்றாண்டு வரை 'தலை அரிந்து' கொடுக்கும் வழக்கம் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

---

18. மணிமேகலை சக்கரவாளக் கோட்டம் உரைத்தகாதை அடி 7.50-51-53

19. சிலப்பதிகாரம் வேட்டுவவரி அடி. 20-21

20. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 4 ப. 947

கொல்லிமலை அறப்பளீஸ்வரர் கோயிலில் கி.பி 10ஆம் நூற்றாண்டிலும்.
அன்னூர் அன்னீஸ்வரர் கோயிலில் கி.பி 12 ஆம் நூற்றாண்டிலும்,
சேலூர்க் கபாலீஸ்வரர் கோயிலில் கி.பி 15ஆம் நூற்றாண்டிலும்,
தாரமங்கலம் கைலாயநாதர் கோயிலில் கி.பி - 17ம் நூற்றாண்டிலும்,
அவினாசி லிங்கேஸ்வரர் கோயிலில் கி.பி 19 ம் நூற்றாண்டிலும்

வடிக்கப்பட்ட, தலையை அரிந்து தரும் கோலத்திலிருக்கும் சிற்பங்கள் இருப்பதை இன்றும் காணலாம். இத்தொல்லியல் சான்றுகள் தலையை அரிந்து உயிர்ப்பலி தரும் சடங்குகள் நிகழ்ந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றன[21]. தலையை வெட்டித்தரும் சடங்கு, பின்பற்றுவதற்கு அரிதான மிகப்பெரியவன் சடங்காகும். வன் சடங்குகள் காலப்போக்கில் மென் சடங்குகளாக மாறியதற்கும்,மாறாது நின்ற வன் சடங்குகள் மறைந்து போனதற்கும் மிகுதியான சான்றுகள் உண்டு.

"நம்பிக்கைகள் பெரும்பாலும் வழிவழியாக, மரபாக வருவதனால் மக்களிடம் அவர்கள் அறியாமலேயே அவை வேரூன்றி விட்டன. இவை காலச்சுழலுக்கும் வாழ்க்கைமுறைக்கும் ஏற்ப மாறியும், வழக்கொழிந்தும் போய் விடுகின்றன" என்கிற ஆய்வாளர் அருட்கலையின்[21] கருத்து ஈண்டு கருதத்தக்கது.

தலையை வெட்டித்தரும் இச்சடங்குதான் காலப்போக்கில் மாற்றம் பெற்று தலைமுடியைக் காணிக்கையாகத்தரும் சடங்காகப் புதுவடிவம் பெற்றிருக்கக்கூடும் என்று கருத இடம் உண்டு. இக்கருத்து மேலும், ஆய்விற்குரியது.

இதுவன்றிக் கி.பி 3-ஆம் நூற்றாண்டு முதல் இந்த மண்ணில் சமணம் தழைத்து வளர்ந்திருந்ததன் காரணமாகச் சமணத் துறவிகளினுடைய பழக்கமான 'மயிர் நீக்கம்' காரணமாகவும் மொட்டையடிக்கும் இந்த வழக்கம் இம்மண்ணில் நிலைபெற்று இருக்கக்கூடும் என்ற மற்றொரு கருத்தும் சிந்தனைக்குரியது.

24 மனைத்தெலுங்குச்செட்டியார் இனத்தில் முதன்முறையாக மொட்டையடித்து முடிக்காணிக்கை செலுத்துவது அவர்களது குலதெய்வக்கோயில்களில் மட்டுமே. இதனைப் 'பிறந்த முடிதருதல்' என்று கூறுவர். முதல் மொட்டையடித்ததற்குப் பின்னர் எப்பொழுது வேண்டுமானாலும் தங்களின் நேர்த்திக்கடனாக வேறு கோயில்களில் மொட்டையடித்துக் கொள்ளுகின்றனர்.

21. அருட்கலை, கோ.."தமிழ்ப்பண்பாட்டில் நம்பிக்கைகள்"
தமிழ்பண்பாடு - பன்முகப்பார்வைகள் ப. 132

இதனைக் கே. அங்கமுத்து செட்டியார், "எனக்குப் பத்து வயது ஆகும் வரை குலதெய்வக் கோயிலுக்குப் போய் மொட்டையடிக்க முடியவில்லை. எனவே நான் சடைவளர்த்துக் கொண்டே இருந்தேன். பத்து வயதில் குலதெய்வத்திற்கு மொட்டையடித்தபின்னர்தான் கிராப்பு வைத்துக்கொண்டேன்"[22] என்று கூறினார். பிறந்த முடிஎடுத்து பின்னர் நேர்த்திக்கடன்கள் உள்ளவர்கள் மீண்டும் வந்து குலதெய்வக்கோயில்களில் முடிக்காணிக்கை செலுத்துகின்றனர்.

காதணி விழா

"குழந்தைகட்குக் காதில் துளைபோட்டுக் கடுக்கன் அணிவிக்கும் சடங்கிற்குக் காதணிவிழா என்று இந்துக்கள் பெயர் சூட்டியுள்ளனர். பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகட்கு இச்சடங்கு செய்யப்படும். "கருணை வேதம் என்பது குழந்தைகளின் ஐந்தாம் அல்லது ஏழாம் வயதில் குழந்தையின் காதில் துளையிடும் சடங்காகும். 'இந்தச் சடங்கு கருவில் உண்டான பாரம்பரியக் குறைகளை நீக்கும் என்பர் " என காதணி விழாவுக்கு விளக்கம் கூறுகிறது கலைக்களஞ்சியம்[23].

குழந்தையின் உடலில் காயம் ஏற்படுத்துவதால் தீய ஆவிகளினால் துன்பம் உண்டாகாது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியது காதுகுத்தும் சடங்கு என்பார் தே. ஞானசேகரன்[24].

"அழகான குழந்தைகளைக் கண்டால் எமன் ஆசைப்பட்டு விடுவானாம். உடலில் சிறுகாயம் ஏற்படுத்திவிட்டால் எமன் அருகில் வரமாட்டானாம், எமனை ஏமாற்றவே காது குத்தப்படுகிறது என்பர். இந்நம்பிக்கை இந்தியாவில் மட்டுமல்ல மத்திய ஆசியாவிலும் எகிப்திலும் சமீபகாலம் வரை இருந்து வருகிறது' என்பார் இரா. சுரேந்திரன்[25].

இத்தகைய காதணிவிழாக்கள்பெரும்பாலும் அவரவர் குலதெய்வக் கோயில்களில் நடைபெறுகின்றன. குலதெய்வக் கோயில்களில் உறவினர்களை அழைத்துக் குழந்தையின் தாய்மாமன் மடியில் வைத்துக் காதுகுத்தப்படுகிறது. காதுகுத்தும் பணியை அந்த ஊரில் உள்ள பொற்கொல்லர் ஒருவர் செய்கின்றார். பொற்கொல்லர்கள் இல்லாத இடங்களுக்குத் தம் சொந்த ஊரிலிருந்து ஒருவரை அழைத்துச் செல்லுகின்றனர்.

மரிக்கந்தை அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில் போன்ற சில குலதெய்வக் கோயில்களில் காதணிவிழா 'பெரிய கும்பிடு' விழாவின் போது

22. அங்கமுத்துச்செட்டியார், மு. பெரியபோது, வயது 75. நேர்காணல்

23. கலைக்களஞ்சியம் தொகுதி 4 ப. 392

24. ஞானசேகரன், தே. மனிதவாழ்வில் மந்திரச் சடங்குகள் ப. 20

25. சுரேந்திரன் நாட்டுப்புற இலக்கியம் தரும் நலம் தரு வணக்கம் ப. 230

தான் நடத்த வேண்டும் என்பது எழுதப்படாத சட்டம். 'பெரிய கும்பிடு' விழா 12 வருடங்கட்கு ஒருமுறை தான் நிகழும். அதுவரை குழந்தைகட்குக் காதணி விழா நடத்தாமல் இருக்க இயலாது. எனவே காதணி விழா நடத்துவதற்குப் பெரிய கும்பிடு நடக்கும் வரை காத்திருத்தல் சாத்தியமில்லை என்பதற்காகப் பெரும்பாலும் குலதெய்வக்கோயில்களில் அல்லது வேறு இடங்களில் காதணி விழாவை நடத்திவிடுகின்றனர். இருந்தாலும் பெரிய கும்பிடு நிகழ்ச்சியின் போது மீண்டும் ஒரு முறை காதுகுத்துதல் நடைபெறுகின்றது. குழந்தைப் பருவத்தைத் தாண்டிய இளைஞர்களுக்கும் கூடக்காதுகுத்தப்படுகின்றது. காது குத்துதல் என்பது குலதெய்வக்கோயிலில் மட்டும்தான், அதுவும் பெரிய கும்பிடு நிகழ்வின் போதுமட்டும்தான் நடத்தப்படவேண்டும் எனும் மரபு 24மனைத்தெலுங்குச் செட்டியாரின் மக்களிடையே பின்பற்றப்படுகிறது என்பது புலனாகிறது.

திருமணப்பட்டு வாங்கும் நிகழ்வில் குலதெய்வத்திற்குப் பட்டுவாங்குதல்

திருமண நாளில் மணமக்கள் உடுத்திக் கொள்ளுவதற்கான பட்டாடைகளை ஒரு குறிப்பிட்ட நல்ல நாளில் துணிக்கடைக்குச் சென்று மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டாரும் சேர்ந்து வாங்குவர். இதற்காகும் செலவுகளை மணமகன் வீட்டினர் ஏற்பர். அப்போது மணமக்களுக்குப் பட்டாடைகளை எடுக்கும்போது முதலில் குலதெய்வத்திற்கு ஒரு பட்டுத்துணியை வாங்கும் மரபு இந்த இனத்தில் உண்டு. குலதெய்வத்திற்காக வாங்கப்படும் பட்டாடை திருமணம் முடிந்த பின்னர் மணமக்கள் முதன் முறை குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பொங்கல் வைக்கும் போது, தெய்வத்திற்கு படையல் செய்வர். 'திருமணப்பட்டெடுக்கும்' நிகழ்ச்சியில் குலதெய்வத்திற்கு முதல் பட்டு வாங்குவது இவ்வினத்தின் பழமையான மரபாகும்.

பொங்கலிடுதல்

பொங்கல்

பொங்கி வழிவது பொங்கல் எனப்படுகிறது. பொங்கல் என்பதற்குச் சமைத்தல், மிகுதி, கள், உயர்ச்சி, பொலிதல், சோறுவகை என அகராதிகள் பொருள் கூறுகின்றன[26]. பொங்கலிடுதல் என்பது, நன்னிகழ்வாகக் கருதப்படுகின்றது. பல்வேறு நிகழ்வுகளில் பொங்கலிடப்படுகிறது. சாதாரணமான இல்லச் சமையலிலிருந்து பொங்கலிடுதல் என்பது சற்று வேறுபட்டது. இல்லத்தில் அரிசி உணவு சமைக்கும்போது பானையில் ஏற்றிய நீர் கொதித்தவுடன் அவ்வுலையில் அரிசியை இடுவர். ஆனால் பொங்கலிடும் போது பானையில் ஊற்றப்பட்ட நீரின்நொதி பொங்கிப் பானையின்

26. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி ப. 1072

விளிம்பை விட்டு வழிந்தோடும் போது, அச்சம் கலந்த பக்தியுடன் நின்று இறைவனை வணங்கியபின் அரிசியை அவ்வுலை நீரில் இடுவர். இவ்வரிசியின் சோறே பொங்கல் என்னும் பெயரை பெறுகின்றது.

தைப் பொங்கல்

அறுவடைக் காலமான தைத்திங்கள் பொதுவாகப் பொங்கலுக்கு உரிய மாதமாகும். தமிழ்நாட்டில் அனைத்து வீடுகளிலும் தைத்திங்கள் முதல் நாளில் பொங்கலிடுவர். 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்திலும் தைப் பொங்கல் நாளில், வீடுகளில் 3 பொங்கல் வைப்பர். அவை,

1. மனைப்பொங்கல் - குடும்பத் தலைவனுக்கு வைப்பது
2. மனைப்பொங்கல் - குடும்பத் தலைவிக்கு வைப்பது
3. குலதெய்வப் பொங்கல் - குலதெய்வத்திற்கு வைப்பது

குல தெய்வப் பொங்கல்

தை மாதம் முதல் நாளன்று 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் உள்ள அனைவரும் குலதெய்வப் பொங்கல் வைக்கின்றனர். தங்களுடைய குலதெய்வக் கோயிலுக்குச் சென்று வைக்காமல் வீட்டிலேயே குலதெய்வத்தை நினைத்து, அதன் அருளை வேண்டி வைக்கப்படும் பொங்கல், குலதெய்வப் பொங்கல் ஆகும்.

அ. வீட்டிலேயே வைக்கப்படும் குலதெய்வப் பொங்கல்

வீட்டில் குடும்பத் தலைவன் மற்றும் குடும்பத்தலைவிக்கு வைக்கும் மனைப்பொங்கல் இரண்டுடன் மூன்றாவதாகக் குலதெய்வப் பொங்கலையும் வைத்து, மூன்று பொங்கலையும் படைத்து வழிபடுவது, பெரும்பாலோரின் வழக்கமாக இருந்து வருகின்றது.

ஆ. புற்றில் வைக்கப்படும் குலதெய்வப் பொங்கல்

மேலே குறிப்பிட்டபடி அல்லாமல் வேறு சிலர் குலதெய்வப் பொங்கலை ஒரு புற்றின் அருகில் வைப்பதும் உண்டு. பொங்கலுக்கு முதல் நாள் வீட்டின் அருகில் உள்ள பாம்புப் புற்றைத் தேர்ந்து, சுத்தம் செய்து சாணமிட்டு மெழுகி, மஞ்சள் நீர் தெளித்து மாவிலை, வேப்பிலை, பூளைப்பூ மூன்றும் கொண்டு காப்புக் கட்டி விடுவர். மறுநாள் அங்குச் சென்று பொங்கல் வைத்துப் படையல் படைப்பர். வழிபட்டு முடிந்தவுடன் வீடு திரும்பி மனைப்பொங்கல் இரண்டையும் வீட்டில் வைத்துப் படையல் செய்து வழிபடுவர்.

இ. வீட்டில் குலதெய்வப் பொங்கல் வைத்துப் புற்றுக்கு எடுத்துச் செல்லல்

முதல் நாளே பாம்புப் புற்றை மேலே குறிப்பிட்டபடி சுத்தம் செய்து பின்

காப்புக் கட்டுவர். ஆனால் குலதெய்வப் பொங்கலைப் புற்றில் வைக்காமல் வீட்டிலேயே பொங்கலை வைத்த பின்னர் அதை எடுத்துச் சென்று வந்து புற்றின் முன்னே வைத்துப் படையல் படைத்து வழிபடுவர். பின்னர் வீடு திரும்பி மனைப் பொங்கல் இரண்டையும் வைத்து வழிபடுவர்.

புற்றில் குலதெய்வப் படையல்

புற்றில் குலதெய்வப் பொங்கலை வைத்து வழிபட விரும்புவோர் புற்று முழுவதற்கும் சிவப்புச் சேலை போர்த்துவர். வழிபாட்டுக்குப் பின்னர் அந்தச் சேலையைத் தங்கள் பயன் பாட்டுக்கு எடுத்துக்கொள்வர். ஏழு பளிங்குக் கற்களை (வெங்கிச்சங்கல்) எடுத்துச் சுத்தம் செய்து அவற்றிற்குத் திருநீறு, சந்தனம், குங்குமம் முதலானவற்றை வைத்து அவற்றை புற்றுக்கு முன்புறம் அமைக்கப்பட்ட மணல்மேடையில் நிறுத்திச் சிவப்புத்துணியால் போர்த்துவர். குலதெய்வத்திற்கெனக் காதோலை, கருகமணி, கத்திரி மஞ்சள், பூலாங்கிழங்கு, கரும்புச்சோகை, நிறைநாழி (ஒரு படி நிறைய அரிசி வைத்தல்) கண்ணாடி முதலியனவற்றை வைத்துப் படையலிடுவார்கள்.

"நாழித் தானியம் அளக்கும் கருவி, மரக்கால் போன்றது. புதிய முகத்தலளவை முறைகள் வந்த பின்னும் இச்சொல் இன்னும் வழக்காற்றில் அரிதே பயின்று வருகிறது. மரக்கால் முழுவதும் நெல் நிறைந்திருக்கும் அதனாற்றான் நிறை நாழி எனப்படுகிறது[27]. குடும்பம் நெல்வளத்துடன் விளங்க வேண்டும் என்பது கருத்தாகும்.

பரிவாரத் தெய்வங்களுக்கு சுக்கு, வெல்லம், குறுமிளகு இவற்றை இடித்து வெற்றிலை பாக்கில் வைத்துப் படைப்பார்கள். பின்னர்த் தேங்காய் பழம் உடைத்து வைத்துத் தீபாராதனை காட்டி வழிபாடு செய்தவுடன் பழத்தையும் பொங்கலில் சிறுபகுதியையும், எடுத்துப் புற்றுக் கண்களுக்குள் போட்டுவிட்டு வீடு திரும்புவர்.

திருமணமானவுடன் குலதெய்வக் கோயிலில் வைக்கப்படும் பொங்கல்

திருமணச் சடங்கில் திருமாங்கல்யம் பூட்டும் சடங்கின் போது மூன்று முடிச்சுக்கள் போடுவது மரபு. இந்த மூன்று முடிச்சுக்களுக்குச் சிறப்பான பொருள் உண்டு. முதல் முடிச்சைப் போடும்போது மணமகள் தன்னை இழக்கிறாள், கணவனுடன் ஒன்றுகிறாள். இரண்டாம் முடிச்சைப் போடும்போது தன் பெற்றோரை இழக்கிறாள். புகுந்த வீட்டின் உடைமை ஆகிறாள். மூன்றாம் முடிச்சு குலதெய்வத்திற்காக. மூன்றாம் முடிச்சைப் போடும் போது தன் குலதெய்வத்தை இழக்கிறாள். கணவனது குலதெய்வத்தை ஏற்கிறாள்.

27. விஸ்வநாதன் அ. சமுதாயச் சிந்தனைகள் ப. 101

இவையே மும்முடிச்சுக்களுக்கான காரணமாக அமைகின்றதென்பர்[28].

"தன்னை மணந்து கொண்டவனது குலதெய்வக் கோயிலுக்கு மணப்பெண் அழைத்து வரப்பட்டு அதுவே அன்று முதல் அவளுக்குக் குலதெய்வம் என்று அறிமுகப்படுத்துவதை ஒரு சடங்காகவே குயவர் இனத்தில் செய்கின்றனர்"[29]. இது போன்ற சடங்கு வேறு பல இனங்களிலும் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. இதே நோக்கத்துடன் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் மணமானவுடன் மணமகள், அவளது கணவன் மற்றும் அவனது குடும்பத்தாருடன் அவர்களது குலதெய்வக் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்படுவாள்.

மணமகள் தனது தந்தையின் குலத்தை விட்டுக் கணவன் குலத்துடன் இணைந்து விட்டதைப் புரிந்து கொள்ளும் வகையில் இக்கோயிலுக்கு அழைத்து வரப்படுகிறாள். கோயிலுக்கு வந்த மணப்பெண் அக்குலதெய் வத்திற்குப் பொங்கல் வைக்கிறாள். இப்பொங்கல் மணமக்கள் வாழ்வின் முதற்பொங்கல் ஆகிறது. திருமணமானவுடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று மணமகள் பொங்கல் வைக்க வேண்டும் என்கிற மரபு இந்த இனத்தில் கட்டாயமாகப் பின்பற்றப்படுகிறது.

மாசி சிவராத்திரிப் பொங்கல்

தலைக்கட்டுப் பொங்கல் எனும் தலைப்பில் இவ்வியலிலேயே விழாக்கள் எனும் தலைப்பின் கீழ் மகாசிவராத்திரி எனும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது.

பிற பொங்கல்கள்

குலதெய்வக் கோயிலில் நடத்தப்படும் 1. பெயர் சூட்டல் 2. முடியெடுத்தல், 3 காதணி விழா 4. பலியிடுதல் முதலான சடங்கு நிகழ்வுகளின் போது பொங்கல் வைக்கப்படுகிறது. பொங்கல் வைத்தபிறகுதான் மேற்கூறிய நான்கு சடங்குகளும் நடைபெறுகின்றன.

பொங்கல் வைக்கும் பாத்திரங்கள்

பொங்கல் வைப்பதற்குப் பித்தளைப் பாத்திரங்களைத் தற்போது பயன்படுத்துகின்றனர். 'மொடாப் பொங்கல்' என்று கூறப்படும் பொதுப் பொங்கலுக்கு மண்பானைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை "எங்க காலத்தில் எல்லாம் மண்பானையில் தான் பொங்கல் வைப்போம், காலமாற்றத்தால் இப்போது யாரும் மண்பானையைப் பயன்படுத்துவதில்லை. பித்தளைக்கு மாறிவிட்டார்கள்" என்கிறார் பழனியம்மாள்[30].

---

28. சத்தியசீலன். சோ. உடுமலைப்பேட்டை காமாட்சியம்மன் கும்பாபிஷேக விழாவில் ஆற்றிய உரை
29. கொடுமுடி சண்முகம். தேன் ஓலை இதழ். ஜனவரி 1987
30. பழனியம்மாள். பழனி. வயது 84, நேர்காணல்

கால மாற்றம் கருவி மாற்றத்திற்கு இடமளித்துக், கருவி மாற்றம் கருத்து மாற்றத்திற்கு இடம் தந்துள்ளதனைத் தகவலாளர்கள் உணர்த்துகின்றனர்.

பொங்கல் பற்றிய நம்பிக்கைகள்

பொங்கல் நன்கு பொங்கி வழிந்தால் அடுத்து வரும் காலம் நலம் பயக்கும் காலமாக அமையும் என்றும், பொங்கல் வழியாமல் நீர் கொதித்துவிட்டால் பொங்கல் நன்றாக விழவில்லை என்றும், அதனால் நேரவிருக்கும் துன்பத்தின் அறிகுறியாக அது அமைகின்றதென்றும் நம்புகின்றனர். அப்படி நிகழ்ந்தால் பானையைக் கழுவி மீண்டும் பொங்கல் வைத்து அது நன்கு வந்த பின்னரே பொங்கலிடுவோர் மன நிறைவு கொள்ளுகின்றனர்.

"நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாகத் தொடர்ந்து வருகின்றன". "நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்"எனும் நாட்டுப் புறவியல் ஆய்வாளர் சக்திவேல் கூற்றுப்படி[31] பொங்கலைப் பற்றிய இவ்வின மக்களின் நம்பிக்கைகள் இவர்களின் பண்பாட்டைப் புலப்படுத்துகின்றனவாக உள்ளன.

பலியிடுதல்

தெய்வத்திற்கு உயிர்பலியிடும் மரபு பண்டைய நாளிலிருந்து தொடர்ந்து வருகின்றனது. சங்க காலத்தில் இம்மரபு இருந்ததற்கான சான்றினை

1. 'பலிபெறு கடவுப் பேணிக் கலிசிறந்து[32]
2. 'கணங்கெழு கடவுட் குயர் பலி, தூஉய்ப் பரவினம் வருகஞ் சென்மோ தோழி' எனும் நற்றிணைப் பாடல் அடிகளாலும்[33]
3. 'உயர்பலி பெறூஉம் உருகெழுதெய்வம்[34]
4. நல்லிறை மெல்விரல் கூப்பி
இல்லுறை கடவுட்கோக்குதும் பலியே[35]

என்றே அகநானூற்றுப் பாடல் அடிகளாலும் அறியமுடிகிறது.

பலியிடப்படுவதன் நோக்கம் தெய்வத்தின் சீற்றத்தைத் தணிப்பதற்காக விலங்குகள் பலியிடப்படுகின்றன என்பதை,

---

31. சக்திவேல், சு. நாட்டுப்புற இயல் ஆய்வு ப. 188
32. நற்றிணை பா. 251 18
33. மேலது பா. 352 6-7
34. அகநானூறு பா. 166 - 7
35. மேலது பா. 282 17-18

"அணங்கறி கழங்கிற் கோட்டாங் காட்டி
வெறியென உணர்ந்த உள்ளமொடு மறியது"

எனும் கருத்தினை நற்றிணைப் பாடல் புலப்படுத்துகிறது[36]. அத்துடன் நன்றி காட்டும் முகத்தான் நேர்த்திக் கடனாகப் பலியிடப்படுகின்றது எனும் கருத்தை,

"கள்ளும் கண்ணியும் கையுறையாக
நிலைக் கோட்டு வெள்ளை நால் செவிக்கிடாய்
நிலத்துறை கடவுட் குளப்பட வோச்சி"

எனும் அகநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது[37]. இவற்றின் மூலம் பலியிடப்படுவதன் நோக்கம் யாதென்பதனை நம்மால் உணரமுடிகின்றது.

ஆ. பலியிடப்படுவதின் நோக்கம்

மானிடவியலார் கண்ணோட்டத்தில், "ஆடு, பன்றி, மாடு, கோழி ஆகியன இன்று பலியிடப்படுகின்றன. மனிதனது பாவங்களை விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மாற்றலாம் என்ற நம்பிக்கையில் இவை பலிப்பொருட்களாக ஆக்கப்பட்டுள்ளன. இம்முறையை மாற்றியமைக்கும் முறை (Transferring method) அல்லது பலியாடுமுறை என்று அழைக்கலாம். இது போன்ற பாவனை செய்யப்பட்ட சடங்கு முறைகள் 'பாவனை மந்திரத்தின்' பாற்படும்" என மானிடவியல் ஆய்வாளர் பிரேசர் குறிப்பிடுவதைக் காண்கின்றோம்[38].

"பலிகொடுப்பதின் நோக்கம் தெய்வத்தைத் திருப்திப் படுத்துவதற்காகவே ஆகும். ஆவித்தெய்வங்கள் இரத்த தாகம் கொண்டவை. ஆகவே தான் மிருகங்களைப் பலிகொடுத்து இரத்தம் சிந்தி விடுகின்றனர்'. 'தெய்வங்களுக்குப் பலிகொடுக்கும் போது இரத்தத்தை தெய்வம் ஏற்றுக்கொள்ளுகிறது. உடலாகிய ஊனை மனிதன் உண்ணுகிறான். அதாவது வழிபடும் மனிதன் உணவாக ஏற்றுக்கொள்ளுகிறான். இக்கருத்து,'ரோமன் கத்தோலிக்கச் சமுதாயத்திலிருந்து வந்ததாகப் பிஷப் வொயிட் ஹெட் குறிப்பிடுகின்றார். இரத்தம் கேட்டதால் ஆவிக்கு இரத்தம் கொடுக்கப்படுகிறது. இரத்தம் இங்கு உயிருக்கு அடையாளம். உயிரை, ஆவிக்கு தெய்வத்திற்குக் கொடுப்பதாக ஆகிறது. என்று கூறும் துளசி ராமசாமியின் கருத்தினை[39] இங்கு நினைவு கூர்தல் நலம்.

உயிர்ப் பலிக்குக் காரணங்கள் பலவாகும். உயிர்ப்பலியின் போது செய்யும் சடங்குகள் ஒரு சமுதாயத்தில் இருந்து ஒன்றுக் கொன்று மாறுபட்டாலும் உயிர்ப்பலிக்குக் கீழ்வரும் காரணங்கள் பொதுவானவை எனலாம்.

36. நற்றிணை பா.47 8-9
37. அகநானூறு பா. 213 6-8
38. Frazer J.G. Golden bough (after math - a suppliment to golden bough) PP 433 - 439
39. துளசி இராமசாமி தமிழ் சமுதாயம், நாட்டுப்புறப்பண்பாடு ப. 56

அ. தாம் வழிபடும் கடவுள் அல்லது ஆவியானது மண்ணுலகில் நடத்தவிழையும் நற்செயல்களை நடத்துதற்குரிய சக்தியை அளித்தற்கு.

ஆ. உயிர்ப்புச் சக்தி மிகுந்த புது இரத்தப் பெருவழி இறப்பின் வலிமையும், அழிவையும் எதிர்கொள்வதற்கும்- இதனால், வழிபடுநரைத் தீய சக்திகளின் தாக்கத்திற்க்கெதிராக வலிமை படைத்ததிற்கும் தெய்வ ஆணையை மீறுதலை மறைத்ததற்கும் அல்லது முழுமையாக நீக்குதற்கும்.

இ. வழிபடுபவருக்கும், வழிபடு பொருளுக்குமிடையே ஒரு சீரிய உறவு நிலையை நிலைப்படுத்துதற்கு ஏற்ற வகையில் நன்மை இயற்றும் சக்திகளுடன் உறவு நிலை நிறுவுவதற்கு அல்லது நிறுவிய உறவு நிலையை மறுநிலைப் படுத்துவதற்கு இதன்வழி இயற்கை விதிக்கும்" (Natural order) இயற்கைகடந்த விதிகளுக்குமிடையே தடையற்ற தகவல் தொடர்பைப் பெறுதலின் பொருட்டுமாம்[40].

மேற்கூறிய நோக்கங்களுக்காகவும், தெய்வச் சீற்றத்தைத் தணிப்பதற்காகவும் நன்றி காட்டும் வகையில் நேர்த்திக் கடனாகவும், தமது பாவங்களை விலங்கினங்கள் மேல் ஏற்றி மாற்றியமைப்பதற்காகவும், தெய்வத்தைத் திருப்திப்படுத்துவதற்காகவும் செய்யப்படும் பலியிடம் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் குலதெய்வக் கோயில்களில் உண்டு. காவல்தெய்வத்திற்குத்தான் பலி கொடுக்கப்படுகிறது. பெரும்பாலும் கருப்புச்சாமி தான் பலி பெறும் தெய்வம். கோயிலுக்கு வெளிப்புறம் தான் பலியிடல் நிகழ்கிறது. பலி நடைபெறும் போது முதன்மைத் தெய்வத்தின் சன்னதி மூடப்பட்டிருக்கும்.

கோழி, ஆடு ஆகிய இரண்டும் மட்டுமே பலியிடப்படுகின்றன. பலியிடப்படும் ஆடு உறுப்புக் குறைவு (ஒச்சம்) இல்லாததாக இருக்க வேண்டும். அதைக் குளிப்பாட்டி, பூச்சூட்டி நீர் தெளிப்பர். ஆடு தலையைச் சிலிர்த்து ஆட்டினால் 'துலுக்கு' எனும் இறை அனுமதி கிடைத்துவிட்டது என்று கருதி அதை வெட்டுவர். துலுக்குக் கொடுக்காவிட்டால் தெய்வக்குற்றம் உள்ளது எனக்கருதி அதற்குப் பரிகார பூசைகள் செய்து துலுக்குக் கிடைத்த பின்னரேயே பலியிடுவர். வேளாம் பூண்டிக் கருப்புசாமி கோயிலில் ஆடி பதினெட்டாம் நாளன்று நிறைய ஆடுகள் பலியாகத் தரப்படுகின்றன. மேட்டு மகாதானபுரம் மகாலட்சுமியம்மன் கோவிலில் ஆடி பத்தொன்பது அன்று தலையில் தேங்காய் உடைக்கும் சடங்குக்கு முன்னர் ஆடு பலியிடப்படுகிறது.

தங்களுக்குக் கிடைத்த பயனுக்கு நன்றி காட்டும் வகையில், நேர்த்திக் கடனாகத் தமது குலதெய்வக் கோயில்களில், அவர்களுக்கு வசதிப்பட்ட நாளில் ஆடு மற்றும் சேவல் பலி தருகின்றனர். பலி தரும் நாளில் தங்கள்

---

40. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 4 ப.1946

உறவினர்களை அழைத்துப் பலியிட்ட ஆடு அல்லது சேவலின் இறைச்சியை உணவாக்கி விருந்தோம்புகின்றனர். பிஷப் ஒயிட் ஹெட் கூறியபடி பலியிடப்படும் உயிரினுடைய ஊன் மனித உணவாக இங்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சில குலதெய்வக் கோயில்களின் உயிர்ப்பலிக்கு மாற்றாகப் பூசணிக்காய் பலியிடப்படுகிறது. சில கோயில்களில் பலியிடுவதற்கு மாறாக, சேவல், ஆடு முதலியவற்றை வீட்டில் வளர்த்து கோயில்களில் கொண்டு வந்து விட்டுவிடுவர்.

2. அமங்கல விழாக்களில் நடைபெறும் குலதெய்வச் சடங்குகள் இறப்புச் சடங்குகள்

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் ஒருவர் இறந்து விட்டால் அவருக்கு மாலை அணிவித்து தேய்காய், பழம், ஊதுபத்தி வைத்துப் பூசை செய்வார்கள். இந்தப் பூசையை அவரது குலதெய்வத்தை வணங்குகின்ற, அவரது குலத்தைச் சேர்ந்த பங்காளிகள் மட்டுமே செய்யவேண்டும். அவரது ஆண்வாரிசுகள் அல்லது பங்காளிகள் யாராவது ஒருவர், இறந்தவருக்குப் பூசை செய்ய வேண்டும். இந்தப் பூசை முடித்த பிறகுதான் இறப்பு வீட்டில் மற்ற சடங்குகள் செய்வர்.

இறந்தவரது குலத்தைச் சேர்ந்த பங்காளிகள் சடலத்தைவெளியே எடுத்துச்செல்லும்போது வெள்ளைத் துணி ஒன்றைச் சடலத்தின் மீது போர்த்துவர். இதைக் கோடி போடுதல் என்று கூறுவர். கோடிபோடும் உரிமை குலப் பங்காளிகட்கு மட்டுமே உண்டு.

இறந்த மூன்றாம் நாள் கருமாதிச் சடங்கு நடைபெறும். அந்தநாளில் மாமன் மைத்துனர் உறவின் முறையினர் இறந்தவரது வாரிசுகட்குச் சபைகூடி, தலையில் உருமால் கட்டு கட்டுவார்கள். உருமால்கட்டு என்பது, உரிமைகட்டு எனும் சொல்லிலிருந்து மருவியிருக்கலாம். உருமால் கட்டுக்கு, வேட்டியும் துண்டும் கொடுத்துக் கட்டுவார்கள். மாமன் மைத்துனர் உறவு முறையினர் நிறையபேர் இதைச் செய்வதால் நிறைய வேட்டி துண்டு அந்தச் சபையில் இறந்தவரின் வாரிசுக்குக் கிடைக்கும். ஆனால் அவற்றை அவர் வைத்துக் கொள்ள மாட்டார். அவரது பங்காளிகள் ஒவ்வொருவருக்கும். ஒரு வேட்டித்துண்டு வீதம் கொடுத்துவிடுகின்றார். இப்படி வேட்டிதுண்டினை பங்காளிகள் தவிர பிறருக்குக் கொடுப்பதில்லை.

இறந்தவர் சடலத்தின் மீது 'கோடி போடும்' உரிமையும் குலத்தைச் சார்ந்த பங்காளிகட்கே உண்டு என்பதும் சபையில் தரப்பட்ட வேட்டி துண்டுகளைப் பங்காளிகட்கே பிரித்துத் தருதல் என்பதும் துக்கத்தில் பங்கேற்பதிலும், உரிமைப் பொருளைப் பகிர்ந்து கொள்வதும் குலத்தவர்க்கே உரியது என்பது வாழ்வியலில் மட்டுமல்ல இறப்பிலும் குலத்தவர்க்குரிய

அணிமை புலப்படுகிறது.

இந்த இனத்தவர்கள் வீட்டில் ஒரு சாவு நேர்ந்து விட்டால் அவர்கட்குக் கீழ்க்கண்டவாறு தீட்டு உண்டு என்றும் அந்த நாள்வரை வழிபாடு கூடாது என்றும் கூறுவதுடன் பின்பற்றவும் செய்கின்றனர்.

1. 16 நாள்வரை அனைத்துக் கோயில்கட்கும் செல்லக் கூடாது
2. 6மாதம் வரை குலதெய்வக் கோயில்கட்குச் செல்லக் கூடாது
3. 1 வருடம் வரை மலைக்கோயில்கட்குச் செல்லக் கூடாது.

இதன்படி இறந்தவரது குடும்பத்தினர் ஆறுமாத காலம்வரை குலதெய்வக் கோயில்கட்குச் செல்லுவதில்லை என்ற மரபு இன்றளவும் பின்பற்றப்படுகிறது.

சடங்குகளில் உரிமை

குலதெய்வக் கோயில்களில் குலத்தவருக்குரிய உரிமைகளும் சிறப்புச் செய்தலும், தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. கோயிலுக்குள் உட்புகுந்து தெய்வத்திற்குப் பூசை செய்வது யார்? விழாச் சடங்குகளில் சத்திக் கலசம், எடுப்பது யார்? கார்த்திகை ஜோதியன்று பெருவிளக்கை விளக்குத் தூணிற்கு எடுத்துச் செல்லுவது யார்? என்பன போன்றவற்றிற்கு உரியோரின் உரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தலைவர், அறங்காவலர் பூசாரி, பெரியதனம், செட்டுமை முதலானவர்களுக்கு என்னென்ன பொறுப்பு என்பதையும் முடிவு செய்து, அந்த மரபு வழிவழியாகப் பின்பற்றப்படுகிறது.

பூசை உரிமையும், பூசாரியின் உரிமையும்

மேற்கூறிய இந்தப் பதவிகள் அனைத்துக் குலதெய்வக் கோயில்களிலும் இருக்கும் என்று கூறுவதற்கில்லை. ஆனால் அனைத்துக் கோயில்களிலும் பூசாரி என்ற ஒருவர் இருக்கிறார். அவர் அக்குலத்தைச் சார்ந்தவராக இருப்பார். அவரது பணி மிக இன்றியமையாததாகக் காலம் காலமாக இருந்து வருகிறது. தெய்வத்திற்குப் பூசை செய்வது மட்டுமின்றிக் கோயில் நிர்வாகத்தையும் அவரே செய்து வருகின்றார். சில காலம் கழித்துப் பூசாரியின் பணி நிர்வாகப் பணியிலிருந்து பிரிக்கப்பட்டது. நிர்வாகத்தைச் செய்து வருகிறவர் பூசைப் பணிக்குத் தன் குலத்தைச் சார்ந்த வேறு ஒருவரை நியமித்துப் பூசைப் பணி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இருப்பினும் பூசாரிப் பட்டத்தைக் கோயில் நிர்வாகிகள் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

கோயில் பூசையில் பண்டாரங்கள்

அண்மைக் காலங்களில் குலப்பூசாரிக்கு மாற்றாகக் கோயில் பூசைக்குப் பண்டாரங்கள் நியமிக்கப்படுகின்றனர். மரிக்கந்தை அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் தலைவர் லோக சுந்தரம் "நாங்கள் பரம்பரைப் பூசாரிகள்.

எங்கள் தாத்தா எர்ரஞ் செட்டியார். அப்பா அருணாச்சலம் செட்டியார் ஆகியோர் இக்கோயிலுக்குப் பூசை செய்து வந்துள்ளனர். என் காலத்தில் வேறு வியாபாரங்கள் எனக்கிருப்பதால் பூசை செய்ய இயலவில்லை. எங்கள் சொப்பியர் குலத்தவர் ஒருவரைப் பூசை செய்ய நியமித்தோம். அதுவும் சரிப்பட்டு வரவில்லை. எனவே, கோயிலுக்குப் பண்டாரம் போட்டுப் பூசை செய்கிறோம். நான் கோயில் நிர்வாகத்தை மட்டும் பார்ப்பதால் கோயில் பூசாரி என்பதற்கு மாறாகக் கோயில் தலைவர் என்று அழைக்கின்றனர். இருந்தாலும் மிக முக்கிய விழாக்களின் போது சட்டை அணியாமல் கருவறைக்குள் சென்று, மரபு கருதி நானே பூசை செய்கிறேன் என்றார்[41]. இது போன்று பரம்பரைப் பூசாரிகள் இருப்பினும் பல கோயில்களில் பண்டாரங்கள் பூசை செய்ய நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோயில் பூசையில் பிராமணர்கள்

வேறு சில குலதெய்வக் கோவில்களில் பிராமணர்கள் பூசை செய்கின்றனர். கணித்தியவர் குலதெய்வமான, கோட்டூர் வீரமாத்தியம்மன் கோயில் தலைவர் சண்முகம் செட்டியார், "தவிர்க்கவியலாச் சூழ்நிலை காரணமாக கோயில் பூஜைக்கு பிராமணரை நியமித்துள்ளோம். பூஜைப்பணி குலப்பூசாரி அல்லது பண்டாரத்திடமிருந்து பிராமணர்களிடம் கை மாறுவது இன்றைய சூழலில் தவிர்க்க இயலாதது" என்றார்[42].

மேல்நிலை ஆக்கத்தின் விளைவாகப் பூசை செய்கின்ற பணி, பிராமணர்களிடம் சில கோயில்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

பூசைப் பணியில் மேல்நிலை ஆக்கம்

சமுதாயத்தின் கீழ்த்தட்டிலிருக்கும் மக்கள் தங்களுடைய சடங்குகளை வழிபாட்டு மரபுகளை விடுத்து வேறொரு உயர்நிலையில் உள்ளவர்களின் மரபுகளைப் பின்பற்றுவதன் மூலம் தாங்கள் மேல்நிலை நோக்கிச் (Upward mobility) செல்ல இயலும் என நம்பிச் செய்யப்படும் மாற்றமிது" என்ற எம்.என்.சீனிவாசன் கூற்று[43] இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இத்தகைய மாற்றங்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு கோயில்களில் நிகழ்ந்துள்ளன. எடுத்துக்காட்டாகப் பழனி முருகன் கோயிலில் சிற்றரசன் இராமப்பய்யன் காலம் வரை சைவப் பண்டாரங்களால் பூசை செய்யப்பட்டது. இராமப்பய்யன் ஆணையால் பூசைப்பணி குருக்களுக்கு மாற்றப்பட்டது என்பதைத் தமிழ்க் கலைக் களஞ்சியம் குறிப்பிடுகின்றது[44]. மேல் நிலை ஆக்கம்

41. லோகசுந்தரம் அ. மாக்கினாம்பட்டி, வயது 45, நேர்காணல்

42. சண்முகம் செட்டியார் மு. திருப்பூர், வயது 66, நேர்காணல்

43. Srinivas. M.N. Social Changes in Modern India P. 6

என்பது இவ்வினக் குலதெய்வக் கோயில்களிலும் இடம் பெற்றுள்ளது - பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

உரிமையும் பெருமைப்படுத்தலும்

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் அனைத்துக் குலதெய்வக் கோயில்களிலும் மாம்ன் மச்சான் உறவுக் காரர்கட்கு முதல் மரியாதை தந்து பெருமைப்படுத்துகின்றனர். மாமன் மச்சான் உறவு முறைக்காரர்கள் யார் என்பதைக் குலத்தின் பெயர் கொண்டு நிர்ணயிக்க முடியும் என்பது முன்னரே 'குலமும் மண உறவுகளும்' எனும் இயலில் விளக்கப்பட்டுள்ளது. குலம் எனும் அளவுகோல் கொண்டுதான் முதல் மரியாதை போன்ற சிறப்புக்கள் செய்யப்படுகின்றன.

வரவணையில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் சொப்பியர் பலிவிதியர் எனும் இரண்டு குலங்கட்கும் குலதெய்வம் ஆகும். அதேபோல மரிக்கந்தையிலுள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் சொப்பியர் பலிவிதியர் இருவருக்கும் குலதெய்வம் ஆகும். எனவே சொப்பியரும் பலிவிதியரும் மாமன் மச்சான் உறவின் முறையினர் என்பதால் வரவணையில் பூசைசெய்கின்ற உரிமை பலிவிதியருக்கும் முதல் மரியாதை சொப்பியருக்கும் வழங்கப்படுகிறது. மரிக்கந்தையில் பூசை உரிமை சொப்பியருக்கும் முதல் மரியாதை பலிவிதியருக்கும் அமைகின்றது. அதே போல் மூக்குத் தெரிச்சாம்பாளையம் மக்கடையர் கோயிலில் பூசை செய்த பின்னர் மாமன் மச்சான் முறையுள்ள மும்முடியர்க்குத்தான் முதல் பிரசாதம் வழங்குவர். கணக்கன்பட்டியிலுள்ள அக்கம்மார் ஈஸ்வரி கோயில் கஸ்தூரிகொரகையர் 8 வீட்டைச் சார்ந்தவர்கட்குரியது. பூசை முடித்தவுடன் 16 வீட்டைச் சேர்ந்த கோலையவர்க்குத்தான் முதல் பிரசாதம் வழங்குவார்கள். கோலையர் குலத்தில் மூன்று கோலையர்கள் உண்டு. அவர்கட்டு பிரசாதம் வழங்கும் முறையை முத்துவீரன் செட்டியார் பின்வருமாறு கூறுகின்றார்[45].

"உறவின் முறையார்க்குப் பிரசாதம் கொடுக்கும் போது முதலில் பருத்தியூர்க் கோலையரை அழைப்பர். ஒருவேளை அவர்கள் இல்லை என்றால் அந்த விபூதிப் பிரசாதத்தை ஈஸ்வரியின் திருப்பாதத்தில் வைத்துவிட்டு மற்ற உறவின் முறையினரான மூலனூர்க் கோலையருக்கும் அடுத்தபடியாக வேடசந்தூர் கோலையருக்கும் பிரசாதம் வழங்கி மரியாதை செய்வார்கள்"

இதுபோலவே பருத்தியூர்க் கோலையர், மூலனூர்க் கோலையர், வேடசந்தூர்க் கோலையர் ஆகியோர் தங்களது திருக்கோயிலில் முறையாகக்

---

44. கலைக்களஞ்சியம் தொகுதி 6 ப. 43
45. முத்துவீரன் செட்டியார் 'முதல்மரியாதை' கணக்கன்பட்டி அருள்மிகு அக்கமார்ஈஸ்வரி திருக்கோயில் கும்பாபிஷேகப் பெருவிழா மலர் ப. 93

கஸ்தூரிக் கொரகையர், கண்டிக் கொரகையர் ஆகியோர்க்கு முதல் விபூதிப் பிரசாதத்தைக் கொடுத்து மரியாதை செய்வார்கள்.

பெரிய கும்பிடு விழாவில் சுத்தத் தண்ணீர் - புகைத் தண்ணீர் (இது பற்றி அடுத்த இயலில் விளக்கப்பட்டுள்ளது) ஊற்றும் சடங்கில் மாமன் - மச்சான் உறவுக்காரர்கட்கு மட்டுமே இச்சடங்கினைச் செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

பெரிய கும்பிடு விழாவில் ஆடு பலியிடப்படும் போது, பலியாட்டின் மீது கத்தியால் முதல் வெட்டினை வெட்டும் உரிமை மாமன் - மச்சான் உறவுக்காரர்கட்கு வழங்கப்படுகிறது.

இரண்டாவது வெட்டினை பலியிடும் குடும்பத்தின் தலைவன் செய்கிறான். இதிலிருந்து சடங்குகள் அனைத்திலும் மாமன் - மச்சான் உறவு முறைக்காரர்கட்கு முழு அளவில் உரிமைகள் தந்து அவர்கள் பெரிய அளவில் பெருமைப் படுத்தப்படுகின்றனர் என்பது புலனாகிறது

முதல் மரியாதை

"முதல் மரியாதை என்பது முதலில் தரப்படும் பிரசாதம் எனலாம். பிரசாதம் மனிதனுக்குக் கடவுளுடைய சக்தியையும், தலைமைக்குரிய சின்னங்களையும், பெருவலிவையும், தரக்கூடியது எனக்கருதினர். இந்தப் பிரசாதத்தை முதலில் பெறுபர்கட்குப் பிரசாதத்தின் சிறப்பனைத்தும் முழுமையாகக் கிடைக்கும் எனவும் நம்பினர். இச்சிறப்புகள் கிடைப்பின் முதன்மையாளர்கள் எனும் சமூக அங்கீகாரம் கிடைக்கும் எனக் கருதினர். இச்சமூக அங்கீகாரத்தை வழங்கும் வல்லமை முதல் மரியாதைக்கு இருப்பதால், அந்த முதல் மரியாதையைப் பெறுவதற்காகக் கோயில் கட்குப் பெருங்கொடைகளை வாரி வழங்கினர். எனவே முதல் மரியாதை பெறுவதில் போட்டியும் பிணக்குகளும் கூட ஏற்பட்டன". என்று கோயில்களில் வழங்கப்படும் முதல் மரியாதை பற்றிப் பர்ட்டன் ஸ்டேயின் என்ற வரலாற்றறிஞர் விளக்கியுள்ளார்[46].

ஸ்டேயின் கூறியது போலவே முதலில் பெறப்படும் பிரசாதம் மிகுந்த சக்தியுடையது என்ற நம்பிக்கை இருப்பதனை அறிகின்றோம். முதல் மரியாதையைப் பெறுவதில் போட்டிகளும் பிணக்குகளும் வந்துவிடக் கூடாது என்பதற்காக, 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வ வழிபாட்டில், யார் யாருக்கு முதல் மரியாதை வழங்குவது, யார் யாருக்கு என்னென்ன உரிமைகள், எந்த எந்த இடத்தில் அளிப்பது என்பது குறித்து மிகுந்த முன்னெச்செரிக் கையுணர்வுடன் வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

46. Burtain Stein, Peasant State and Society in Medieval South India. P 80

எனவே பெரும்பாலும் பிணக்குகள் இருப்பதில்லை. இருப்பினும் ஓரிரு பிரச்சனைகள் எழுவதினையும் அவற்றிற்குரிய தீர்வுகள் உடனடியாகக் காணப்படுதலையும் அறிய முடிகின்றது.

நவக்காணி மும்முடியார் கோயிலில் முதல் மரியாதை காரணமாக ஏற்பட்ட பிணக்குக் காரணமாகவே பிரிந்து வந்து அந்தியூரில் தனிக்கோயில் கட்டியுள்ளனர். நவக்காணியிலிருந்து பிரிந்து வந்து அந்தியூரில் கோயில் கட்டப்பட்ட செய்தி 'குலதெய்வங்கள்' இயலில் விவரிக்கப்பட்டுள்ளது. அதே போல் நாட்டுக்கல் பாளையத்தில் உள்ள கண்டி கொரகையர் குலதெய்வமான அங்காள பரமேஸ்வரிக்கு இரண்டு கோயில்கள் அருகருகே அதே ஊரில் அமைந்துள்ளன. இது கருத்து வேறுபாட்டின் விளைவாகப் புதிய குழுவொன்று உருவாகி அக்குழுவினரால் அதே ஊரில் புதிய கோயில் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செய்தி, பிணக்குகளே இல்லை என்று கூற இயலாது என்பதற்குச்சான்றாக அமைகின்றன.

பயன்பாட்டு விலக்கு (Taboo)

சமூகத்தில் சில பொருட்கள், பயன்பாட்டிலிருந்து விலக்கப் பட்டிருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்துவதைச் சமுதாயம் ஏற்றுக் கொள்வதில்லை. சமுதாயத்தால் உபயோகப்படுத்துவதிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள செயல்களையும், பொருட்களையும் பயன்பாட்டு விலக்கு (Taboo) எனப் பெயரிடுவர் மானிடவியலார்.

"சமுதாயத்திலும், சமூகத்திலும் விலக்கப்பட்டதாகவும், புனிதமானதாகவும் உள்ள சில பொருட்கள் அல்லது வினைகள் பயன்பாட்டு விலக்கு (Taboo) எனப்படும்" என்ற கருத்தினைப் பிரான்சு ஸ்டெய்னர் குறிப்பிடுகிறார்[47].

The word taboo derives from. T.a. mark an A Puan adverb of intensity the compound word Tapu, therefore means no move than marked thoroughly on a only come to signify sacrad things or prohibited in a secondary sence. because sacred things and places were commonly marked on a peculiar manner in order that every one might know that they were sacred".

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் சில பொருட்கள் பயன்பாட்டு விலக்காகக் கருதப்படுகின்றன.

துலுக்கமல்லிப்பூ

தெய்வ வழிபாட்டில் மிக முக்கியமாகப் பங்கு பெறும் பொருள் மலராகும். வண்ணத்திலும், வடிவத்திலும், வாசனையிலும் வேறுபட்ட பலவித மலர்கள்

---

47. Frans steiner Taboo p - 33

மாலையாக, உதிரிப்பூவாக, அலங்காரப் பொருளாகப் படைக்கப்படுகின்றன. வழிபாட்டுப் பொருளாகப் பூ இருத்தலைக் க.ப. அறவாணன் "மரத்தின் உறுப்புக்களுள் ஒன்றான பூவை வைத்தே இறைவனை வழிபடும் முறை திராவிடப் பூசனை முறை. பூ வழிபாடு திராவிடம் தவிர ஆசியாவின் வேறு பகுதிகளிலும், ஆப்பிரிக்காவிலும் காணப்படவில்லை. ஆகவே பூ வழிபாட்டிற்குத் தாயகமே திராவிடம் தான்" என்பார்[48]. பூ படையல் மிகுதியாகத் தெய்வ வழிபாட்டில் இடம் பெறுகிறது. எனினும் சில வகைப் பூக்கள் தெய்வத்திற்குப் படைப்பதில்லை. அங்ஙனம் வழிபாட்டிலிருந்தும் விலக்கப்பட்ட பூக்களில் ஒன்று 'துலுக்கமல்லி'.

'பூசை' என்ற சொல் தமிழ்ச்சொல் என்றும் 'பூவால் செய்தல்' என்ற தொடரிலிருந்து இச்சொல் வந்துள்ளது என்றும் இராம நாராயணன் குறிப்பிடுகின்றார்[49]. மலர் தூவி இறைவனை அருச்சிக்கும் மரபு தென்தமிழ் நாட்டிற்குரிய பழைய மரபு என்று கா.கைலாசநாத குருக்கள் குறிப்பிடுகின்றார்[50].

'கொடுமணல் என்னும் ஊரில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகளில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அகழ்வேடுகள் கிடைத்துள்ளன. இவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இந்த மட்பாண்டங்கள் பூசை செய்வதற்குரிய பூக்களைப் போட்டு வைக்கின்ற கலன்கள் என்று கருதப்படுகின்றன[51]. இறைவனுக்குப் பூப்படையல் செய்யும் மரபு இருந்ததைக் குறிப்பிடும் சங்க இலக்கியச் செய்திகளைத் தொல்லியல் சான்றுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்த கிமான்ஸ்பிரபாராய் என்பவர், 'பூவைச் சொரிந்து வழிபடும் மரபு திராவிடர்க்கே உரியது என்றும், வேதகால ஆரியர்களிடையே இம்மரபு இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை' என்றும் குறிப்பிடுகின்றார்[52]. அவரது கூற்றை அண்மைக்கால அகழ்வுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

பூசையின் போது பயன்படுத்தப்படவேண்டிய பூக்கள் பற்றியும் பயன்படுத்தக்கூடாத பூக்கள் பற்றியும் ஆகமங்கள் குறிப்பிடுகின்றன[53].

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் உள்ள குலதெய்வ விழாக்களில் பலவிதப் பூக்கள் தெய்வத்திற்குப் படையலாக, மாலையாக படைக்கப்படுகின்றன. கள்ளிவலசு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில்

---

49. இராம்நாராயணன் வழிபாடு: ஒரு புதிய விளக்கம் ப. 22
50. கைலாசநாதர் குருக்கள், க. சைவத்திருக்கோயில் கிரியை நெறி ப. 194
51. இராஜன். க. கொடுமணல் அகழ்வாய்வு - ஓர் அறிமுகம் பக். 32-35
52. Himans Praba Roy "Inscribed Potsherds and their functions" Studies in Histroy Vol.4 New series.
53. சுவாமிநாத சிவாச்சாரியார் இராமேஸ்வரம் இராமநாத சுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் 1975. ப. 137

'பூச்சொரிதல்' என்ற ஒரு விழாவை ஆண்டுதோறும் ஆடி மாதக் கடைசி வெள்ளிக்கிழமையன்று நடத்துகின்றனர்.

இவ்வினத்தில் பயன்பாட்டு விலக்காகக் கருதப்படுகின்ற பொருட்களில் துலுக்கமல்லி பூவும் ஒன்று. செம்மஞ்சள் வண்ணத்தில் இருக்கும் இப்பூ இவ்வினத்தின் அனைத்துக் குலதெய்வ கோவில்களிலும் பூசைக்கு ஏற்கப்படுவதில்லை. இந்தப் பூவை தெய்வத்திற்குப் படைப்பது கூடாது எனும் நம்பிக்கை இவ்வின மக்களிடையே மிக ஆழமாக வேரோடியிருக்கிறது. மரிக்கந்தை அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலில் தெய்வக்குறைகள் ஏதேனும் நிகழந்து இருக்கின்றனவா என்பதைக் கேரளச் சோதிடர்களைக் கொண்டு பார்த்த தெய்வ ஆருடத்தில், (அஷ்டமங்கல தேவப் பிரசன்னம்) தவறுதலாகத் துலுக்கமல்லிப்பூ பயன்படுத்தப்பட்டுள்ளது ஒரு குறையென்றும், எதிர்காலத்தில் அது பயன்படுத்தக்கூடாது என்றும் சோதிடர்கள் குறிப்பிட்டனர்[54]. இச்சோதிடம் நிகழும் போது கள ஆய்வு செய்த ஆய்வாளர் நேரில் இதைப் பார்த்திருந்தார். இதிலிருந்து துலுக்கமல்லிப்பூ பயன்பாட்டு விலக்காக இவ்வினத்தில் மிக உறுதியாகக் கருதப்படுகிறது என்பது புலனாகிறது.

கருப்பு வண்ணம்

கருப்பு வண்ணம் அமங்கலம் அல்லது புன்னிர்மையுடையது என்றும் தங்களது பயன்பாட்டில் உள்ள எந்தப்பொருளும் கருப்பு நிறத்தில் இருக்கக் கூடாது என்றும், அது குலதெய்வத்திற்கு ஆகாது என்றும் நம்புகின்றனர். அணிகலன்கள், ஆண்களின் அரைஞாண்கயிறு, அணியும் ஆடைகள், ஆடையிலுள்ள கரைகள் கூடக் கருப்பு நிறத்தில் இருக்கக்கூடாது என உறுதியாக நம்புகின்றனர். "கருப்பு எங்கள் எதிரி. சோதனையாகப் பலமுறை பார்த்துள்ளேன். கருப்பு ஆடை அணிந்தால் ஏதாவது ஒரு அமங்கலம் நடக்கிறது. ஒருமுறை கருப்பு வண்ணச் சேலை கட்டிக்கொண்டு சமையல் செய்து கொண்டிருந்த போது மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டு விட்டது. உயிர் பிழைத்ததே அரிதாகிவிட்டது எனவே அன்றிலிருந்து கருப்பு நிறப் பொருட்கள் எதையும் பயன்படுத்துவதில்லை என்று கூறுகிறார்" மனோன்மணி எனும் தகவலாளி[55]. இதிலிருந்து கருப்பு வண்ணம் இந்த இனத்தின் பயன்பாட்டுவிலக்காக உள்ளது என்பது தெளிவாகிறது.

---

54. ஜோதிடர் நாராயணப் பணிக்கர், பாலத்துளி கேரளா, வயது 75
பாலகிருஷ்ணப் பணிக்கர் புலாப்பட்டரை கேரளா, வயது 70
அஷ்டமங்கல தேவ பிரசன்னம் (கோயில் ஜோதிடம்) நாள் 06.03.1996
55. மனோன்மணி, கோட்டூர் மலையாண்டிப்பட்டணம், வயது 45, நேர்காணல்
56. இராமசாமி செட்டியார், எம்.எம். கோப்பனூர் புதூர் வயது 76, நேர்காணல்
57. நாச்சிமுத்து செட்டியார், எஸ்.டி. கோப்பனூர் புதூர் வயது 72, நேர்காணல்

மது

மது அருந்துவது முழுமையாக இந்த இனத்தில் விலக்கிவைக்கப் பட்டுள்ளது எனலாம். 'மது' என்பதை இந்த இனத்தவர் அடியோடு வெறுக்கின்றனர். ஆய்வாளர் திரட்டிய வினா நிரலில், 'மது இந்த இனத்தின் எதிரி என்று அனைவரும் குறிப்பிட்டுள்ளனர்'. "மது என்பது எங்கள் குலதெய்வத்திற்கு ஆகாதது. மது மருந்தினால் குலதெய்வத்தின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். இது பஞ்சமாபாதகங்களில் ஒன்று" என்று எம்.எம் இராமசாமி செட்டியார் கூறினார்[56].

"இந்த இனத்தைச் சேர்ந்தவர் யாராவது மது அருந்தினால் அவரை முன்பெல்லாம் (ஜாதிப் பிரஷ்டம்) சாதியை விட்டு வெளியேற்றுதல் செய்து விடுவார்கள். அவருக்கு இந்த இனத்தில் பெண்கொடுக்க மாட்டார்கள்" என்று நாச்சிமுத்து செட்டியார் கூறினார்[57].

'மது இந்த அளவுக்கு உங்கள் வெறுப்புக்கு உள்ளாவதற்கு என்ன காரணம்' என்று கேட்டபோது, அங்குச்சாமி செட்டியார் பின்வருமாறு விடையளித்தார். "நாங்கள் வியாபாரிகள், எப்போதும் நாலு காசு வைத்திருப்பவர்கள். போதை மயக்கத்தில் அதை இழந்துவிடக்கூடாது என்பது ஒன்று. எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வியாபாரம் வரும். போதையில் இருந்தால் வியாபாரம் பலித்து வருகின்ற நேரத்திற்குப் போக முடியாமல் கோட்டை விடவேண்டியதாகிவிடும். மேலும் குடிகார வியாபாரியைப் பொருள் விற்கும் எந்த விவசாயியும் மதிக்கமாட்டான் என்பன போன்ற காரணங்களால் தான் அந்தக் காலத்திலிருந்தே எங்களது வியாபார இனத்தில் இதை வெறுத்து ஒதுக்கிவைத்தார்கள்" என்று கூறினார்[58].

இது குறித்து ஒரு கதையும் அனைவராலும் கூறப்படுகிறது.

"திப்பு சுல்தான் காலத்தில் ஒரு தளபதி 24 மனைத்தெலுங்குச் செட்டியார் சாதியில் பெண் கேட்டதற்கு, மாட்டு மாமிசமும், மதுவும் சாப்பிடுகிற உங்களுக்கெல்லாம் பெண் தரமாட்டோம் என்று இவர்கள் பதில் சொன்னார்கள். இதைக் கேட்ட தளபதி மாட்டு மாமிசமும், மதுவும் உங்களுக்கு ஆகாதா, அப்படியென்றால் உங்கள் கோயிலில் சாமிக்கு எது படையல் செய்யப்பட்டிருக்கிறது என்று போய்ப்பார் என்று கூறிவிட்டு அதேபோல் மதுவையும் மாமிசத்தையும் படையல் செய்ய ரகசியமாக ஏற்பாடும் செய்து விட்டான். அனைவரும் கோயிலுக்குப் போக அங்கே அந்தத் தளபதியும் வந்து சேர்ந்தான். அனைவரும் அந்தப் படையலைத் திறந்து பார்த்தனர். மதுக்குடம் பால்குடமாகிவிட்டது. மாட்டுத் தலை மான் தலையாகிவிட்டது. பால் குடத்தையும் மான் தலையையும் பார்த்துவிட்டுத் தளபதி மன்னிப்புக்

58. அங்குசாமி செட்டியார், ஆயக்குடி, வயது 69, நேர்காணல்

கேட்டுவிட்டுப் போனதாக ஒரு கதை கூறப்படுகிறது. இதைப் பல்லடம் செப்பேட்டில் 'கச்சி நகராதிபன் சமைய நாராயணன் சிங்கக் கொடியோன் சிரகத்தார்மார்பன் நடமாளிகைக்காரன் குஞ்சில் குலகாரன் மாட்டுத்தலையை பிரந்தலை ஆக்கிவைத்தவன் மதுபானையைப் பால்பானை ஆக்கிவைத்தவன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது[59]. (பல்லடம் செப்பேடு இணைப்பில் தரப்பட்டுள்ளது). இப்படி மது என்பது இந்த இனத்தின் பயன்பாட்டு விலக்கு என்பது புலனாகிறது.

குலதெய்வக் கோயில் கிராமக் கோயிலாதல்

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக் கோயில்கள் அனைத்துமே சிற்றூர்களில்தான் அமைந்துள்ளன. பேழை வைத்து வழிபாடு செய்துவந்தவர்களும் நடுகல் வைத்து வழிபாடு செய்தவர்களும் காலப்போக்கில் கோயில் கட்டி வழிபடத்தொடங்கினர். அந்தந்தக் குலத்தவர்களே அக்கோயில்களின் பூசாரிகளாக இருந்தனர். குறிப்பிட்ட குலத்தவர்கள் மட்டுமே வழிபட்டு வந்த அந்தக் குலதெய்வக் கோயில்களில், காலப்போக்கில் அக்கோயில்கள் இருந்த சிற்றூர் மக்களும் வழிபடத்தொடங்கினர். குலதெய்வக் கோயில்கள் கிராமக் கோயில்களாகவும் விரிவு பெற்றன. கோயில்களின் பரிணாம வளர்ச்சி பற்றிக் கூறவந்த ஆறு. ராமநாதன் "ஒவ்வொரு ஊரிலும் பல தெய்வங்கள் இருக்கும். இத்தெய்வங்கள் அவ்வூரில் பலரின் குலதெய்வங்களாக இருந்து பின் அனைவரும் வணங்கும் தெய்வங்களாக மாற்றம் பெற்றவை களாகவோ அல்லது வேற்றூரிலிருந்து அல்லது வேற்று நாடுகளிலிருந்து குடியேறிச் செல்வாக்குப் பெற்றவைகளாகவோ இருக்கும்"[60]. பூக்கேட்டல், காதணிவித்தல் போன்றவை கிராம மக்களால் இக்கோயில்களில் நடத்தப்படுகின்றன.

சொப்பியர், பலிவிதியர் குலதெய்வமான அங்காளபரமேஸ்வரியம்மன் கோயில் உள்ள மரிக்கந்தை மிகச் சிறிய கிராமம். போக்குவரத்து வசதி இல்லாத சிற்றூர். எனவே 50 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயிலின் தலைவரும் நிர்வாகிகளும் பொள்ளாச்சிக்கு இக்கோயிலை மாற்றுவது என்று முடிவெடுத்துப் பொள்ளாச்சியில் கருப்பராயசாமி கோயிலுக்கு அருகில் 55 செண்ட் இடம் வாங்கிக் கோயில் கட்டப் பாலக்கால் போட்டனர். ஆனால் மரிக்கந்தைக் கிராம மக்கள் "இந்தத் தெய்வத்தை நாங்களும் வழிபடுகின்றோம். இந்தக் கோயில் இல்லாவிட்டால் ஊர் பாழடைந்துவிடும். எனவே கோயிலை மாற்றாதீர்கள்" என்று கேட்டுக்கொண்டதின் பேரில் பொள்ளாச்சியில் புதிய கோயில் கட்டும் திட்டம் கைவிடப்பட்டது என்பதை அக்கோயிலின் தலைவர் அ.லோகசுந்தரம் விளக்கினார்[61].

59. இராசு,செ.பல்லடம் செப்பேடு கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள் பக்.272-277
60. இராமநாதன், ஆறு. நாட்டுப்புறப்பாடல் காட்டும் தமிழர் வாழ்வியல் பா. 208
61. லோகசுந்தரம், அ. மாக்கினாம்பட்டி, வயது 45, நேர்காணல்

"கிராமப் பெரியவர்கட்கு விழா அழைப்பை முறைப்படிதருவதும் விழாவிருந்தின்போது உள்ளூர் மக்களுக்கும் அன்னதானம் வழங்குவதும் எங்கள் கோயில் மரபு" என்று நாட்டுக்கல் பாளையம் அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில் பெருந்தகைமையர் ஆறுமுகம் செட்டியார் கூறினார்[62]. எனவே 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக் கோயில்கள், அவை அமைந்துள்ள ஊர்களில் வாழும் மக்களால் போற்றி வழிபடப்படும் கிராமக் கோயில்களாகவும், சமூக நலம் பயக்கும் அமைப்பாகவும் திகழ்கின்றன என்பது புலனாகிறது.

குலதெய்வத் திருவிழாக்கள்

இவ்வியல் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தின் குலதெய்வ வழிபாட்டினை இரு நிலைகளில் பகுத்து ஆராய்கிறது. இதில் இரண்டாவதாக உள்ள குலதெய்வத் திருவிழாக்கள் குறித்து இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

திருவிழாக்கள்

மக்கள் திரளாகக் கூடித் தமக்குள் ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு விழாக்கள் பெரிதும் துணைபுரிகின்றன. விழாக்களுடைய அடிப்படைப் பண்புகளைப் பற்றி விளக்குகின்ற ராபர்ட்ஜெரோம்ஸ்மித்[63]. "தனிமனிதர்களைக் குழுவாகவோ, சமூகமாகவோ ஒருங்கிணைத்துத் திரும்பத் திரும்ப நிகழ்த்தப்பெறும் பொதுமைக்கூறுகள் கொண்ட செயல்களுக்கு உரியவர்களாக்குகின்ற ஒரு முக்கியமான கருவியாகவும், கேளிக்கைகளுக்கும், மகிழ்ச்சிக்கும் இடம் தந்து வேறுபாடுகளை மறந்த ஓர் ஒத்துப்போதல் தன்மையினை உருவாக்கு கின்றதாகவும் விழாக்கள் திகழ்கின்றன" என்று எடுத்துரைக்கிறார். திருவிழாக்கள் சமூகத்திற்கும் எண்ணற்ற பலன்களைத் தருகின்றன. அவற்றை, ஜெரோம்ஸ்மித் கீழ்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகின்றார்[64].

1. தனிமனித உறவுகளைப் பலப்படுத்துகின்றன.

2. வேறுபட்ட குழுக்களிடையே பரஸ்பர தொடர்புகளை ஏற்படுத்துகின்றன.

3. தனிமனிதர்கள் அல்லது சமூகக் குழுக்களிடையே காணப்படும். வேறுபாடுகளுக்குப் பதிலாக அவர்களிடையே சகிப்புத் தன்மைகளை ஏற்படுத்துகின்றன.

---

62. ஆறுமுகம் செட்டியார், ஜீ. மாஜுப்பட்டி, வயது 55 நேர்காணல்

63. Robert Jerome Smith "Festivals and Celebrations" Folklore and Folklife P 167.

64. Ibid PP 167LP

4. தனிமனிதர்கள் குழுக்களோடு தம்மை இனங்கண்டுகொள்ளத் துணைசெய்கின்றன.

5. நாள்தோறும் உழைப்பிலிருந்து விடுபடவும் உழைப்பினால் உண்டாகும் சோர்விலிருந்து விடுபடவும் உதவுகின்றன.

6. பொருளாதார நிலையில் பரவலான ப்ரிமாற்றம் நடைபெறுகிறது.

7. மக்கள் தம்முடைய கலைத்திறன்களை வெளிப்படுத்தும் வாய்ப்பு உருவாகிறது.

8. கேளிக்கை, மகிழ்வு ஆகிய உணர்வுகளை வளர்த்துக் கொள்ள இடமளிக்கின்றன.

9. பழக்கவழக்கம் பண்பாட்டு பரிவர்த்தனைகளும் நிகழ்கின்றன.

இக்கருத்திற்கேற்ப 24 மனைத்தெலுங்குச்செட்டியார்களின் குலதெய்வத் திருவிழாக்கள் அமைந்துள்ளன. இக் குலதெய்வக் கோயில்களில் பெரும்பாலானவை நதிகளின் கரையோரங்களில் அமைந்துள்ளன. குலதெய்வக் கதைகளின் நிகழிடம் பெரும்பாலானவை நதிக்கரையோரங்களாகவே இருப்பதை மூன்றாம் இயலில் விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் செம்மையாக வாழ்தல் வேண்டிப் பொருளீட்டும் பொருட்டுப் பல்வேறு இடங்களுக்குச் செல்கின்ற மக்கள், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தங்கள் குலதெய்வத்தை வந்து வழிபடுகின்றனர். ஆனால் சில குறிப்பிட்ட விழாவின்போது, தாங்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் விழாக்களில் தவறாது வந்து கலந்து கொள்ளுகின்றனர். குலதெய்வ விழாக்களின்போது வெகு தூரத்தில் இருந்து வந்த மக்கள் பலரையும் சந்தித்துக் கொள்ளுகின்றனர். சிறு சிறு குழுக்கள் தொடர்பு கொள்ளுவதற்குக் குலதெய்வ விழாக்கள் துணைபுரிகின்றன. மண உறவு கொள்ளக்கூடிய இரு குலங்களும் சேர்ந்து வழிபடும் குலதெய்வக் கோயில்களில் நடக்கும் விழாக்களில், இரு குலத்தவரும் தமக்கிடையே மணப்பெண், மணமகனைத் தெரிந்து கொள்ளவும், தேர்ந்தெடுக்கவும் வாய்ப்புகள் அமைகின்றன. விழாக்களின் வாயிலாக அறிமுகமாகி மணம் பேசி முடித்த செய்திகள் பலவற்றை ஆய்வாளரால் அறிந்து கொள்ள முடிந்தது. அனைவரும் கூடித் தங்கள் குலதெய்வத்திற்குக் கூட்டு வழிபாடு, சடங்குகள் நிகழ்த்துகின்றனர்.

பெ.சுப்பிரமணியன் "கோயில்களோடு தொடர்புடைய விழாக்கள் சமயச் சார்புடையனவாகவும், பரந்த அளவில் சமூக நிகழ்வுகளாகவும் அமைகின்றன" என்பார்[65]. திருவிழாக்களின் நோக்கம் பற்றிக் கூறவந்த டி.எம்.பி. மகாதேவன் "மக்களுக்கு ஓர் ஆன்மீகச் சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதற்கே

65. சுப்பிரமணியன், பெ. பழனி முருகன் கோயில் தைப்பூச, பங்குனி உத்திர விழாக்கள், முனைவர் பட்ட ஆய்வேடு மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1986 ப. 95

திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டன. அச்சூழ்நிலையில் மக்கள் ஆன்மீகச் சுகம்பெற்று ஆன்மாவைப் பயன்படுத்திக் திருத்தி அமைக்கலாம். விழா நாட்களை ஒருவன் சரிவரப் பயன்படுத்திக் கொண்டால் அதுவே உண்மையில் அவன் வாழ்ந்த நாட்கள் ஆகும். ஆலயங்கள் இறைவனை நினைவூட்டும் இடங்களாக இருப்பது போல் திருவிழாக்கள் இறைவனோடு தொடர்பு கொள்ளச் செய்யும் காலங்களாகவே பயன்படுகின்றன " என்று கூறுகின்றார்[66].

குலதெய்வத் திருவிழாக்கள் சில நாட்கள் கொண்டாடப்பட்டபோதிலும், குலதெய்வ வழிபாட்டில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட நிலை தனிமனிதனுக்கும், சிறு சிறு குழுவினருக்கும் உண்டாகின்றது. 24 மனை இனத்தினர் குல தெய்வவிழாக்களில் பங்கேற்றதை பெரும் பேராகக் கருதி மகிழ்ச்சியுடன் பங்கேற்குகின்றனர்.

திருவிழாக்களில் இரு வகை

ஜெரோம்ஸ்மித் விழாக்களில் பங்கேற்போரின் எண்ணிக்கையைப் பொறுத்து விழாக்களை

1. பொதுவாகப் பலரும் பங்கேற்கும் விழாக்கள் (General participation festivals)

2.சிறு குழுக்கள் பங்கேற்கும் விழாக்கள் (Limited participation festivals) என்று இருவகையாகப் பிரிப்பார்[67]

இவற்றை விளக்க வந்த பெ. சுப்பிரமணியன், "பெருவாரியான மக்கள் பங்குகொள்ளும் விழாக்களில் ஒரு குறிப்பிட்ட சாதியோ, குறிப்பிட்ட வட்டாரமோ என்று இல்லாமல் பல்வேறுபட்ட குழுக்களும் கலந்து கொள்வர். சிறு கோயில்களில் குலதெய்வங்களுக்கு நிகழ்த்தப்பெறும் திருவிழாக்கள் சிறுகுழுக்கள் பங்குபெறும் விழாக்கள் என்று கூறலாம்" என்கிறார்[68]. இவர்களின் கருத்துப்படி 24 மனைத்தெலுங்குச்செட்டியார்களின் குலதெய்வ விழாக்கள் "சிறுகுழுக்கள் பங்கு பெரும் விழாக்கள்" வகையைச் சார்ந்ததாகும்.

இவர்களின் குலதெய்வக் கோயில்களில் கொண்டாடப்பட்டுவரும் திருவிழாக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்.

1. ஆடிப்பெருக்கு விழா

2. புரட்டாசி மாதச் சனிக்கிழமை விழா

3. கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா

4. மகாசிவராத்திரி விழா3

---

66. மகாதேவன் டி.எம்.பி. இந்து சமய தத்துவம் ப. 49

67. Robert Jerome Smith OPP. Cit. P. 167

68. சுப்பிரமணியன். பெ. மு.கு.நூ.ப. 95

ஆடிப்பெருக்கு

ஆடி மாதம் பதினெட்டாம் நாள் கொண்டாடப்படும் விழாவை ஆடிப்பெருக்கு என்றும் ஆடிப்பண்டிகை என்றும் குறிப்பிடுவர். தமிழ்நாட்டில் ஆற்றங்கரையோரங்களில் மிகவும் சிறப்பாக இவ்விழாவைக் கொண்டாடுவர். மேட்டுமகாதானபுரத்தில் உள்ள மகலாட்சுமியம்மன் கோயிலில் ஆடிப்பதினெட்டு, பத்தொன்பது ஆகிய இரு நாட்களிலும் தொடர்ச்சியாக இவ்விழாக் கொண்டாடப்படுகிறது. ஆடிப் பதினெட்டாம் நாளன்று மாலை நேரத்தில் மேட்டுமகாதானபுரத்திற்கருகில் ஓடுகின்ற காவிரிக்கரைக்குக் கோயில் தலைவர்கள் பூசாரியுடன் செல்கின்றனர். பூசாரி, 'குரும்பர்' இனத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அனைவரும் குளித்து முடித்துவிட்டுக் கையில் கங்கணம் கட்டிக்கொண்டு "சக்திக் கலசம்" முத்திரிப்பர். அப்போது பூசாரியின் தலையில் தேங்காய் உடைக்கப்படுகிறது. இச்சடங்கு முடிவதற்கு நள்ளிரவுக்கு மேல் ஆகிவிடும். சக்திக்கலசத்துடன் இரு வாட்கள் முதலியன பொதிமாட்டு வண்டியில் ஏற்றப்பட்டு நாதஸ்வர இசைக்குழுவினருடன் ஊர்வலமாகக் கொண்டு வரப்படுகிறது. ஊருக்குள் வந்தவுடன் ஒவ்வொரு வீட்டின் முன்பும் வண்டி நிறுத்தப்படுகிறது. அந்த வீட்டிலுள்ளோர் தேங்காய் பழம் முதலியன தட்டில் வைத்துக் கொடுக்கப் பூசாரி பூசை செய்து கொடுக்கிறார். இங்ஙனம் அனைத்து இல்லங்களிலும் பூசை செய்யப் பெற்றுக் கோயிலுக்கு வரும்போது விடிந்து விடுகிறது. சக்திக்கலசம் தெய்வத்தின் முன்னால் கருவறைக்குள் வைக்கப்படுகிறது. கோயிலுக்கு வெளியே பைரவர் சிலைக்குச் சற்று தூரத்தில் ஆடு பலிகொடுக்கப்படுகிறது. பாதக்குறடு என்று சொல்லப்படுகிற ஆணியால் செய்யப்பட்ட காலணியை அணிந்து கொண்டு பூசாரி கருடக் கம்பத்தின் மீது ஏறிச் சூடம் பற்ற வைக்கிறார். ஆண்களும் பெண்களும் கோயிலுக்குள் சன்னதிக்கு முன்புறம் வரிசையாகக் காவிரியில் குளித்த ஈரத்துணியுடன் அமர்ந்திருக்கும் அவர்கள் அருகில் பூசாரியின் உதவியாளர் ஒரு கருப்புக் கம்பளியில் தேங்காய்களை எடுத்துக்கொண்டு வருகிறார். பூசாரி கோயிலுக்குள் இருந்து "கோவிந்தா, கோவிந்தா" என்று கூவிக்கொண்டே அருளோடு வெளியே வர, அவரிடம் அவரின் உதவியாளர் தேங்காய்களை எடுத்துத் தருகிறார். அவற்றை ஒவ்வொன்றாகப் பெறும் பூசாரி, அமர்ந்துள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் தலையில் வரிசையாகத் தேங்காய்களை உடைத்துக்கொண்டே செல்கின்றார். இதைப்பற்றி இக்கோயில் நிர்வாகத்தால் வெளியிடப்பட்ட மலரில் "ஆண்டுதோறும் ஆடிப்பெருக்குத் திருவிழா எங்கள் கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆடி 19-ஆம் நாள் அடியார்களின் தலையில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்வ துண்டு. ஒரே அடியில் தேங்காய் தலையில் உடைபட்டுவிடும். தலைக்கு எவ்விதக் கேடும் வராது. மகாலட்சுமி திருவருளால் இக்காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளனர்[69].

69. 24 மனைத்தெலுங்குச் செட்டியார் மும்மடியார் கோத்தர குலதெய்வம் அருள்மிகு மகாலட்சுமி ஆலயம், மேட்டுமகாதானபுரம். கும்பாபிஷேக சிறப்பு மலர் - 1978 ப. 3

நூற்றுக்கணக்கானோருக்குத் தலையில் தேங்காய் உடைக்கப்பட்டது. பலரது தலை, முடிக்காணிக்கை தந்த மொட்டைத் தலையாக இருந்தது. சுமார் பத்து எண்ணிக்கைக்குள் இருப்போருக்குத் தலையில் லேசாக இரத்தம் வந்ததையும் அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டதையும் ஆய்வாளர் பார்த்தார். அதைப்பற்றிப் பேட்டி கண்டபோது அதற்குக்காரணம் தெய்வக்குற்றம் என்று பதிலளித்தனர். ஏனைய அனைவருக்கும் தேங்காய் உடைத்தலால் எவ்வித விளைவும் ஏற்படவில்லை என்பதைக் களஆய்வில் உறுதி செய்து கொள்ளப்பட்டது.

காவிலி பாளையம் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் போன்ற வேறு சில குலதெய்வக் கோயில்களிலும் ஆடிப்பெருக்கு விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

புரட்டாசிச் சனிக்கிழமை

வழிபாட்டிற்குகந்த மாதங்களாகப் புரட்டாசியையும் மார்கழியையும் வைணவர்கள் போற்றுவர். வாரநாட்களில் சனிக்கிழமையைப் பெருமாள் தினம் என்று போற்றி வழிபடுவர். சிறப்புமிக்க மாதங்களில் ஒன்றான புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகள் வழிபாட்டிற்குரிய புனித நாட்களாகக் கருதப்படுகின்றன. 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக் கோயில்களில் மேல்நிலையாக்கத்தால் வைணவத்தைத் தழுவிய கோயில்களில் புரட்டாசிச் சனிக்கிழமைகள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. கீழ்க்கண்ட குலதெய்வக் கோயில்களில் புரட்டாசிச் சனிக்கிழமையன்று விழாக்கள் நடைபெறுகின்றன.

மக்கடையர் குலத்தவர்கள் வணங்கும் 1. அந்தியூர் 2. மூக்குத் தெரிச்சான்பாளையம் 3. கருடன்கோட்டை 4. பூளவாடி 5. தெலுங்குப்பட்டி 6. வாளவாடி 7. நீலங்காளிவலசு 8. வேடசந்தூர் அழகாபுரி 9. அந்தியூர் ஆகிய ஊர்களிலும் மும்முடியார் குலத்தவர் வணங்கும் 1. நவக்காணி 2. அந்தியூர் ஆகிய ஊர்களிலும் ராஜபைரவர் குலத்தினர் வணங்கும் மெட்ராத்தி, திருமூர்த்திமலை சுரகையர் குலத்தினர் வழிபடும் பூளவாடி ஆகிய ஊர்களிலும் உள்ள குலதெய்வக்கோயில்களில் புரட்டாசிச் சனிக்கிழமை பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி மாதத்திலுள்ள நான்கு சனிக்கிழமைகளில் ஏதாவது ஒரு சனிக்கிழமை விழா நாளாகக் கொண்டாடப்படுகிறது. விழாநாளாகக் கொண்டாடப்படும் சனிக்கிழமை கோவிலுக்குக் கோவில் வேறுபடுகிறது. சிலர் முதல் சனிக்கிழமையிலும் சிலர் கடைசிச் சனிக்கிழமையிலும் தங்களின் பழைய மரபை ஒட்டி விழா நாளைக் கொண்டாடுகின்றனர்.

பேழை வழிபாட்டிலுள்ள கோயில்களில் பேழையிலுள்ள இறை பொருட்களான நாமக்கட்டி, கண்ணாடி முதலான பொருட்களைக் கோவிலுக்கு அருகில் உள்ள நீர் நிலைக்குச் (கங்கைக்கு) சுத்தப்படுத்துவதற்காக

எடுத்துச்செல்வர். பூசாரி குளித்துவிட்டு ஈரஉடம்புடன் பேழையைச் சுத்தப்படுத்துவார். பின்பு தீர்த்தம் முத்திரிக்கப்படுகிறது. தீர்த்தத்தையும் பேழையையும் பூசாரி சுமந்துவர ஊர்வலமாகக் கோயிலுக்கு வருகின்றனர். வருகின்ற வழியில் இரண்டு பெண்கள் ஊர்வலத்தின் முன்னால் நீர் நிறைந்த குடத்தை எடுத்துக் கொண்டு அதில் இருக்கும் நீரைத் தரையில் தெளித்துச் சுத்தப்படுத்தியவண்ணம் செல்வர். ஊர்வலம் கோயிலை அடைந்தவுடன் கோயிலை வலம் வந்து பேழை கோயிலுக்குள் வழிபடுபொருளாக வைக்கப்படும். அதற்குப் பக்கத்தில் நீர் நிலையில் முத்திரிக்கப்பட்ட தீர்த்தக்கலசம் சக்திக்கரகமாக வைக்கப்படும். இங்ஙனம் கொண்டாடுகிறமரபு இன்று வரை அந்தியூர் மும்முடியர் குலத்தைச் சேர்ந்த பெருமாள் கோயிலில் பின்பற்றப்படுகிறது. விழா முடிந்ததும் பேழை மூடப்பட்டுப் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

பேழைக்கு மாற்றாகச் சிலை வழிபாடு நிலைபெற்றுள்ள குலதெய்வக் கோயில்களில் நீர் நிலைக்குச் சென்று சக்திக்கலசம் முத்திரிக்கப்படும். சடங்கு மட்டும் நடத்தப்பட்டு தெய்வச்சிலைக்குத் தைலக்காப்பு சாத்தி பன்னிரண்டு வகையான அபிஷேகங்கள் செய்து திருமஞ்சனம் செய்யப்படுகிறது. கொடுமுடியிலிருந்து அல்லது திருமூர்த்தி மலையிலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தங்களை முதன்மைத் தெய்வத்திற்கும் துணைத் தெய்வங்களுக்கும் அபிஷேகம் செய்வர்.

அபிஷேகம்

தெய்வத்திற்கு அபிஷேகம் செய்யப்படும் பூசனைப்பொருட்களின் பட்டியலைக் கைலாசநாதக் குருக்கள் பிறகண்டவாறு தருகின்றார். அவை எண்ணெய், அரிசிமா, மஞ்சட்பொடி, பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு பழவகைகளின் சாறு, இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், பன்னீர், கும்பநீர், புண்ணிய நதிகளின் தீர்த்தம் முதலியனவாம். சைவ வைணவ, நாட்டார் கோயில்களிலும் இத்தகைய அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. மேலே குறிப்பிட்ட பொருட்களில் சில இல்லாத நிலையிலும் பிறபொருட்களில் அபிஷேகங்கள் செய்யப்படுதலையும் காண்கின்றோம்[70].

இக்கோயில்களில் தலைக்கட்டு பொங்கல் இல்லை. அனைவரது அரிசியையும் பெற்றுப் பொதுப்பொங்கல் வைப்பர். தெலுங்குப்பட்டியில் உள்ள மக்கடையர் குலதெய்வமான பாலயம்மன் பாப்பாயம்மன் கோயிலில் பொங்கல் வைப்பதற்குரிய அரிசியை, நெல்லைக் குத்தித் தாங்களே தயாரிக்கின்றனர். கோயிலில் வைக்கப்பட்டுள்ள உரலையும், உலக்கையையும் கழுவி அவற்றிற்குச் சந்தனப்பொட்டு வைத்துக் குங்குமம் இடுகின்றனர்.

---

70. கைலாசநாத குருக்கள் க. மு.கு.நூ.ப. 194

கன்னிப்பெண்களைக் கொண்டு நெல்லைக் குத்த வைத்து அரிசியாக்கி அதனைப் பொங்கலுக்குப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். கோயிலில் மிக முக்கியச் சடங்குகளில் ஒன்றான பொங்கல் வைப்பதற்கு அரிசி தயாரிக்கும் பணியில் கன்னிப்பெண்கள் ஈடுபடுத்தப்படுவதும், கன்னிமைக்கு இவ்வினத்தில் அளிக்கப்படும் முதன்மையினை விளக்குவதாகும்.

பேழைக்குள் உள்ள பொருட்கள்

பேழைக்குள் வைக்கப்படும் பொருட்கள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. தெலுங்குப்பட்டிப் பாலாயம்மன், பாப்பாயம்மன் கோயிலில், "மாங்கல்யம் போன்ற தோற்றமுடைய 'காரை' என்கின்ற அணிகலன், முத்து வண்ணச்சேலை, மணநாளில் அணியக்கூடிய கூரைப்புடவை, மணி, தட்டு, முதலியன அப்பேழைக்குள் இருக்கும்" என்று கோவிந்தராஜ் செட்டியார் பேட்டியின் போது தெரிவித்தார்.[71]

பேழை வழிபாடு சிலைவழிபாடாக மாற்றம் பெற்றது

காலப்போக்கில் தெய்வத்திற்கெனத் தனியாகச் சிலையமைக்கப்பட்டுக் கோயில் கட்டப்பட்டவுடன் பேழைவழிபாடு மெல்ல மாற்றம் அடைந்தது. எடுத்துக்காட்டாக, தெலுங்குப்பட்டி பாலாயம்மன்- பாப்பாயம்மன் கோயிலில் பேழை வழிபாடுதான் தொடக்க காலத்திலிருந்து நடந்து வந்தது. அதே இடத்தைக் கோயிலுக்கென விலைக்கு வாங்கிக் கோயில் கட்டப் பூமிப் பூசை செய்யப்பட்ட அன்று அதைக் கள ஆய்வு செய்து இக்கருத்தை உறுதிப்படுத்தின செய்தி குலதெய்வங்களும், குலதெய்வங்கள் பற்றிய கதைகளும் எனும் இயலில் காணலாம்.

சிலை வழிபாடு நிலைபெற்றுள்ள பல குலதெய்வக்கோயில்களில், இதற்கு முந்தய நிலையிலிருந்த பேழை வழிபாட்டை நினைவுகூறும் வகையிலும் பேழையை வணங்கும் வகையிலும் பேழைக்கு பூஜை செய்கின்ற போக்கை பல இடங்களில் காணமுடிகின்றது.

சிலை வழிபாடாக மாற்றம் பெற்ற கோயில்களில் ஒன்றான கணக்கன்பட்டி அக்கம்மார் ஈஸ்வரி கோயிலில் மாற்றத்திற்குப் பிறகும் பேழை வழிபாடு தொடர்கிறது. ஆண்டுதோறும் நடக்கும் விழாக்களில் பேழை வழிபாடு நடப்பதற்குப் பதிலாகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பெரிய கும்பிடு விழாவின் போது மட்டும் பேழை வழிபாடு நடத்தப்படுகிறது.

---

71. கர்ணன் கோவிந்தராஜ் செட்டியார் வேட்டைக்காரன்புதூர், வயது -52 நேர்காணல்

கார்த்திகை விளக்கீட்டுவிழா

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக்கோயில்களில் தொன்றுதொட்டுக் கொண்டாடப்பட்டு வரும் சிறப்பான விழா கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா ஆகும்.

கார்த்திகை மாதம் 27 விண்மீன்களில் ஒன்றான கார்த்திகை நட்சத்திரம் பௌர்ணமி திதியுடன் கூடிவருகின்ற நாளில் கார்த்திகை விழா கொண்டாடப்படுகிறது. இதனை 'மதிநிறைந்து ஆறுமீன்சேரும் அகவிருள் நாடுநாள் மருக விளக்கறுத்து ' என்ற அகப்பாடல் உறுதிப்படுத்துகிறது[72]. கார்த்திகை விண்மீன் ஆறுசிறு மீன் கூடிய தொகுதியாக விண்ணில் தெரிவதால் இதற்கு அறுமீன் என்ற பெயரும் உண்டு. கார்த்திகை என்பதற்கு 'அழல்' என்றும் 'எரி' என்றும் 'ஆரல்' என்றும் பெயர்கள் உண்டு. 'அழல்சேர் குட்டம்' என்று சிலம்பு கூறுகிறது[73]. 'எரிசடை எழில் வேழம்' என்னுமிடத்தில் 'எரி' என்பதன் பொருள் 'கார்த்திகை' என்று பரிமேலழகர் குறிப்பிடுகின்றார்[74]. இந்தக் கார்த்திகை விழா தொன்று தொட்டு நடந்துவரும் பழம்பெரும் விழா என்பதைத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் தொல் கார்த்திகை நாள் என்று கூறுவதிலிருந்தும்[75] அந்நாளில் பெண்கள் வீடுகளில் விளக்கேற்றி மகிழ்வர் என்பதை

"நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட
தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகி "

என்ற கார் நாற்பது பாடலும் [76]

"கார்த்திகை சாற்றிற் கழிவிறக்குப் போன்றனவே " என்று களவழி நாற்பதும் உறுதிப்படுத்துகின்றன[77]. 'பெரிய கார்த்திகை' என்று இந்த விழாவை அழைக்கும் சொல்வழக்கும் உண்டு. ' அருவி ஆன்ற உயர் சிமை மருகில் பெருவிழா விளக்கம் போல் பலவுடன் ' என்ற அகப்பாடலுக்கு விளக்கம் சொல்ல வந்த சோமசுந்தரம் பிள்ளை, 'கார்த்திகை விழாவை மிகப் பெரிய விழா' என்று விளக்கம் கூறுவதிலிருந்தும்[78] சிறப்பு மிக்க விழாவாக இது திகழ்ந்துள்ளது என்பது புலனாகிறது.

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் குலதெய்வக் கோயிலில் கார்த்திகைத் திருநாளில் ஏற்றப்படும் ஒளித் தீபம் தங்கள் வாழ்க்கைக்கு ஒளி

---

72. அகநானூறு பா. 141
73. சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம் கட்டுரைக்காதை அடி 134.
74. பரிபாடல் பா. 11.2
75. திருஞானசம்பந்தர் தேவாரம் திருமலைப்பூர் பதிகம் பா. 3-2
76. கார்நாற்பது பா. 26
77. களவழி நாற்பது பா. 17
78. அகநானூறு பா. 185.11

கூட்டும் என்று நம்புகின்றனர். கார்த்திகைக்கு முதல்நாள் தத்தம் வீடுகளில் அகல்விளக்குகளை வரிசையாக ஏற்றுவார்கள். கார்த்திகைக்கு முன்னர் உள்ள நட்சத்திரம் பரணி, எனவே பரணி நட்சத்திரத்தன்று ஏற்றப்படும் தீபம் என்பதால் இதற்குப் 'பரணி தீபம்' என்ற பெயரிட்டு அழைப்பர். மறுநாள் கார்த்திகை நாளில் குலதெய்வக் கோயிலில் கார்த்திகை விளக்கு ஏற்றுவர். அன்றைய நாள் வீடுகளில் யாராவது ஒருவர் மட்டும் இருந்து வீட்டில் விளக்கேற்றுவர். பெண்கள் அனைவரும் குல தெய்வக் கோயிலில் விளக்கேற்றி வழிபடுவர். குலதெய்வத்தின் முன்புறமும், துணைத்தெய்வங்கள், காவல் தெய்வங்கள் முன்புறமும் கோயில் வாசற்படியிலும் அகல் விளக்கேற்றுவர்.

குலதெய்வக் கோயிலில் ஜோதி ஏற்றுதல்

கோயில் சார்பாகக் கோயிலுக்கு எதிர்புறமுள்ள விளக்குத் தூணில் பெரு விளக்கு (ஜோதி) ஏற்றும் நிகழ்வும் இடம் பெறுகிறது. அவரவர்கள் வீடுகளிலிருந்து எண்ணெய் கொண்டு வருவார்கள். மட்பாண்டம் செய்யும் தொழிலாளி (குயவர்) புதிதாக ஒரு பெரிய மண் சட்டியை வனைந்து கொண்டு வந்து கொடுப்பார். அந்த சட்டிக்குத் தீர்த்தம் தெளித்துத் திருநீறு, சந்தனம், குங்குமம் வைத்து அதன் வாயிற்கு ஒரு வட்டமான மலர் மாலை அணிவிப்பார்கள். அந்தச்சட்டி வண்ணார் ஒருவரால் விரிக்கப்பட்ட மாற்றின் மீது வைக்கப்படுகிறது. புதிய துணியை எடுத்து அதில் நவதானியத்தை வைத்துக் கட்டுவர். அதன் பின்பு மரக்கொம்பு ஒன்றை எடுத்து அந்தக் கொம்பின் மீது நவதானியம் கட்டிய புதுத்துணியை சுற்றிக் கட்டுவார்கள். இதற்குக் "கோடி சுற்றுதல்" என்று பெயர். கோடி சுற்றிய கொம்பு தீபச்சட்டிக்குள் வைக்கப்பட்டு அது சாய்ந்து விடாமல் இருப்பதற்காக இரு கற்களைக் கொம்புக்கு இடையில் வைப்பார்கள். சட்டி வாயின் நடுப்பகுதியில் கோடி சுற்றப்பட்ட கொம்பு கற்களின் துணையோடு நேராக நிற்கிறது. கோடியின் மீது முதலில் ஒரு கன்னிப் பெண் எண்ணெய்யை ஊற்றுகிறார். பின்னர் ஒவ்வொருவரும் தாங்கள் கொண்டுவந்த எண்ணெயைக் கரண்டியில் எடுத்து ஊற்றுவர். சோதிச் சட்டியின் முக்கால் பகுதி எண்ணெய்யால் நிரம்புகிறது. கோடி சுற்றிய கொம்பும் எண்ணெய்யில் நனைந்து நிற்கிறது. கோவில் முதன்மையாளர் ஒருவர் அழைக்கப்படுகிறார். தெய்வத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு சுவாமிக்குத் தீபாராதனை காட்டிவிட்டு அவருக்கு மாலை அணிவிப்பர். கையில் துணியால் சுற்றப்பட்ட ஒரு சும்மாடும் அவரிடம் கொடுக்கப்படும். பக்தர்கள் அனைவரும் சுவாமியின் பெயரைச் சொல்லி "யுகே யுகே" என்று வாய்விட்டு உரக்கக் கூறுவர். முதன்மையாளர் தன்னுடைய தலையில் சும்மாட்டை வைக்கிறார். கோயில் தலைவர் மற்றுமுள்ள அறங்காவலர்கள் மங்கல வாத்தியத்திற்கு நடுவே தீபச் சட்டியில் உள்ள கொம்பின் மீது கற்பூரத்தை வைத்து நெருப்புப் பற்றவைக்கின்றனர்.

தீபச்சட்டியை முதன்மையர்தம் சிரசின் மீது வைத்துக் கோயிலை வலம் வந்து கோயிலுக்கு முன்புறமுள்ள ஜோதி ஸ்தூபம் என்று சொல்லும் 'தீபக் கம்பத்தின்' மீது ஏற்றி வைப்பார். அனைத்து இசையும் முழங்க பக்தர்கள் 'யுகே யுகே' என்று முழங்க பயபக்தியுடன் "ஜோதி ஏற்றுதல்" எனும் பெருவிளக்கீடு இங்ஙனம் நடைபெறும். பின்னர் பெருவிளக்கிற்குத் தீபாராதனை செய்யப்படுகிறது. மீண்டும் கோயிலுக்குள் வந்து பூசை செய்கின்றனர்.

"விளக்கேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் விளக்கு ஸ்தூபியெல்லாம் சமீப காலத்தில்தான் கோயில்களில் வைக்கப்பட்டவை. முன்பெல்லாம் பால்வடியும் மரமான 'பாச்சான் மரத்தில்' கொம்பு வெட்டி அந்த மரத்தை நட்டு அதன்மேல் தான் கார்த்திகை ஜோதி வைக்கப்பட்டது" என்கிறார். எஸ்.நடராஜன்[79].

இத்தகைய தீ விழாக்கள் மனிதனுக்கும் கண்ணுக்குப் புலனாக ஒரு சக்திக்கும் இடையே உருவானது. இது வழிவழியாக வருவது. பிற புனிதப் பொருட்களோடு தீப்பிழம்பையும் தெய்வத்திற்குக் காணிக்கையாக்குவதால் தனிமனிதனுக்கும், அவன் குழுவுக்கும் மனிதனை, வாழும் நிலத்தை விலங்கினங்களை மற்றுமுள்ள வளப்பொருட்களை காக்கும் திறனுடையதாகிறது" என்பார் கிருஷ்ணசாமி[80].

The fire festival or the festival of the light is meant for an association of man and family with unseen power. The Character of the relationship is traditional for making an offering of light or which protects man animal and land with fertility is thus a duy of both an individual and group".

குலதெய்வக் கோயிலில் விளக்கேற்றி வழிபடுவதன் மூலம், தங்கள் குடும்பம் ஒளிமயமாக விளங்கும். மட்பாண்டத்தில் பால்வடியும் மரத்தின் கொம்பை வைத்துப் புதுத்துணியில் நவதானியத்தை முடிந்து கோடி சுற்றி அதன் மீது எண்ணெய் ஊற்றிப் பெருவிளக்கேற்றி வழிபடுவது வளமைக் கோட்பாட்டின் வழிநிற்கும் சிறுநெறி மரபாகும். அந்தணர்களின் வழிபாட்டு முறைகள், மந்திரங்கள் குலதெய்வக் கார்த்திகைத் திருவிழாவில் இடம் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொருவரும் எண்ணெய் கொண்டு வந்து பெருவிளக்கிற்கு ஊற்றுவது கார்த்திகை விழாவில் பல குடும்பத்தினர் பங்கு கொள்ளுதலைக் குறிக்கின்றது. சமயச் சடங்கின் வழி சமூக சமத்துவம் ஏற்பட இவ்விழா உதவுகின்றது. கார்த்திகை விளக்கீட்டு விழா பெண்கள் பெருமளவில் பங்கு கொள்ளும் விழாவாகும். விளக்குச்சட்டியில் முதன்முதலில் கன்னிப்பெண்தான்

---

79. நடராஜன், எஸ். பொள்ளாச்சி, வயது 46, நேர்காணல்

80. Sankar Sengupta. Krishnasamy C.K. Fire Festivals of India P - 64

எண்ணெய் ஊற்ற வேண்டும் எனும் மரபு கன்னிமைக்குத் தரப்படும் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது.

நவதானியம்

அரிசி, கோதுமை, துவரை, பயிறு, கொள்ளு, உளுந்து, எள், காராமணி, கடலை ஆகிய ஒன்பது வகை தானியங்களுக்கு 'நவதானியம்' என்று பெயர்[81]. கார்த்திகைத் திருவிழா விளக்கீட்டுச்சடங்கின் தொடக்கமே புதுத்துணியில் நவதானியத்தைப் போட்டு முடிவதுதான். இதிலிருந்து நவதானியம் என்பது மிகமுக்கியமான ஒன்று என்பது புலப்படுகிறது. நவதானியம் வேளாண்மையின் ஓர் சின்னமாகக் கொண்ட போதிலும், வளத்தின் சின்னமாகவும் வணிகத்தின் சின்னமாகவும் கொள்ளுவதற்கு வாய்ப்புண்டு. சீத்தலைச்சாத்தனார் கூலவணிகர் என்று கூறப்படுவதை இந்த இடத்தில் நினைவு கூறலாம். இதன் காரணமாக நவதானியத்தை வணிகப்பண்டமாகக் கொள்ளுவதற்கும் வாய்ப்புண்டு.

வங்க தேசத்தில் ஆடி மாதத்தில் ஒரு நாளில் நிகழும் ஒரு சடங்கினை தாஸ்குப்தா "விளைச்சலை மிகுதிப்படுத்துவதற்காக ஆற்றங்கரை மண்ணில் நவதானியம் தூவி, நள்ளிரவில் சிறு பொம்மை வைத்து வழிபாடு செய்வர். அது அறுவடை முடிந்து பருவத்தின் அழிவினைச் சுட்டுகிறது. இச்சடங்கு முழுவதும் ஒன்றிழிந்து ஒன்று தோன்றுவதாக அமைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்றார்"[82]. வளமைச்சடங்கின் பாற்பட்டது நவதானியம் என்பதும், அதே நோக்கில் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தினர் நவதானியத்தைப் பயன்படுத்துகின்றனர் என்பதும் இந்த ஒப்பாய்வின் மூலம் பெறப்படுகிறது. இவ்வினத்தினர் கால்நடை வளர்ப்பிலோ, வேளாண்மையிலோ, வணிகத்திலோ, தங்கள் வாழ்க்கையை நடத்தியிருக்க வேண்டும் என்று கருதுவதற்கு இந்த நவதானியச் சடங்கு இடம் அளிக்கிறது.

எனவே கார்த்திகை விளக்கீட்டு விழா அனைவரது பங்களிப்பையும் பெறுகின்ற, கன்னிமையைப் போற்றுகின்ற வளமை வழிபாட்டு விழாவாகும்.

மகாசிவராத்திரி விழா

மாசிமாதம் கிருஷ்ணபட்சச் சதுர்த்தி திதியும் திருவோண விண்மீனும் கூடிய நாளை "மகாசிவராத்திரி" என்று அழைக்கின்றனர்.

"நதிகளில் சிறந்தது பாகீரதி. மரங்களில் சிறந்தது கற்பகத்தரு. கடலுள் சிறந்தது திருப்பாற்கடல். பசுக்களில் உயர்ந்தது காமதேனு.

---

81. சிங்காரவேலு முதலியார் ஆ. மு.கு.நூ.ப. 940

82. Indian Antiquiyy Vol. XXV P - 62

யானைகளுள் சிறந்தது ஐராவதம். மலைகளுள் உயர்ந்தது கைலாசம் என்பது போல விரதங்களுள் சிறந்தது சிவராத்திரி என்பர். ஒரு சிவராத்திரி விரதக் கரணமியற்றுதல் நூறு ஏகாதசி விரதம் (நோற்றலின்) பலன் கிடைக்கின்றது.

சிவராத்திரி விரதம் இருப்போருக்கு காசியில் முக்தி அடைந்த பலன் கிட்டுகிறது. ஆன்மாக்களின் துக்கத்தைப் போக்கி சுகத்தைத் தரும் ராத்திரி சிவராத்திரி " என்பார் நாகர்கோயில் கிருஷ்ணன்[83] மகாசிவராத்திரி விழா, விரதத்தோடு தொடர்புடைய ஒரு திருவிழாவாகும்.

24 மனைத்தெலுங்குச் செட்டியார் குலதெய்வக் கோயில் அனைத்திலும் மகாசிவராத்திரி விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

சக்திக் கலசம்

சிவராத்திரி விழா நிகழ்வுகளில் மிக முக்கியமானது சக்திக் கலசம் எடுப்பதாகும். சிவராத்திரி இரவு தொடங்கியவுடன் கோயிலின் தலைவர் பெரியதனம், செட்டுமை ஆகிய அனைவரும் கோயில்முன் அமர்கின்றனர். வண்ணார் மாற்றுச் சேலை ஒன்றினை விரிக்கின்றார். புதிதாக வனையப்பட்ட சட்டி ஒன்றினைக் குயவர் கொண்டுவந்து மாற்றின் மீது வைக்கிறார். மண் கலசமாகிய அந்தச் சட்டிக்குத் திருநீறு, சந்தனம், குங்குமம் முதலியன வைக்கப்பட்டு நூல் சுற்றப்படுகிறது. தீபாராதனைக்குப்பின் மண் கலசத்தைச் செட்டுமைக்காரர் சும்மாடு சுற்றித் தலையில் வைத்துக் கொள்ளச் சிறிய கலசங்கள் இரண்டைக் கன்னிப்பெண்கள் இருவர் தூக்கிவரக் கோயிலை வலம் வந்து ஊர்வலமாகக் கங்கையை (கிணற்றைக் கங்கை என்று அழைப்பர்) நோக்கிச் செல்கின்றனர். கிணற்றடியில் அனைவரும் அமர்கின்றனர். கிணற்றில் தண்ணீர் இறைத்துச் செட்டுமைக்குத் தலையோடு ஊற்றுவர். பின்னர் கொண்டு வந்த மண்கலசத்தில் தண்ணீர் நிரப்புவர். அப்போது தலைவர், செட்டுமை, கரகம் எடுப்பவர், பூசாரி, பம்பைக்காரர் ஆகிய அனைவருக்கும் மற்றும் பம்பைக்கும் கங்கணம் கட்டப்படுகிறது.

"கரகம் என்பது நீரைக் கடவுளாகக் கருதிக் கலசத்தில் ஏற்றுதலாகும். விரதம் பூண்டவருக்கு மட்டுமே கலசந் தூக்கலும் சில இடங்களில் கலசத்திலுள்ள நீரே அம்மனாகக் கருதப்பெறுதலும், சுமந்து வருதல், அம்மனுடைய வரவாகக் கருதலும், பாதுகாவலர்கள் சக்தியுடன் அருகில் வருதலும் இதைச் சக்திக்கலசம் என்று அழைக்கப்பெறுதலையும் கருவறை வரை இக்கலசம் செல்ல முடியும் என்பதனையும் காணும்போது இறையாகவே நீர் கருதப்பட்டது என்பதை உணரமுடியும்" என்று அறிவுநம்பி கூறுகிறார்[84].

---

83. நாகர்கோயில் கிருஷ்ணன் தெய்வீகப் பண்டிகைகளும், தியானங்களும் ப. 109

84. அறிவு நம்பி, அ. தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள் பக் 29-30

கரகம் என்ற சொல் பண்டைய இலக்கண இலக்கிய நூல்களில் புனித நீர் வைக்கும் கமண்டலத்தைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் புனிதநீர் வைக்கும் குடம் அல்லது செம்பினைக் கரகம் என்றும் சுட்டும் நிலையைக் காணலாம்.

'சக்திக்கரகம்' அல்லது 'கும்பம் தாளித்தல்' என்ற சடங்கிற்குப் பயன்படுத்தப்பெறும் ஒரு சிறிய பானை கும்பம் எனப்படுகிறது. "பண்டைய நாளில் தாய்த் தெய்வத்தைக் குறிப்பதற்கும் ஒரு சிறிய பானையைக் குறியீடாக வைத்திருந்தனர். தென் இந்தியாவில் பல பகுதிகளில் அகழ்ந்து எடுக்கப்பட்ட தாழிகள் இந்தக் கருத்தின் மூல முதல் ஆகும். மனிதன் எந்தத் தாயின் வயிற்றில் இருந்து வந்தானோ அதே வயிற்றைச் சென்றடைகிறான் என்ற கருத்தில் அக்கால மக்கள் இறந்தவர்களைத் தாழியில் வைத்து அடக்கம் செய்தனர்.

இந்தப் புதைத்தாழிகள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கின்றன. அதற்குப்பின் கி.பி முதல் நூற்றாண்டில் இருந்து சில கோயில்களின் கருவறையில் இது போன்ற சிறிய குடத்தைப் புதைத்துள்ளனர். கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் இவ்வாறு புதைக்கப்பட்டு இருந்த குடங்கள் அகழ்வாராய்ச்சியில் வெளிக்கொணரப்பட்டுள்ளன[85].

கும்பேஸ்வரர் கோயில் தல புராணம், 'கிருதயுகத்தில் கும்பேஸ்வரர் குடவடிவில் இருந்ததாகவும், உலகம் அழிந்துவிடாமல் ஊழியில் இருந்து உலகையும், உயிர்களையும் கும்பத்தில் வைத்துப் பாதுகாத்ததாகவும் குறிப்பிடுகிறது[86].

எனவே கும்பம் என்பது செறிந்த ஆற்றல் மிக்கது என்றும் புனிதத் தன்மை மிக்கது என்றும் கருதப்படுகிறது என்பது புலனாகிறது.

சக்திகலசம் புறப்படுதல்

நீர் நிரப்பப்பட்ட மண்கலசத்தில் ஜவ்வாது, பன்னீர், புனுகு முதலான மணம் கமழும் பொருட்களும், எலுமிச்சம் பழமும் போடப்படுகின்றன. கூடியுள்ள பக்தர்கள் அனைவரும் வரிசையாகச் சென்று காணிக்கைகளை அந்த மண்கலசத்தினுள் போட்டு அதனைத் தொட்டுக் கும்பிடுகின்றனர். வேப்பிலையைக் கொத்தாகக் கயிற்றில் கட்டி அந்த வேப்பிலைக் கொத்தை நீர் நிரப்பப்பட்ட கலசத்தின் வாயில் சொருகுகின்றனர். இப்போது அது சக்திக் கலசமாகிறது. சக்திக் கலசத்துடன் மேலும் இரு கலசங்கள் முத்தரிக்கப் படுகின்றன.

---

85. பூங்குன்றன், ஆர். காப்பாட்சியர் தமிழ்நாடு தொல்லியல் ஆய்வுத்துறை - கோவை
86. சாமிநாத அய்யர், கும்பேஸ்வரர் கோயில் தலபுராணம் ப. 24

பம்பைக்காரர் பம்பை அடித்துக் குலதெய்வத்தின் பெருமைகளையெல்லாம் சொல்லிச் சக்தியை அழைக்கின்றார். பின்னர் செட்டுமை சக்திக்கலசத்தையும் மற்ற இரு கலசங்களையும் அந்தக் குலத்தினைச் சேர்ந்த கன்னிப் பெண்கள் இருவர் சுமந்து வர ஊர்வலமாகக் கோயிலுக்குள் வந்து தெய்வத்தின் முன்னர் சக்திக் கலசம் வைக்கப்படுகிறது.

அலகு நிறுத்துதல்

சக்திக் கலசத்தைச் சன்னதியில் வைத்து அதன்மீது ஒரு கூரிய வாள் ஒன்றினைப் பூசாரி நிறுத்துவார். எவ்விதப் பிடிமானமுமின்றி அந்த வாளின் கூர்முனை சக்திக் கலசத்தின் விளிம்பின்மீது அந்தரத்தில் நிற்பதைப் பார்த்தவுடன் அனைவரும் பரவசத்துடன் "யு.கே யு.கே " என்று குரலெழுப்புவர். அலகு நிறுத்துதல் கள்ளி வலசு அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில் போன்ற சில இடங்களில் மட்டும் நடைபெறுகிறது.

சக்திக் கலசம் எடுப்பது குறித்து ஆறு. இராமநாதன் சில பொதுமைப் பண்புகளைத் தொகுத்துக் கூறுகின்றார்[87]. அவையாவன.

சக்திக்கரகம்

1. வழிபாட்டுச் சடங்கின் பிரிக்க முடியாத அங்கம்
2. நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது.
3. வழிபடும் குழுவினருள் ஒருவரே கரகத்தைத் தூக்குவார்
4. பயிற்சி எதுவும் இல்லை.
5. கரகம் தூக்குமுன் கடுமையான விரதம் மேற்கொள்ள வேண்டும்.
6. ஆண்கள் மட்டுமே கரகம் தூக்க அனுமதி உண்டு.
7. பெரும்பாலும் ஒருவர்
8. கரகம் கீழே விழாமல் இருக்க தெய்வசக்தியே காரணமாக நம்பப்படுகிறது.
9. கரகக்காரர் தெய்வசக்தி உடையவராக வழிபடப்படுகிறார்.
10. வீதிகள் மற்றும் ஊர்மக்களின் வாழ்விடங்கள் ஆட்டக் களங்களாகும்.
11. பின் தொடரும் ஊர் மக்களும் வீட்டிலிருப்போர் பார்வையாளர்கள்.
12. சாமி வந்து ஆடுவது தவிர பார்வையாளரைக் கவருவதற்காக ஆடுவதில்லை.
13. மரபுவழியைப் பின்பற்றுவதில் கவனமாக இருப்பர்.
14. இடையே கரகம் கீழே இறக்கப்படுவதில்லை.
15. கரகம் தவறி விழுந்தால் சாமிக் குற்றமாகக் கருதப்பட்டு ஊருக்குத் தீங்கு வரும் என்று நம்பப்படுகிறது.

---

87. இராமநாதன், ஆறு - நாட்டுபுற இயல் ஆய்வுகள் பக் 246 - 247

16. சடங்கு தொடங்குவது முதல் முடிவது வரை இதன் காலம் நீடிக்கும்.

17. கூலி எதுவும் பெறுவதில்லை.

இந்தப் பொதுமைப் பண்புகள் அனைத்தும் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்கள் எடுக்கும் சக்திகரக வழிபாட்டுக்கும் பொருந்தி வருகின்றன.

பள்ளயப்பூசைகள்

கோயில் மண்டபத்தில் விரிக்கப்பட்டுள்ள மாற்றின் மீது பக்தர்கள் தாங்கள் கொண்டு வந்தள்ள அவரை, துவரை, கொள்ளு, பாசிப்பயறு, சுண்டல் முதலான தானியங்களைப் போடுவார்கள். அந்தத் தானியங்களை எல்லாம் சேகரித்துச் சென்று உப்பின்றி வேகவைப்பர். வேகவைத்த தானியங்களை எடுத்து வந்து ஒரு பாத்திரத்தில் தெய்வத்தின் முன் வைத்துப் படைத்துப் பூசை செய்வர். இதற்குப் பள்ளயப் பூசைகள் என்று பெயர். பூசை செய்யப்பட்ட பள்ளயத்தைப் பக்தர்கட்கு அளிப்பர். உப்பு இல்லாத அந்தப் பண்டத்தை மக்கள் உவகையுடன் பிரசாதமாகக் கருதித் தின்று மகிழ்வர்.

தூங்காது இருத்தல்

பள்ளயப் பூசை சிவராத்திரியன்று நள்ளிரவுக்குப் பிறகு நடைபெறுகிறது. அதற்குப் பிறகு விடியும் வரை ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு விதமாகக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பக்திக் கதைகள் நிறைந்த உடுக்கைப் பாடல், வாய்ப்பாட்டு, இசைநிகழ்ச்சிகள், இலக்கிய நிகழ்ச்சிகள் ஆகிய இவற்றில் ஏதாவது ஒன்று நடைபெறும். இதில் ஈடுபட்டுள்ள மக்கள் சிவனைத் தியானித்து உண்ணாமலும், உறங்காமலும் விரதம் இருப்பர்.

தலைக்கட்டு வரி

திருமணமானவர்களைத் 'தலைக்கட்டு ' என்று அழைக்கின்றனர். திருமணமான ஒவ்வொரு ஆணையும் ஒரு 'தலைக்கட்டு எனக் கணக்கிடுவர். மனித வாழ்வில் இன்றியமையாத நிகழ்ச்சிகளுள் ஒன்று திருமணமாகும். தனியாக இருந்த ஒருவன் குடும்பத்தினனாகின்றான். அவனைத் தலைவனாகக் கொண்ட அக்குடும்பம் ஒரு தலைக்கட்டாகக் கணக்கிடப்படுகின்றது.

ஒவ்வொரு குலதெய்வக் கோயிலிலும் எத்தனை தலைக்கட்டுக்கள் உள்ளன என்பதைக் கணக்கிட்டு வைத்துள்ளனர். மூக்குத் தெரிச்சான் பாளையம் கோயில் தலைவர் என். சுப்பிரமணியம் "எங்கள் கோயிலில் 350 தலைக்கட்டுக்கள் உள்ளன" என்று கூறினார்[88]. ஒரே குடும்பத்தில் மூன்று ஆண்களுக்குத் திருமணமாகியிருந்தால் 'மூன்று தலைக்கட்டு ' என்று கணக்கிடுவர். திருமணமான ஒவ்வொரு ஆளும் தனித்தனியே தலைக்கட்டு

88. சுப்பிரமணியம். என், உடுமலைப்பேட்டை வயது 57, நேர்காணல்

வரி செலுத்த வேண்டும். மரிக்கந்தை அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் மகா சிவராத்திரி விழா அழைப்பிதழில்,

"தலைக்கட்டு வரி செலுத்தவது குல மக்களின் தலையாய கடமை திருமணமான ஒவ்வொருவரும் தனித்தனித் தலைக்கட்டு ' என்று அச்சிட்டுள்ளனர்.

பல்லடம் மாவட்டத்திலுள்ள நாரணாபுரம் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் கந்தவங்கலவர் குலத்திற்குரியது. 1.2.1798 அன்று இக்குலத்தவர்கள் அனைவரும் கூடிக் கோயில் செலவுகளுக்காகத் தலைக்கட்டு வரியாக நாலணா விதித்ததை மைய அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினரால் படியெடுக்கப்பட்ட பல்லடம் செப்பேடு விளக்குகிறது[89]. இந்தக் குலத்தவர்களின் பட்டியலும் இந்தச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. மேலும் இச்செப்பேட்டில்,

"இத்தாதி உறவின் முறையார் சகலரும் கூடி நாரணாபுரம் அங்காளபரமேஸ்வரிக்கு நித்தியப்படி அபிசேகக்கட்டளை, நெய்விளக்கு திருமாலை, திருமஞ்சனம் திருவுலகைபள்ளயம் இது முதலாகிய தருமத்திற்குள் கட்டின வீட்டிற்குத் தலைக்கட்டுக்கு வருசமொன்றுக்கு ஒரு பணமும் புத்திர பவுத்திர பரம்பரையாகக் கல்லும் காவேரியும், புல்லும் பூமியும் ஆகாசம் பூமி சந்திர சூரியருள்ள வரை இந்தத் தருமத்தை நடத்திக் குடுத்து வருவராகவும்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. இந்தச் செப்பேட்டின் முழுமையும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. மாசி மகா சிவராத்திரி விழாவின்போது வசூலிக்கப்படும் இந்த வரித் தொகையிலிருந்துதான் ஆண்டு முழுவதற்கும் உரிய கோயில் செலவு செய்யப்படுகின்றது.

சிவராத்திரிப் பொங்கல்

குலதெய்வக் கோயிலில் பொங்கல் வைப்பதில் கீழ்க்கண்ட மூன்று சடங்கு நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.

1. தலைக்கட்டுப்பொங்கல்
2. பொதுப்பொங்கல்
3. பொங்கல் வைத்துத் தெய்வத்திற்குப் படையல் செய்தல்

1. தலைக்கட்டுப் பொங்கல்

சிவராத்திரி நாளின் இரவு விடிந்ததும் அதிகாலை நேரத்தில் பெண்களெல்லாம் குளித்துவிட்டுக் கோயிலுக்கு முன்புறமுள்ள இடத்தில் பொங்கல் வைக்கிறார்கள். இதற்குத் தலைகட்டுப்பொங்கல் என்று பெயர். ஒவ்வொரு பெண்ணும் தனித்தனியாக தலைக்கட்டுப் பொங்கல் வைப்பர்.

---

89. இராசு, செ. மு.கு.நூ பக். 272-277

பொங்கல் பொங்கிய பின்னர் அதனுள் அரிசி போடும் சடங்கினை அத்தலைக்கட்டுக்கு உரிய குடும்பத்தினர் செய்கின்றனர்.

2. பொதுப் பொங்கல்

வேளாண்பூண்டி, மூக்குத்தெரிச்சான்பாளையம் முதலான ஊர்களிலுள்ள சில குலதெய்வக் கோயில்களில் தனித்தனியாக ஒவ்வொரு குடும்பத்தினரும் தலைகட்டுப் பொங்கல் வைப்பதில்லை. மாற்றுவிரித்து ஒரு பெரிய மண்பானை ஒன்றை வைத்திருப்பர். இந்த மண்பானைக்கு 'மொடா' என்று பெயர். ஒவ்வொருவரும் தாங்கள் கொண்டுவரும் அரிசியை அந்த மொடாவில் போடுவார்கள். பின்பு அந்தப் பானையைச் சுத்தப்படுத்தி அதிலேயே பொங்கல் வைப்பார்கள். இதற்குப் பொதுப்பொங்கல் அல்லது மொடாப்பொங்கல் என்று பெயர். எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து பொங்கல் வைக்கும் வழக்கம் குலதெய்வ வழிபாடுகளில் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மொடாவில் பொங்கல் வைத்து வழிபடும் வழக்கம் மிகப்பழமையானது எனலாம். பொதுப்பொங்கல் என்பது எல்லோருடைய நலனும் சேர்ந்த, அனைத்து மக்களின் பங்களிப்பு உள்ள, பரந்த நோக்கினை வளரச் செய்யும் சடங்கு எனலாம்.

3. பொங்கலைப் படையல் செய்தல்

பொங்கல் வைத்து முடித்ததும் அந்தப் பொங்கலில் சிறிது அளவு ஓர் இலையில் எடுத்து ஒரு தட்டில் வைத்து அதன்மேல் வெல்லம் வைத்து அவற்றுடன் தேங்காய், பழம், ஊதுபத்தி, சூடம், வெற்றிலைபாக்கு ஆகியவற்றுடன் பூசாரி கையில் கொடுத்துப் பூசைக்கு வைப்பார்கள். பூசை செய்தபின்னர் இலையில் வைக்கப்பட்ட பொங்கலைத் "தளுகை" என்று குறிப்பிடுகின்றனர்.

தீர்த்தம் செலுத்துதல்

மகாசிவராத்திரி விழாவின் மிகமுக்கிய நிகழ்வாக இருப்பது மலையனூரிலிருந்து எடுத்து வரும் தீர்த்தத்தை தெய்வத்திற்குத் திருமுழுக்குச் செய்வதாகும். பொங்கல் படையல் முடித்த பின்னர் சுமார் 11 மணியளவில் தீர்த்த நீராட்டு நடைபெறும். இது குறித்துத் 'தீர்த்தம்' எனும் துணைத்தலைப்பின் கீழ்காணலாம்.

தீர்த்தக்காவடி

தீர்த்தம்

தீர்த்தம் என்பது புனிதநீர் எனப்படும். தீர்த்தம் கொண்டுவருதல் அல்லது தீர்த்தமாடுதல் என்பது புண்ணியம்மிக்க செயலாகக் கருதப்படுகிறது. தெய்வீகம் பொருந்திய நதிகளாகக் கருதப்படுபவைகளில் உள்ள நீர்தான் புண்ணியத் தீர்த்தங்களாகின்றன.

'மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன மூன்றும் தெய்வீக அம்சங்கள், தீர்த்தத்தின் சிறப்பில் வழிபாட்டின் சிறப்பும் அடங்கிக்கிடக்கிறது. தீர்த்தத்தினால் மூர்த்தியை முழுக்காட்டுவது புண்ணியமான செயலாக நம்பப்படுகிறது. புண்ணிய தீர்த்தத்தில் நீராடுவதும், இறைவனுடைய மூர்த்தியைத் தீர்த்தத்தால் முழுக்காட்டுவதும், ஒரு தீர்த்தத்தைக் குறிப்பிட்ட இடத்திலிருந்து கொண்டு வருவதும் இறைவழிபாட்டிற்குரிய முக்கிய அம்சங்களாகும்' என்பார் கா.கைலாசநாத குருக்கள்[90].

புனிதம் நிறைந்த நீர் தீர்த்தமானது. இந்நீர் நிறைந்துள்ள இடங்களுக்குப் பயணித்தல் 'தீர்த்தயாத்திரை ' என்றழைக்கப்படுகிறது. இறையினால் சிறப்புப் பெற்ற ஊர்கள் சிறப்பு வாய்ந்தவை. இறையின் சிறப்பும் தீர்த்தச் சிறப்பும் பிறசிறப்புக்கள். இதையே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சொல்லடுக்கால் உணர்த்துவர். இறையுடன் தொடர்புகொண்டதால் மட்டுமே இப்புனித நீர்கள் போற்றப்பட்டன' என்பார் அ. அறிவுநம்பி[91].

நடுகல்லுக்கு நீர்ப்படைசெய்யும் மரபு பண்டைய நாளிலேயே இருந்தது. என்பதை

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்'

எனும் தொல்காப்பியத் தொடரும்[92]

'புடைநடு கல்லின் நாட்பலியூட்டி

நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய''

என்ற புறநானூற்றுப் பாடலும் உறுதிப்படுத்துகின்றன[93].

---

90. கைலாசநாத குருக்கள், க. மு.கு.நூ.ப. 55

91. அறிவுநம்பி, அ. தமிழரின் வழிபாட்டுச் சிந்தனை ப. 33

92. தொல்காப்பியம் பொருளதிகாரம் நூ.பா. 33

93. புறநானூறு பா. 329 2-3

நடுகல் நாளடைவில் தெய்வச் சிலைகளாக வடிவம் மாறிய பின்னரும் புண்ணிய நீராட்டுச் செயல் தொடர்ந்திருக்கிறது எனத் தெரிகிறது.

வெம்மை தணித்தல்

புண்ணியத் தீர்த்தங்கள் கோடையில் வெம்மையையும் தெய்வச்சினத்தின் வேகத்தையும் தணித்துக் குளிர்ச்சியூட்டும் தன்மையுடையன. தெய்வத்தை நீராட்டிக் குளுமைப்படுத்தும் ஆற்றல் தீர்த்தத்திற்கு உண்டு என நம்புகின்றனர். 'தெய்வங்களுக்குக் குளிர்ச்சி செய்வதால் தீமைகள் நிகழாது எனவும், நன்மை மிகும் என்றும் தெய்வத்திடம் காணப்படும் கோபம் நீங்கிச் சாந்தம் தோன்றிப் பக்தர்களுக்கு அருள்புரியும் என்றும் நம்புகின்றனர். குறிப்பிட்ட நாளில் தீர்த்தம் கொண்டு வந்து வழிபட்டால் நற்பலன் கிட்டும் என்ற தத்துவம் இந்த நீராட்டுதலில்' அடங்கியுள்ளது என்பார் பெ. சுப்பிரமணியன்[94]

நீர்ப்படையால் வெம்மையும், வெஞ்சினமும் தணிந்து தெய்வம் குளிர்ச்சியடையும் எனும் கருத்தை

'காடு கனலக் கனலோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ளப் - பாடி
நயத்தக மண்ணி நறுவிரை கொண் டாட்டிக்
கயத்தகத்து உய்த்திட்டார் கல்

என்ற புறப்பொருள் வெண்பா மாலைப்பாடல் உணர்த்துகிறது[95].

1. தீர்த்தம் எடுக்கும் இடங்கள்

அ. கொடுமுடி

24 மனைத்தெலுங்குச்செட்டியார் இனத்திலுள்ள சில மக்கடையர் குலத்தைச் சேர்ந்தவர்கள் கொடுமுடியிலிருந்து தீர்த்தம் கொண்டு வருகின்றனர். கொடுமுடி ஈரோட்டிலிருந்து 37 கி.மீ தூரத்தில் காவிரி நதிக்கரை ஓரத்தில் அமைந்துள்ள ஊராகும். கொங்கேழ் சிவத்தலங்களுள் இக்கொடுமுடி ஆறாவது தலமாகும். கோயிலுக்கு எதிர்புறம் ஓடும் காவிரியாற்றிலிருந்து இக்கோயில்கட்குத் தீர்த்தம் முத்திரித்து எடுத்து வருகின்றனர்.

ஆ. மேல்மலையனூர்

தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்திலுள்ள மேல்மலையனூர் அங்காளம்மன் கோயில் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் குலதெய்வக் கோயில்கட்கு மூலத்தலம் என்பர். இக்கோயில் பற்றி இயல் 3-ல் 'குலதெய்வங்கள்' தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது.

---

94. சுப்பிரமணியன், பெ. மு.கு.நூ ப. 252

95. புறப்பொருள் வெண்பா மாலை, பொதுவியல், கல்நீர்ப்படுத்துதல் பா. 10

இங்கு இரண்டு குளங்கள் 1. அக்கினிக் குளம் 2. பொன்னேரிக்குளம் என்ற பெயரில் அமைந்துள்ளன. அக்கினிக்குளத்தில்தான் தீர்த்தக்காவடிக் குழுவினர் அனைவரும் தீர்த்தம் முத்திரிக்கிறார்கள். பொன்னேரிக் குளத்தில் கோயில் சார்பாக ஒரு தீர்த்தக்குடம் முத்திரிக்கப்படுகிறது.

மேல்மலையனூரர் அங்காளம்மன் கோயிலில் இருந்து தீர்த்தம் முத்திரிக்க அக்கினிக் குளத்திற்குச் செல்லும் வழியில் உள்ள சுடுகாட்டில் பூசை செய்து சுடுகாட்டு மண்ணைத் தாங்கள் கொண்டு வந்து கபாலத்தில் (கபாலம் என்பது ஒரு பாத்திரம்) நிரப்பி பூசை செய்துவிட்டுப் பின்னர் அக்கினிக் குளத்திற்குச் செல்லுகின்றனர்.

இ. திருமூர்த்திமலை

உடுமலைப்பேட்டையிலிருந்து தெற்கே 18 கி.மீ தூரத்திலுள்ள மும்மூர்த்திகளின் தலமிது. கோயில் ஓரத்தில் திருமூர்த்தி ஆறு ஓடுகிறது. அந்தியூர் மும்முடியர் குலத்தவர்கள் இங்குத் தீர்த்தம் முத்திரிக்கிறார்கள்.

தீர்த்தக் காவடி எடுத்துவருதல், தொடர்ச்சியாகச் சில சடங்குமுறைகளைக் கொண்டுள்ளது. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்.

தீர்த்தக்காவடி சடங்குகள்

1. புறப்படும் போது செய்யும் சடங்குகள்
   - அ. வீட்டிலிருந்து புறப்படும்போது செய்யும் சடங்குகள்
   - ஆ. குலதெய்வக் கோயிலிருந்து புறப்படும்போது செய்யும் சடங்குகள்
2. தீர்த்தம் முத்திரிக்கும் போது செய்யும் சடங்குகள்
3. தீர்த்தம் கோயிலை அடைந்தபோது செய்யும் சடங்குகள்

1. புறப்படும் போது செய்யும் சடங்குகள்

அ. வீட்டிலிருந்து புறப்படும் போது செய்யும் சடங்குகள்

தீர்த்தயாத்திரையில் கலந்து கொள்ளுபவரது வீடு முழுவதும் முதலில் கழுவிச் சுத்தப்படுத்தப்படுகிறது. வாசலைச் சாணத்தால் மெழுகித்தூய்மைப் படுத்துகிறார்கள். தீர்த்தக்குடம் சுத்தப்படுத்தப்பட்டுக் காணிக்கை, பச்சரிசி, சர்க்கரை முதலானவற்றை அதனுள் இடுவர். பின்பு தேங்காய், பழம் வைத்துத் தீர்த்தக்குடத்திற்குப் பூசை செய்யப்படுகிறது. இந்தப் பூசையில் குடும்பத்திலுள்ள அனைவரும் கலந்து கொள்ளுகின்றனர். இது முதலில் வீட்டில் நிகழும் சடங்காகும்.

தீர்த்தயாத்திரைக்கு பக்தர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் நிலைபற்றி பக்தவத்சல பாரதி,

இந்தப் பயணம் என்னும் நிலைமாற்ற நிகழ்வில் சடங்குக்கு யாத்திரைக்கு உட்படுவோரைத் (மீவியலர்கள்) தயார்படுத்தும் முன் மீவியல் நிலை (Preliminal Period) பயணத்தின் தொடக்கமாகும். அதாவது தீட்சை பெறுவதற்கு (Orientation) இயேசு கழகத்தின் பயிற்சி அவசியமாவது போல, திருமணம் நடைபெற நிச்சயதார்த்தம் அவசியமாவது போல யாத்திரை என்னும் நிகழ்விற்கும் ஒரு முன்-மீவியல் நிலை அவசியமாகிறது. இதன் தன்மை சமயத்திற்குச் சமயம் மாறுபடுவதாக உள்ளது. விரதம், நோன்பு, பிற சடங்கு ஆசாரங்களை மேற்கொள்ளுதல் ஆகிய எந்த ஒன்றும் இதிலடங்கும்.[96] என்பார்.

மேற்கூறிய மானிடவியல் கருத்தின்படி 24 மனை இனத்தில் தீர்த்தயாத்திரையின் ஆயத்தப்பணியாக வீட்டை தூய்மைப்படுத்துதல், விரதமிருத்தல், உடலுறவு தவிர்த்தல், தீட்டுதவிர்த்தல் முதலான நிகழ்முன் (Preliminary) நெறிகள் உறுதியாக பின்பற்றப்படுகின்றன.

ஆ. குலதெய்வக்கோயிலிருந்து புறப்படும் போது செய்யும் சடங்குகள்

அறிவிக்கப்பட்ட தீர்த்தக்காவடியின் புறப்பாட்டு நாளன்று தீர்த்தக்காவடி எடுப்போர் அவர்களை வழியனுப்பவந்த ஓரிரு குடும்ப உறுப்பினர்களுடன் குலதெய்வக்கோயிலுக்கு வந்து தமது தீர்த்தக் குடங்களைக் குலதெய்வத்தின் முன் வைப்பர். இரவு 7 மணியளவில் தீர்த்தக் குடங்கட்குப் பூசை செய்த பின்னர் அவற்றை எடுத்துக்கொண்டு பம்பை இசை ஒலிக்கக் கோவிலை வலமாகச் சுற்றி வருவர். பிறகு வாகனத்தில் பயணத்தைத் தொடங்குவர். இந்தக் காலங்களில் குலதெய்வக்கோயில்களிலிருந்து தீர்த்தம் உள்ள இடங்களுக்குத் தீர்த்த யாத்திரையாக நடந்தே சென்றுள்ளனர். இக்காலத்தில் போக்குவரத்து வசதிகள் மிகுதியாக உள்ள காரணத்தால் தூரத்தையும் காலத்தையும் கருதி வாகனங்கள் மூலம் தீர்த்தயாத்திரை செல்லுகின்றனர்.

2. தீர்த்தம் முத்திரிக்கும் போது செய்யும் சடங்குகள்

புண்ணிய தீர்த்தத் தலங்களை அடைந்தவுடன் தீர்த்தம் எடுப்போர் ஆற்றில் நீராடிவிட்டுத் தாம் கொண்டு சென்ற தீர்த்தக்குடத்தில் நீர் நிரம்பி வழியும் அளவுக்கு நீர் எடுப்பர். கரையோரத்தில் உள்ள மரத்தடியில் நீரால் நிரப்பப்பட்ட தீர்த்தக்குடங்களுடன் அனைவரும் அமர்வர். தீர்த்தக் காவடிக்குழுவின் மூத்தவர் ஒருவர் தம் வாயைத் துண்டால் மூடிக்கட்டிக்கொண்டு தீர்த்தம் முத்திரிக்கும் பணியை முன்நின்று செய்கின்றார். தீர்த்தக்குடத்திற்குள் ரூபாய் நாணயத்தையும், எலுமிச்சம் பழத்தையும் போட்டுக் குடத்தின் வாயை வாழை இலையால் மூடி, வாழை நாரால் கட்டுவர். அதற்குமேல் தீர்த்தக் குடத்திற்குரியவரது பெயர் அல்லது சின்னம் கொண்ட

96. பக்தவத்சல பாரதி தமிழர் மானிடவியல் ப. 274

துணியால் கட்டிக் குடத்திற்கு மாலை சூட்டுவர். பம்பை ஒலிக்கப் பூசை செய்து கபாலத்திலுள்ள தீர்த்தத்தைத் தெளித்தவுடன் தீர்த்தக்குடம் தீர்த்தக் காவடியாக மாறுகிறது. பிறகு அங்குள்ள கோயிலுக்குத் தீர்த்தக்காவடிகள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டுப் பூசை செய்த பின்னர் தாங்கள் பயணம் செய்யும் வாகனங்களில் ஏற்றிப் பயணத்தைத் தொடருவர். திருமூர்த்திமலையிலும் கொடுமுடி ஆற்றிலும் மேல்மலையனூர் அக்கினிக்குளத்திலும் நீராடித் தீர்த்தக்குடம் எடுப்போர் அனைவரும் மேற்கூறியவாறே தீர்த்தம் முத்திரிக்கும் சடங்குகளைச் செய்கின்றனர்.

தீர்த்தக் காவடிகளை இறக்கி வைத்தல்

தீர்த்தக் காவடிகளை நேரடியாகக் குலதெய்வக் கோயிலுக்குக் கொண்டு செல்வதில்லை. ஊருக்குள் அல்லது பக்கத்து ஊரில் உள்ள வேறு ஒரு கோயிலில் பாதுகாப்பாக அவற்றை வைப்பர். நாய் முதலான விலங்கினங்களும் தீட்டு உடையோரும் நெருங்காத முறையில் பாதுகாப்பான இடத்தில் தீர்த்தக்குடங்கள் வைக்கப்படுகின்றன. பின்னர்க் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று வழிபாட்டுச் சடங்குகளில் கலந்து கொள்ளுவர்.

தீர்த்தக் காவடி செலுத்துதல்

மேல் மலையனூரிலிருந்து எடுத்துவரப்பட்டு ஊரிலுள்ள வேறு கோயில்களில் வைக்கப்பட்ட தீர்த்தக்காவடிகளை அவற்றை எடுத்துவந்த குழுவினர், கோயிலின் அறங்காவலர்கள் மற்றும் செட்டுமை முதலியோர் உடன்வர பம்பை வாத்தியம் முழங்க ஆட்டபாட்டங்களுடன் வீதியுலாவாகக் கோயிலுக்கு எடுத்து வருவர். கோயிலை வலமாக வந்து முன்புறம் அமர்வர். கோயிற் பூசாரி தீர்த்தக் காவடிகட்குத் தீபாராதனை காட்டி அவற்றின் மீது திருநீறு தூவுவார். அப்போது அனைவரும் "யுகே யுகே" என்று பரவசத்துடன் ஒலி எழுப்புவர். தீர்த்தக்காவடி எடுத்து வந்தவர்கள் துணியால் மூடி வாய்க்கட்டுக் கட்டிக்கொண்டு தீர்த்தக்காவடியின் கயிற்றினை மெல்ல அவிழ்ப்பர். தீர்த்தக்குடத்தில் தீர்த்தம் முழுஅளவில் நிறைகுடமாக இருந்தால் நன்மை உண்டாகும் என்றும் தீர்த்தம் குறைந்திருந்தால் தெய்வக் குற்றம் உண்டு என்றும் நம்புகின்றனர். தீர்த்தக்காவடித் திறப்பு நடந்தவுடன் கோயிலின் பெரிய தனம் மற்றும் பூசாரி ஆகியோர் ஒவ்வொரு தீர்த்தக்காவடிக்கும் தேங்காய், பழம் உடைத்து வைத்துத் தீபாரதனைகாட்டித் தீர்த்தத்திற்குள் விபூதியையும் பூக்களையும் இடுவர். பிறகு வரிசையாக ஒவ்வொருவரும் தங்களது தீர்த்தக்காவடியை எடுத்துச்சென்று கோயிலின் கருவறைக்கு முன்னர் நிற்பர். தீர்த்தத்தைப் பூசாரி வாங்கித் தெய்வத்திற்கு நீராமுழுக்குச் செய்வார் (அபிஷேகம்) குடத்தில் சிறிதளவு தீர்த்தத்துடன் பூசாரி அதைத் திருப்பித் தருவார். அதைத் தீர்த்தக்காவடி எடுத்தவர் வாங்கித் தம் கண்களில் ஒத்திக்கொண்டு தலைமேல் தெளித்துக் கொள்வார். அவரது குடும்பத்தினருக்கும் தீர்த்தத்தை வழங்குவர்.

குண்டம் இறங்குதல்

குறுஞ் சாலை போன்ற நெடியதொரு பள்ளம் அமைத்துத் அதில் தீ வளர்த்து அதில் இறங்கி நடந்து செல்லுவதைக் "குண்டம் இறங்குதல்" அல்லது "பூ மிதித்தல்" என்று அழைக்கின்றனர். 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வக்கோயில்களில் கள்ளிவலசு எனுமிடத்தில் உள்ள சொப்பியர் குலதெய்வமான அங்காளபரமேஸ்வரியம்மன் கோயிலில் மட்டும் குண்டம் இறங்குதல் நடைபெறுகிறது. கோயிலுக்கு எதிர்ப்புறமுள்ள சுமார் அறுபது அடி நீளமும் மூன்று அடி அகலமும் உள்ள இரண்டு அடிப் பள்ளம் உள்ள ஒரு சாலை அமைக்கப்படுகிறது. பின்பு சிவராத்திரிக்கு மறுநாள் காலை சூரியோதயப்பொழுதில் குண்டம் இறங்குதல் என்னும் பூமிதி விழா நடைபெறும். முதல்நாள் இரவே இந்த இடம் கூட்டிச் சுத்தப்படுத்தப்பட்டுத் தண்ணீர் தெளித்தபின் சாண நீரும் மஞ்சள் நீரும் தெளிக்கப்படுகிறது. அதன்பின் விறகு அடுக்கப்பட்டு அதன்மீது சூடம் வைக்கப்பட்டுக் கொளுத்தப்படுகிறது. அதிலிருந்து தீ வளர்க்கப்பட்டு இரவெல்லாம் அனல் உருவாகிறது. காலையில் கோவிலில் தெய்வத்திற்கு வெண்ணையில் அலங்கரித்துக் குளிர்ச்சிப் படுத்துகின்றனர். (வெண்ணைக்காப்பு). பூசை நடத்திய பின்னர்க் குண்டம் இறங்குபவர்கட்கு அறிவிப்புத் தந்தவுடன் கோயிலின் முன்பு கூடுகின்றனர். பம்பைக்காரர் இசையொலி எழுப்ப உற்சவர் சிலை உள்ள இரதத்திற்கு மாவிலைத் தோரணம் கட்டி நான்கு பேர் தூக்கிவர அனைவரும் ஆற்றங்கரைக்குச் சென்று இரதத்தைக் கரையில் வைத்துவிட்டுக் குளிக்கச்செல்லுகின்றனர். குளித்து முடித்தவுடன் அனைவரும் மஞ்சள் ஆடை அணிந்துகொண்டு கங்கணம் கட்டிக்கொள்ளுகின்றனர். உற்சவ இரதத்தில் உள்ள அம்மனுக்குப் பூசை செய்து 'சக்தி அழைப்பு' அருளோடு அனைவரும் கோவிலுக்கு வந்து முன்புறம் உள்ள குண்டம் இறங்குமிடத்திற்கு வருகின்றனர். உற்சவ இரதம் குண்டத்தை ஒருமுறை வலமாகச் சுற்றி வருகிறது. முதலில் எலுமிச்சம் பழம் மற்றும் பல்வகைப் பூக்களால் செய்யப்பட்ட பூப்பந்து ஆகியவற்றை அக்கினிக்குண்டத்திற்குள் வீசிவிட்டுப் பம்பைக்காரர் பம்பையை இசைத்துக்கொண்டே முதலில் குண்டத்திற்குள் இறங்கி நடக்கிறார். அதற்குப் பிறகு அனைவரும் ஒவ்வொருவராகக் குண்டத்திற்குள் இறங்குகின்றனர். குண்டத்தில் இறங்கி அங்காளம்மனக்கு "யுகே, யுகே' என்று சொல்லிக்கொண்டே தீ மிதித்துக் கொண்ட பக்தர்கள் தீயின் மீது மெதுவாகச் செல்லுவர்.

வெம்மையின் வெளிப்பாடு தெய்வக் குற்றம்

தீயில் இறங்கிய பாதிப்பு எதுவுமின்றி அமைதியாக மீண்டும் கோயிலுக்குள் சென்று இறைவனை வழிபடுவர். இந்த நிகழ்வினை மூன்று ஆண்டுகள் ஆய்வாளர் தொடர்ந்து கள ஆய்வின்போது பார்த்தார். குண்டத்தின் அருகில் சென்ற போது தீயின் வெம்மை கடுமையாக இருந்ததை ஆய்வாளரால்

உணர முடிந்தது. ஆனால் அதில் இறங்கி முடித்தவர்கள் பாதத்தில் எவ்விதப் பாதிப்புமின்றிச் சாதாரணமாக இருந்ததையும் பார்க்க முடிந்தது.

ஒரே ஒரு ஆண்டு மட்டும் குண்டத்தில் இறங்கியவர்கள் அனைவரும் இறங்கி முடித்த பின்னர்ப் பாதங்களைப் பிடித்துக்கொண்டு வலியால் துடிப்பதையும் அவர்களின் உறவினர்கள் விசிறி கொண்டு வீசுவதையும் ஆய்வாளரால் பார்க்கமுடிந்தது. இதுபற்றி அக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் சிவாஜி சுப்பரமணியம் செட்டியார் அவர்களிடம் கேட்ட போது "குண்டம் இறங்குவதற்குத் தயாராக இருந்த நிலையில் நாய் ஒன்று தவறுதலாகக் குண்டத்திற்குள் இறங்கியதால் தெய்வக் குற்றம் நிகழ்ந்துவிட்டது. அதன்காரணமாகத்தான் பூப்போல் இருக்கவேண்டிய குண்டம் அக்கினியை வெளிப்படுத்திவிட்டது" என்று தெரிவித்தார்[97]. நாய் குண்டத்தில் இறங்கி ஓடியதை ஆய்வாளரும் பாத்திருந்தார்.

"அதற்குப்பின் வந்த ஆண்டுகளில் இத்தகைய தவறுகள் நிகழாமல் பாரத்துக்கொள்ளப்பட்டது என்றும், தீ மிதித்த பிறகு யாருக்கும் எவ்வித பாதிப்பும் பின்னர் ஏற்படவே இல்லை என்றும்" கோயில் தலைவர் எஸ். சண்முகசுந்தரம் தெரிவித்தார்[98].

இது போன்ற குண்டம் இறங்கும் நிகழ்ச்சிகள் 24 மனை இனத்தில் சில குல தெய்வக்கோயில்களில் முன்னர் நடைமுறையில் இருந்ததாகவும் பின்னர் அவை கைவிடப்பட்டதாகவும் தகவலாளிகள் தெரிவித்தனர். கள்ளிவலசு கோயிலில் மட்டும் குண்டம் இறங்குதல் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

தீ விழாவின் வரலாறு

தீமிதிச் சடங்கு எப்படி, எங்கு தோன்றியது என்பது குறித்து ஒரு புதிய கருத்தாக்கத்தைத் தொல்லியலார் கீழ்க்கண்டவாறு கூறுகின்றனர்.

"நாடோடி மனிதன் மாட்டு மந்தைகளை மேய்த்துக்கொண்டு திரிந்துவாழ்ந்தான். அவன் ஓரிடத்தில் தங்கியவன் இல்லை. மேய்ச்சலுக்குப்புல் கிடைக்கும்வரை தங்கியிருந்துவிட்டு, தீர்ந்தவுடன் பிரிதோர் இடத்திற்குப் புறப்பட்டுவிடுவான். மாதக்கணக்கில் தங்கிய இடங்களில் மாட்டுச்சாணத்தைக் குவித்துவைப்பர். பின் அவ்விடத்தை விட்டுப் புறப்படும்போது அச்சாணத்தைக் கொளுத்திவிட்டுச் செல்வர். அவ்வாறு கொளுத்தப்படும் தீயின் மேல் மாடுகளை ஓட்டுவர். மக்களும் நடந்து செல்வர். அன்றைய மனிதன் தீயிற்கு அளவற்ற ஆற்றல் உண்டு என நம்பினான். மனிதனைத் தாக்கும் நோய்களையும், மாட்டுச் செல்வத்தினைத் தாக்கும் நோய்களையும் போக்கும் ஆற்றல் தீயிற்கு உண்டு என நம்பினான். மாடுகளை அழிக்கும் சூனியக்காரர்களை விரட்டும் ஆற்றல்

97. சிவாஜி சுப்பிரமணிய செட்டியார், பொள்ளாச்சி, வயது 77 நேர்காணல்

98. சண்முகசுந்தரம், சு. சொக்கனூர், வயது 61, நேர்காணல்

தீயிற்கு உண்டு என்ற நம்பிக்கை ஐரோப்பிய ஆட்டிடையர்களிடம் உண்டு"[99] எனும் கருத்து இங்கு ஒப்பிடத்தக்கது.

"பொதுவாகத் தமிழ்நாட்டிலும், சிறப்பாகக் கொங்குநாட்டிலும் கொண்டாடப்படும் தீ விழா (குண்டம்) 5000 ஆண்டுகளுக்கு முன் கால்நடை மேய்ப்பவர் செய்த சடங்கின் தொடர்ச்சி ஆகும். உலகம் முழுவதும் தீ விழா கொண்டாடப்படுகிறது. உலகம் தழுவிய இவ்விழாவினைப்பற்றி "பிரேசர்" தொகுத்தாய்ந்து வியப்பில் ஆழ்த்தும் முடிவுகளைக் கூறி உள்ளார். இவ்விழாக் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைப் போக்கி, அவை பல்கிப் பெருக செய்யப்படுகிறது. மேலும், மக்கட் செல்வம் பெருகவும் தீ விழா நிகழ்த்தப்படுவதாகக் கூறியுள்ளார். மேலும் தென்னிந்தியாவில் பண்டைய கால்நடை மேய்ப்பவர்கள் கொளுத்திவிட்டுச்சென்ற சாணமேடு சாம்பல் மேடு ஆனது. இதுவே பிற்காலத்தில தீ மேடு என்றும் விபூதி மேடு என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தில் பெல்லாரி எனும் இடத்தில் பிக்லிஹால், உட்ணர் ஆகிய இடங்களில் இருந்த இத்தகைய சாம்பல் மேடுகளை அகழ்ந்து பார்த்தபோது புதிய கற்காலக் கால்நடை வளர்ப்பாளர்களின் பண்பாடு புலப்பட்டது எனவும் கூறியுள்ளார்[100].

எனவே தீ மிதி விழாக்கள் தொன்மையானவை என்பதும் வேளாண்மையோடு தொடர்புடையன என்பதும் 24 மனையின் குல தெய்வ வழிபாட்டில் தீ ஒரு தனி இடத்தைப் பெறுகிறது என்பதும் புலனாகிறது.

பொது உணவு

பண்டைய நாட்களில் விழாக்காலங்களில் பக்தர்கள் அவரவர் வீடுகளிலிருந்து உணவு கொண்டு வந்து உண்ணுவார்கள். இதைக் கட்டுச் சாதம் கொண்டுவருதல் என்று கூறுவர். பின்னர் அப்பழக்கம் மாறி அனைவருக்கும் பொது உணவு வழங்கும் முறை நடைமுறைக்கு வந்தது. கோவில் அறங்காவலர்கள் அனைவருக்கும் வேண்டிய உணவு, நீர் முதலிய வசதிகளை விழா ஏற்பாடுகளுடன் செய்வார்கள்.

சக்தியைக் கங்கையில் விடுதல்

மாலையில் மகா சிவராத்திரி விழாவின் இறுதி நிகழ்வாக முதல்நாள் இரவு கிணற்றடியில் உருவாக்கி தெய்வத்தின் முன்னால் வைக்கப்பட்ட சக்திக் கலசத்தைக் கோயில் அறங்காவலர்கள், பெரியதனம், செட்டுமை ஆகிய அனைவருடனும் பம்பை வாத்தியம் முழங்க எடுத்துச்சென்று கங்கை (நதி அல்லது கிணறு அல்லது குளம்) யில் விடுவர்.

---

99. பூங்குன்றன். ஆர். ' கோயில்பாளையத்தில் தொன்மை வழிபாடுகள்' கோயில்பாளையம், கவசைக்காளி பக் 35 - 36

100. மேலது ப. 36

"இயற்கை முழுவதிலும் நிறைந்திருக்கும் ஆற்றலை ஒரு கணம் நிலைபெறச்செய்து மீண்டும் இயற்கையிடமே கலந்து விடும் போக்கே நாட்டார் சமயத்தின் தொல்படிவ பொருண்மையாகும். (Arcpctypal). பூர்ண கும்பம், சக்திக் கலசம் உருவாக்குவதில் கூட இப்பொருண்மையே நீட்சி பெறுகின்றது. தற்காலிகமாக உருவாக்கப்படும் கலசம் சடங்கு நிகழ்வு முடிந்த பின்னர் அதன் ஆற்றல் இயற்கைக்கே சென்று விடுகிறது."[101] என்ற பக்தவத்சல பாரதியின் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

கங்கையோரத்தில் ஒரு மாற்றுவிரித்து அதில் அமர்ந்து சக்திக் கலசத்தைப் பிரித்து அதனுள் முதல் நாளில் பக்தர்கள் செலுத்திய காணிக்கைக் காசுகளை எடுத்து மாற்றின் மீது வைத்துவிட்டு அந்தக் கலசத்தின் நீரைக் கங்கையில் விடுவர். பின்னர் திரும்பி வந்து அந்தக் காணிக்கையை எண்ணி ஒரு பகுதியைப் பூசாரிக்கும் மறுபகுதியைப் பம்பைக்காரருக்கும் கொடுக்கின்றனர். தொடக்க காலத்தில் இந்தத் தொகைதான் அவர்களின் ஆண்டு ஊதியமாக இருந்துள்ளது. பின்னர்க் கோவிலுக்குத் திரும்பித் தெய்வத்தை வழிபட்டுவிட்டு ஊர்திரும்புவர்.

அடசல் பூசை

மகாசிவராத்திரி முடிந்தவுடன் அடுத்து வருகின்ற புதன் வியாழன் ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில் எது முன்னால் வருகின்றதோ அந்த நாளில் அடசல் பூசை நடைபெறும். இந்நிகழ்ச்சி கோயிலுக்கு வெளியே நடைபெறும். கருப்புக்கோழி ஒன்றை அறுத்துப் பலியிட்டு முட்டையுடன் சேர்த்துக் குழம்பு வைத்து, வேல் போட்ட படம் வரைந்து அதன் முன்னால் படையல் செய்து பூசை செய்வர். இந்தப் பூசை நடக்கும் போது கோயிலின் கதவுகள் மூடப்பட்டுத் திரைபோடப்பட்டிருக்கும். இந்தப் பூசையைப் பெண்கள் பார்க்கக் கூடாது என்பது விதி. படையல் செய்து முடித்தவுடன் பூசாரி பம்பைக்காரர், வண்ணான், குயவர், கோயில் அறங்காவலர்கள் ஆகியோர் சாப்பிடுவர். இத்துடன் சிவராத்திரி விழா நிறைவு பெறுகிறது.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகளில் அடசல் பூசை இடம் பெறுகின்றது. மகாசிவராத்திரி விழாவின் போது கோவிலுக்கு வெளியே அடசல்பூசை செய்வது நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு மரபு என்று குறிப்பிடலாம்.

இங்ஙனம் 24 மனையாரின் விழாக்கள் அனைத்தும் தொன்மை செறிந்த சடங்குகள் நிறைந்ததாகவும் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவும் இருப்பதாக காண முயலுகிறது.

---

101. பக்தவத்சல பாரதி தமிழர் மானிடவியல் ப. 247.

மகாதானபுரம் மகாலட்சுமி கோயிலில்
தலையில் தேங்காய் உடைக்கும் நிகழ்ச்சி



1. மலையனூர் அக்னிக் குளத்தில் தீர்த்தம் எடுத்தல்

2. முத்திரிக்கப்பட்ட தீர்த்தக் கலசங்கள்

கள்ளிவலசு அங்காள பரமேஸ்வரி அம்மன்
கோயிலில் குண்டம் இறங்குதல்

கார்த்திகை விளக்கீட்டு விழா

நவதானியம் முடிந்து விளக்குத்திரியை உருவாக்குதல்





விளக்குச்சட்டியில்
முதல்
எண்ணையை
கன்னிப்பெண்
ஊற்றுதல்

கார்த்திகை விளக்கீட்டு விழா

1.தீபச்சட்டி ஏற்றப்படும் பாச்சான் கவிட்டி (பழைய முறை)

2.மாற்றி அமைக்கப்பட்ட விளக்குஸ்தூபி



இயல்-5

பெரிய கும்பிடு விழா

பெரிய கும்பிடு விழா

பேச்சியம்மன் சிலை

5. பெரிய கும்பிருவிழா

24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் குல தெய்வக் கோயில்களில், ஆண்டு தோறும் பல்வேறு விழாக்கள் நடந்தாலும் 12 ஆண்டுகட்கு ஒரு முறை நடக்கும் 'பெரிய கும்பிடு விழா', மிகப் பெரிய சிறப்பான விழாவாகும். 12 ஆண்டுகள் என்பது மிக முக்கியமான காலகட்டமாகும். கோயில்களில் குடமுழுக்கு நடத்துவதும், மகாமகத்தில் நீராட்டு விழா நடத்துவதும், குறிஞ்சிமலர் பூப்பதும் 12 ஆண்டுகட்கு ஒரு முறை தான். கொங்கு வேளாளர் இனத்தைச் சார்ந்த பவள குலத்தினர், தங்கள் குலதெய்வமான அண்ணன்மார்சாமியைப் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடி வருகின்றனர்.[1] அது போல 24 மனைத்தெலுங்குச் செட்டியார்கள் குலதெய்வக் கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மிகப்பெரிய விழாவாகப் பெரிய கும்பிடு விழாவை நடத்துகின்றனர்.

கும்பிடுதல்

'கும்பி' என்றால் 'கும்பராசி', 'குவியல்' என்றும், 'கும்பு' என்றால் 'கூட்டம்' என்றும் 'கும்பிடு' என்றால் 'வணங்கு' என்றும் அகராதிப் பொருள் கூறுகிறது[2]. குறிப்பிட்ட குலதெய்வத்தை வழிபடுகின்ற அனைவரும் கூட்டமாக, ஒருங்கிணைந்து குலதெய்வத்தை மிகப்பெரிய அளவில் வழிபடுதலைப் 'பெரிய கும்பிடு' என்று அழைக்கிறார்கள் எனலாம்.

விழா நாட்கள்

'பெரிய கும்பிடு விழா' பண்டைய நாட்களில் 5 அல்லது 7 நாட்கள் நடைபெற்றுள்ளன. மக்கள் குடும்பத்துடன் ஓய்வாக அமர்ந்து விழா நாட்களில் பங்கேற்றுள்ளனர். தற்போது மக்களிடையே இருக்கும் பணிப்பளு காரணமாக மூன்று நாட்கள் மட்டுமே விழாக் கொண்டாடப்படுகின்றது. விழாச்சடங்குகள் அனைத்தையும் மூன்று நாட்களுக்குள் விரைவாகச் செய்து முடித்துவிடுகின்றனர்.

விழா அறிவிப்பு : திருமுகம் எழுதுதல்

குலதெய்வத்தை வழிபடும் 'குலமக்களின் கூட்டம்' முதலில் நடத்தப்படுகிறது. இந்தக் கூட்டம் சில கோயில்களில் கார்த்திகை விளக்கீட்டு நாளன்றும் சில கோயில்களில் தை மாதமும் நடத்தப்பட்டு வருகின்றது. இந்தக் கூட்டத்தில் பெரிய கும்பிடு விழாக்கொண்டாடும் நாள் பற்றி முடிவு செய்யப்பட்டு முறையான அறிவிப்பை ஒரு வெள்ளைத்தாளில் கோயில் பெரியதனம் அல்லது செட்டுமையால் எழுதப்பட்டு அனைவரிடமும் கையொப்பம் வாங்கப்படுகிறது. இதைத் 'திருமுகம் எழுதுதல்' என்று கூறுகின்றனர். எழுதப்பட்ட திருமுகத்தைத் தலைவர் கூட்டத்திற்கு அறிவிப்புச் செய்கின்றார். பிறகு திருமுகத்தின் செய்தியைக் குலமக்கள் அனைவருக்கும் அறிவிக்க மேற்குவழிக்கு யார்

போவது, கிழக்குவழிக்கு யார் போவது எனப் பணி, நியமனம் செய்யப்படுகிறது. பெரும்பாலும் இப்பணியினைப் பம்பைக்காரர், பூசாரி முதலானோர் செய்வர். இந்தப் பழைய மரபு இப்போது மாற்றம் பெற்று திருமுகத்தின் செய்தியை அச்சிட்டு அஞ்சலில் அனுப்பி வைக்கும் வழக்கம் பின்பற்றப்பட்டு வருகின்றது.

'விழா அறிவிப்பு' முறை என்பது மிகப் பழமையானது. விழா அறிவிக்கும் வழக்கம் குறித்துப் பல இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. எடுத்துக்காட்டாக மணிமேகலைக் காப்பியத்தின் முதல் காதையாக அறிவிக்கின்ற நிகழ்வை இக்காதை கீழ்வருமாறு உணர்த்துகிறது.

'பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி
....
அணிவிழா அறைந்தனன் அக நகர் மருங்கென்[3]

விழாவின் நோக்கம்

குலத்தையும் - குலமக்களையும் தூய்மைப்படுத்துவதுதான் பெரிய கும்பிடு விழாவின் முக்கிய நோக்கம். குலத்திற்கென்றுள்ள, பின்வரும் நெறிமுறைகளிலிருந்து பிறழ்ந்ததால் தூய்மையிழந்துவிட்ட குலமக்களையும், அதனாற்றான் ஏற்பட்ட குலமாசினையும், புனித நீரால் கழுவித் தூய்மைப்படுத்துவதே இவ்விழாவின் நோக்கம். 'நெறிப்பிறழ்ச்சியென்பது அறிந்தோ அறியாமலோ நிகழ்ந்திருக்கலாம். இங்ஙனம் மாசுபட்டது தங்கட்குத் தெரியாமல் கூட இருக்கலாம். ஆகவே அனைவரது மாசுகளையும் களைந்து பாவங்கள் கழுவப்பட்டுப் புனிதப்படுத்துவதே இவ்விழாவின் சிறப்பம்சமாகும்.

நெறிமுறைகள்

"நெறிமுறைகளைச் சமுதாயத்தை இயக்கும் கட்டுப்பாடுகள் எனக் கூறலாம் தனிமனிதரானாலும் சரி, குழுவினராக இருந்தாலும் சரி அவரவர் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளை நெறிமுறைகள் குறிப்பிடுகின்றன. அவை சமுதாயத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் என ஒரு மதிப்புத் தரத்தை வரையறுத்து அதன்படி உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் எனப் பணிக்கின்றன அல்லது எதிர்பார்க்கிறது. ஆகவே நெறிமுறைகளின் பங்கு கட்டுக் கோப்பான நடத்தை முறைக்கு வழிகாட்டு முறையாக அமைகிறது".[4]

---

1. சுப்பிரமணியன் பெ.அண்ணன்மார் சுவாமி கதைப்பாடலில் நாட்டுப்புறக் காவியக் கூறுகள், தன்னனானே, நாட்டுப்புறவியல் இதழ் ஜனவரி 97 ப.153.
2. கதிரைவேற்பிள்ளை, நா.தமிழ்மொழி அகராதி ப. 483
3. மணிமேகலை விழாவறை காதை அடி 70-73
4. பக்தவத்சலபாரதி. சீ. பண்பாட்டு மானிடவியல் ப. 161

"மனிதச் செயல்பாடுகளில் (ஒழுகுநெறிப் பிறழ்வால்) உண்டாகும் சமயமாசுகள் ஆழமானவை. அவற்றில் மூன்று வகை மாசுகளை மட்டும் தனிமைப்படுத்திச் சுட்டிக்காட்டுதல் இயலும்.

1.உடல் சார்ந்தவை 2. சமூகக் கூட்டமைப்பு 3. புனித எல்லைக்குள் நெறி பிறழாது ஒழுகுதல் என மூன்று வகையான பொது நெறி முறைகள் குறித்து சமய அறிவியல் கலைக் களஞ்சியம் கூறுகின்றது.[5]

"The ranges of human activities realated to religious pollution of associated with 1. Bodily Functions 2. Social bonding and 3. The maintainence of boundaries of the hloy or sacred".

24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்தில் சில நெறிமுறைகள் வகுக்கப்பட்டு அவை சமூகக் கட்டுப்பாடாகத் திகழ்கின்றன. அத்தகைய நெறிமுறைகளில் இன மக்கள் செய்யக் கூடாதன எவை என்பன சுட்டப்படுகின்றன.

1. *மது அருந்துதல்*
2. *மண உறவில் குலப்பிறழ்ச்சி -சகோதரக் குலத்தினரிடையே* (Phratry) *மணஉறவு கொள்வது*
3. *குலத்திற்கொவ்வாதது என விலக்கப்பட்டவற்றைப்* (Taboo) *பயன்படுத்தல் (துலுக்கமல்லி, கருப்பு வண்ணம் முதலியன)*
4. *அறிந்தோ, அறியாமலோ நேரும் ஒழுக்கச் சிதைவுகள்*
5. *குலதெய்வ வழிபாட்டில் குறைகள்*

24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் எட்டுக் குலங்களில் ஒன்றான 'கஸ்தூரி கொரகையர்' வெளியிட்டுள்ள மலரில் 'குலதெய்வத்திற்குச் செய்யப்படும்' வழிபாடுகளில் நிகழும் தவறுகள், குல ஆச்சாரத்திற்கு ஒவ்வாத நடவடிக்கைகள் தெரிந்தோ தெரியாமலோ நிகழ்ந்திருக்கலாம். இவை சுத்தத் தண்ணீர், புகைத்தண்ணீர் ஊற்றுவதின் மூலம் கழுவப்பட்டுக் குலமக்கள் புனிதப்படுத்தப்படுகின்றனர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[6]

"ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் அவர்களுடைய சமுதாயம் சுட்டிக் காட்டும் நெறிமுறைகளையும் விழுமியங்களையும் முறையாகப் பின்பற்றி நடப்பதால் மட்டுமே அச்சமுதாயம் நிலைபெறமுடியும்" எனவும் "மக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் விழுமியங்கள் ஆகியவற்றுள் பெரும்பாலானவற்றைச் சமய ஒழுக்கம் சார்ந்ததாக அறிவுறுத்தி அவற்றிக்குத் தனிமதிப்பை ஏற்படுத்துகிறது. இவற்றுள்ளும் சிலவற்றைப் புனிதத்

5. The Encyclopedia of religion, Purification Vol, 12 P.92
6. கணக்கன்பட்டி அருள்மிகு அக்கமார்ஈஸ்வரி திருக்கோயில் கும்பாபிசேகமலர் ப.12 01.07.1999

தன்மையாக்கி அதற்குச் சிறப்பிடம் கொடுக்கிறது" எனவும் வருகின்ற பக்தவத்சலபாரதியின் கருத்தை[7] புகைத்தண்ணீர் - சுத்தத்தண்ணீர் என்ற இச்சடங்குகளுடன் ஒப்பு ஒப்பிடுங்கால் போது 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனமக்களின் சடங்குகளில் காணப்படும் விழுமியங்களை அறியமுடிகின்றது.

குடியிருப்பு அமைத்தல்

விழாவிற்காகக் குடும்பத்துடன் வரும் குலமக்கள், விழா நடக்கும் கிராமத்தில் தங்குவதற்குரிய முன்னேற்பாடுகளைக் கோயில் முதன்மையாளர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு,

1. தற்காலிகக் குடியிருப்புப் பந்தல்கள் அமைத்தல்

2. கிராமத்தில் உள்ள வீடுகளில் இடம் ஒதுக்கித் தரும்படி கிராம மக்களை வேண்டி, இடம் பெற்றுத் தருதல் ஆகிய இருவழிகளில் நிறைவேற்றுகின்றனர்.

தோரணம் கட்டுதல்

விழாத் தொடங்குவதற்கு முதல் நாள் கோயில் வாசல், கருவறை, கோயில் சுற்றுப்புறம் ஆகிய இடங்களில் தோரணம் கட்டுவர். தோரணத்திற்கு மாவிலை, வாழைக்கம்பம் முதலியன பயன்படுகின்றன.

அழைப்பு

விழா நாளன்று, தொடக்க நிகழ்ச்சியாக, உறவின் முறையார், மற்றும் கிராமத்திலுள்ள மணியக்காரர் உள்ளிட்ட முதன்மையாளர்கள், ஆகியோரைப் பம்பைக்காரரை அனுப்பி பம்பை வாத்தியத்துடன் மரியாதை செய்து கோயில் பொறுப்பாளர்கள் அழைப்பர். யார் யாருக்கு என்ன என்ன மரியாதை செய்வது என்பதை முந்தைய மரபுப்படி செய்வர். கோயில் வாசலில் நின்று அனைவரையும் தலைவர் மற்றும் விழாக்குழுவினர் கரம் கூப்பி வரவேற்பர்.

கோயிலை வலம் வருதல்

பக்தர்கள் கோயிலுக்கு வருகை தந்தவுடன், அனைவரும் கோயிலை மும்முறை வலம் வந்து தெய்வத்தை வணங்குகின்றனர். இதனை வலம் வருதல் அல்லது பிரதட்சணம் என்று கூறுவர்.

"திருக்கோயில்களை மும்முறை வலம் வருவதற்கு இறையியல் நோக்கு ஒன்று உள்ளது: உலக வாழ்வியலில் உழன்று கொண்டிருக்கும் மனம் உடனடியாக இறைவன் பால் ஒன்றி விடாது சூடாகிக் கொதிக்கும் நீரானது மெல்ல மெல்லக் குளிர்ச்சியடைந்துதான் தண்மை நிலையை அடைய முடியும். அதுபோல உலகியலில் உழலும் மனமானது மெல்ல மெல்லத்தான் அதனின்று

---

7. பக்தவத்சலபாரதி, கீ மு.கு.நூ. ப. 546.

விடுபட்டு இறைச் சிந்தனையில் ஒன்ற முடியும். அதற்காகத்தான் கோயில்களில் மூன்று பிரகாரங்களை அமைத்துள்ளனர். முதல் பிரகாரத்தை வலம் வரும்போது உலகியல் சிந்தனையிலிருந்து மெதுவாக மனம் விடுபட முயலுகிறது. இரண்டாவது பிரகாரத்தை வலம் வரும்போது இறைவனைப் பற்றிய சிந்தனைகள் மனதினுள் நுழைகின்றன. மூன்றாவது பிரகாரத்தை வலம் வரும்போது இறைவனைப் பற்றிய சிந்தனையின்றி வேறு சிந்தனைகள் மனதில் இரா. மூன்றாவது பிரகாரத்தை முடித்துக் கருவறைக்குள் வரும்போது இறைவனோடு மனம் முழுமையாக ஒன்றி வழிபடும் நிலை ஏற்படுகின்றது. இதன் காரணமாகத்தான் கோயிலை மும்முறை வலம் வருதல் எனும் சடங்கை முன்னோர்கள் உருவாக்கினர்" என்ற குன்றக்குடி அடிகளாரின் இறையியல் சிந்தனையை[8], ' மும்முறை வலம் வருதல் ' எனும் இச்சடங்குக்கு ஒரு விளக்கமாகக் கொள்ளலாம்.

முகூர்த்தக்கால் போடுதல்

'அரசங்கொம்பு', 'பாச்சான் கவிட்டி' கொண்டு முகூர்த்தக்கால் போடுவர். புற்றுமண், நவதானியம், நிறைநாழி, நவரத்தினம் முதலியன வைத்து முகூர்த்தக்கால் சடங்கு செய்வர். முகூர்த்தக்கால் போடுவதற்குப் பயன்படுத்தப்படும் பாச்சான் மரம் பால்வடியும் தன்மையுடையது. அத்துடன் இச்சடங்குக்குப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களையும் உற்று நோக்கினால் இவை வளமைச் சடங்கின் பாற்பட்டவை என்பது புலனாகும். 'முகூர்த்தம் என்பதற்கு அகராதி 'ஓர் கால வரையறை' 'சுபவேளை' என்றும் முகூர்த்தக்கால் என்பதற்குப் புதிய ஒன்றிற்கு அடித்தளமிடல் என்றும் பொருள் கூறுகிறது[9]. எனவே முகூர்த்தக்கால் என்பது நற்பொழுதினில் இனிதாக நிகழுறும் மங்களகரமான விழாத் தொடக்கச் சடங்கு எனக்கொள்ளலாம்.

பீடாபீடம் அமைத்தல்

கோயிலுக்கு எதிர்ப்புறம் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் ஒரு முக்காலி போட்டு அதன் மீது புதுத் துணி விரித்து, அத்துணிமேல் ஒரு பெரிய தாம்பாளத்தட்டு வைக்கப்படும். அத்தட்டில் வெற்றிலை பாக்கு வைத்திருப்பர். இதற்குப் "பீடாபீடம்" என்று பெயர். கோயில் தலைவர், பெரியதனம், செட்டுமை ஆகியோர் அங்கு நின்றுகொண்டு விழாவிற்கு வருகை தந்தோர் அனைவரையும் பந்தலுக்குள் கரம் கூப்பி வரவேற்பர். பின்னர் வெற்றிலை பாக்கு ஒவ்வொருவருக்கும் கொடுத்து மரியாதை செய்வர். 16 அணியில் முதன்மைக் குலமான மும்முடியர் குலத்தவர்க்கு முதலிலும் பிறகு மற்ற குலத்தவர்கட்கும் வரிசையாக வெற்றிலை பாக்கு வழங்கி மரியாதை செய்வர்.

---

8. தவத்திரு குன்றக்குடி அடிகளார், உடுமலைப்பேட்டை, காமாட்சி அம்மன் கோயில் திருவிழாவில் ஆற்றிய உரை 01.03.1985
9. வின்சுலோவின் - தமிழ் ஆங்கில அகராதி ப. 875

பிடிமண்

'பிடிமண்' எடுத்து வந்து கட்டப்பட்ட கோயில்களில் பெரிய கும்பிடு விழா நடக்கும் போது, எங்கிருந்து 'பிடிமண்' எடுத்து வந்தார்களோ அந்த மூலக்கோயிலுக்குப் பம்பைக்காரருடன் முன்கூட்டியே முதல்நாள் சென்று பிடிமண் எடுத்து வருகின்றனர். எடுத்து வந்த 'பிடிமண்ணை' விழாப் பந்தலில் உற்சவர் முன்னிலையில் வழிபாட்டுக்கு வைத்து விடுகின்றனர். மரிக்கந்தை அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலில் துணைத்தெய்வமான வேளாம்பூண்டி பாறை வீரமாத்தி கோயிலிலிருந்து புற்று மண் எடுத்து வரப்படுகிறது. மூலக்கோயில்களிலிருந்து பிடிமண் எடுப்பதற்கு எதிர்மறையாகத் துணைக் கோயிலிருந்து மூலக்கோயிலுக்குப் புற்று மண் எடுத்து வரப்படுகிறது.

பங்கேற்போர்

குறிப்பிட்ட குலதெய்வத்தை வழிபடும் ஆண்கள், பெண்கள் அனைவரும் இந்நிகழ்வில் பங்கேற்பர். ஒரு குலத்தில் பிறந்து மணமாகிக் கணவன் வீடுசென்ற பெண்கள் இதில் கலந்து கொள்வதில்லை. அவர்கள் தங்களது கணவர்களின் குலதெய்வக்கோயிலில் நடக்கும் பெரிய கும்பிடு விழா நிகழ்வில் பங்கேற்பர். ஆனால் அழைப்பின் பேரில் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளுகின்றனர்.

சுத்தத் தண்ணீர், புகைத்தண்ணீர் தயாரிக்கும் விதம்

மூடப்பட்ட புதுக்கும்பங்கள் மூன்று கோவிலுக்கு முன்புறம் வைக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்றில் வேப்பம் பத்திரி கலந்த நீரும், இரண்டாவது கும்பத்தில், ஈனாக்கிடாரியின் சாணம் கலந்த நீரும், மூன்றாவது கும்பத்தில், ஈனாக் கிடாரியின் கோமியம் கலந்த நீரும் வைக்கப்படுகின்றன.

பிறகு மூன்று கும்பங்களையும் தனித்தனி அடுப்புக்களில் வைத்து, வேப்பம் விறகுகளால் எரிக்கின்றனர். கைபொறுக்குமளவு சூடு ஏறும் அளவுக்கு சூடு செய்கின்றனர். பின்னர் மூன்று கும்பங்களில் உள்ளவற்றை ஒன்றாகச் சேர்த்து, அதில் புங்கந்தளை, கம்பந்தட்டு, ஊர்சுத்தி (கழுதைச்சாணம்), பால், நெய் முதலியவற்றைக் கலந்து புகைத்தண்ணீர் (Sacred water) தயாரிப்பர். தென்னிந்தியாவில், வழிபாட்டுச் சடங்குகளில் இடம் பெறாத பொருட்களான புங்கந்தளை, கம்மந்தட்டு, ஊர்சுத்தி முதலியவை இச்சடங்கில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதும்,

10. The encyclopedia of religion 'Purification' Vol 12 P. 94

தனித்தன்மையுடையதும் ஆகும். சுத்தத் தண்ணீர் என்பது புகைத் தண்ணீர் ஊற்றிய பிறகு ஊற்றப்படும் சாதாரண நீர் (Non - Sacred water) ஆகும்.

"தூய்மைப்படுத்தும் சடங்கிற்கு, உலகமெங்கும் மாசு களையும் பொருளாக நீர் பயன்படுகிறது. நெருப்பு, உப்பு, மூலிகை முதலானவற்றையும் சேர்த்து இப்பணியைச் செய்கிறது நீர், புண்ணிய நீருற்றுக்கள், கிணறுகள் முதலான புனிதமான நீர் நிலைகளிலிருந்து கொண்டு வரப்படும் இந்நீருக்குத் தூய்மைப்படுத்தும் சக்தி உண்டு" எனச் சமயக் கலைக் களஞ்சியம்[11]. கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

"சடங்குக் காலங்களில் புனித நீராடித்தூய்மைப்படுத்திக் கொள்ளும் முறையினைச் சிந்து சமவெளி மக்கள் கொண்டிருந்தனர் என்பதற்கான வலுவான சான்றுகள் உள்ளன" என்று பாஷம் எனும் ஆய்வாளர் குறிப்பிடுகிறார்." வேதநூல்களில் புனித நீராடல் பற்றிய குறிப்புகள் தெளிவாக இடம் பெற்றுள்ளன. சடங்கு நிமித்தம் புனித நீராடல் ரிக்வேதத்தின் (Vii.5) ஆத்ரேய பிராமணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது[12].

சுத்தத் தண்ணீர் – புகைத் தண்ணீர் ஊற்றும் முறை

ஒரு குலத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் வரிசையாக நிற்க, அக்குலத்திற்கு உரிமையுடைய மாமன் - மச்சான் உறவின் முறைக் குலத்தினர் எதிர்வரிசையில் நிற்பர். உதாரணமாக மக்கடையருக்கு மும்முடியர், கொரகையருக்குக் கோலயர், சொப்பியருக்குப் பலிவிதியர், எனும் வகையில் எதிரெதிர் நிற்பர். புகைத்தண்ணீர் உறவு முறைக்காரர்களின் பாத்திரங்களில் ஊற்றப்பட்டு அதனை அவர்கள் மாவிலையால் தம் எதிர் நிற்கும் குலத்தவர் மேல் தெளிப்பர். இதனையே புகைத்தண்ணீர் ஊற்றுதல் எனக் கூறுகின்றனர். புகைத்தண்ணீர் ஊற்றியபின் அருகில் குடங்களில் வைக்கப்பட்டுள்ள தண்ணீரைத் தலைமுதல் ஊற்றிக் கொள்வர். இது சுத்தத் தண்ணீர் எனப்படும். தண்ணீர் ஊற்றி முடிந்தவுடன் அவரவரது மணஉறவு கொண்ட உறவின் முறைக் குடும்பத்தினர் புதிய வேட்டி துண்டுகளைத் சீர்வரிசையாக தட்டில் வைத்துக் கொடுத்து மரியாதை செய்வர். இம்மரியாதையை ஏற்று அத்துணிமணிகளை உடுத்திக் கொண்டு கோயிலுக்குச் சென்று வழிபடுவர்.

தூய்மையாக்கும் நம்பிக்கை

சுத்தத் தண்ணீர் - புகைத்தண்ணீர்ச் சடங்கு குலமக்களைத் தூய்மையாக்குகிறது எனும் நம்பிக்கை இவர்களிடையே நிறைந்திருக்கிறது.

புனித நீரால் மாசு களைதல் குறித்த ஒரு வரலாற்று நிகழ்ச்சி கீழே காணலாம். "மண்ணைப் புத்துயிர்ப்புச் செய்வதற்காக உருவாக்கப்பட்ட தொன்மை சான்ற குளத்தில் உள்ள புனித நீரில் நீராட்டப்பெறின், மன்னன்

---

11. Basham, A.L. The wonder that was India .
12. பக்தவத்சல பாரதி தமிழர் மானிடவியல் ப. 269.

புதுப்பிறவி பெறுகிறான் என்று அக்கால மக்கள் நம்பினர். சிந்துச் சமவெளிக் காலத்தில் ராஜ சூய யாகத்திற்கு இணையான புனித நீராட்டும் பேராற்றல் மிக்கதாக இக்குளம் இருந்தது என நம்பப்படுகிறது. இத்தகைய புனிதக் குளம் இலச்சவிப் பழங்குடியினரின் தலைநகரான வைசாலியில் இருந்தது. அரசர் மட்டுமே பயன்படுத்திய இத்தகைய குளத்திற்கு மிகுந்த கட்டுக்காவல் இருந்தது. இந்தக் குளத்தில் உள்ள புண்ணிய நீரில் நீராடியவுடன் புத்துயிர்ப்பும், புனிதமும் அடைந்தான் அரசன்' என்று விளக்குகிறார் செரின்ரத்னாகர்.[13].

புண்ணிய நீரால் புனிதப்படுத்துதல் இயலும் எனும் நம்பிக்கை தொல் பழங்காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது என்பதற்கு இச்செய்தி சான்றாதாரமாகிறது.

நம்பிக்கையின் அடிப்படையில் பிற பகுதிகளிலும், நீரானது வழிபடுபொருளாக ஏற்றம் கண்டது. குறிப்பாகத் தமிழரிடையே சடங்கு நிலைகளிலே நீருக்கு ஒரு சிறப்பிடம் தரப்பெற்றது. நாட்டுப்புற மக்களிடையே இதனால் பல நம்பிக்கைகள் கருக்கொண்டு அமைந்தன என்கிறார் அ. அறிவுநம்பி.[14]

புனித நீரால் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்ட பின்னர் குலமக்கள் விழாவின் அடுத்த நிகழ்வுகளுக்குச் செல்லுகின்றனர்.

'புனித நீரில் உள்ள நோய் தீர்க்கும் ஆற்றல் "அசுத்தம்" எனும் கொடிய தொற்று நோயைப் போக்குகின்றது. மேலும் இது புனிதப் படுத்தும் சடங்கின் (Purification rites) பாற்பட்டது' என்பார் ராபர்ட்சம்ஸ்மித்.[15].

நீருக்குப் புனிதத் தன்மை உண்டு என்பதனையும் சாதாரண நீரைப் புனித நீராக்குதல் உண்டு என்பதனையும் தொல்லியல் அறிஞர் இரா. நாகசாமி ஒரு வரலாற்று நிகழ்வின் மூலம் காட்டுகிறார் .

"முதலாம் ராஜேந்திரசோழன் கங்கை வரை படையெடுத்துச் சென்றபோது கங்கை நீரைக் குடங்களில் கொண்டு வந்து அவன் வெட்டிய சோதுசங்கம் என்ற ஏரியில் ஊற்றினான். கங்கை நீரை அந்த ஏரியில் விட்டதால் அந்த நீர் முழுவதும் புனித நீராகி விட்டது எனக்கருதப்பட்டது".[16]

நீரில் சில பொருட்களைக் கலந்து புகைத் தண்ணீர் என்று புனித நீராக்கி அதைத் தெளித்துக் கொள்ளுவதின் வாயிலாகப் பாவங்கள் கழுவப்பட்டுக் குலதெய்வத்தின் அருளால் தூய்மையும் புனிதமும் அடைதல் இயலும் எனும் நம்பிக்கை 24 மனை இனத்தில் நிறைந்து நிற்பதைக் காணமுடிகிறது.

---

13. Shereen Rathnagar - Enquiries into the political organisation in Harappa Society PP. 169 - 171.
14. அறிவுநம்பி, அ.தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள் ப.42 - 43
15. Robertson Smith, The Religion of semitics P 183.
16. Nagasamy, R. Gangai Konda Cholapuram P. 67

அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் இந்தப் புனித நீருற்றும் சடங்கு இடம்பெறுகிறது.

பேச்சி அமைத்தல்

புலத்தில் பேச்சி எனக் குறிக்கப் பெறும் சீற்றமிக்க தெய்வமான பேச்சியம் மன்னனின் பெரிய உருவத்தினைக், களி மண்ணால் சிலையாகக் கிடந்த நிலையில் வடிவமைத்தலுக்குப் பேச்சி அமைத்தல் என்று பெயர். கோரப் பற்கள் பெரிய கண்கள், என அச்சமூட்டும் வகையில் அமைந்துள்ளது பேச்சியின சிலை. அதன் கால் அருகில் ஒரு குழந்தை படுத்திருப்பதைப்போல வடிவமைக்கப்படுகிறது. பெரிய கும்பிடு விழா முடிந்தவுடன் இந்த சிலையை தானே அழியுமாறு விட்டுவிடுவர். புலத்தில் தெய்வத்தின் எடுப்புச் சிலை ரதம் (உற்சவர் சப்பரம்) வடக்கு நோக்கி வைக்கப்படுகிறது. உற்சவருக்குக் கிழப்புறம் தென்வடலாகப் பேச்சி உருவம் அமைக்கப்பட்டு சிவப்பு நிறமுள்ள மூன்று மீட்டர் நீளமுள்ள துணி பேச்சியின் மீது போர்த்தப்படுகிறது. பிறகு பேச்சியைச் சுற்றி பூரண கும்பங்களை வரிசையாக வைத்து, கோட்டை அமைக்கப்படுகிறது.

"இரத்தத்தின் சிவப்பு நிறமே உயிர்ப்புச் சக்திக்குக் காரணம் என்று எண்ணிய நிலையில், சிவப்பு நிறமுடைய செம்மண் துகள்கள், செந்தூரம் ஆகியனவும் உயிர்ப்பொருட்களாகக் கொள்ளப்பட்ட நிலையையும் வரலாறு நன்கு காட்டுகிறது. இந்த அடிப்படையிலேயே இரத்தம் சிந்தும் சடங்குகளும் இரத்தத்தை ஒத்துள்ள பொருள்களாகப் பயன்படுத்திச் செய்யப்படும் சடங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன" என வாழ்வியற்களஞ்சியம் சுட்டுகிறது[17]. இவ்வடிப்படையில் உயிர்ப்புச் சக்தியைக் குறிக்கும் குறியீடாகப் பேச்சியம்மனுக்குச் சிவப்புத் துணி போர்த்தப்படுகிறது எனக் கொள்ளலாம்.

கோட்டையைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் காவல் காக்கும் காவலாளிகள் உருவங்கள் அமைக்கப்படுகின்றன. கோட்டையைச் சுற்றிலும் காப்புக் கட்டப்பட்டுத் தினையரிசி மாவு, காழி முட்டை, வடிசோறு, காதோலை, கருகமணி, கிலுகிலுப்பை முதலிய பொருட்கள் பேய்ச்சியின் அருகில் வைக்கப்படுகின்றன.

பொங்கல்

குயவனிடம் சொல்லிச் சுட்ட - புது "மொடா" பொங்கல் வைப்பதற்காக வரவழைக்கப்படுகிறது. இந்த மொடாவில் குலமக்கள் அவரவர் பங்கிற்குச் சிறிது அரிசியைப் போடுகிறார்கள். சுமார் 10 படி அரிசி போட்டுப் பொதுப் பொங்கல் வைக்கப்படுகிறது. சுமங்கலியாக உள்ள குலப் பெண்கள் கொண்டு வரும் தண்ணீர்தான் மொடாப் பொங்கலுக்குப் பயன்படுத்துகின்றனர். பொங்கல் வைப்பதற்கு வேப்பம் விறகுதான் பயன்படுத்துகின்றனர். அனைவரும் கூட்டாக அமர்ந்து தங்களது பங்களிப்பைச செலுத்திப் பொதுப்பொங்கல் வைப்பதின்

17. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 4 ப. 949

மூலம் கூட்டுறவு உணர்வும், பொதுநல நோக்கும் ஏற்பட வாய்ப்பாக இச்சடங்கு அமைகின்றது.

"ஒவ்வொரு சமயத்திலும் தனிமனிதர்களாக ஈடுபடாமல் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளும் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான நிகழ்ச்சிகள் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கிடையே கூட்டுறவை வலுப்படுத்துகின்றன. சமூகப் பிணைப்பை மிகுதிப்படுத்துகின்றன" என்ற பக்தவத்சலபாரதியின் கருத்து[18]. இங்கு பொருந்தி, வருவதைக் காணலாம்.

"பொங்கலிடுதல் நிகழ்வு இதில் இன்றியமையாதது. புதிய மண்பானையில் மஞ்சள் தடவிப் பொட்டிட்டு புனித மாக்கப்படுவதுடன் மங்கலமாக்கப்படுகிறத. திறந்த வெளியில் கற்களால் அடுப்பு அமைத்து பானையில் பால் ஊற்றி பச்சரிசியை பல திசையிலும் பொங்கவிட்டு இறக்கும் இச் சடங்கு தென்னிந்தியச் சடங்கு வரிசையில் ஒரு மூலப் படிவமானது. (Archetypal) பல திசையிலும் பரவி பொங்குதல் அல்லது பொங்கலிடுதல் என்பது நிறைவுபெறுதல் (Plentifulness) என்பதன் மங்கலக்குறியீடு." [19]

"பியார்தோ பொங்கலைப்பற்றி பொருள் விளக்கம் கூறுகையில் பொங்கலைச் சமைத்தல் என்னும் ஒட்டுமொத்த நிகழ்வானது நிலத்தில் நெல் விளைதலின் ஒட்டுமொத்த நிகழ்வைச் சுட்டுகிறது. பொங்கல் பானையும் விளைநிலமும் அம்மனின் கருப்பையை குறியீடாக்குகிறது என்பார். "[20]

பொங்கல் பற்றிய புதிய புதிய கோணங்களில் பல்வேறு கருத்தாக்கங்கள் அறிஞர்களால் கூறப்பட்டுவருகிறன்றன. இத்தகைய சிறப்பு மிக்க சடங்கான பொங்கல் 24 மனை இனத்தில் பல நிகழ்வுகளில் இடம் பெற்றாலும் பெரிய கும்பிடுவிழாவின் போது ஒரு சிறப்பான இடத்தைப்பெறுகிறது.

பெயர் வைத்தல்

பெரிய கும்பிடு விழாவின் போது குழந்தைகட்குப் பெயர் வைத்தல் மிகவும் சிறப்பானது எனும் நம்பிக்கை இவ்வினத்தவர்களிடம் மிகுந்திருக்கின்றது. எனவே இவ்விழாவின்போது பெயர் சூட்டும் சடங்கு இடம் பெறுகின்றது.

கங்கணம் கட்டுதல்

விழா நிகழ்வின் போது எவ்விதத் தீங்கும், இடையூறும் நேராதிருக்கக் கங்கணம் கட்டப்படுகிறது. கங்கணம் கட்டிக்கொள்ளுபவர்கள் விரதம் இருக்க வேண்டும் என்பதும், அமங்கல நிகழ்வுகளுக்குச் செல்லுதல் கூடாது என்பதும்

18. பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல் ப. 548.
19. பக்தவத்சல பாரதி தமிழர் மானிடவியல் ப. 269
20. Biardeau, Madeline, The Sami Tree and the Sacrificial Buffalo. Contributions to Indian Sociology (N.S) 18, 1: 1-23.

மரபு. காப்புச் சடங்கான கங்கணத்தைப் பூசாரி, பம்பைக்காரன், தலைவர், செட்டுமை, பெரியதனம் மற்றும் யார் யாருக்கெல்லாம் கட்ட வேண்டும் என்று மரபு வழி முடிவு செய்து கட்டுவர். பம்பைக்கும் கங்கணம் கட்டுவர். கங்கணம் கட்டும் சடங்கு கிணற்று மேட்டில் நடைபெறுகிறது.

தீர்த்தம் முத்திரித்தல்

கிணற்றுமேட்டில் நான்கு புறங்களிலும் செங்கரும்புப் பந்தலிட்டு வண்ணார் இனத்தைச் சார்ந்தவரை மாற்றுவிரிக்கச் சொல்லி, அதன்மீது செந்நெல் பரப்புகிறார்கள். இக்குலத்தில் பிறந்து மணமாகிப் புக்ககம் போன, பெண்கட்கு மட்டுமே செந்நெல் கொண்டு வந்து பரப்புகின்ற உரிமை தரப்படுகிறது.

புலம்

பெரிய கும்பிடு நடக்கும் இடத்தைப் புலம் என்று அழைக்கின்றனர். புலம் என்பதற்கு அறிவு, இடம், திக்கு, நுண்மை, மேட்டுநிலம், வயல் என்று அகராதி[21] பொருள் கூறுகிறது.

கோயிலிலிருந்து சற்றுத் தூரத்திலிருக்கும் புலத்தில் பெரிய பந்தலும் அதன் கீழ் ஒரு ஓரத்தில் பச்சைப் பந்தலும் அமைக்கப்பட்டிருக்கும் பேச்சியமைத்தல், பலிதருதல் காதணி விழா, மாவிளக்கு, பொங்கல் முதலான அனைத்து விழாச் சடங்குகளும் இந்தப் புலத்தில்தான் நடைபெறுகின்றன. புகைத்தண்ணீர் சுத்தத்தண்ணீர் ஊற்றி, குலமக்கள் புனிதப்படுத்தப்பட்ட பிறகு, புலத்தில் நடக்கும் விழாச்சடங்குகளில் பங்கேற்பர். பேழை வழிபாடு நடைபெறும் கோயில்களில் பேழையும், சிலை வழிபாடு நடைபெறும் கோயில்களில் எடுப்புச் சிலையும் (உற்சவர்) புலத்திற்கு மேளதாள, பம்பைவாத்தியத்துடன் கொண்டுவரப்பட்டு வழிபாட்டிற்கு வைக்கப்படுகிறது. பச்சைப் பந்தலுக்கு அடியில் வடக்குப்பார்த்து உற்சவர் தேர் வைக்கப்படுகிறது.

புலத்திற்குள் வருவதற்குத் தடை

ஆண்கள், பெண்கள் குழந்தைகள் அனைவரும் புலத்திற்கு வந்து வழிபடுகின்றனர். ஆனால் கர்ப்பிணிப் பெண்கள் புலத்திலுள்ள பேச்சியைப் பார்ப்பதற்கும் புலச் சடங்குகளைப் பார்ப்பதற்கும் அனுமதிக்கப்படுவதில்லை. நெடிய இடப்பரப்பில் கோரவடிவத்தினளாய்க் காட்சியளிக்கும் பேச்சியின் உருவ அமைப்பு கண்டவர்களை மிரட்சியடையச் செய்யும் தன்மையுடையது. அதன் காரணமாகக் கர்ப்பிணிப் பெண்கள் அச்சமடைந்து விடக்கூடாது எனும் எண்ணம் காரணமாகஇருக்கலாம்.

---

21. கதிரைவேற்பிள்ளை, கீ. மு.கு.நூ. ப. 151

பலியிடுதல்

புலத்தில் பேச்சியம்மனுக்கு முன் வெள்ளாடு (கிடாய்) பலியிடப்படுகிறது. பலியிடுதல் நடைபெறும் போது உற்சவருக்குத் திரையிடப்படுகிறது. வெள்ளாடு கலப்பு இல்லாத முழுக்கருப்பு நிறத்தில் இருக்க வேண்டும். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உரிய வெள்ளாடுகள் மட்டுமே பலியிடப்படுகின்றன. 'துலுக்கு' எனும் இறையனுமதி கிடைத்த பின்பு பலியிடல் நிகழ்வு தொடங்குகிறது. பலிமேடையில் உறவின் முறைக்காரர்கள் தான் வெள்ளாட்டின் மீது முதல் வெட்டை வெட்டுவார்கள். அதைத் தொடர்ந்து குலமக்கள் வெட்டுகிறார்கள். பலியாட்டின் உடலை மட்டும் தாங்கள் தங்கியிருக்கும் குடியிருப்புக்கு எடுத்துச் செல்லுகின்றனர். அதை உணவாக்கி வருகைதந்த விருந்தினர்கட்கு விருந்து படைக்கின்றனர். புலத்தில் குலமக்கள் விட்டுவிட்டுச் சென்ற வெள்ளாட்டுத் தலைகளை மூன்று பாகங்களாகப் பிரித்து 1. பூசாரி 2. பம்பைக்காரர் 3. குயவர் ஆகியோர்க்குப் பகிர்ந்து கொடுக்கின்றனர்.

இராசாபட்டியிலுள்ள மராட்டியர் குலதெய்வமான காமாட்சியம்மன் கோயிலில் சினை ஆட்டை பலிதருகின்றனர். பலியிட்ட பிறகு ஆட்டினுடைய கருவைத் தனியே அறுத்து வெளியே எடுத்து, கருவை மட்டும் வாழை இலையில் வைத்துத் தெய்வத்திற்குப் படைக்கின்றனர்.

பலியிடுவதற்குக் கரிய ஆட்டையும் கரிய நிறமுடைய கோழியையும் தேர்ந்தெடுப்பதற்குக் காரணம் கரிய நிறம் என்பது, 'அநீதி ' என்றோ 'அரக்கத்தனம்' என்றோ உருவகப்படுத்தப்படுகிறது எனலாம் இங்ஙனம் பலியிடுவதன் மூலம் அநீதிகளும், அரக்கத்தனமும் அழிக்கப்படுவதாகவும் நீதியும், உண்மையும் நிலைபெறுவதாகவும் கொள்ளலாம்.

பலியிடும் சடங்கு அங்காள பரமேஸ்வரி போன்ற சீற்றம் மிக்க தெய்வங்கள் குலதெய்வங்களாக அமைந்த கோயில்களில் மட்டும் இடம் பெறுகின்றது.

காதணி விழா

குலத்தில் பிறந்த அனைவருக்கும் பெரிய கும்பிடு விழாவின் போதுதான், முடியெடுத்துக் காது குத்தும் சடங்கு நடத்த வேண்டும் என்பது மரபு. பன்னிரெண்டு ஆண்டுகள் இடைவெளி என்பதால், பெரிய கும்பிடு விழாவிற்கு முன்னரேயே வீட்டிலோ, கோயிலிலோ காதுகுத்திக் கொண்டாலும், பெரிய கும்பிடு விழாவின் போது மீண்டும் காது குத்துவதைப் போல ஊசியை சந்தனத்தில் நனைத்துக் காதில் அடையாளம் செய்து கொள்ள வேண்டும்என்பது மரபு. ஒரு காதில் பங்காளியும் மறு காதில் குல முறைப்படியான உறவின் முறையினரும் சந்தனம் நனைக்கப்பட்ட ஊசியால் முறைப்படி அடையாளம் செய்ய, ஆசாரி காதுகுத்துகின்ற பணியைச் செய்கின்றார். வீட்டில் மூத்த பிள்ளைக்குக் காது குத்தும் போது மூத்த

பிள்ளையின் தாய் மாமன், பெண்வேடமணிந்து பாவை எடுத்துக்கொண்டு வருகின்றார். பச்சரிசி இடித்து மாவாக்கி, அந்தப் பச்சரிசி மாவில் குழந்தை மாதிரி உருச்செய்து பொத்தாத (துளையில்லாத) புது முறத்தில் அதை எடுத்து வருவார். அதற்கு "பாவை " என்று பெயர். பாவையை எடுத்து வரும் தாய்மாமன், புலத்தில் உற்சவரத்திற்கு முன்னால் கிழக்கு மேற்காக நிற்க வேண்டும். வழிபாட்டிற்குப் பிறகு ஒவ்வொருவருக்கும் காது குத்தும் போது ஒவ்வொரு கோழிக் குஞ்சைத் தலையைச் சுற்றி வீச, அதைப் பம்பைக்காரர் எடுத்துக் கொள்ளுகிறார். இது கண்ணேறு கழிப்பதற்காகச் செய்யப்படும் சடங்கு ஆகும்.

உற்சவ ரதம் கோயிலுக்குத் திரும்புதல்

புலத்தில் பச்சைப் பந்தலின் கீழ் வடக்குப் பார்த்து வைக்கப்பட்டிருக்கும் உற்சவர்ரதம், காதணி அணிவிக்கும் சடங்கு முடிந்தவுடன் பம்பை வாத்தியத்துடன் கோயிலுக்குத் திரும்ப எடுத்துச் செல்லப்படுகிறது. இதற்கு மேல் நடைபெறும் சடங்குகள் பேச்சியம்மனுக்கு நடத்தப்படுவதாகக் கொள்ளலாம்.

எறிசோறு எறிதல்

இரவு கருங்கோழி அடசல் இடப்படுகிறது. "கருங்கோழி அடசல்" என்பது கரிய நிறமுடைய கோழியைப் பலியிட்டு உணவாக்குதலாகும். இந்தக் கருங்கோழி இறைச்சியைப் புதிய சட்டியில் சமைத்துச் சோற்றுடன் கலந்து யாரும் சாப்பிடாமல், குலத்தைச் சார்ந்த தலைச்சன் பிள்ளைக்காரர் வானத்தை நோக்கி வீசிக் கொண்டு வருவார். வானத்தில் வீசப்பட்ட எறிசோறு கீழே விழுவதில்லை என்றும், ஆவிகள் அதை வானத்திலேயே எடுத்துக் கொள்ளுகின்றன என்றும் நம்புகின்றனர். "பலிச்சோறு எறிதல், ஆகாயப்பூசை, குலவிருத்திச் சடங்கு முதலான குலதெய்வ வழிபாடுகள் நள்ளிரவில் நடத்தப்படுகின்றன. பலிச்சோறு எறிதல், ஆகாயப் பூசை முதலியன தீய ஆவிகளைத் திருப்திப் படுத்துவதற்காகச் செய்யப்படுகின்றன என்கிறார் தே. ஞானசேகரன்.[22]

உயிர்ப்பலி கொடுத்து குருதியினைச் சமைக்கப்பட்ட சோற்றில் கலந்து வான் நோக்கி வீசப்படும் 'எறிசோறு வீசுதல்' எனும் இச்சடங்கு சங்க காலத்திலிருந்து வழக்கிலுள்ளது என்பதை

"மறிக் குர லறுத்துத் தினைப் பிரப் பிரீஇ " என்று குறுந்தொகையும் [23]

22. ஞானசேகரன், தே. மனித வாழ்வில் மந்திரச்சடங்குகள் ப.8

23. குறுந்தொகை பா.263 - 1

'கள நன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத் (து)
உருவச் செந்தினை குருதியோடு தூய்
முருகாற்றுப்படுத்த உருகெழு நடுநாள்".

என்று அகநானூறும் [24] கூறுவதிலிருந்து புலப்படுகிறது.

இப்படி எறி சோறு எறியும் போது குலத்தைச் சேர்ந்த ஒருவர் வேடனைப் போல் வேடமணிந்து பிள்ளைப்பாவையை எடுத்து ஆடிக் கொண்டே வருகின்றார். "பாமர மக்களை இன்பப் படுத்துவதே நாட்டுப்புற ஆடல்களில் முக்கிய நோக்கமாக இருப்பினும் அவற்றுள் அறிவூட்டும் பாங்கும் நெறிநவிலும் போக்கும் குறையகற்றி நிறை வகுக்கும் தன்மையும் நிரம்ப இருப்பதை பார்க்கலாம்" என்பார் அ.நா. பெருமாள். [25]

பன்றி வேட்டை

எறிசோறு போடும் சடங்குக்குப் பின்னர் பன்றி வேட்டை நடைபெறுகிறது. இதற்கு ஊர்ப்பண்ணி (ஊர்ப் பன்றி) போர்ப் பண்ணி (போர்ப் பன்றி) குத்துதல் எனக் கூறுவர்.

வனத்திற்குள் வேட்டையாடப் போவதைப் போல் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வேட்டைக் கருவிகளுடன் புறப்படுகின்றனர். நீளமான கயிற்றில் பன்றியைக் கட்டி முன்னால் விட்டுப் பின்னால் துரத்திக் கொண்டு வருகின்றனர். ஊரைச் சுற்றி இத்துரத்துதல் தொடர்கிறது.

புலத்திற்குள்நுழைந்து பேச்சியம்மன் முன்புறம் வந்தவுடன் கயிற்றை இறுக்கிப் பன்றியை நிறுத்துவர். முதல் பன்றியை உறவுக் குலங்களில் (16) முதல் குலத்தினரான மும்முடியார் மற்றும் உறவினர்கள் ஒரு வேல் கொண்டு குத்துவர். அதைத் தொடர்ந்து குலமக்கள் பன்றி குத்தும் பணியினைச் செய்வர். கடந்த பெரிய கும்பிடு நடந்த போது குத்தப்பட்ட பன்றிகளின் எண்ணிக்கை 100-க்கும் அதிகமாக இருந்தது என்பதைக் கள ஆய்வின்போது காண முடிந்தது. குத்தப்பட்ட பன்றிகளை வண்ணார், நாவிதர் ஆகிய இருவரும் எடுத்துச்செல்வர்.

பன்றி புதைக்கும் சடங்கு

பன்றி வேட்டைச் சடங்கிற்குப் பிறகு, பன்றி புதைக்கும் சடங்கினை நிகழ்த்துகின்றனர். விழாத் தொடங்குவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னர் ஒரு பன்றியைப் பிடித்து வந்து, நல்ல உணவு கொடுத்து வளர்க்கின்றனர். விழா நாளன்று அதனைக் குளிப்பாட்டிக் கொண்டு வந்து, பேச்சிக்கு முன்னால் நிறுத்துகின்றனர். பிறகு அதன் கழுத்தை அறுத்து, மஞ்சள் பூசிக் கழுவி தீயில் வாட்டிப் புதுமுறத்தில் வைக்கின்றனர். தேங்காய் பழம், எலுமிச்சை, பூச்செண்டு

---

24. அகநானூறு பா. 22. 8 - 11
25. பெருமாள், அ.நா.நாட்டுப்புறவியல் சிந்தனைகள் ப. 139

முதலிய பொருள்களையும் புது முறத்தில் வைத்துப் பூசை செய்கின்றனர். பூசையின் போது பன்றி மூன்று முறை வாயைப் பிளந்து காட்டினால்தான் நல்ல சகுனம் என்று கூறுகின்றனர்.

பண்டைய மக்களின் வாழ்வியலை நோக்கும் போது பன்றி பயிர்களை அழிப்பதன் வாயிலாக ஒறுத்தற்குரியதாக இருந்து வந்துள்ளதை உணரலாம். "செந்நெல் கதிரையெல்லாம் தின்றழித்த பன்றியது, வாழை, கரும்பு, மஞ்சள் என்று வகையான சோலையெல்லாம் தின்றழித்த பன்றியது" என்று அண்ணன்மார் சுவாமி கதை குறிப்பிடுகின்றது.[26]

மேலும் பன்றியின் தொல்லை பொறுக்க முடியாமல் மக்கள் அரசனிடம் முறையிடுவதும், பொன்னர்-சங்கர் இருவரும் வேட்டையாடி அதனைக் கொல்வதையும் அக்கதைப் பாடல் விவரிக்கின்றது. இன்று கூட மலை சார்ந்த பகுதிகளில் பன்றியிடமிருந்து பயிர்களைக் காக்க விவசாயிகள் போராட வேண்டிய நிலை இருப்பதைக் காண முடிகிறது. இப்படிப் பட்ட சமுதாய அமைப்புகளில் மக்கள் தங்களுக்கு ஊறு விளைவிக்கும் பன்றியை அழிக்க விரும்புவர். அண்ணன்மார்சுவாமி குலதெய்வ வழிபாட்டில் பன்றி குத்துதல் சடங்கு இடம் பெறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும். அண்ணன்மார் சுவாமியைக் குலதெய்வமாக வழிபடும் கொங்கு வேளாளர்களின் வாழ்வு வேளாண்மை சார்ந்ததாக உள்ளது. அதுபோலவே 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் வாழ்வியலும் தொடக்க காலத்தில் வேளாண்மை சார்ந்ததாக இருந்திருக்கலாம் எனக் கருதுவதற்கு இடமளிக்கும் வகையில் இப்ப பன்றி வேட்டைச் சடங்கு அமைந்துள்ளது எனலாம்.

கரகம் பிரித்துக் கொடுத்தல்

குயவன் கரகச் சொப்புக்களைக் (மண் கலசம் சிறியது) கொண்டு வந்து குலத்தைச் சார்ந்த ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இரண்டு வீதம் கொடுக்கிறான். இந்தக் கரகச் சொப்புகளுக்கு நூல் சுற்றுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்தினரும் இரு கரகச் சொப்புகளிலும் அரிசியை நிறைத்து ஒன்றினைக் கோயிலுக்குத் தந்து விடுகின்றனர். இன்னொரு கரகத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லுகின்றனர். வீட்டில் அந்த சொப்பைப் பேணிப் போற்றிப் பாதுகாக்கின்றனர். அரிசி நிறைந்த கரகச் சொப்பினைக் கோயிலிலிருந்து கொண்டு வந்து வீட்டில் வைத்துப் பேணிக் காப்பதன் மூலம் செல்வம் நிறைந்து நின்று தமக்கு வளம் பெருகும் என்று குலமக்கள் நம்புகின்றனர்.

மஞ்சள் நீராடல்

உற்சவர் ரதம் ஊருக்குள் வீதி உலாப் போகின்ற பொழுது மஞ்சள் நீராடல் நடைபெறுகிறது. உறவின் முறைக்காரர்கள் ஒருவர் மீது ஒருவர் மஞ்சள் நீர் ஊற்றி மகிழ்ச்சியுடன் இந்த உலாவில் கலந்து கொள்ளுகின்றனர்.

26. இராமநாதன், ஆறு. நாட்டுப்புறபாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல் பக். 172 - 173

"மஞ்கள் என்பது மங்களகரமானது என்றும் மஞ்சள் நீராடுவது என்பது விழா மங்களகரமாக நிறைவெய்தியது என்பதை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் சடங்கு" என்றும் விளக்குகிறார் வி. என் தர்மராமலிங்கம் செட்டியார்.[27]

உற்சவர் ரதம் ஒவ்வொரு வீட்டின் முன்பும் நின்று அவர்கள் தரும் தேங்காய் பழத்தட்டைப் பெற்றுச் சூட ஆராதனை காட்டப் பெற்று நகர்கிறது. ஒருவர் மீது ஒருவர் மஞ்சள் நீருற்றியதால் ஆடைகளில் ஈரமும் மஞ்சளும் படிய உவகை பொங்க ஊர்ந்து வரும் உற்சவர் ரதஉலாவில் பெரும்பாலும் அனைவரும் பங்கு கொள்ளுகின்றனர். உலாவின் தத்துவத்தை "வயது முதிர்வு, நோய்வாய்ப்பட்டிருத்தல், இன்னும் பிற காரணங்கட்காகவும் இறையுரு திருஉலா வரவேண்டிய சூழல் தோன்றியது" என்று அதன் சமுதாய நோக்கத்தை விளக்குகிறார் விளக்குகிறார் தி.இராசமாணிக்கம்.[29]

இருநிலை எதிர்வு அமைப்பு முறைகள்

மானிடவியலறிஞர் லெவிஸ்ட்ரஸ், சடங்குகளில் காணப்படும் இருநிலை எதிர்வு அமைப்பு முறைகளை விரிவாக ஆராய்ந்து கூறியுள்ளார். எதிர் எதிர் பண்புகளை உடைய இரு பொருட்களை ஒரு நோக்கில் இணைத்துக் கூறும் லெவிஸ்ட்ரஸின் கோட்பாடு உலகப் புகழ்பெற்ற புதுமை ஆராய்ச்சி ஆகும். 24 மனைத்தெலுங்குச் செட்டியார் குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகளில் இம்முறையைப் பொருத்திப் பார்ப்பது புதிய சிந்தனைகளுக்கு வழிவகுக்கும்.

மானிடவியலார் லெவிஸ்ட்ரஸ் பயன்படுத்தும் அமைப்பியல் எனும் மொழித்தொடர் உள உயிரியல் சார்ந்த பண்புகளில், உலகில் அனைத்து மக்களும் பொதுவாகக் கொண்டுள்ள ஆழ்ந்த வெளிப்படையாகத் தெரியாத உள்ளார்ந்த அமைப்புகளைத் தேடுவதைக் குறிக்கும். லெவிஸ்ட்ரசின் கருத்துப்படி பண்பாடு என்பது ஆழ்மனப்பட்டது. மக்களின் மனதுக்குள் புதைந்து கிடக்கின்றது. இது மக்களின் மன உணர்வால் வெளிப்படுவன என்பதால் இது ஆழ்நிலை அமைப்புக் கொண்டது. ஆகப் பண்பாட்டின் மேல் தளத்தில் கண்ணால் காண்பவை, உண்பவ அனைத்தும் ஆழ்நிலையில் புதைந்து கிடக்கும் சில பொதுப்படையான அமைப்புகளிலிருந்து உருவானவையாகும். மேல் தளத்தில் வேறுபாடுகளை உணர்த்தி நிற்கும் அடிப்படை அமைப்பானது ஓர் எதிரும் புதிருமான இரட்டை எதிர்வுடைய கூறுகளின் கூட்டு இணைவியல் ஏற்படுபவை என்பது லெவிஸ்ட்ரசின் அடுத்த நிலை. மனித மனத்தின் சிந்தனை முறையானது எதையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய எதிர்ப்பண்புகளை இணைத்து இரட்டை எதிர்வுகளாக (எ.டு.அகம் புறம், வலம், இடம், அண்டம்

---

27. தர்மராமலிங்கம் செட்டியார், வி.என். பொள்ளாச்சி, வயது 65, நேர்காணல்நாள் 01.03. 1998

28. இராசமாணிக்கம், தி. தமிழ்ந்தம் தனிப்பெருங்கடவுள் ப.67

பிண்டம், பகல், இரவு, வாழ்வு, சாவு, ஆண், பெண், சக்தி, சிவன், இயற்கை பண்பாடு, தூய்மை, தீட்டு, சமைத்தது, சமைக்காதது, ரத்த உறவுடையோர், மணஉறவுடையோர், இவை போன்ற ஏராளமான இன்ன பிற) இனங்காண்கிறது. ஒவ்வொரு பண்பாட்டினரின் மனவியல் சிந்தனை முறையில் அடிப்படை அலகுகளாக உருவாகும் இவ்விரட்டை எதிர்வின் மேலேயே பண்பாட்டின் மேல் தளக்கூறுகள் கட்டமைக்கப்படும்.[29] லெவிஸ்ட்ரஸ் அவர்களுடைய அமைப்பியல் கோட்பாடு தமிழர் திருவிழாக்களிலும் சடங்குகளிலும் பொருத்திப் பார்கக வாய்ப்பு உள்ளது. இவரது இரட்டை எதிர்வு முறைக் கருத்துக்கள் 24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வத் திருவிழாவான பெரிய கும்பிடு விழாவில் இடம் பெறுகின்றன.

புனிதப்படுத்தும் சடங்கு : சுத்தத் தண்ணீர் X புகைத் தண்ணீர்

சுத்தத் தண்ணீர் என்பது குடிப்பதற்கும் குளிப்பதற்கும் மற்றும் ஏனைய சராசரி வாழ்கையில் புழங்கும் சாதாரண நீர் இது, புறத்தூய்மையளிக்கும் இயல்புடையது.

புகைத்தண்ணீர் என்பது பல்வேறு பொருட்களை கலந்த புனித நீராக கருதப்படுவதாகும். இதனை ஊற்றியவுடன் மனித மாசுகள் களையப்படுவதாக நம்பப்படுகிறது. பாவங்கள் நீக்கப்பட்டு அகத்தூய்மையை அளிக்கும் சக்தி இப்புனித நீருக்கு இருப்பதாகக் கருதுகின்றனர்.

புறத்தூய்மை அளிக்கும் சுத்தத் தண்ணீர் - அகத்தூய்மையளிக்கும் புகைத் தண்ணீர் ஆகியவை எதிர்ரெதிர்த தன்மையுடையன. எனவே புகைத்தண்ணீர் சுத்தத் தண்ணீர் ஊற்றும் சடங்கும் இருநிலை எதிர்வு அமைப்பு முறைகளாக அமைந்துள்ளன எனக்கொள்ளலாம். பண்பாட்டின் மேல்தளக் கூறாகவிளங்கும் இச்சடங்கு லெவிஸ்ட்ரஸ் கூறும் ஆழ்மனப்பட்ட நிலைக் கூறை விளக்குவதாக அமைகிறது எனலாம்.

கோயில் அமைப்பு : நிலையானது X தற்காலிகமானது

பெரிய கும்பிடு விழாவின் போது புலம் என்ற பெயரில் கோயிலுக்கு எதிர்புறம் தற்காலிகமாகப் பந்தல் அமைக்கப்படுகிறது. அந்த பந்தலின் கீழ்ப் பேச்சியம்மன் சிலை மண்ணால் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. விழாவின்போது மட்டும் வழிபாடுகள் இடம்பெறுகின்றன. பிறகு பேச்சி உருவம் இயற்கையாக மழை, வெய்யில், காற்று ஆகியவற்றால் தானாகவே அழியும் படி விட்டு விடுகின்றனர். இது ஒரு தற்காலிக அமைப்பு.

---

29. பக்தவத்சலபாரதி, கீ.மு.கு.நூ பக் 195-199 (மறுபதிப்பு) - 242

இவ்வழிபாடுகள் கோயிலிலும் நடத்தப்படுகின்றன. கோயிலும், அதில் நடைபெறுகின்ற வழிபாடுகளும் நாள்தோறும் நடைமுறையில் உள்ளவை நிலையானவை.

தற்காலிகக் கோயிலமைப்பும், நிலையான கோயிலமைப்பும் இருநிலை எதிர்வுகளாக இங்கு அமைகின்றன என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

தெய்வச்சிலையமைப்பு : அமர்ந்த கோலம் X கிடந்த கோலம்

நிலையான கோயிலில் உள்ள அங்காளபரமேஸ்வரி அம்மன் சிலை பீடத்தின் மேல் அமர்ந்த கோலத்தில் இருக்கப் புலத்தில் உள்ள பேச்சியம்மன் சிலை படுத்த நிலையில் - கிடந்த கோலத்தில் அமைக்கப்டுகின்றது. இம் முறையில் சிலையமைப்பும் இருநிலை எதிர்வு, அமைப்பிலிருப்பதைக் காண இயலுகிறது.

வழிபாடு : அமைதி X சினம்

கோயிலில் உள்ள அங்காளபரமேஸ்வரியம்மன் பலியை ஏற்காத அழகு வடிவத்தினளாக - சாந்த சொரூபிணியாக இருப்பதும் (Peace loving Deity)இப் புலத்தில் உள்ள பேச்சியம்மன் பலியை - இரத்தத்தை விரும்பி ஏற்கும் சினம் மிக்க தெய்வமாகவும் (Ferocious Goddess) கோரவடிவத்துடன் இருப்பதையும் ஒப்பிடும் போது இவ்விரு அமைப்பு முறைகளும் தெய்வத்தின் பண்புகளை இருவேறு நிலைகளில் புலப்படுத்துகின்றன.

படையல் : சமைத்ததும் X சமைக்காததும்

சமைத்த பொருட்களான பொங்கல், பள்ளயம், நெய் முதலானவை கோயிலில் இருக்கும் அங்காளபரமேஸ்வரிக்குப் படைக்கப்படுகிறது. ஆனால் சமைக்காத பொருட்களான உயிர்ப் பலி, செந்நெல், செங்கரும்பு, மாவிளக்கு முதலியன புலத்திலிருக்கும் பேச்சியம்மனுக்குப் படைக்கப்டுகின்றன. சமைத்த பொருட்கள் சமைக்காத பொருட்கள் எனும் இருநிலை எதிர்வு வழிபாட்டுப் படையல் பொருட்களில் அமைந்திருப்பதைக் காணலாம்.

நிறம் சிவப்பு X கருப்பு

சிவப்பும் கருப்பும் எதிர்வுநிலை அமைப்புடைய இருவேறு நிறங்கள். புலத்திலுள்ள பேச்சியம்மன் சிலைக்கு 3 மீட்டர் நீளமுள்ள பெரிய சிவப்புத்துணியால் உடல் முழுவதும் போர்த்தப்படுகிறது. பேச்சியம்மனுக்குப் பலி கொடுத்துப் படையல் செய்யும் ஆடு எவ்வித நிறக்கலப்பும் இல்லாத கருப்பு நிறமாக இருக்கிறது. அதேபோல் விழாச்சடங்கின் முடிவில் கருங்கோழி அடசல் சடங்கு நடத்தப்படுகிறது. இதற்குப் பயன்படுத்தும் கோழியின் நிறமும் கருமையே. எனவே எதிர்வுநிலையுடைய சிவப்பு X கருப்பு நிறங்கள் இங்கு

பயன்படுத்தப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

இங்ஙனம் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வத் திருவிழாவான பெரிய கும்பிடு விழாவில் லெவிஸ்ட்ரசின் இருநிலை எதிர்வு (Bineary Opposition) அமைப்பு முறைகள் அமைந்து, பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படுத்தலைக்காண்கின்றோம்.

இங்ஙனம் தனித்தன்மைகள் பலவற்றை உள்ளடக்கியதாக இந்தப் பெரியகும்பிடுவிழா அமைந்துள்ளதைக் காண இயலுகிறது. பெரிய கும்பிடுவிழா தனி ஆய்வு மேற்கொள்ளும் பழனி முருகன் பற்றி ஆய்வு செய்த அமெரிக்க மானிடவியல் ஆய்வாளர் மேனுவல் மொரானோ[30] குறிப்பிட்டதை இங்கு நினைவு கூறுதல் பொறுத்தமுடையது.

---

30. Manual Morone - Dept of Anthropotlgy North -Eastern illinois univarsity, வயது 50 நேர்காணல்.

பெரிய கும்பிடு விழா

1.சுத்தத் தண்ணீர் ஊற்றுதல்

2. பலியிடப்பட்ட ஆட்டின் இறைச்சியை வெட்டி எடுத்தல்

தொகுப்புரை

தொகுப்புரை

'கணம்' எனும் பழங்குடி அமைப்பிலிருந்துதான் ஜாதி என்ற சொல் உருவாகியது சாதிகள் காலப்போக்கில் பல்கிப் பெருகின.

சங்ககாலம் முதல் தமிழகத்திற்கும் ஆந்திரம் மற்றும் கர்னாடகத்திற்கும் இடையில் வணிகப் போக்குவரத்து இருந்து வந்துள்ளது. வணிகத்திற்காகத் தெலுங்கு வணிகர்கள் சங்காலத்தி லிருந்தே தமிழகத்திற்கு வந்தவண்ணம் இருந்தனர் என்பதைக் கல்வெட்டு அகழ்வுச்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. தமிழ் வணிகர்கள் வடுகதேயம் சென்று வணிகம் செய்ததைக் கனேறி, நெல்லூர் முதலான இடங்களில் உள்ள பிராமிக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

விஜயநகரமன்னர்கள் 14 ஆம் நூற்றாண்டியல் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்த போது படைகட்கு உதவிசெய்யப் பல்வேறு தொழில் பிரிவினரையும் உடன் அழைத்து வந்தனர். அவர்களுடன் வணிகத்திற்காக வந்த வளஞ்சியர்களின் ஒரு பிரிவினர். 24 மனைத்தெலுங்குச்செட்டியார்கள் ஆவர். படை முகாம்களில் பெரிய வணிகமையங்கள் இருந்தன. வணிகத் தொழில் நடைபெற்றுள்ளது. வணிகர்களுக்குப் படை வைத்துக் கொள்ளும் உரிமை வழங்கப் பட்டிருந்தது. வெற்றிக்குப்பிறகு படைகள் மன்னேறிச் செல்லுகையில் தங்களின் நம்பிக்கைக்குரியவர்களிடம் கைப்பற்றிய பகுதிகளை ஒப்படைத்துச் செல்லுவது வழக்கமாக இருந்தது. அதன் படி வணிக வீரர்களாகத் திகழ்ந்த இவர்கட்குச் சில பகுதிகளை ஆளும் வாய்ப்பு கிடைத்ததால் "தேசாதிபதிகள்" என அழைக்கப் பெற்றனர்.

இடங்கை, வலங்கை என்ற இருபிரிவுகளில் இருந்ததும் ஒவ்வொரு பிரிவிலும் 98 சாதிகள் இருந்ததும் வரலாற்று

உண்மை. இதில் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் இடங்கைப் பிரிவினைச் சார்ந்தவர்கள் என்பதை அறிய முடிகிறது. தட்சிணபதம், காஞ்சி பருகச்சப் பெருவழி ஆகிய நெடுஞ்சாலைகள் வழியாக விஜயநகரப் படைகள் தமிழகத்திற்கு வந்தன. இந்தப் பெருவழிகளில் அமைந்துள்ள முக்கிய நகரமான கரூரைச் சுற்றி அமைந்துள்ள இவ்வினத்தவரின் குலதெய்வக் கதைகள் இவர்கள் வந்த இந்த வழித் தடத்தை உறுதிப் படுத்துகின்றன.

இவ்வினத்தவர் பற்றிய புராணக்கதை இவ்வினத்தின் தோற்றம் பற்றியும். உரிமைப் பெண் மணஉறவு பற்றியும் குறிப்பிடுகின்றது.

தெலுங்குச்செட்டி, ஜனப்பச் செட்டி, சாதுச் செட்டி என்று பல்வேறு பெயர்கள் 24 மனைத்தெலுங்குச் செட்டியார் இனத்திற்கு உண்டு.

'மனை' என்பது பழந்திராவிடச் சொல்லாகும். 'வீடு, பல்கிப்பெருகுவது' என்ற பல பொருட்கள் இதற்கு உண்டு. இந்த அடிப்படையில் 'மனை' என்ற சொல் இங்கு குலத்தைக் குறிப்பதாக அமைகின்றது. '24' எனும் எண், புனித எண்ணாகப் பழங்காலத் திலிருந்து கருதப்பட்டு வருகின்றது 24 குலங்களை உடைய, தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட வணிகர்கள் என்பதே 24 மனைத் தெலுங்குச்செட்டியார்கள் என்பதின் பொருளாகும்.

குடும்பம் என்பது அடிப்படை அலகு. இது அனைத்துச் சமுதாயங்களிலும் காணப்படுகின்ற நிறுவனமாகும். குடும்பமானது பாலியல், இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி, ஆகிய நான்கு முதன்மையான பணிகளைச் செய்கின்றது.

குடும்பமானது இரு நிலைகளில் உள்ளது. மணமக்கள் மணவாழ்வு கொள்ளும் நிலையில் தொடங்கும் இதற்கு மணவழிக்குடும்பம் என்றும் அவர்களின் சந்ததியினர் பல்கிப்

பெருகிய நிலையில் உள்ளது. வளர்குடும்பம் எனவும் அழைக்கப்படுகிறது. 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குடும்ப அமைப்பு வளர்குடும்பமாக விரிந்து பரந்துள்ளது.

குடும்பங்களின் துணைகொண்டு வளரும் உறவுப் பிணைப்பானது அந்தந்த சமுதாய முறைக்கு எற்ப அமைகின்றன. உறவுகளை தந்தைவழி அல்லது தாய்வழி வாயிலாக அமையும் ஒரு வழி மரபு எனவும் தந்தை, தாய் இருவரின் வழியிலும் இணைந்து வரும் இருவழிமரபு, எனவும் இருவகையுண்டு. அதில் 24 மனைத்தெலுங்குச்செட்டியார்கள் தந்தை வழிமரபு எனும் ஒரு வழிமரபு சார்ந்த ஒரு மூதாதையர் வழிவந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வினத்தில் சொத்துரிமை செட்டுமை, பூசாரி, பெரியதனம், கோயில்தலைவர், போன்ற பதவிகள் மரபுவழியாக ஆண் வாரிசுகட்கே உண்டு.

மணவழிக்குடும்பத்தில் தொடங்கி வளர்குடும்பமாக விரிவு பெற்று, தந்தை வழி மரபில் மகன், பேரன், கொள்ளுப்பேரன் எனும் நேர்கோட்டில், மரபுரிமையில் பெருகி நிற்பதே குலமாகும். ஒரு குலத்தைச் சார்ந்தவர்கள் பங்காளிகள் என்றும் அவர்கள் ஒரு மூதாதையர் வழி வந்தவர்கள் என்பதும் பொருளாகிறது.

குலம் எனும் சொல்லுக்கு ஒரு குலையில் இருந்து கிளைத்து வந்தவர்கள் என்பது பொருள். குலம் எனும் சொல்லாட்சி பல இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

இவ்வினத்தில் 24 குலங்கள் உண்டு. பல்லடம் செப்பேடு 24 குலங்களின் பெயர்களையும் கூறும் சான்றாதாரமாகத் திகழ்கின்றது.

இவ்வினத்தவரின் மண உறவுகள் 'புறமணம்' சார்ந்தவை. 24 குலங்களை இரு பிரிவாகப் பிரித்துள்ளனர். ஒரு பிரிவில் 16 குலங்கள் அணிவகுக்கின்றன. மறுபிரிவில் 8 குலங்கள் அணிவகுக்கின்றன. ஒரே பிரிவுக்குள் திருமணங்கள்

நிகழ்வதில்லை. இரு பிரிவுக்கும் இடையேதான் மண உறவுகள் நடைபெறுகின்றன. இநத் மண நெறியிலிருந்து பெரும்பாலும் பிறழ்ச்சி நிகழ்வதில்லை. மண உறவுகள் குல அடிப்படையில் நிகழ்கின்றன.

சில குலங்களுடன் மண உறவுகொள்ளுவது சில குலத்தினருக்கு ராசி என்றும் சில குலத்தினருக்கு ராசியில்லை என்றும் பெரிதும் நம்புகின்றனர். குலராசி பற்றிய நம்பிக்கை இவ்வின மக்களிடையே நிறைந்திருக்கிறது. மண உறவுகளை நிர்ணயிக்கும் கருவியாகக் 'குலம்' செயல்படுகிறது.

வழிபடு தெய்வங்களுள் முதன்மையானது குலதெய்வமே எனும் எண்ணம் 24 மனைத்தெலுங்குச் செட்டியார்கள் இன மக்கள் மத்தியில் ஆழமாக வேரோடியுள்ளது. இவ்வினத்தவரது குடும்பவிழாக்களில் அனைத்திலும் குலதெய்வச்சடங்குகள் முதன்மைப்பங்கு வகிக்கின்றது.

பிறந்த குழந்தையைக் குலதெய்வக் கோயிலுக்கு எடுத்துச்செல்லுதல், பெயரிடுதல், முடிக்காணிக்கை செலுத்துதல், காதணிவிழா முதலியவை குலதெய்வக் கோயில்களில்தான் இவ்வினத்தவரால் செய்யப்படுகின்றன. திருமணம் போன்ற விழாக்களின் அழைப்பிதழ்கள் முதன்முதலில் குலதெய்வக்கோயிலில் வைத்து வழிபட்ட பின்னரே பிறருக்கு வழங்குகின்றனர். திருமணப்பட்டு வாங்கும் நிகழ்வின்போது முதலில் குலதெய்வத்திற்குப் பட்டு எடுக்கும் மரபு தொன்று தொட்டுப்பின்பற்றப்பட்டு வருகிறது.

குலதெய்வக் கோயில்களில் குலத்தவர்கட்குரிய உரிமைகளும் சிறப்புகளும் வாய்மொழி வழக்காறுகளின் மூலம் வரையறுத்துப் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த வழக்காற்று மரபுகள் காரணமாகப் பிணக்குகள் நிகழ்வதில்லை. குலப்பூசாரிகள் செய்த பூசைப்பணி பண்டாரங்களிடம் மாறியதும் சில இடங்களில் மேல் நிலையாக்கம் காரணமாகப் பிராமணர்களிடம் சென்றதும் குறிப்பிடத்தக்கது. குலதெய்வவிழாக்களில் மாமன்–மச்சான் உறவுக்காரர்களுக்கு

முதல் மரியாதை தந்து பெருமைப் படுத்துகின்றனர்.

தமிழர் திருநாளான பொங்கல் நாளில் குடும்பத்தலைவர், குடும்பத்தலைவி, குலதெய்வம் ஆகிய மூவருக்கும் மூன்று பொங்கல்கள் வைப்பது இவ்வினத்தின் தனிச்சிறப்பாகும். குலதெய்வப்பொங்கல் புற்றுக்கண் வழிபாடு இவ்வினத்தின் தனித்தன்மையாகும். திருமண நிகழ்வுக்குப் பிறகு மணப்பெண் வைக்கும் முதற்பொங்கல் குலதெய்வக் கோயிலில் தான் எனும் மரபு வழுவின்றிப் பின்பற்றப்படுகிறது. பெயர்சூடல், முடியெடுத்தல், காதணிவிழா ஆகிய சடங்குகளின் போது குலதெய்வக்கோயிலில் பொங்கல் வைக்கப்படுகிறது. பொங்கல் நன்கு பொங்கி வழிவது நன் நிமித்தம் என்னும் நாட்டுப்புற நம்பிக்கை நிலைபெற்று நிறைந்துள்ளது. பொங்கலுக்குப் பயன்படுத்தப்படும் பாத்திரம் மண்பானையிலிருந்து பித்தளைக்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது. காலமாற்றத்தால் ஏற்பட்டது இந்தக் கருவி மாற்றம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குலதெய்வத்தின் சீற்றத்தைத் தணிப்பதற்காகவும், நேர்த்திக்கடனுக்காகவும் தெய்வத்தைத் திருப்திப்படுத்து வதற்காகவும், குலதெய்வக்கோயில்களில் உள்ள காவல் தெய்வத்திற்குப் பலியிடப்படுகின்றன.

துலுக்கமல்லிப் பூ கருப்புநிறம், மது முதலிய பொருட்கள் பயன்பாட்டு விலக்காக இவ்வின மக்களால் கருதப்பட்டுத் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வினத்தில் ஒருவர் இறந்து விட்டால் உயிர் நீத்தவுடன் அவருக்குச் செய்யும் பூசை, இறந்தவரது குலத்தைச் சேர்ந்த பங்காளியால் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்கிற பழக்கம் நடைமுறையில் இருந்து வருகின்றது. இறப்புக் காரணமாக ஏற்படும் தீட்டினால் 6 மாதம் வரை குலதெய்வக் கோயிலுக்கு அக்குடும்பத்தினர் செல்லுவதில்லை.

இறப்பு வீட்டில் நடக்கும் கருமாதிச் சடங்கின்போது

இறந்தவரது வாரிசுகட்கு, உரிமைக்கட்டுச் சீருக்காக, அவரது மாமன், மச்சான் உறவுக்காரர்களால் வழங்கப்படும். வேட்டி துண்டுகள் அனைத்தும் குலத்தைச் சேர்ந்த பங்காளிகட்குப்பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

இவ்வினத்தவரின் குலதெய்வக் கோயில்கள் கிராமத்திலுள்ள அனைத்துச் சமூகத்தினரும் வழிபடும் கிராமக்கோயில்களாக விரிவாக்கம் பெறுகின்றன.

குலதெய்வத் திருவிழாவின் போது, உள்ளூர் மக்கட்கு அன்னதானம் வழங்குவது இவ்வினத்தவரின் மிகப்பழமையான மரபாகும்.

குலதெய்வக் கோயில்களில் உள்ள மண்டபங்கள் குலதெய்வ விழாக்கள் இல்லாத நாட்களில், திருமணம், காதணி சடங்கு போன்ற பிற கிராம மக்களின் சமூக நிகழ்வு கட்குப் பயன்படும் சமுதாயக் கூடமாக விளங்குகிறது. இவ்வின மக்கட்கும். பிற சமூகத்தினருக்குமிடையே சமூக நல்லுறவை இது வளர்க்கிறது.

குலதெய்வத் திருவிழாக்களின் போது நெடுந்தொலைவு, போக்குவரத்து வசதியின்மை ஆகியவற்றைக் கருதாது குலமக்கள் விழாநிகழ்வில் கலந்துகொள்கின்றனர். இவ்வாறு இவ்விழாவில் கலந்து கொள்ளுவதால் நிகழும் உறவினர் சந்திப்பு, கூட்டு உறவில் நெகிழ்ச்சியின்மையையும் கூடி மகிழும் குழு மனப்பான்மையை உருவாக்குகின்றது.

குலதெய்வ விழாக்கள் மணப்பெண் மணமகனைத்தேர்வு செய்யும் களங்களாக அமைகின்றன. குலதெய்வக் கோயில்களில் ஆண்டுதோறும் ஆடிப்பெருக்கு விழா, புரட்டாசிச்சனிக்கிழமை, கார்த்திகை விளக்கீட்டு விழா, மகா சிவராத்திரி விழா முதலியவை குலமக்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளும் விழாக்களாகும்.

ஆடிப்பெருக்கு விழா நாளன்று மேட்டுமகாதானபுரம் மகாலட்சுமி அம்மன் கோயிலில் தலையில் தேங்காய் உடைத்து

வழிபடும் வழிபாடு இடம்பெறுகின்றது. குறும்பர் இனத்துடன் சேர்ந்து நடத்தப்பெறும் இவ்வழிபாடு வன்தொண்டர் செயலாகும்.

இவ்வினத்தைச் சேர்ந்த மேல்நிலையாக்கத்திற்கு ஆளான குலதெய்வக் கோயில்களில் மட்டும் புரட்டாசிச் சனிக்கிழமை பெரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கன்னிப் பெண்கள் கூட்டாகச் சேர்ந்து நெல் குத்தி அரிசியெடுத்துப் பொதுப்பொங்கல் வைக்கும் சடங்கு மிக முக்கிய நிகழ்வாகும். கன்னியருக்கு இவ்வினமக்கள் தரும் முதன்மை இடமும் கன்னிமைப் போற்றப்படுவதும் புலப்படுகிறது. நெல் குத்துவது என்பது வளமை வழிபாட்டோடு தொடர்புடையதாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கார்த்திகை விளக்கீட்டு விழாவன்று குலதெய்வக் கோயில்களில் விளக்கேற்றி வழிபடுவதன் மூலம் தங்கள் குடும்பமும் குலமும் ஒளிமயமாகும் என இவ்வின மக்கள் உறுதியுடன் நம்புகின்றனர். வடமொழி மந்திரங்கள் இவ்விழாவில் இடம்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொருவரும் எண்ணெய் கொண்டு வந்து பெருவிளக் கிற்கு ஊற்றுவது பல குடும்பங்களின் பங்களிப்பைக் குறிக்கின்றது. சமயச் சடங்கின் வழி சமூக சமத்துவம் ஏற்பட இவ்விழா அடித்தளமிடுகிறது. பெண்கள் பெருமளவில் பங்கேற்கும் கார்த்திகை விளக்கீட்டு விழாவில் பெருவிளக்கு ஏற்றப்படும் விளக்குச் சட்டியில், முதன் முதலில் எண்ணை ஊற்றுவது கன்னிப் பெண்தான் என்கிற மரபு பின்பற்றப்பட்டு வருகின்றது.

பெருவிளக்கு ஏற்றுப்படுகின்ற போது விழாவில் பங்கேற்கும் அனைவரும் தெய்வத்தின் பெயரைச் சொல்லிக் கூட்டுக் குலவையிடுகின்றனர். வழிபாட்டில் வாய்மொழி மரபு பின்னிப் பிணைந்திருப்பதை இது காட்டுகின்றது.

நவதானியம், பால் வடியும் மரமான பாச்சாங்குச்சி முதலியன பெருவிளக்கில் பயன்படுத்துவதிலிருந்து இச்சடங்கு வளமை வழிபாட்டுடன் இணைந்தது என்பது புலப்படுகிறது. புதுத்து ணியில் நவதானியத்தை முடிந்து விளக்குச் சட்டியின் திரியை உருவாக்குவதும் பால்வடியும் மரமான பாச்சாங் குச்சியை நட்டு அதன் மீது விளக்குச் சட்டியை வைப்பதும் வளமை வழிபாட்டுடன் இணைந்தது இச் சடங்கு என்பதைப் புலப்படுத்துகிறது.

மகாசிவராத்திரி விழா குலதெய்வ விழாக்களில் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இது விரதத்தோடு தொடர்புடைய விழாவாகும். கோயில் முதன்மையாளர் சக்திக் கரகம் எடுத்து வருவது இவ்விழாவில் சிறப்பு அம்சமாகும். பம்பைக்காரர் பம்பை அடித்துக் குலதெய்வப் பெருமைகள் நிறைந்த சக்தியழைக்கும் பாடல்களைப் கூறி பம்பையடிக்கிறார். நாட்டுபுற முறைகளில் ஒன்றான பாட்டுப்பாடி சாமியழைக்கும் நிகழ்வு இவ்விழாவில் இடம்பெறுகின்றது.

சக்திக் கலசம் முத்திரிக்கப்பட்ட பின்னர் அத்துடன் இரு கலசங்களை கன்னிப்பெண்கள் சுமந்து குறிப்பிடத்தக்கது. உப்பில்லாமல் பயிறு வகைகளை வேகவைத்து தெய்வத்திற்கு படைப்பதைப் பள்ளயப் பூசை என அழைக்கின்றனர்.

பக்திக் கதைகள், உடுக்கைப் பாடல், வாய்ப்பாட்டு இசைநிகழ்ச்சிகள், இலக்கியநிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று இவ்விழாவில் இடம்பெறுகிறது.

திருமணமானவர்களைத் தலைக்கட்டு என்று அழைக்கின்றனர். ஒவ்வொரு குலதெய்வக்கோயில்களிலும் உள்ள தலைக்கட்டுக் க்ளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு வைத்துள்ளனர். தலைக்கட்டு வரி செலுத்துவது குலமக்களின் தலையாய கடமையாகும். இக்கருத்திற்குப் பல்லடம் செப்பேடு சான்றாதாராமாகிறது.

இவ்விழாவின் போது தலைக்கட்டுப் பொங்கல், பொதுப் பொங்கல் என இரு பொங்கல்கள் வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு தலைக்கட்டினரும் தனித்தனியாக வைக்கும் பொங்கல் தலைக்கட்டுப் பொங்கல் எனவும் அனைவரும் சேர்ந்து வைக்கும் பொங்கல் பொதுப் பொங்கல் எனவும் அழைக்கின்றனர். பொதுப்பொங்கல் என்பது எல்லோருடைய நலனும் சேர்ந்த அனைத்து மக்களின் பங்களிப்புள்ள, பரந்த நோக்கினை வளரச் செய்யும் சடங்காகும்.

கொடுமுடி, மேல் மலையனூர், திருமூர்த்தி முதலிய திருத்தலங்களிலிருந்து தீர்த்தங்கள் எடுத்துவரப்பட்டு குலதெய்வத்திற்குத் தீர்த்த அபிஷேகம் செய்யப்படுகிறது. குலதெய்வக் கோயில்களில் கள்ளிவலசு என்ற இடத்தில் மட்டும் குண்டம் இறங்குதல் நிகழ்வு நடைபெறுகிறது. தீ விழா என்பது கால்நடை மேய்ப்பவர்கள் செய்த சடங்கின் தொடர்ச்சியாகும். இவ்விழா வளமை வழிபாட்டோடு தொடர்புடையதாகும்.

மகாசிவராத்திரி முடிந்தவுடன் கோயிலுக்கு வெளியே கருங்கோழியைப் பலியிட்டு, அடசல் பூசை நடத்தப்படுகிறது. நாட்டுப்புறத்தெய்வ வழிபாடுகளில் அடசல் பூசை முக்கிய இடத்தை வகிக்கின்றது.

ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு குலதெய்வம் உண்டு. ஒரே தெய்வம் ஒரு குலத்தவருக்குக் குலதெய்வமாக இருப்பதுண்டு. ஒரு (பெயருள்ள) குலத்திற்குப் பல்வேறு இடங்களில் குலதெய்வம் இருப்பதுண்டு. 'பங்காளிகள்' என்ற சொல் ஒரு குலதெய்வத்தை வணங்குபவர்கட்கு மட்டுமே பயன்படுகின்றது.

இவ்வின மக்களுடைய குலதெய்வமானவர்கட்கு நடுகல் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. அற்புதநிகழ்வால் உண்டான குலதெய்வம் பேழையில் வைத்து வழிபடப்பட்டது. நடுகல் வழிபாடும், பேழை வழிபாடும் காலப்போக்கில் சிலை வழிபாடாக மாற்றம் பெற்றுக் குலதெய்வக் கோயில்களாக

வடிவம் பெற்றன.

குலதெய்வக் கோயில்களில் 'மூலக்கோயில்கள்' என்றும் அங்கிருந்து பிடிமண் எடுத்துச் சென்று கட்டப்படும் கோயில்கள் 'பிடிமண் கோயில்கள்' என்றும் இருவகை உண்டு. பிடிமண் எடுத்துவந்து கட்டும்போது மூலக்கோயில்களின் அருளாற்றல் பிடிமண் கோயிலுக்குக் கிடைக்கிறது. மூலக்கோயில் சிதைவுற்றால் பிடிமண் கோயிலுக்கு அருளாற்றல் இராது எனக் கருதப்படுகின்றது.

இவ்வின மக்களிடையே குலதெய்வக்கதைகள் மிகுதியாக வழங்கி வருகின்றன. குலதெய்வத்தின் வரலாறு, வழிபாடு, நம்பிக்கைகள், புலம்பெயர்தல், தொழில் ஆகியனபற்றி இக் கதைகள் புலப்படுத்துகின்றன.

ஒவ்வொரு குலதெய்வத்திற்கும் ஒரு வரலாற்றுக்கதை உண்டு. இருப்பினும் சில குலதெய்வக்கதைகள் மட்டும் உதாரணக் கதைகளாக இவ்வியலில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

குல தெய்வக் கதைகள் குலதெய்வ வழிபாடு பற்றிக் கூறுவதோடு, கற்பு உயிரினும் மேலானது கணவனைப் பிரிந்து வாழாமை, வளர்ப்புப் பிள்ளையை ஈன்றபிள்ளைக்கும் மேலாகப் பேணுதல், முதுமையை எள்ளல் கூடாது. பஞ்சாயத்தார் தீர்ப்புக்குக் கட்டுப்படுதல் முதலிய அறக் கருத்துக்களை எடுத்துரைக்கும் நீதிக் கதைகளாகவும் திகழ்கின்றன.

மேல்மலையனூர் அங்காளம்மன் பற்றிய புராணக்கதையின் அடிப்படையில் மகாசிவராத்திரி விழாநிகழ்வுகள் அமைகின்றன. அங்காளம்மன் வழிபாட்டில் பண்டைய கொற்றவை வழிபாட்டின் கூறுகள் இடம் பெறுகின்றன.

மேல்மலையனூர் அங்காளம்மன் 24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் குலமுதல் தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றது. இவ்வினத்தவரின் அனைத்துக்

குலதெய்வக்கோயில்கட்கும் மகாசிவராத்திரியன்று மேல்மலையனூரிலிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று அபிஷேகம் செய்யப்படுகின்றது. குலமுதல் தெய்வத்தின் ஆற்றல் தீர்த்த அபிஷேகத்தால் கோயில்கட்குக் கிடைக்கின்றது எனும் இவ்வின மக்களின் நம்பிக்கை புலனாகிறது.

இவ்வனி மக்களின் குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகளில் நாட்டுப்புற மரபுகள் மேலோங்கி உள்ளன. குலதெய்வம் பற்றிய கதைகள், வழிபாட்டுப் பாடல்கள் முதலியன வாய்மொழி வழக்காறு களாகக் குலதெய்வ வழிபாட்டில் பின்னிப் பிணைந்திருப்பதை அறிய முடிகிறது.

நாட்டுப்புற இசைக்கருவியான 'பம்பை' 24 மனைத்தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வவழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றது. பம்பை இசைக் கலைஞர்கள் இவ்வினத்தவரின் அனைத்துக் குலதெய்ச் சடங்குகளிலும் பங்கேற்கின்றனர் ஆண்டுக்கு ஒரு முறை அனைத்துக் குலமக்களின் வீடுகட்கும் சென்று பம்பை அடித்துக் குலதெய்வக்கதைகள் சொல்லி நாட்டுப்புற மரபுகளைக் காக்கும் அரும்பணியைச் செய்கின்றனர்.

திருமணமானவர்களைத் தலைக்கட்டு என்று அழைக்கின்றனர். 'தலைக்கட்டுவரி' செலுத்துவது குலமக்களின் தலையாய கடமை எனக்கருதப் படுகிறது. தலைக்கட்டுவரி மூலம் வரும் வருவாயி லிருந்துதான் குலதெய்வக்கோயிலுக்கான ஓராண்டுச் செலவினங்கள் சந்திக்கப்படுகின்றன. 'தலைக்கட்டுவரி' செலுத்துவது பற்றிய செய்தி பல்லடம் செப்பேடு மூலம் அறிய முடிகின்றது.

குலதெய்வ விழாக்கள் இவ்வின மக்களிடம் குழு ஒருமைப் பாட்டுணர்வை உருவாக்குகிறது. மண உறவுகள் வளரும் மையங்களாக விழாக்கள் செயல்படுவதோடு உறவில் நெருக்கத் தையும் விரிவாக்கத்தையும் உண்டாக்குகின்றன.

குலதெய்வக்கோயில்களில் அமைந்துள்ள மண்டபங்கள்

விழாக்காலங்களில் அன்னதானமளிக்கும் நிலையங்களாகவும், விழா அல்லாத காலங்களில் பிறசமூக மக்கட்குப் பயன்படும் சமுதாயக் கூடங்களாகவும் பயன்படுகின்றன. குலதெய்வக்கோயில்கள் பிற சமூக மக்கள் வழிபடும் கிராமக் கோயில்களாக விளங்கிவருகின்றன. இது சமூக ஒருமைப்பாட்டுணர்வையும், சமூக நல்லிணக் கத்தையும், சமூக சமத்துவ உணர்வையும் வளர்க்கின்றது.

பன்னிரெண்டு ஆண்டுகட்கு ஒரு முறை கொண்டாடப் பெறும் பெரிய கும்பிடுவிழா இவ்வினத்தவருக்கென வரையறுக்கப்பட்ட நெறிகளினின்று பிறழ்வதாலும் குலதெய்வ வழிபாட்டு முறைகளில் ஏற்படும் தவறுகளாலும் உண்டாகும் குலமாசுதனை புகைத்தண்ணீர்–சுத்தத்தண்ணீர் எனப்படும் பல்வேறு பொருட் களால் தயாரிக்கப்படும் புனிதநீர் ஊற்றிக் கழுவுவதே இவ்விழாவின் முக்கிய நிகழ்வாகும்.

வாழ்க்கை நெறிகளினின்றும் வழுவுதல் கூடாது எனும் நீதி வலியுறுத்தப்படுகிறது. எனினும் தவறுவது மனித இயற்கை என்பதும், தவறுக்குக் கழுவாய் உண்டு என்பதும் இச்சடங்கால் உணர்த்துப் பெறுகிறது.

குழந்தைக்குப்பெயர் வைத்தல், காதணி விழா நடத்துவது முதலிய சடங்குகளைப் பெரிய கும்பிடு விழாவில் செய்வது சிறப்பானது எனும் நம்பிக்கை இவ்வின மக்கிளிடையே நிறைந்தது நிற்கிறது.

பெரிய கும்பிடு விழாவைக் கோயிலுக்கு எதிர்புறமுள்ள இடத்தில் புலம் அமைத்து (கீற்றுக்கொட்டகை) அதில் பேச்சியம்மன் சிலையை பெரிய அளவில் கிடந்த கோலத்தில் வடித்து அதற்குப் பலியிடல் முதலிய அகற்றுவதில்லை. காலப்போக்கில் தானாகவே சிதையும் வண்ணம் விட்டு விடுகின்றனர்.

ஒச்சமில்லாத கருப்பு நிறமுடைய சினை ஆட்டைப் பலியிட்டு அதன் கருவை வெளியே எடுத்து வாழையிலையில்

வைத்துப் பேச்சிக்குப் படையல் செய்யப்படுகிறது. ஒரு முக்கிய சடங்காகும்.

இவ்விழாவில் இடம் பெறும் பன்றி வேட்டை வேளான் தொழிலிலிருந்து உருவான சடங்கு என்பது கருத்தத்தக்கது.

இவ்விழாவில் இடம் பெறும் அனைத்து சடங்குகளிலும் மானிடவியலார் குறிப்பிடும் இருநிலை எதிர்வு அமைப்பு முறைகள் இருப்பதைக்கான இயலுகிறது.

சிறப்பு முடிவுகள்

24 மனைத்தெலுங்குச்செட்டியார்களின் குலதெய்வங்கள் அனைத்தும் பெண் தெய்வங்களே ஆகும். பெண் குலதெய்வங்களை வழிபடும் சமூக அமைப்பில் தாய்வழி அமைப்பு முறைதான் நிலைபெற்றிருக்கும் எனும் வரலாற்று உண்மை இவ்வினத்திற்கும் பொருந்தி வருவதை அறியமுடிகிறது.

பெண் குலதெய்வங்கள் நிலைபெற்றுள்ள சமூக அமைப்பு வேளாண்மையோடு தொடர்புடையது என்பது மற்றொரு வரலாற்றுண்மையாகும். இதன்படி இவ்வினமக்கள் வேளாண் மையோடு தொடர்புடையவர்கள் என்பது அறிய முடிகிறது. வேளாண்மையோடு தொடர்புடைய பல சமூகக் குழுக்கள் காலப்போக்கில் வேறு தொழில்கட்க மாறியதுபோல இவ்வின மக்களும் வணிகத்திற்கு மாறியுள்ளனர் என்பது புலனாகிறது.

மிகப்பழங்காலத்திலிருந்து எல்லையற்ற ஆற்றலுடைய தாகப் போற்றப்படும் கன்னிமை இவ்வின மக்களின் குலதெய்வச் சடங்குகளில் திரும்பதிரும்பப் பல்வேறு சூழ்நிலைகளில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். 'கன்னிமை' பேரளவில் போற்றப்படும் வழிபடப்படுகின்றது என்பதை அறிய முடிகிறது.

குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகள் அனைத்திலும் முதல் மரியாதை, சிறப்புச் செய்தல் முதலிய, மாமன்–மைத்துனர் உறவுமுறையினர்க்கு மட்டுமே தலைமுறை தலைமுறையாக

வழங்கப்பட்டு வரும் மரபு தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருவதால் இவ்வினமக்களிடையே பெரும்பாலும் பிணக்குகள் ஏற்படுவதில்லை.

குலதெய்வக் கோயில்களின் பூசைப்பணிகளை அக்குல தெய்வத்தை வழிபடும் குலத்தவரே செய்து வந்தனர். பின்னர் பண்டாரங்களிடம் பூசைப் பணி ஒப்படைக்கப்பட்டது. மேல்நிலை யாக்கத்தின் காரணமாகச் சில கோயில்களில் பிராமணர்கள் பூசாரிகளாக நியமிக்கப்படுள்ளனர்.

இவ்வினத்தில் 'குலக்குறி' அமைப்பு உண்டு என்று தர்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கள ஆய்வில் இவ்வின பெரியவர்கள், கோயில் செட்டுமைகள் ஆகியோரை பேட்டி கண்டதிலும் பிறரிடம் தரவுகளைத் திரட்டியதிலும் குலக்குறி அமைப்பு இவ்வினத்தில் இல்லை என்பது உறுதிப்படுகிறது.

இவ்வினத்தின் பயன்பாட்டு விலக்காக மது, துலுக்க மல்லிப்பூ, கருப்பு வண்ன் முதலியன உள்ளன. என்பதை அறிய முடிகிறது. ஒருவர் வீட்டில் சாவு நடந்து விட்டால் ஆறு மாதங்கட்கு அக்குடும் பத்தினர் தங்கள் குலதெய்வக் கோயிலுக்குச் செல்லுவதில்லை எனும் மரபு இவ்வினத்தவரிடையே உண்டு என்பதை அறிய முடிகிறது.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் பெரிய கும்பிடு விழா'வைப் பெரிய அளவில் கொண்டாடுகின்றனர்.

எதிர்கால ஆய்வு

வரலாற்றியல், நாட்டுப்புறவியல், மானுடவியல், சமூகவியல் முதலியவற்றை உள்ளடக்கிய இவ்ஆய்வினை அடியொற்றிப் பிற சமூகத்தைச் சார்ந்த குலதெய்வங்களைப் பற்றி ஆராய்வதற்கு இது வழிவகுக்கின்றது. அவ்வாறு ஆராய்வதன் மூலம், தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற குலதெய்வ வழிபாட்டுப் போக்குகில் காணப்படும் பொதுத்தன்மைகளை வரையறை செய்யலாம்.

குலதெய்வ வழிபாட்டு ஆய்வின் வழி ஒரு குறிப்பிட்ட சமூக மக்களின் இனவியல் பற்றி ஆராயலாம்.

குலதெய்வக் கதைகள் குறித்து தொகுத்து, வகைப்படுத்தி தனி ஆய்வாக மேற்கொள்ள இவ்வாய்வு வழிவகுக்கின்றது. குலதெய்வக் கதைகள் குறிப்பிடும் செய்லவகைகளை மையமாக வைத்து கதைகள் பற்றிய கதைப் பொருட்கூறு அட்டவணை தயார் செய்யவும் வழிகாட்டியாக அமையும்.

கதைசொல்லும்முறை, கதை வழங்கும் சூழல்கள், கதை பரவும் முறை, கதைகள் புலப்படுத்தும் நம்பிக்கைகள் ஆகியன குறித்து ஆராய குலதெய்வக்கதைகள் பற்றித் தனி ஆய்வு மேற்கொள்ளலாம்.

குலதெய்வ வழிபாடுகள் உருவாக்கும் சமூக உறவுகள் குறித்து சமூகவியல் நோக்கில் ஆராய இவ்வாய்வேடு பெரும் துணைபுரியும். 'பம்பை இசைக்கலைஞர்களின் சமூக வாழ்வும் பம்பை இசையும் ஒரு தனித்தலைப்பில் ஒரு ஆய்வினை மேற்கொள்ளலலாம்.

ஆய்வின் சமூகப் பயன்

ஓரினத்தைப்பற்றியதான் இந்த ஆய்வு இந்திய பண்டாட்டிற்கு ஓர் பங்களிப்பை அளிக்கின்றது. 24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் குல தெய்வ வழிபாட்டை ஆராய்வதன் மூலம் இவ்வின மக்களுடைய சமூகப்பண் பாட்டினை அறிந்து கொள்ள முடிகின்றது. பல்வேறு சமூகப் பண்பாட்டு குழுக்குளுடைய திரட்சியே இந்தியப் பண்பாடாகும். ஒரே இனத்தைப்பற்றிய இது போன்ற பண்பாட்டு நுண் ஆய்வுகள் மிகப் பரந்த களம்கொண்ட இந்திய பண்பாட்டினை அறிந்து கொள்ளப் பெரிதும் துணை புரியும்.

மலையனூர் அங்காளபரமேஸ்வரி பற்றிய பம்பைப் பாடல்

சீர்வளரும் மலையனூர் வந்து ஐம்பத்தாறு
தேசமெல்லாம் நிறைந்தாய்
திரளான செல்வமும் மைந்தரும் விஜயமும்
தேர்ந்தவடி யார்களிப்பாய்
தருமதுர யதிவீரி ரணவீர பத்ரனும்
சதிரான இருளப்பனும்
சகல விஜயமும் பெற்ற பாவாடைராயனும்
தனதுபரி வாரமுடனே
அருமை வளர் பூத கண நாதர் புடை சூழவே
அன்பாய்க் கொலுவிருப்பாய்
ஆயிசுந் தரிவிமலி அம்பிகை யலங்காரி
அங்கையணி யுங் கபாலி
பொருது மடியார்கள் தன் பிணி பறந்தோடிட
விபூதியரு ளுங் காளியே

பூங்காவி னீழலுறை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!

பாதச் சிலம்பு சதங்கையொடு வண்டயம்
பாடகத் தொனியினழகும்
பட்டாடையணியிடையில் ஒட்டியாண
பளப்பளப் பின்னழகும் அரையினில்
சித்தாங்கு களப கஸ்தூரி சவ்வாது சந்தனம்
சேர்முலைக் கச்சினழகும்
செங்கையிற் கடகமும் நவரத்ன மணிவயிரமும்
சூட்டுமதி நெற்றியி னழகும்
மேதினியை விலை கொண்ட கண்ட சர மங்கிலியம்
மேவுமுத் தணியினழகும்

மிருதுவசனமும் கொந்த ளக்காதினெடு கொப்பு
மிக பங்க யத்தினழகும்
போது கொண்டு பணியுமடி யார்கள் முன் வந்தருள
புரிந்தருளும் அங்காளியே
பூங்காவி னீழலுறை ஓங்கார சக்தியே

பூங்காவனத் தாயே!

வாமி நீ காமிநீ மால் சிவனு மயனுநீ
மகிமை பெறு காமாட்சி நீ
மங்கை சிவ காமி நீ மாயவன் றங்கை நீ
மன்னுமரு வங்கி வெளி நீ
கோமள ஸ்வரூபிநீ இரவு நீ பகலுநீ
குருநமசி வாயமும்நீ
கூத்தாடு மீசனொடு கூத்தாடுங்காளிநீ
குலவ்புர சிவமும் நீயே
ஓமந்திர ரூபிசங் காரி சங்காரியே!
ஒரு கையிற் கபாலமும்
ஒரு கையிற் சூலமும் ஒரு கையிற் பம்மையுங்
கொண்டு வந் தெந் நாளுமே
மிதனி லடியார்கள் வினை தீர்த்து வாழ்வுக்கு
புண்ணியப் பெருஞ் செல்வியே
பூங்காவி னீழலுறை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!

மலையனு மீசனும் முப்பத்து முக்கோடி
தானவரும் மாமுனிவரும்
வருதிக்குப் பாலகரும் வசுக்களும் வயிரவரும்
வாழ் பஞ்ச பாண்டவர்களும்
மேலான சாதனும் கௌரி முக் கண்ணியும்
வேழமுக வர்க் கிளையனும்
மெல்லியர்கள் சத்த மேகங்களும் மாதர்களும்
வேண்டு புகழ் மாரி முத்தும்
கோலாகலத்துடன் உந்தனிடை கொலுவுதனில்
கொண்டாடி வந்து நிற்பாய்
குலவிய அவர்க் கெலாம் பெருமையாய் உன் மகிமை
கூறதற் கெளிதாகுமோ
பூலோகம் கலியுகம் தன்னிலே யில்லாத
பூலோகம் வேறு முண்டோ
பூங்காவி னீழலுறை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!

அத்தரும் புகழ்கின்ற தேவியுன் சந்நிதியில்
ஆரார் வந்து பணிவார்
அபிராமி அம்மையர்கள் ஆதித் தனம் புலியோ
டங்கியெம னிருதி வருணன்
முத்துக் கருப்பண்ணன் குபேரினிவ்ர்கள்
முப்பத்துமுக்கோடி தேவரும்
முன்றந்தவான் மனம் நினைத்த வரமருள்கின்ற
முதல்வியுன் செயல் வராதாம்
உற்றுணை நீ யெனக் கல்லாமல் வேறில்லை
நானொரு பிள்ளை தானல்லவோ
உன் சித்தமென் பாக்யம் நம்பினே நம்பினே
னுள் மன மிரங்கியே தான்
புத்தியில் லாததா லடியேனை யாளுவது
புண்ணிய முனக்கேவரும்
பூங்காவி னீழலுறை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!
முகமாயி ரங்கை யிரண்டாயியரத் தொடு
முனை கொண்ட படை தாங்கியே!
மூவுலகு கொண்டாடும் ரண வீரபத்திரனு
மொரு படை யிருளப்பனும்
செகமெலாங் கொண்டாடும் பாவாடையரானும்
செல்லிக் காட்டேரி யுமையும்
சீரான வுந்தனிட சேனை பரி வாரமும்
சிறப்பாகவே சூழ நீ
அக மகிழும் எந்தன் மனை தன்னில் வந்தே நீ
யமைந்தே யிருக்கவினைக
ளகலா திருக்குமோ முன ஜென் மந்தின்னிலோ
யான் செய்த குறை யேதம்மா
புகழ் பரவு முகசவுந்த்ர பூரண வலங்காரி
பூங்காவி யணி பூஷணி
பூங்காவி னீழலுறை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!

வாதினெடு மொடு பில்லி சூனியம் ஏவலொடு
வைப்புதலை யெரியவுகுட்டம்

வருகுன்மம் பீனிசம குடைச்சல் வெப்பிருமலொடு
வஞ்சனை செய் பித்த காசம்
தீதுபுரி கிரகாதி தோஷங்கள் முன்செய்த
தீவினைக ளிதுகளெல்லாம்
தேவியுன் பேர் சொல்ல சூரியன் கண்ட பனி
செய்கைபோ லாகுமம்மா
மாதவன் சகோதரி வல்லாளனைக் கொன்ற
வல்லவி சூலாதரி
மாதேவி கடலைதனில் நடமாடுமுத் தண்டி
வராகி மந்த்ர ரூபி

பூத நாயகிசகல வேத நாயகி பரவு
போற்றுமங்கள ரூபி
பூங்காவி னீழுலுறை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!

எல்லைப் பிசாசுகள் கொல்லைப் பிசாசுகள்
யிளகழு வடிவில் வீரன்
எதிருஞ்சாடாமுனிகள் பிரம்மராக்ஷதிகளும்
இடும்பு செய் குட்டிச் சாத்தி
புல்லறிவு மோகினி ரத்த சாமுண்டியொடு
பூதவேதாள மெல்லாம்
விபூதி கொண்டெறியவே அலறியேவோடிடும்
உன் புதுமை எவரும் புகழ்வார்
கல்லாத நாயினேன் செய்த பிழை பொறுத்து
கடாக்ஷண்ய மருள்காரணி
சகல பரி பூரணி நாரணி யாரணி
காமியபி ராமிவாமி
பொல்லாதலோ பர்தம் பக்கஞ் சென்றவர்களைப்
போற்றாமல் வாழ்வு தருவாய்
பூங்காவி னீழுலுறை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!

தந்திர மறியே னுரைசெய் மந்திர மறியேன் மிகு
தவங்களொடு தேக மறியேன்
தன் மலரெடுத்தடியில் அர்ச்சிக்க வறிகிலேன்

சம்ப்ரதா யங்களறியேன்
சிந்தையுறு பக்தியாய் போற்றவறியேனுனது
செந்தமிழையோ தவறியேன்
சித்தம் வைத்தாளுவது உந்தனுக்கே கடன்

செப்பியான் என் செய்குவேன்
சந்திரசே கரிகௌரி ஜடாதரி முக்கண்ணி
சாம்பவி வராகி நீலி
தாயி மகமாயி சதுர்வேதி கிருபாரி
சாமுண்டி கரகபாலி
புத்திம கிடன் வாழ முக்தி தாண்டவஞ் செய்த
பூம்பாத கமல நிமலி
பூங்காவி னிழுலுறை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!

உலகினில் புகழாகமம் முனிவோர்களறிகின்ற
வறு பத்து நாலு கலையு
மான தொண்ணூற்றாறு தத்துவம் பதினெண்
புராணமு மாரணங்களும்
நலமுள்ள நான் மறைப் பொருள் ஞானமாய் நின்ற
நாயகி யுன் செவிக்கு
நான் சொல்லும் புன் சொலில் பிழைபொறுத்துனது மனம்
நயமா யுகந்தருளுவாய்
கமலசுர நீலி கிருபாலி கரம்பணி பசுந்தொளிர்
தனிமதுர மிருதுபாணி
காசினியோர் கொண்டாடு மம்மை சிவகாமியே
கருணையுள வோங்காளியே.
புலவர் பணி பாதார விந்தத்தி நாதாத்தி
போதாந்த யங்காளியே
பூங்காவி னிழுலுரை ஓங்கார சக்தியே
பூங்காவனத் தாயியே!

பல்லடம் செப்பேடு

இச் செப்பேட்டை மைய அரசு தொல்பொருள் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

வாரக்க நாட்டில் பல்லடம் கிராமம் நாரணாபுரத்தில் நாராயணக் கவுண்டர் அதிகாரம் செய்யும் நாளில் 1-2-1798 அன்று இருபத்துநான்கு மனைச் செட்டியார்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி நாரணாபுரம் அங்காள பரமேசுவரிக்குப் பூசை முதலிய காரியங்களுக்காக விட்ட கொடை பற்றி இச்செப்பேடு விளக்குகிறது.

24 மனையாரின் 24 பெயர்கள் கூறப்பட்டுள்ளன. கூடிய 24 மனைச் செட்டியார்கள் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. 24 மனைச் செட்டியார்கள் கட்டிய வீட்டுக்கு வருடம் ஒன்றுக்கு ஒருபணம் கோயிலுக்குக் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. இறுதிப்பகுதியில் 24 மனையாரின் பல புகழ்ச்சிச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

ஓதியுணர்ந்து உலகு முளுதுப் ஆள்வதற்கு நீதி சாகசம் நினைவுடன் கற்று மும்மொழி விநோதன், முத்தமிழ் தெரிந்தோன், அறிவுக் ககத்தியன், அழகுக் கனங்கன், சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன், பெலத்துக்கு வீமன், அறத்துக்குத் தர்மர், மறவுக்கு மன்னியர், மிகுபரி நகுலன், கடகரி யுதையன், கொடைக்குக் கர்ணன், ஒழிவுக் கிரவி, குளுமைக்குச் சந்திரன் இப்படியென்னப்பட்ட புகழ் பூண்டு இன்சொல் தணிந்து வள்ளுவர் மறவு காற்று முப்பால் மொழியும்படியே அறிவையறிந்து அல்லவைகடிந்து நல்லவை நாடி ஞாள மெலியக் குடி தழைக்க ஆறிலொன்று கடமை கொண்டு அருள் பெருகி அன்பு கூர்ந்து ஆகமசாலையும் அந்தணர்வேள்வியூம் வேதவொலியும் விழாவரா வீதியும் தபோதனர் மடங்களுந்தர்ம சாலையும் தண்ணீர்ப்பந்தலும் தற்றுசாயுதமும் இப்படிக் கொத்த தற்மத்துக்குள்ளாய்

நடந்துவருகிற சாலியவாகன சகாற்த்தம் 1719 கலியுக சகாற்த்தம் 4898 க்கு மேல்ச் செல்லாநின்ற பிங்கள வருஷம் தை மாசம் 22 தேதி பவுர்ணமி குருவாரமும் பூச நட்செத்திரமும் சவுபாக்கியநாம யோகமும் விவயோகமும் சுபகரணமும் கூடின சுபதினத்தில்.

மும்முடியவன், வாச்சியவன், கெந்தவங்கிறவன், கெப்பையவன், பலிபதிவன், தரிசியவன், தவலையவன், மக்கடவன், போலவன், லக்கவன், கெணத்தவன், பச்சிவன், கப்பவன், சென்னவன், குரகவன், சுரியவன், பில்லிவங்குறவன், ரட்டையவன், மாறட்டையவன், கோட்டையவன், பிக்கிவன், கவலையவன், வலசத்தியவன், பாவையவன் இவர்கள் சாதி இருபத்தினாலு மனையாருங் கூடிப் பட்டையங் குடுத்தபடி, நாரணாபுரத்தி லெளுந்தருழியிருக்கும் அங்காள பரமேசுபரிக்கு நித்தியப்படி அபிஷேகக் கட்டளை நெய்விளக்குத் திருமாலை திருமஞ்சனம் திருப்பணி திருவுலகை பள்ளையம் இது முதலாகிய தர்மத்துக்கு குப்பிசெட்டியார் குமாரன் சித்திசெட்டியை விசாரணைபண்ணி வரிவாங்கச் சொல்லி னான்குதிசையன் பத்தாறு தேசத்திலுள்ள சாதி இருபத்தினாலு மனையாருங் கூடி தர்ம சாதனப்பட்டையங் கட்டளையிட்டோம்.

இத்தாதி உறவின் முறையார் சகலருங்கூடி நாரணாபுரம் அங்காளபரமேசுவரிக்கு நித்தியப்படி அவிசேகக் கட்டளை நெய்விளக்கு திருமாலை திருமஞ்சனம் திருப்பணி திருவுலகை பள்ளயம் இது முதலாகிய தர்மத்துக்குக் கட்டின் வீட்டிக்கு தலக்கட்டுக்கு வருசம்மொன்றுக்கு ஒரு பணமும் புத்திர பவுத்திர பரம்பரையாகக் கல்லும் காவேரியும் புல்லும் பூமியும் ஆகாசம் பூமி சந்திர சூரியருள்ளவரைக்கும் இந்த தர்மத்தை நடத்திக் குடுத்து வருவாராகவும் இந்தத் தர்மத்துக்கு ஆதாமொருத்தர் அச்சையம் பண்ணினால் கெங்கைக்கரையில் காறாம்பசுவை வைத்து சகலதிர விருமத்தி வதைசெய்த பாவத்தில் போவாராகவும் மாதா பிதாவுக்கு துரோகம் பண்ணின பாவத்தில் போவார்கள். குருவுக்கு நிந்தினை பண்ணின பாவத்தில் போவார்கள். தேவதா

உடைமையை ஆயிச்ச பாவத்தில் போவார்கள். பஞ்சபாதகஞ் செய்தபேர் பாவத்தில் போவார்க்ள. இந்த தர்மத்துக்கு ஆதாமொருத்தர் கண்டதானாலும் வாக்குச் சகாயம் சீர சகாய அதுமுதலாகிய அத்த சகாயஞ் செயிதபேர் காசியிலே அனேகம் சிவலிங்க பிர்திட்டையும் விட்டுணு பிரதிட்டையும் பண்ணிவைத்த பலத்தைப் பெருவாராகவும்.

ராமேசுபரத்திலே ராமனாத சுவாமிக்கும் அனுமந்தப் பெருமாளுக்கும் காசி கெங்கா சலம் கொண்டு போயி அவிசேகம் பண்ணினாலெந்தப் பலனோ அந்தப் பலன் பெறுவாராகவும், திருவண்ணாமலையிலே கார்த்திகை யன்றைக்கு துறும்புரக் கட்டியிலேயும் பகவு நெய்யும் பச்ச வடமும் தீபம் ஏற்றி சோதியைத் தெரிசினம் பண்ணினாலெந்தப் பலனோ அந்தப் பலன் பெறுவாராகவும், திருப்பதியிலே கோனேரி தீர்த்தத்திலே கோடி தீர்த்தத்திலே முழுகி வெங்கிடாசலபதியைத் தெரிசனம் பண்ணிகாப்பு முத்திரி செய்தாலெந்தப்பலனோ அந்தப்பலன் பெருவாராகவும், பழனியில் தைய்ப்பூச சத்தினன்றைக்கு சண்முக நதியிலே முளுகி பழனி ஆண்டவருக்கு சோடச உபசாதத்துடனே அவிசேகம் பண்ணி அருபூசை குருபூசை மயேசுரபூசை பண்ணினாலெந்தப் பலனோ அந்தப்பலன் பெருவராகவும் கணபதியாருக்கு வாழைக்கனி மாங்கனி முந்திரிப்பழம் பேரீச்சம்பழம் அதிரிசம் எள்ளுருண்டை பணியாரம் கரும்பு யிளநீர் யீதுவெல்லாம் படைத்து பூசையும் அர்சினையும் பண்ணினாலெந்தப் பலனோ அந்தப் பலன் பெருவாராகவும்.

சமுதாய ஆவணங்கள்

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் வரப்பிரசாதத்தினாலே உப்பித்த சங்கு சிங்கக் கொடிக்கு உடையவன். கலக்கோட்டு மாரிசி வம்முசத்தில் பிறந்த கச்சி நகராதிபன் யென்னாணை யென்பவர்க்கு இருபத்து நாலு குடிப்பட்ட முள்ளவர் தாமே சோள மண்டலம் சேர மண்டலம் தொண்மண்டலம் பாண்டிமண்டலம் இந்த நாலூ தேசத்திலே உண்டான உறவின்

முறையார் அனவோரு வயிஞ்சுக்கொண்டு அங்காளபரமேசு பரிக்கு நித்தியப்படி அபிஷேக கட்டளை நெய்விளக்கு திருமாலை திருமஞ்சனம் திருப்பணி திருவுலகை பள்ளயம் இது முதலாகிய தர்மத்த நடப்பிவிச்சுக் கொண்டு வரவும்.

விளாமரத்துப்பெட்டி, கோனேரிசெட்டி மகன் திருமலை செட்டி மேக்கே சித்தூரு தொட்டு தலச்சேரி வரைக்கும், கிளக்கே தோகமலை தொட்டு சிதம்பரம் வரைக்கும். தெக்கே திண்டுக்கல் தொட்டு ராமேசுரத்து வரைக்கும், வடக்கே காசி வரைக்கும் இந்த நான்கு திசை 56 தேசத்திலேயும் ஊரும் எழுதவில்லை பேரும் எழுதவில்லை பெண் குலம் எழுத வில்லை என்றும் பொட்டுக்கட்டி மூக்குத்தி குத்தி கொங்கத் தெலுங்கன் கோணி னெய்யுரவன் சிறு தாலி கட்டி 24 மனை 64 குலம் அங்காள பரமேபவரி தன்மத்தை நடத்தவும்.



டாக்டர். **துரை அங்குசாமி**

பெற்றோர்

தி. துரைசாமி-பழனியம்மாள்

கல்வி

உயர்நிலைப்பள்ளி,
கிணத்துக்கடவு & பழனி

பி.ஏ.
அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி

எம்.ஏ. *மற்றும்*

பி.எல்.எஸ்.
சென்னைப் பல்கலைக் கழகம்

பி.எட்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பிஎச்.டி
பாரதியார் பல்கலைக்கழகம்

தலைப்பு : 24 மனைத் தெலுங்குச் செட்டியார்களின் குலதெய்வ வழிபாடு - ஒரு வரலாற்று ஆய்வு

பணியிடம்

அரசு கலைக்கல்லூரி
உடுமலைப்பேட்டை.

மேடை அனுபவம்

தொலைக்காட்சி, வானொலி அலைவழியாகவும்
பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கவியரங்குகள்
இலக்கிய, ஆன்மீக மேடைகளிலும்
உலாவரும் ஆற்றல் மிகுந்த பேச்சாளர்.

எழுத்து

பல்வேறு மலர்களில் வெளிவந்துள்ள
இலக்கியம், வரலாறு, தொல்லியல்
சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளின் படைப்பாளி.
தென்கொங்கின் தொல்லியல் வரலாறு (நூல்-அச்சில்)
திருக்குடமுழுக்கின் அருளாற்றல் (நூல்-அச்சில்)